கடவுள்



சுஜாதா

கடவுள்

சுஜாதா



விலை ரூ. 170

உயிர்மை பதிப்பக வெளியீடு: 110

கடவுள் ✗ கட்டுரைகள் ✗ சுஜாதா ✗ © சுஜாதா ✗ முதல் பதிப்பு : டிசம்பர் 2006 ✗ வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை -600 018 தொலைபேசி : 91 – 44 – 24993448, மின்னஞ்சல் : uyirmmai@yahoo.co.in ✗ அட்டை வடிவமைப்பு: சந்தோஷ் ✗ அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

Kadavul ✗ Articles ✗ Sujatha ✗ © Sujatha ✗ Language: Tamil ✗ First Edition : Dec. 2006 ✗ Demy 1x8 ✗ Paper : 18.6 kg maplitho ✗ Pages : 272 ✗ Published by : Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax : 91- 44 - 24993448, e-mail : uyirmmai @yahoo.co.in ✗ Cover Designed by Santhosh ✗ Printed at Mani Offset, Chennai 600 005 ✗ Price : Rs. 170

ISBN : 81-89912-09-7

முன்னுரை

இந்தப் புத்தகத்தில் பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை பற்றி நான் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அங்கங்கே பொது விஷயங்களும் உள்ளன. 'வணக்கம் இறைவா' கட்டுரைகள் சக்தி விகடன் இதழில் வந்தன. 'என்ன அதிசயம்' ஜூனியர் விகடனிலும், 'அறிவோம் சிந்திப்போம்' குமுதம் இதழிலும், 'ஒரு விஞ்ஞானப் பார்வையிலிருந்து' ஞானபூமியிலும் முதலில் வெளிவந்து பின்னர் தனித்தனிப் புத்தகங்களாகவும் வந்தன. இவை யனைத்தையும் ஒரு புத்தகமாகக் கொண்டு வருவது, கருத்து ஒற்றுமையைக் கருதியதில் சரியாகப்பட்டது. 'கடவுள்' என்ற பொதுப் பெயரும் பொருத்தமென்று நினைத்தோம்.

உன்னிப்பாகப் படிக்கும் வாசகர்களுக்கு இந்தப் புத்தகத்தின் கட்டுரைகளிடையே லேசான கருத்து முரண்பாடுகள் தெரியலாம். அதற்கு காரணம் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு கட்டாயங் களுள்ள பத்திரிகைகளில் எழுதியதே.

என்னுடைய சொந்தக் கருத்து என்னவெனில் நம்மாழ்வார் சொல்லியதுபோல் 'உளன் எனில் உளன் அவன் எனில் அவன்' என்பதே.

இந்தப் புத்தகத்தை சிறப்பாக வெளியிடும் உயிர்மை பதிப்பகத்தின் நண்பர் மனுஷ்ய புத்திரனுக்கு நன்றி.

சுஜாதா

1	வணக்கம் இறைவா	7
2	கடவுள் இருக்கிறாரா?	49
3	என்ன ஆச்சரியம்!	87
4	அறிவோம் சிந்திப்போம்	161
5	ஒரு விஞ்ஞானப் பார்வையிலிருந்து...	233

வணக்கம் இறைவா

(2005)

சகலமானவர்களுக்கும்...
வணக்கம் இறைவா..!

மனித சரித்திரத்தில் அறிஞர்கள் பெரும்பாலானோருக்குக் கடவுள் நம்பிக்கை இருந்திருக்கிறது. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் God does not play dice என்றபோது, கடவுள் என்று ஒருவர் இருப்பதாகத்தான் எண்ணினார். ஆனால், அவரது கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்ததாகச் சொல்லப்படும் நவசக்திப் பிள்ளையாரோ, முப்பாத்தம்மனோ, அஹுராமாஸ்தாவோ, பரமபிதாவோ, அல்லாவோ இல்லை!

பொதுவாகவே ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இரு வகையான இறைநம்பிக்கை உண்டு என்பது மேலாகப் படித்துப் பார்த்தாலே தெரிகிறது. பரீட்சை, வேலை, கல்யாணம், திருட்டுப்போன தங்கநகை கிடைப்பது, பயண பத்திரம், பய நீக்கும் போன்ற அன்றாட உடனடி பலன்களுக்காக நம்பும் உருவமுள்ள கடவுள் வேங்கடாசலபதியோ, வேல்முருகனோ, குழந்தை இயேசுவோ ஏதோ ஒரு வடிவத்தில் மனித மனத்தில் உருவாக்கிக்கொள்ளக்கூடிய மனித வடிவ anthropomorphic நம்பிக்கையின் ஒருமித்த குவிமையம். ஏன் ... மிருக ரூபத்தில்கூட ஒன்றிரண்டு மனித அவயவங்கள் உபரியாக இருக்கலாம். நாக்கு நீளலாம் ... கண் சிவக்கலாம் ... இப்படியொரு கடவுள். மற்றொரு கடவுள், பிரபஞ்சம் முழுதும் விரிந்த உருவமற்றது. எல்லாச் சிந்தனையாளர்களும் இவ்விரு நம்பிக்கைகளுக்கு இடையில் ஊசலாடுகிறார்கள்.

ஒரு முனையில் தெருமுனை பிளாட்பாரத்தை அடைத்துக் கொள்ளும் பிள்ளையார்; மறு முனையில் அண்ட சராசரங்களையும் படைத்ததாகச் சொல்லப்படும் இறைவன். இவ்விருவரும் ஒன்றா? நாத்திகரான டக்ளஸ் ஆடம்ஸ், Is there an Artificial God? என்ற ஓர் அருமையான சொற்பொழிவு தந்திருக்கிறார். அதில் அறிவியல் முறையில் கேள்வி கேட்கப்படாத, கூடாத கடவுள் ஒருவர் ஏன் தேவைப்படுகிறார் என்பதைத் தெளிவாக அலசியிருக்கிறார். 'ஒன்றே தேவன்; அவன் உருவமற்றவன்!' என்று நம்பும் monotheistic மதங்களான கிறிஸ்தவம், இஸ்லாம் போன்றவற்றில்கூட மனித மனத்தால்

அளவிட்டுக்கொள்ள ஏதுவாக, ஓர் இறைத்தூதர் இயேசுநாதராகவோ நபிகள் நாயகமாகவோ தேவைப்பட்டிருக்கிறார்கள்.

'உருவமற்றதா, உருவமுள்ளதா? இவ்விரண்டில் யாரைக் கடவுள் என்பது? யாரை வணங்குவது?' என்பது போன்ற கேள்விகளைச் சிந்தனையாளர்கள் யோசித்திருக்கிறார்கள். Wallace Strevens, 'What is divinity if it can come / Only in silent shadows and in dreams?' என்று கேட்கையில், மௌன நிகழ்வுகளிலும் கனவுகளிலும் மட்டும் தோன்றும் இறைவன் அவருக்குப் போதவில்லை. இவ்வாறு அவர்கள் சொன்னதையெல்லாம் மாதிரி பார்க்கப் போகிறோம். 'சக்தி விகடன்' வாசகர்களில் பெரும்பாலானோர் அறிந்த இந்து மத நம்பிக்கைகளை வைத்து ஒப்பிட்டுப் பார்க்காமல், பிற நம்பிக்கைகளில் குறிப்பாகக் கிழக்கத்தியச் சிந்தனையாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கவனிக்கையில், மனித இனத்தின் மனத்தை ஆக்கிரமித்த இரண்டு முக்கியமான கேள்விகள் எல்லாவற்றுக்கும் பொதுவாக உள்ளன.

'பிரபஞ்சத்தைப் படைத்தது யார்? (யாராவது படைத்திருந்தால், அவரைப் படைத்தது யார்?)

மரணத்துக்குப் பின் என்ன ஆகிறோம்... ஏதாவது ஒரு தொடர்ச்சி யுள்ளதா?'

இவ்விரண்டு கேள்விகளுக்கும் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வெவ்வேறு சிந்தனையாளர்கள் பதிலளித்திருக்கிறார்கள். அவர்களது சிந்தனாசக்தியின் வலிமை – எளிமை... ஏன் அவர்கள் காலத்து அறியாமைகளுக்கு ஏற்ப, பதில்கள் வேறுபடுகின்றன.

உடி ஆலன், "எனக்கு மறுபிறவியில் நம்பிக்கை இல்லை. ஆனால், எதற்கும் ஒரு செட் மாற்று ஜட்டி – பனியன் எடுத்துப் போவேன்!" என்றார். இந்துக்கள், 'உயிர் வேறு, ஆத்மா வேறு. ஆத்மா அழிவில்லாதது!' என்கின்றனர். பௌத்தர்கள், 'மறுபிறப்பு உண்டு. கர்மவினை மட்டும் மற்றொரு வடிவத்தில் தொடர்கிறது' என்றனர். இப்படி ஒவ்வொருவரும் சொன்னது என்ன என்பதைத்தான், உங்களைக் குழப்பாமல் ஆராயப் போகிறேன். ஒன்று மட்டும் சொல்ல முடிகிறது. No one is sure. அதனால் தைரியமாக இதில் இறங்கலாம்.

2

இந்தத் தொடரின் நோக்கம், மிக எளிதானது. மற்ற சிந்தனைகளிலும் இறையியல் தத்துவங்களிலும் என்னைப் போலவே ஆர்வம் உள்ளவர்களுடன் சேர்ந்துகொண்டு அனுதாபத்துடன் அணுகி, அவற்றில் கிடைக்கும் நல்ல விஷயங்களை எடுத்துக்காட்டுவதே!

இந்தத் தொடரில் நான் தரப்போவது வில் ட்யுரண்ட் போல, பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போல மேலைநாட்டுத் தத்துவங்களின் பட்டியலோ ... விளக்கமோ அல்ல. மேல்நாடோ கீழ்நாடோ, தத்துவத்தை மட்டும் படித்தால் தலைசுற்றும்.

'பேசாமல் ஒரு பீட்ஸா அல்லது பாவ்பாஜி சாப்பிட்டுவிட்டு நண்பர்களுடன் 'சந்திரமுகி' ஏரியாவின் விற்பனை பற்றி அரட்டை அடித்துவிட்டு ... வீட்டுக்கோ, வேலைக்கோ திரும்பும் 'வேடிக்கை மனிதர்களில்' ஒருவனாக இருந்துவிட்டுப் போகிறேன். குருநானக், இக்பால், கன்ஃபூஷியஸ், சுஸுக்கி (மோட்டார் சைக்கிள் அல்ல) என்று எதற்கு என்னைப் போட்டுக் குழப்ப விரும்புகிறீர்கள்?'

இந்தக் கேள்வி உங்களில் சிலருக்கு இயற்கையாக எழும்.

எதற்கு என்பதையும் சொல்லிவிடுகிறேன். உங்கள் தின வாழ்க்கை, வழுக்கு ரோட்டில் கப்பல் கார் போல ஸ்மூத் ஆகச் சென்று கொண்டிருக்கும் வரையில் உங்களுக்கு பதஞ்சலியும் வேண்டாம்; பாதராயணரும் வேண்டாம். முதல் முறையாக அந்தப் பயணத்தில் ஒரு சின்ன ஆணி குத்திச் சட்டென்று நின்று போகும்போதுதான் இதுபோன்ற தத்துவங்களின் உதவி தேவைப்படும். ஓர் ஆப்த நண்பரையோ உறவினரையோ விபத்து ஏற்பட்டோ அல்லது கான்சர் முதலிய நூற்றெட்டு உபாதைகளில் ஒன்றாலோ அல்லது இயற்கையின் சீற்றத்தாலோ இழந்து வேதனை அடையும்போது சட்டென்று உங்களுக்கு, 'வண்டி இப்படியே ஓடிக்கொண்டிருப்பது உத்தரவாதம் இல்லை; நம்மைவிடப் பெரிய சக்தி, பெரிய உண்மை அறியப்படாமல் இருக்கிறது!' என்கிற ஞானோதயம் தோன்றும். அப்போதுதான் சில மகான்கள் என்ன சொன்னார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆயத்தமாவீர்கள். சித்தார்த்த கௌதம புத்தருக்கு (563—483 கி.மு.) 29 வயதில் இந்தக் கேள்வி எழுந்தது!

சிலருக்கு 92 வயசானாலும் இந்தக் கேள்வி எழாது. வாழ்க்கையை ரொம்ப மேலோட்டமாக / ஜாலியாக அனுபவித்து வருவார்கள்.

நம் வாசகர்கள் அப்படியல்ல. அப்படி இருந்தால், இந்த வாக்கியம் வரும்வரை படித்துக்கொண்டிருக்க மாட்டார்கள்!

சென்ற இதழில் நாம் அறிமுக உரையில் பார்த்தபடி மனித இனத்தின் மிகப் பெரிய இரண்டு கேள்விகள்: 'நாம் யார்?', 'இந்தப் பிரபஞ்சம் எப்படித் தோன்றியது?' – இவ்விரண்டு கேள்விகளுக்கு விடையளிக்க, 'கடவுள் தேவையா? தேவைப்பட்டால், அவர் எப்படிப்பட்டவர்? என்ன வடிவம்?' என்கிற கேள்விகளையும் பார்க்க வேண்டிவரும். ஆழ்வார் சொன்னதுபோல் –

> தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
> தமருகந்தது எப்பேர்மற்று அப்பேர் – தமருகந்து
> எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பாரே
> அவ்வண்ணம் ஆழியானாம்.

'எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொள்! எப்படி வேண்டுமானாலும் பெயர் சொல். எந்த வடிவத்தில் சிந்தித்துப் பார்க்கிறோமோ, அந்த வடிவம்தான் கடவுள்!' என்கிறார் பொய்கை ஆழ்வார்.

இப்படி சுதந்திரம் கொடுப்பதில் ஓர் அபாயம் இருக்கிறது. கடவுளை, நம் சிந்தனை எல்லைகளுக்கு உட்படுத்துகிறோம். அதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு கடவுளைப் பற்றி யோசிக்க இயலாமல் போய்விடும். அதாவது, புதிய சிந்தனைக்கு இடமின்றி 'ஹவுஸ் ஃபுல்' என்று அனுப்பிவிட வேண்டும்.

கௌதம புத்தருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. தீவிரமான அவரது சிந்தனை ஓட்டத்தில் கடவுளுக்கு இடம் கிடைக்கவில்லை.

புத்தர் என்றால் ஞானமடைந்தவர், அறிவொளி பெற்றவர் என்று பொருள்.

அந்த விதத்தில், உண்மை ஞானம் பெற்றவர்கள் அனைவரையும் புத்தர்கள் எனலாம். பெரியார் என்றால் ஈ.வே.ராமசாமிப் பெரியாரைச் சொல்வது போல், புத்தர் என்றால் கபிலவாஸ்துவில் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்த சித்தார்த்த கௌதமரைத்தான் குறிக்கும். அவருடைய வாழ்வும் உபதேசங்களும் தத்துவங்களும் ஆசியாக் கண்டத்தின் ஒவ்வொரு நாட்டிலும் பரவியுள்ளது.

பௌத்தத்தில், கடவுள் கருத்து இல்லையென்றாலும் இது ஒரு மதமாகவே கருதப்படுகிறது. யார் வேண்டுமானாலும் விளிம்புகளைத் தவிர்த்த 'எட்டு அம்ச' நடுப்பாதையில் சென்று ஞானம் பெறலாம்; உண்மை அறியலாம். புத்தனாகலாம்.

எளிதாகச் சொன்னால், பௌத்தம் என்பது துன்பத்தை மறுத்து வாழ ஒரு வழி. இதுதான் முக்கியம். இதன் தத்துவாசாரங்கள் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். பௌத்தர்களின் தின வாழ்க்கையை, அந்த மதத்தின் தத்துவங்களான 'எதுவும் சாஸ்வதம் அல்ல, அழியக்

கூடியது!' என்னும் ஆதார சிந்தனை மறைமுகமாக பாதிக்கிறது.

புத்தருக்கு எல்லாம் கிடைத்திருந்தது. இமய மலை அடிவாரத்தில் ஒரு சிறிய ராஜ்யம். அவருக்கு நல்லது நினைத்த தந்தை. அழகான மனைவி. ராகுலன் என்கிற மகன். இத்தனை சௌகரியங்கள் இருந்தும் அவருக்கு மனித குலத்தின் மூப்பு, வியாதி, மரணம் மூன்றும் தவிர்க்க முடியாதது என்பதைக் கவனித்து, இதன் காரணத்தைக் கண்டுபிடிக்க ஓரிரவில் அனைத்தையும் துறந்து ... உண்மையை எப்படித் தேடுவது என்று அலைந்தார்.

விடை, ரிஷிகளிடம் கிடைக்கவில்லை. மெய்வருத்தத்தில் கிடைக்க வில்லை. அலைந்து திரிந்தார். ஒரு கட்டத்தில் பளிச்சென்று வெளிச்சம் போட்டதுபோல் அவருக்கு விடை கிடைத்தது. அதாவது, 'ஆசையும் பற்றும்தான் ஆதாரக் காரணங்கள். இவற்றைத் துறந்து எட்டு வழிப் பாதையைக் கடைப்பிடித்தால், இறுதியில் கிடைக்கும் ஞானத்தை நிப்பாணா (நிர்வாணம்)' என்றார்.

அந்த நிர்வாணம் எப்படிப்பட்டது?

'எதையும் விரும்பாமல் இருக்கும்போது, ஒருவன் எதையும் கைப்பற்று வதில்லை. எதையும் கைப்பற்றவில்லை என்றால், அவனுக்குக் கவலை இல்லை; பரபரப்பு இல்லை; மனதுக்கு அமைதி கிடைக்கிறது.' (மஜ்ஜின நிக்காயா என்னும் பாலி மொழிப் பிரதியிலிருந்து.)

புத்தர் சொல்லும், 'நிர்வாண நிலை' என்ன என்பதை அடுத்துப் பார்ப்போம்.

3

'நிர்வாணம்' என்பது என்ன? இன்றைய அன்றாட அர்த்தத்தில் நிர்வாணம் என்பது, உடைகள் அனைத்தையும் கழற்றிவிட்டுத் திரிவது. புத்தரின் நிர்வாணமும் ஒருவிதத்தில் களைதல்தான். ஆசைகளை, பற்றுகளை, உடைமைகளை, ஏன் ... கடமைகளைக்கூடக் களைந்து அடையும் அந்த நிலை என்ன?

'அந்த நிலையில் பூமி இல்லை. தண்ணீர் இல்லை. நெருப்பு இல்லை. காற்று இல்லை. விண்வெளிக் கோளம் இல்லை. அளவிலாத தன்னிலை உணர்வு இல்லை. பாழ் இல்லை. வருவது இல்லை; போவது இல்லை. நிற்பதும் இல்லை; புறப்படுவது இல்லை. எழுவது இல்லை; தாழ்வது இல்லை. நிலைப்பது இல்லை; செல்வது இல்லை. ஆதாரமும் இல்லை. அதுதான் துன்பத்தின் முடிவு!'

இது ஸர். ஹம்ப்ஃப்ரே டேவிட் எழுதிய 'புத்திஸம்' புத்தகத்தில் மேற்கோள் காட்டப்பட்டதன் மொழிபெயர்ப்பு.

இந்த நிலையை அடைவது இருக்கட்டும். முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிர்வாண நிலையை உணர்ந்தவன் புத்தன் ஆகிறான். இது, ஒருவனின் தின வாழ்க்கையின்போதே நிகழலாம். புத்தருக்கு அது நிகழ்ந்தது. புத்தர் அல்லாத நீங்கள் பளிச்சென்று இந்த நிலையை அடைந்தால், இதை உணர்ந்துவிட்டால், உங்கள் கருமங்கள் உங்களைத் தொடராது. இந்த நிலையை அடைந்த பின், நம் உடல் என்ன பாழாய்ப் போனாலும் கவலையே பட வேண்டாம்!

சென்ற இதழில், இரு விளிம்பு நிலைகளைப் பற்றிச் சொன்னேன். மிக அதிகமான ஆசை, சொந்த பந்தம். இது ஒரு விளிம்பு. மற்றது, முற்றும் துறந்து வயிற்றைக் காயப் போட்டு, எக்கித் தவமிருப்பது. சில ரிஷிகளைப் போல புத்தர் இரண்டையும் பார்த்துவிட்டு, "இவற்றுக்கு இடையில் உள்ள நடுச்சாலையில்தான் நிர்வாணத்தை அடையும் வழி கிடைக்கும்!" என்றார். அதற்கு எட்டுச் செயல்கள் சொன்னார்.

புத்தரின் கோட்பாடுகள் அடுத்த ஜென்மத்துக்கு அல்ல. ஓர் ஆத்மா மறுபடியும் பிறக்கும் என்பதை அவர் நம்பவில்லை. இந்து மதக் கருத்துகளுக்கும் பௌத்தக் கருத்துகளுக்கும் முக்கியமான வித்தியாசம் இதுதான்.

புத்தருடைய எண்வழிப் பாதை என்பது என்ன? சரியான பார்வை, சரியான உணர்வு, சரியான பேச்சு, சரியான நடத்தை, சரியான பிழைப்பு, சரியான முயற்சி, சரியான அறிவு, சரியான சமாதி (அல்லது சமநிலை). இதில் பொதுவாக இருக்கும் 'சரியான' என்கிற அடைமொழிகூட துல்லியமான மொழிபெயர்ப்பு இல்லை. ஆங்கிலத்தில் Right என்றுதான் பெரும்பாலும் மொழிபெயர்ப்பதால், அதற்குச் சரியான வார்த்தையாக இதைச் சொன்னோம்.

இந்த எட்டுக் குணங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக அடைய வேண்டும் என்றில்லை. மெள்ள மெள்ள ஒவ்வொன்றையும் பல நிலைகளில் முயற்சிக்கலாம். 'சரியான' என்பதை, 'தவறான' என்கிற வார்த்தைக்கு எதிர்மறையாக இங்கு பயன்படுத்துவதில்லை.

உதாரணமாக, சரியான 'பார்வை' என்பது சட்டென்று நமக்குத் தென்படலாம். ஒரு கணத்தில், பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை உயிர்களுக்கும் உள்ள இடைத்தொடர்பை உணரும்போது, சரியான பார்வை தோன்றலாம். இது போல்தான் மற்ற பாதைகளும் இறுதியாக அடைய வேண்டிய குறிக்கோள்கள்.

புத்தர் நிர்வாண நிலை அடைந்தபின், அதை மற்றவர்களுக்கு போதிக்க விரும்பினார். அவருடைய பனாரஸ் பிரசங்கம் பிரசித்தமானது. முதல் ஐந்து சிஷ்யர்கள் மூலம் அவர் கருத்துகள் (இந்துக் கருத்துகளுக்கு மாற்றாக) நாடெங்கும் பரவியது. மெள்ள கிழக்காசிய நாடுகளிலும் பரவியபோது தவிர்க்க முடியாமல் மாறியது. ஹீனயானா, தேரவாதா, ஷிண்டோ, ஜென் என்று பல வடிவங்கள் எடுத்தது. தேரவாதா என்னும் ஹீனயானாவும் மஹாயானாவும் புத்த மதத்தின் இரு பெரும் பிரிவுகள். தேரவாதா முதலில் பாலி மொழியில் எழுதப்பட்டது. இதை 'த்ரிபீடிகா' என்று சொல்வர். 'மூன்று கூடை' என்று அர்த்தமாம்.

புத்தரின் கருத்துகளை மூன்று கூடைக்குள் பிரித்து வைத்திருந்தார்களாம். ஒரு கூடையில், புத்தர் சொன்ன வாசகங்கள். இரண்டாவதில், வாழ்க்கை வழிமுறைகள். மூன்றாவதில், பௌத்தத் தத்துவங்கள்.

மஹாயானா பிரிவுக்கான வாசகங்கள் முதலில் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டு, காலப்போக்கில் அழிந்துபோனவையாம். இடையே இது சீனாவுக்குச் சென்று, அங்கிருந்து மறுபடி இந்தியாவுக்கு வந்து சம்ஸ்கிருதத்தில் படியெடுக்கப்பட்டதாம்.

இந்து மதத்தின் வர்ணாசிரம தர்மத்தை புத்தர் ஏற்கவில்லை. "பிறப்பால் ஒருவனைப் பாகுபடுத்துவது தப்பு. ஒழுக்கத்தால்தான் பாகுபடுத்த வேண்டும்!" என்றார். "ஆண்–பெண் வித்தியாசமின்றி

யாரும் என்னைத் தொடரலாம்!" என்றார். இதனால் அது எளிதாகப் பரவியது.

தேரவாதா (பெரியவர்கள் கருத்து) பௌத்தம், இன்று குறிப்பாக ஸ்ரீலங்காவில் இயங்குகிறது. பர்மா, ஜப்பான், சீனா, திபெத் போன்ற நாடுகளில் இருப்பது மஹாயானா பௌத்தம். இன்று பல வடிவங்களில் இருக்கும் பௌத்த மதம், அதன் பிறப்பிடமான இந்தியாவில் நிலைக்கவில்லை. எட்டாம் நூற்றாண்டு வரை அதற்கு மன்னர்களின் ஆதரவு இருந்தது. ஆதிசங்கரரின் அத்வைதம், சாக்கியம், பதஞ்சலி போன்ற மாற்றுச் சிந்தனைகளின் எதிர்ப்பில் பௌத்தம், மெள்ள அழிந்துபோய்விட்டது. இதற்கு முக்கியமான ஒரு காரணம், வலுவான இறைவன் ஒருவன் அதற்கு இல்லாததே!

கி.மு.483ல் புத்தர் இறந்தபோது, அவர் உடல் எரிக்கப்பட்டதாம். அதன் சாம்பலை மற்ற நகரங்களுக்கு அனுப்பியதாக ஐதீகம். புத்தரின் பல் ஸ்ரீலங்காவில் கண்டியில் மிகவும் ஆராதிக்கப்படுகிறது.

ஏதோ ஒரு விதத்தில் வழிபட, மனிதனுக்கு அடையாளம் தேவைப் படுகிறது. புதைத்த இடம், எரித்த இடம், மறைந்த இடம், பல், செருப்பு ... இப்படி ஓர் அடையாள ஸ்தலம் இல்லையென்றால், மனித மனம் தவிக்கிறது.

மெள்ள மெள்ள ஒரு மதத்தின் ஆரம்பக் காரணங்கள் விலகிப் போய், அதன் சடங்குகள் மட்டும் மிச்சமிருக்கும் நிலை, எல்லா மதத்துக்கும் வெவ்வேறு அளவில் உண்டு. பௌத்தம், இந்தியாவில் ஞாபகச் சின்னங்களாகவும் மற்ற நாடுகளில் தொடர்ச்சியற்ற மேம்போக் கான சடங்குகளாகவும் விழாக்களிலும் பிரார்த்தனைகளிலும் இன்று வாழ்கிறது.

அதன் ஆதாரமான சித்தார்த்தனின் Existential Crisis என்பார்களே ... 'உயிர் வாழ்தலின் கேள்விகள்.' பல விதங்களில் இன்றைய அறிவியல் யுகத்தில்கூட அது மறுபடி மறுபடி கேட்கப்படுகிறது.

அடுத்த கட்டுரையில் ஜைனம் பற்றிப் பேசுவோம் ...

4

தமிழகத்தில் பௌத்தத்தைவிட ஒரு காலகட்டத்தில் சமணம் (ஜைனம்) அதிகம் பரவியிருந்தது. அதற்கான அடையாளங்கள் இன்றும் சித்தன்னவாசல், நார்த்தா மலை போன்ற பகுதிகளில் காணக் கிடைக்கின்றன. கர்நாடகத்தில் உள்ள சிராவணபெலகோளா ஓர் உயரமான உதாரணம். திருநாவுக்கரசர், 60 வயது வரை சமணராக இருந்து பின்னர் சைவத்துக்குத் திரும்பியவராம்.

பௌத்த மதத்தைவிடப் புராதனமானது சமணம். அதன் சரித்திரத்தில் முக்கியமான புருஷர், வர்த்தமான மஹாவீரர். கி.மு. 599லிருந்து 527 வரை வாழ்ந்தவர். அவரை 24–வது 'தீர்த்தங்கரர்' என்று சொல்கிறார்கள். தீர்த்தங்கரர் என்றால் வழிகாட்டிகள், பாலங்கள் என்று சொல்லலாம்.

சமணர்களின் தத்துவம்: மனித இனம், பந்தங்களிலிருந்தும் வாழ்க்கை விகாரங்களின் பாதிப்புகளிலிருந்தும் கடுமையான தவம் அல்லது விரதத்தின் மூலம் விடுதலை பெறலாம் என்பது. இந்தத் தவம், பதினான்கு கட்டங்கள் அல்லது குணஸ்தானங்கள் மூலம், படிப்படியாக நம் உண்மையான ஆத்மாவை மறைக்கும் கர்மங்களை நீக்கலாம். சமண மதத்தில் அஹிம்சையும் மற்ற உயிர்களுக்கு எந்த விதத்திலும் நஷ்டமும் கேடும் விளையாமல் காப்பதும் மிக மிக முக்கியம்.

வர்த்தமானர், புத்தர் காலத்தில் வாழ்ந்தவர். பீகாரில் வைஷாலி என்ற இடத்தில் ஒரு க்ஷத்ரியத் தலைவரின் மகனாகப் பிறந்தார் வர்த்தமானர். பெற்றோரின் கடைசிக் காலம்வரை அவர்களுடன் வாழ்ந்தார். வர்த்தமானர், தன் 28வது வயதில் ஆன்மிகப் பயிற்சியைத் துவக்கினாராம். பன்னிரண்டு வருடம் அலைந்து திரிந்தபின் நிர்வாண மும் கைவல்ய நிலையும் அடைந்தாராம். அவர், ஜீனர் (வெற்றி கண்டவர்) என்று அழைக்கப்பட்டார். அதனால் மகாவீரர் என்றும் பெயர் பெற்றார். தன் ஞானத்தைப் பரப்புவதிலும் இருபத்து மூன்று முன்னவர்கள் சொன்ன சமணக் கருத்துகளைப் பரப்புவதிலும் வாழ்க்கையைக் கடத்தினார். 72–ஆம் வயதில் பீகாரில் பவா என்ற இடத்தில் சமண முறைப்படி பட்டினி கிடந்து இறந்துபோனார்.

இவரைப் பற்றிப் பல கதைகள் உள்ளன.

தற்கால ஜைன மதக் கோட்பாடுகளில் மொழி, இடம் சார்ந்த வேறுபாடுகள் இருந்தாலும் ஆதாரமாக அதன் புராதனக் கோட்பாடுகள் அதிகம் மாறாமல் உள்ளன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஜைனர்கள் தற்போதைய குஜராத், ராஜஸ்தான் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தபோது அவர்கள் இரு வகையாகப் பிரிந்தார்கள். உடலில் வஸ்திரம் இல்லாமல் ஒரு குழுவும் உடலில் வெள்ளை வஸ்திரங்கள் அணியும் ஒரு குழுவும் திகம்பரர்கள் – ஸ்வேதம்பரர்கள் என்று பிரிந்தார்கள். இன்றும் இந்தப் பாகுபாடு உள்ளது. இன்று திகம்பரர்கள், பொதுமக்கள் மத்தியில் இருக்கும்போது ஆடை அணிகிறார்கள். இவ்விருவரிடையே மற்றொரு வேறுபாடு, பெண்களைச் சார்ந்தது. திகம்பரர்கள், பெண்களை அனுமதிப்பதில்லை. அவர்களை அனுமதிக்க வேண்டுமானால், அவர்கள் ஆண்களாக மறுபிறவி எடுத்து வர வேண்டுமாம். ஸ்வேதம்பரர்கள் அப்படியில்லை. பெண்களை ஜைனக் கோயில்களில் அனுமதிக்கிறார்கள்.

ஜைனர்கள் உலகில் உள்ள அனைத்தையும் ஜீவ – அஜீவ என்று இரு வகையாகப் பிரிக்கிறார்கள். இதை உயிருள்ள – உயிரற்ற என்பதை விட, உணர்ந்த – உணர்வற்ற என்பது பொருந்தும். Sentient& Nonsentient. எல்லா உயிரும் ஜீவ – அஜீவ கலப்பு. வெறும் ஜீவன்தான் உண்மை நிலை. அதன் மேல் அஜீவ நிலை படும்போது அது கறைபடுகிறது. எப்போது கலந்தது, எத்தனை அஜீவக் கலப்பு என்பதையெல்லாம் சரியாகச் சொல்ல முடியாது. ஆனால், அஜீவக் கறையை மெள்ள மெள்ள நீக்கலாம் – தவ ஒழுக்கத்தின் மூலம்.

அஹிம்சை, ஜைனர்களுக்கு மிக முக்கியம். மற்ற உயிர்களுக்குக் கேடு விளைவிக்கும் எந்தச் செயலும் கூடாது. அதனால் உண்மையான ஜைனர்கள் நடக்கும்போது முன்னால் பாதையை லேசாக பெருக்கிக் கொண்டே செல்வார்கள்.

மூச்சு விடும்போது மூக்கையும் வாயையும் துணி போட்டு மறைப்பதும் இதே காரணத்துக்காகத்தான். சுத்த சைவ உணவுதான். கொல்வதுடன் சம்பந்தப்பட்ட எந்த வியாபாரத்திலும் ஈடுபடமாட்டார்கள். ஜைனத்தில் கடவுள் என்ற உயர்ந்த ஜீவன் எதுவும் சொல்லப்படவில்லை. ஆன்மாதான் ஜீவனின் சாரம். ஜீவன்தான் எல்லாவற்றையும் உணரக்கூடியது. அனைத்தையும் உணர்ந்தபின், முக்தி நிலையையும் அடையக்கூடியது அதுவே. தீர்த்தங்கரர்கள் ஜீவனை மறுபக்கத்துக்குக் கொண்டுசெல்லும் பாலங்கள். அப்படி அழைத்துச் சென்று நிர்வாண நிலையை அடைய உதவுபவர்கள் இந்த ஆசிரியர்கள்; வழிகாட்டிகள்.

ஜைனத் துறவற வாழ்வுக்கும் சாதாரண ஜைனர்களின் கட்டுப்பாடான வாழ்க்கைக்கும் தொடர்ச்சி உண்டு. துறவிகளின் வாழ்க்கை முறை, அதீதமான ஒருமனமான கட்டுப்பாடு. அதன் 14 குணஸ்தானங்களில் நான்காவதை எய்தினாலே, கர்மத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

இதைச் சாதாரண ஜைனர்களும் அடையலாம். ஆறாவது குணஸ்தானம் அடைந்த ஒருவர் ஆரோக்கியமும் மன அமைதியும் பரிசோதிக்கப்பட்டு ஜைனப் பள்ளியில் துறவியாக அனுமதிக்கப்படுகிறார். அதன்பின் கடுமையான கட்டுப்பாடு, நல்லொழுக்கம், அதன் அங்கமான சதா படிப்பு, பிறர் தருவதை மட்டும் உண்ணுதல், மதபோதனை, ஊர்ஊராகப் பயணம் செய்வது – இதுதான் அவர்களின் வாழ்க்கை. இப்படிச் செய்து கட்டுப்பாடாக இருந்தும்கூட அவர்களால் ஒரு பிறவியில் கர்ம வினையை முழுவதும் கழற்றிவிட முடியாது. பல பிறவிகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் கர்மவினை தீரும். குணஸ்தானங்களில் மெள்ள உயர்ந்து இறுதி விடுதலை கிடைக்கும். ஒரு முதிய ஜைன முனிவர், வர்த்தமானர் செய்ததுபோல சோறு, நீர் இல்லாமல் உபவாசமிருந்து சாகத் தீர்மானிக்கலாம்.

இந்த ஆதாரக் கருத்துகளிலிருந்து புறப்பட்டாலும் நவீன சமணம் சிக்கலான தத்துவக் கருத்துகளாக விரிந்துள்ளது. அவற்றை எளிமைப் படுத்திச் சொல்கிறேன். (அறிவு என்பது நமக்குப் புலனறிவு (மதி), உணர்தல் (அவதி), வார்த்தைகள் மூலம் அறிவது (ச்ருதி), மற்றவர் சிந்தனை மூலம் அறிவது (மன பூர்யாய).

இவை அனைத்தும் கடந்த உண்மை அறிவு, கைவல்யம். இது வர்த்தமானர் அடைந்தது. இந்த அறிவுதான் புலன்களுக்கு அப்பாற் பட்ட, சந்தேகமற்ற, கால தூரக் கட்டுப்பாடுகளற்ற, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத நேரடி ஞானம். ஞாபகம், தர்க்கம் ஆகியவற்றால் பெறும் அறிவு மறைமுகமானது. புத்தகங்களிலிருந்து பெறும் அறிவு மூன்றாவது. கைவல்யம் எல்லாருக்கும் கிடைக்காது. பிரமாணம் என்பது ஒரு பொருளின் தனிப்பட்ட உண்மை. நயம் என்பது அப்பொருளின் சூழலோடு தொடர்புள்ள உண்மை. ஜைனர்கள் இவ்வகையில் உண்மையை அறிய முயற்சிக்கிறார்கள்.)

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கும் உள்ள அறுபது லட்சம் ஜைனர்களில், சுமார் முப்பது லட்சம் பேர் இந்தியாவில் – குறிப்பாக ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் குறைவெனினும் இந்தியப் பொருளாதாரத்தில் அவர்களின் பங்கு கணிசமானது. ஜைன மதத்தின் அஹிம்சைக் கருத்துகளும் பிறர்க்கு உதவும் நல்ல தத்துவங்களும் நவீன நாகரிகத்தின் பாதிப்பால் பழுதுபடாமல் பாதுகாக்க வேண்டியது சிரமமான காரியமே.

5

சீக்கிய மதம், சுமார் 500 வருடங்களுக்கு முன் தோன்றியது. சீக்கிய மதத்தின் ஆதாரக் கொள்கைகள் மிகச் சுலபமானவை: எப்போதும் கடவுள் பக்தி, உண்மை பேசுதல், எல்லோரும் சமம், சமூக நியாயம், மூட நம்பிக்கைகளையும் அர்த்தமில்லாத சடங்குகளையும் ஒழித்தல். சீக்கிய மதத்தை எவரும் கடைப்பிடிக்கலாம். 10 சீக்கிய குருமார்களின் படிப்பினைகள்தான் அதன் புனிதப் புத்தகம். அதுவே ஒரு குருவாகவும் சுருதப்படும்.

அமிர்தசரஸ் பொற்கோயில் . . .

(பஞ்சாபி மொழியில் 'சீக்' என்றால் சிஷ்யர். சீக்கியர்கள் அனைவரும் சிஷ்யர்கள். பத்து குருமார்கள் சொன்னதைக் கடைப்பிடிக்கும் சிஷ்யர்கள்.)

'பிரம்மனும் அல்லாவும் எனக்கு ஒன்றே. காபா யாத்திரை எனக்குக் கிடையாது. கங்கை ஸ்நானம் எனக்கு வேண்டாம். ஒரே ஒரு கடவுளை நான் வணங்குகிறேன். பூஜை அல்ல; தொழுகை அல்ல. எங்கள் உடலும் உயிரும் அந்த ஒரே பரம்பொருளுக்குச் சொந்தம். அவன்தான் ராமன்- அவன்தான் அல்லா' – குரு அர்ஜுன் தேவ், குருகிரந்த சாகிபில் இவ்வாறு சொல்லியிருக்கிறார். சீக்கியர்களுக்கு ஒரே ஒரு கடவுள்தான். அவர் எல்லா மதத்துக்கும் உரியவர்.

மறுபிறவி உண்மை. ஆத்மா, மனித ரூபம் பெறுவதற்கு முன் பல பிறவிகள் எடுத்து மடிகிறது. நாம் உயிர் வாழ்வதன் குறிக்கோள், மற்றவருக்கு உதாரணமாக வாழ்ந்து பரம்பொருளிடம் இறுதியில் ஒன்றிப்போவதே. சீக்கியர்கள் கடவுளை மறக்கக் கூடாது. ஒழுக்கமும் உண்மையும் கலந்த வாழ்க்கையில் உலகியலையும் ஆன்மிகத்தையும் சமனப்படுத்தி வாழ வேண்டும்.

ஆத்ம விடுதலைக்கு வழி துறவறமோ, திருமணத்தை மறுப்பதோ அல்ல. குடும்ப வாழ்வில் நியாயமாகச் சம்பாதித்து, சபலத்துக்கு இடம் தராமல், பாவம் செய்யாமல் இருந்தாலே போதும்.

மூடப் பழக்கங்கள், பட்டினி, க்ஷேத்ராடனம், மூட நம்பிக்கைகள், நீத்தாரை வழிபடுதல்.

குரு கோபிந்த் சிங்

அனைத்தையும் சீக்கியம் மறுக்கிறது. கடவுள் முன் எல்லா இனத்தவரும் எல்லா மதத்தவரும் எல்லா வயதினரும் ஆணும் பெண்ணும் சமம். பெண்கள் எல்லாப் பண்டிகைகளிலும் பிரார்த்தனைகளிலும் தாராளமாகப் பங்குகொள்ளலாம்.

குருநானக் தேவ் 1469–ல் இன்றைய பாகிஸ்தானில் உள்ள சுல்தான்பூரில் பிறந்தவர். அவர் காலத்து இந்து வழக்கங்களையும் முஸ்லிம் கட்டுப்பாடுகளையும் கவனித்து, இரண்டிலிருந்தும் விடுபட்ட சுலபமான ஒரு வாழ்க்கை முறையை அவர் போதித்தார்: 'யாரும் இந்து இல்லை; யாரும் முஸ்லிம் இல்லை!' அவரின் தலைமையை அவருக்குப் பின்வந்த ஒன்பது குருக்களும் சுவீகரித்தனர். பத்தாவது குரு கோபிந்த் சிங் 1708–ல் இறந்தார்.

குரு கோபிந்த் சிங், தன் வாழ்நாளில் 'கால்சா' (பொருள்: தூய்மையானது) அமைப்பை நிறுவினார். இந்த அமைப்பு, சீக்கியர்களின் அபார குணங்களான கடமை உணர்வு, சமூக உணர்வு ஆகிய இரண்டையும் போற்றுகிறது. கால்சாவில் சேரும் ஆண்களும் பெண்களும் சீக்கிய முறையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள். சீக்கிய வழிமுறைகளைக் கடைப்பிடிப்பவர்கள். தங்கள் உடலில் குறிப்பிட்ட சில பொருள்களை அணிபவர்கள். ஆண்கள் தலைமயிரை வெட்டக் கூடாது. கிர்பான் அணிய வேண்டும்.

குரு கோபிந்த் சிங் இறந்தபோது, "இனி மேல் உங்களுக்கெல்லாம் மனித குரு தேவையில்லை; குருகிரந்த சாகிப்தான் உங்கள் குரு!" என்று அறிவித்தார். இது, மிக புத்திசாலித்தனமான ஒரு செயல். இதனால் அடுத்தடுத்து சீக்கிய மதக் கோட்பாடுகள் புதிய புதிய பாதைகளில் பிரியாமல், இன்றுவரை கட்டுக்கோப்பாக இருந்து வருகிறது.

குருகிரந்த சாகிப் உலகிலேயே ஒரு தனிப்பட்ட புத்தகம். அதுவே குரு. அதுவே வழிகாட்டி. அதுவே கபீர், பாபா ஷேக் ஃபரீத் போன்றவர்களின் கவிதைகள். சீக்கியர்களுக்கு இன்றும் சாமியார்களோ, மடாதிபதிகளோ கிடையாது. அவர்கள் எல்லாம் சபலத்துக்கு அடிமையாகி விடுவார்கள் என்று குருகோபிந்த் சிங் நம்பினார். எனவே, குருகிரந்த சாகிப் புத்தகத்துக்குப் பாதுகாவலர்கள் மட்டுமே தேவைப்பட்டனர். அவர்களை 'கிரந்தி' என்கிறார்கள். சீக்கியரில் எவரும் குருகிரந்த சாகிபை குருத்வாராவிலோ, வீட்டிலோ படிக்கலாம். ஒவ்வொரு குருத்வாராவிலும் எல்லோருக்கும் இலவச உணவு நிச்சயம் கிடைக்கும். தன்னடக்கமும் சமநீதியும் இவர்களது உயிர்மூச்சு.

பஞ்சாப் அமிர்தசரஸில் உள்ள பொற்கோயில் இவர்களது மிக முக்கியமான புண்ணியத் தலம். ஆனால் பனாரஸ், மெக்கா போல, 'வாழ்வில் ஒரு முறை போய்த்தான் ஆகவேண்டும்!' என்ற கட்டாயம் இல்லை. குருகிரந்த சாகிப் வைத்திருக்கும் இடமெல்லாம் அவர்களுக்கு புண்ணியத் தலமே!

சரித்திர ஆராய்ச்சியாளர்கள், சீக்கியத்தை syncretistic (உப மதம்) என்கிறார்கள். இந்துக்களின் பக்தி இயக்கமும் இஸ்லாமின் சூஃபி இயக்கமும் சேர்ந்த கலவை என்கிறார்கள். சில சீக்கியர்கள் அதை, 'இந்து மதத்தைப் புதுப்பித்த மதம் ... இந்துப் பாரம்பரியத்தைச் சேர்ந்தது!' என்கிறார்கள். பல சீக்கியர்கள் இவற்றை ஒப்புக் கொள்வதில்லை.

ஜோசப் கன்னிங்ஹாம் (1812–1881) சொல்வது கவனிக்கத்தக்கது. "சீக்கிய மதம், இந்து மதத்திலிருந்து வந்தது என்றாலும் சீக்கியர்கள் மத நம்பிக்கையிலோ உலகியல் குறிக்கோள்களிலோ இந்துக்களிலிருந்து வேறுபட்டவர்கள்; அவர்கள் இலக்குகளும் வேறுபட்டவை."

மொகலாய மன்னர்கள் தெற்கு ஆசியாவின் பெரும்பான்மையைக் கைக்கொண்ட காலகட்டம் அது. அவர்கள், சீக்கியர்களை இஸ்லாமுக்கு மதமாற்றம் செய்ய முயற்சித்தனர். அதை அவர்கள் எதிர்த்தனர். 'குருகோபிந்த் சிங் மட்டும் இல்லையேல் நாடு முழுதும் இஸ்லாமுக்கு மாறியிருக்கும்!' என்று சொல்வார்கள்.

இன்று இரண்டேகால் கோடி சீக்கியர்களில் ஐந்து லட்சம் பேர் அமெரிக்கா மற்றும் கனடாவில் வாழ்கிறார்கள். கடுமையான உழைப்பும் தன்னம்பிக்கையும் சமூகப் பாதுகாப்பு உணர்வும் கொண்டவர்கள் சீக்கியர்கள். நம் நாட்டு ராணுவத்தில், ரத்தினங்கள் பல சீக்கியர்கள்.

6

இறைத்தூதர் என்றும் நபிகள் நாயகம் என்றும் அழைக்கப்படும் முஹம்மது நபிகள், அரேபியாவில் துவங்கி இன்று உலகம் முழுவதும் பரவியிருக்கும் இஸ்லாமிய மார்க்கத்தை முழுமையாக்க வந்தார். மனிதர்கள், பல்வேறு கடவுள்களை வழிபட்டு வந்த சூழ்நிலையில் 'இறைவன் ஒருவனே' என்பதை நிலைநாட்டுவதும் அந்த ஒரே கடவுளின் கட்டளைகளுக்கு முழுமையான கீழ்ப்படிதலைக் கற்பிப்பதுமே அவரது குறிக்கோள்.

('இஸ்லாம்' என்ற வார்த்தைக்கு 'அமைதி' மற்றும் 'அடிபணிதல்' என்பது பொருள். முஸ்லிம்கள் என்றால், ஏக இறைவனுக்கு அடிபணிபவர்கள். இஸ்லாமிய வேதமான திருக்குர்ஆனை, முஸ்லிம்கள் கடவுளின் தவறில்லாத வார்த்தைகளாக மதிக்கிறார்கள்.)

எட்டாம் நூற்றாண்டில் இப்னு இஸ்ஹாக் எழுதிய வரலாற்றிலிருந்து நபிகளின் வாழ்க்கையை நாம் பெரும்பாலும் அறிகிறோம். அவர், ஏறத்தாழ 570 கி.பி.யில் குறைஷி இனத்தில் மக்காவுக்கு அருகில் பிறந்தவர். குழந்தைப் பருவத்தில் ஏழ்மை நிலையில் வளர்ப்புப் பெற்றோரிடம் வளர்ந்தார்.

நபிகளுக்கு ஆறு வயதானபோது, அவரின் சொந்தத் தாயார் இறந்துபோனார். இரண்டு ஆண்டுகள் தாத்தாவுடன் இருந்தார். பின், பெரியப்பா அபுதாலிப் உடன் தன் இளம் வயதுவரை வாழ்ந்தார். நபிகள் இளைஞராக இருக்கும்போது, கதீஜா என்னும் செல்வந்தரான விதவைப் பெண்மணியின் வியாபாரத்தைப் பார்த்துக்கொண்டார். பிறகு அவரையே மணந்தார். நடுவயது வரை அவர் இறைத்தூதர் ஆகவில்லை. ஆனால், அதற்கான அடையாளங்கள் சின்ன வயதிலேயே இருந்தனவாம். கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவர் நபிகளை ஆசீர்வதித்தது அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்காவுக்கு அருகில் உள்ள 'ஹரா' எனும் மலைக் குகையில் நபிகள் அடிக்கடி சென்று, இறைவனைத் தியானித்து வருவார். அவருடைய நாற்பதாவது வயதில், ஹரா குகையில் தியானத்தில் இருந்தபோது, வானவர் ஜிப்ரீல் தோன்றி, இறைவசனங்களை (வஹீ) ஓதச் செய்தார். குர்ஆனில் 96—வது அத்தியாயத்தில் வரும் முதல்

ஐந்து வசனங்களை அவர் முதலில் போதித்தாராம். நபிகளுக்கு அருளப்பட்ட முதல் ஐந்து வசனங்கள்: "ஓதுவீராக! (நபியே) படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு! (உறைந்த) இரத்தக் கட்டியிலிருந்து மனிதனை அவன் படைத்தான். மேலும் உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில், அவனே எழுது கோலின் மூலம் கற்றுக்கொடுத்தான் – மனிதனுக்கு; அவன் அறியா திருந்தவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்."– (அத்தியாயம் 96: 1–5) அடுத்த பத்து வருஷங்களில் அவருக்கு குர்ஆனின் பல்வேறு வசனங்கள், கடவுளிடமிருந்து ஜிப்ரீல் மூலம் சொல்லப்பட்டன.

அதிலிருந்து தன் ஒரே கடவுள் தத்துவத்தை, தன் குடும்பத்தாரிடமும் குழுவினரிடமும் மக்காவுக்கு வரும் பயணிகளிடமும் போதிக்கத் துவங்கினார். இறைவனிடமிருந்து தனக்கு அருளப்பட்ட வசனங்களை, மற்றவருக்கு போதிக்கத் துவங்கினார். அவருடைய இவ்வகையிலான தூய பணியினால் பரவத் தொடங்கிய இஸ்லாம், இன்று உலகின் மிகவும் சக்தி வாய்ந்த வாழ்க்கை முறையாகவும் மார்க்கமாகவும் விரிவடைந்துள்ளது.

நபிகளின் வெற்றியைப் புரிந்துகொள்ள அவர் வாழ்ந்த சூழ்நிலையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். மிகப் பெரிய அரேபிய நாடு, அவர் காலத்தில் பெரும்பாலும் பாலைவனமாகவும் அதன் மக்கள் நாடோடிகளாகவும் இருந்தனர். அவர்களை ஒருங்கிணைக்க வலுவான ஒரு சக்தியோ, நம்பிக்கையோ இல்லாததால், அரேபிய நாட்டைக் குறித்து மேலை, அண்டை நாடுகள் அச்சம் கொள்ளவில்லை. எப்போதாவது சின்னச் சின்ன அரேபியத் தாக்குதல்களை அண்டை நாட்டினர் சமாளித்து வந்தார்கள். அதன் மக்கள், பல கடவுள்களை வழிபட்டுக்கொண்டிருக்கும்போது ஒரே கடவுளை நம்பும் யூத – கிறிஸ்தவ தாக்கங்கள் அரேபிய நாட்டை ஆக்கிரமித்திருக்க முடியும் என்பதுதான் சம்பிரதாயமான சரித்திரச் சிந்தனை. ஆனால், நடந்தது வேறு.

முஹம்மது நபிகளின் பாட்டனார் பெயர் ஹாஷிம். அவர் மக்காவுக்கு வரும் யாத்ரீகர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தார். அவ்வாறு பாதுகாப்பு அளிப்பது அவரது குடும்பத் தொழில். ஆகையால், நபிகளும் அதே பாதுகாப்புச் செயலைத் தொடர்ந்து செய்தார். அரேபியர்கள் மற்றும் யாத்ரீகர்களின் கடவுள் தத்துவத்தைப் பற்றி ஹாஷிம் கவலைப்படவில்லை. ஆனால், நபிகள் நாயகம் கவலைப்பட்டார். "எதற்காகப் பல கடவுள்களைத் தொழுகிறீர்கள்? இறைவன் ஒருவனே!" என்று போதித்தார். இதனால் மக்கா நகர மக்களிடையே சச்சரவுகள் துவங்கின.

'என்ன இது ... புதுசாக ஏதோ சொல்கிறாரே! இறைத்தூதர் என்கிறார். இவர் சொல்வதில் உண்மையிருப்பது போல் தெரிகிறது. இவரை அனுமதித்தால் ஆபத்து!' என்ற சச்சரவுகள் எழுந்தன. ஆயினும், நபிகளும் அவரை ஏற்றுக்கொண்டவர்களும் தொடர்ந்து

பிரசாரப் பணியில் ஈடுபட்டனர். அதனால் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாயினர். எனவே, தம் தோழர்களில் சிலரை எத்தியோப்பியாவுக்கு அனுப்பிய நபிகள் நாயகம், மக்காவில் இருந்து கொண்டு தன் கொள்கைகளைப் பரப்பினார். கி.பி.622–ல் அவர் மக்காவிலிருந்து யத்ரிபுக்குச் சென்றார். பிற்பாடு இந்த இடம் மதினா என்று அழைக்கப்பட்டது. அவர் பயணம் செய்த அந்த வருடம்தான் இஸ்லாமிய காலண்டரின் முதல் ஆண்டு. இதை 'ஹிஜ்ரி' என்பார்கள்.

அடுத்த பத்து ஆண்டுகளில் நபிகள், தமக்கு ஜிப்ரீல் மூலம் அருளப்பட்ட வேத வசனங்களின் அடிப்படையில் தம் பணிகளை விரிவுபடுத்தினார். தினசரித் தொழுகை முறைகள், நோன்புகள், அந்தரங்க சுத்தி, தர்மம், யாத்திரை போன்ற நடைமுறைகளை நிர்ணயித்தார். மக்காவை அவர் மறுபடியும் கைப்பற்றியபோது, ஏக இறை ஆலயத்தில் (கஅபா) இருந்த பல கடவுள்கள் நீக்கப்பட்டு, முழுவதும் இஸ்லாம் பரவியது. எட்டாம் நூற்றாண்டில் இஸ்லாம் மத்திய ஆசியா மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் பரவியது. பதினோராம் நூற்றாண்டில் துருக்கி, தெற்கு ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளிலும் பரவியது. இன்று உலகெங்கும் பரவியுள்ளது.

நபிகள் காலத்துக்குப் பின் குர்ஆன் வசனங்களை மூன்றாவது கலீஃபா உஸ்மான் காலத்தில் (கி.பி.644–656) தொகுக்கப்பட்டது. ஆரம்ப அத்தியாயங்கள் கடவுளின் மகிமை, மகத்துவம், அவரது சக்தி பற்றிக் கூறுகின்றன. பிந்தைய அத்தியாயங்கள், வாழ்க்கை முறை பற்றி விரிவான கோட்பாடுகளைச் சொல்கின்றன. குர்ஆனின் அதிகாரம் பரிபூர்ணமானது. அதை மனப்பாடம் செய்வது முஸ்லிம் களின் ஒரு புனிதக் கடமை. இஸ்லாம் கூறும் கடவுள், எல்லாம் வல்லவன். எல்லாம் அறிந்தவன். எங்கும் நிறைந்தவன். அவனுக்கு இணை – துணை கிடையாது. பாகம் பிரிக்க முடியாது. இதனால் மற்ற கடவுள்களையும் தேவகுமாரர்களையும் இஸ்லாம் நிராகரிக்கிறது.

வானுலகம் மற்றும் பூவுலகின் உள்ளடக்கமும் அவன்தான். அவற்றைப் படைத்தவனும் அவன்தான். எதையேனும் அவன் படைக்கும்போது, 'ஆகு' என்ற ஒரு சொல் போதும்; அது ஆகிவிடும். குர்ஆன் காட்டும் இறைவன் அல்லா? வார்த்தைகளுக்கும் வடிவங்களுக்கும் அகப்படாதவன். அடியார்களுக்கு மிக அருகில் இருப்பவன். உலகின் தேவைகள் எதுவுமில்லாதவன். சிருஷ்டியின் ஒவ்வொரு நுட்பத்தையும் ஒவ்வோர் உயிரையும் அறிந்தவன். நபிகள் நாயகம் இறைத்தூதர்; தத்துவஞானி அல்ல. ஆனால், அவருக்கு அருளப்பட்ட குர்ஆன் வசனங்களை மற்றவர் அலசிப் பார்க்கும் போதும் அதன் மதிப்பை எடை போடும்போதும் இஸ்லாமிய தத்துவ ஞானங்கள் எழுந்து விரிவடைந்தன.

7

சூஃபிஸம், இஸ்லாத்தின் உள்ளம் சார்ந்த பரிமாணம்' என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். இன்று பல முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதாரும் 'சூஃபி கருத்துகள், இஸ்லாத்துக்கு வெளிப்பட்டது!' என்று சொன்னாலும் இஸ்லாத்தின் மிகப் பெரிய அறிஞர்களில் ஒருவரான சையத் உசேன் நஸீர், 'சூஃபிஸம் இஸ்லாத்துக்கு உட்பட்டது!' என்றுதான் கருதுகிறார்.

சூஃபியின் ஆதாரக் கருத்து மிக எளிமையானது. 'கடவுளிடம் சரணடைவது. கணத்துக்குக் கணம் கடவுளின்மேல் காதலாகிக் கசிந்து உருகுவது. நமது எண்ணங்கள், உணர்வுகள், உணர்ச்சிகள், நம்முடைய 'நான்' எல்லாமே கடவுளின் பரிசு அல்லது கடவுளின் அம்சம்' என்பதே.

மேலும் 'சூஃபிக்கள் கடவுளை அணுக இறந்துபட்டு, இறுதித் தீர்ப்பு தினத்துக்குக் காத்திருந்து, சொர்க்கம் போக வேண்டியதில்லை. அன்றாட வாழ்விலேயே கடவுளை அணுகலாம்!' என்கிறார்கள்.

'இறைவனின் அருகில் கிடைக்கும் ஆனந்தம் – பரவசம்தான் சிருஷ்டியின் காரணம்' என்கிறார்கள். கடவுள், 'நான் புதையல் போல் மறைந்திருந்தேன். என்னை அறிவிக்க விரும்பினேன். எனவே, மற்றவர் அறிந்து கொள்வதற்காக, மறுபடி சிருஷ்டித்தேன்!' என்கிறார், 'ஹதித் குத்ஸி' என்னும் புத்தகத்தில். சூஃபிக்களின் இதயங்கள் எப்போதும் கடவுள்பால் ஈர்க்கப்படுகின்றன. இந்தப் பரவச சங்கமத்துக்குத் தடைகள் ஏற்படுகின்றன.

ஹஃபிஸ் என்னும் பாரசீகக் கவிஞரின் வரிகளில், 'மது தருபவனே! கோப்பையை எனக்கும் மற்றவர்க்கும் நிரப்பு. காதல் முதலில் சுலபமாக இருந்தது. பிறகு, தடைகள் புறப்பட்டன!'

என்னென்ன தடைகள்?

முதல் தடை – நம் ஈகோ (ஈஃப்ஸ்). நம்மால் கடவுளின் நெருக்கத்தை உணர முடியவில்லை எனில், அதற்கு நாமே காரணம்.

'நான்' எனும் அகங்காரம் – கோபம், விருப்பம், காமம், பழக்கங்கள் போன்றவற்றுக்கு வித்திடுகிறது. கவலை, வருத்தம், தன்னிரக்கம்

போன்றவற்றால் நம்மை, நம் மனம் அடிமைப்படுத்துகிறது.

'எங்கு திரும்பினாலும் அங்கு இறைவனின் முகம் இருக்கிறது!' என்கிறது திருக்குர்ஆன். அப்படிப் பார்க்க இயலாமல் தடுப்பவை, நம் மனமும் சந்தேகங்களும். இதனால்தான், நாம் கடவுளுடன் ஐக்கியமாகத் தவறுகிறோம்.

சூஃபியின் முதல் குறிக்கோள் – 'இந்த 'நஃப்ஸ்'–ஸின் ஆக்கிரமிப்பைச் சமாளித்து, ஒவ்வொரு கணமும் கடவுளை நினைப்பதும் சரணடைவதுமே ரூமி சொன்னதுபோல், 'நான் அவன் கருணையையும் தண்டனையையும் நேசிக்கிறேன்'. இந்த எதிரெதிர் குணங்களை நேசிப்பது விநோதம்.

அல்கஸாலி (AlGhazali), 12–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் பெரிய இஸ்லாமிய அறிஞர். அவரைத்தான் சூஃபிஸத்தின் தந்தை என்கிறார்கள். சூஃபி பாதையில் செல்லும்போது, எந்தக் கணத்திலும் இறைவனின் அருகில் ஈர்க்கப்படலாம். இந்த ஈர்ப்பை, 'ஜத்மா' என்கிறார்கள். வாசித் (பரவசம்) கண்டுபிடிப்பது என்கிறார்கள். கண்ணுக்குப் புலப்படாததை (அல்காயப்), தெளிவற்றதை உணர்வது அது.

திருக்குர்ஆன் எப்போதும் இறைவனை நினைக்கச் சொல்கிறது. அவருடைய வல்லமை கண்ணுக்குத் தெரிந்த, தெரியாத அனைத்து விஷயங்களிலும் பரவியிருக்கிறது. சூஃபிக்கள் எப்போதும் கடவுளை நினைத்தலை (திக்ர்), இதன் சாரமாக எடுத்துக்கொள்கின்றனர்.

எப்போதும் கடவுளை நேசிக்கும் பாதையை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த நேசத்தின் – காதலின் தீவிரம், அதன் அக்னி, ரூமி போன்ற சூஃபிக்களை முழுவதுமாக ஆட்கொண்டு விடுகிறது. மற்றவருக்கு இடி, நடுங்கும் ஒரு நெருப்பு. அவ்வப்போது அணைந்துவிடும் நெருப்பு. இறைவனின் அழகையும் உண்மையையும் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்து, அந்தத் தீயைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். 'தீக்குள் விரலை வைத்தால் . . . நின்னைத் தீண்டும் இன்பம் தோன்று'வதாகச் சொன்ன மகாகவி பாரதியின் வரிகளில் சூஃபிஸம் மிளிர்கிறது.

இனி, சில சூஃபி கவிதைகளைப் பார்ப்போம்:

நள்ளிரவில் ஒரு சூஃபி கண்ணீர் விட்டு அழுதான்.
உலகே ஒரு சவப்பெட்டி. அதில் அடைந்திருக்கிறோம்.
அறியாமையால் வாழ்வில் தவறுகள் செய்கிறோம்.
இறுதியில் சாவு வந்து மூடியைத் திறக்கும்போது,
இறக்கை இருப்பவர்கள் சாஸ்வதம் நோக்கிப் பறந்து செல்வார்கள்.
இல்லாதவர்கள் பெட்டிக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பார்கள்.
நண்பர்களே! பறவையாகிக் கடவுளை நோக்கிப் பறந்து செல்ல
ஆவன செய்யுங்கள். சிறகுகளும் இறகுகளும் பெறுங்கள்.

– அத்தர்

காலைக் காற்று பரவுகிறது
அதன் மணம் பரவுகிறது
விழித்தெழுந்து அதை சுவாசிக்க வேண்டும்
வாழவைக்கும் காற்று
நம்மைக் கடப்பதற்குள் சுவாசிப்போம்...

உன் காதல் என்னை எழுப்ப
மெழுகுவத்தி ஒளிபோல்
இருளில் உன்னைப் பிடிக்க முயல்கிறேன்.
இருந்தும், என்னை அடிப்பதை நிறுத்த மாட்டாய்.
திரும்பத் திரும்பக் கேட்கிறோம் –
'என்ன குறை எனக்கென்று?'

– ஜலாலுதீன் ரூமி

நவீன உருதுக் கவிஞர்கள் பலரிடம் சூஃபி கருத்துக்களின் பாதிப்பைக் காணலாம். தமிழில், பக்தி இலக்கியங்களில் உள்ள இறைக் கருத்துகளின் ஒற்றுமை ஆச்சரியப்பட வைக்கிறது.

8

கௌதம புத்தர் மறைந்த சில நூற்றாண்டுகளுக்குப் பின் சீடர்கள், அவருடைய படிப்பினைகளை விதம்விதமாகப் புரிந்துகொண்டார்கள். நாளடைவில் இரண்டு பெரும் பிரிவுகளாக, புத்த மதம் பிரிந்தது – 'தேரவாதா' அல்லது ஹீனயான (சிறிய தேர் அல்லது கலம்); மஹாயானா (பெரிய தேர் அல்லது கலம்). கி.பி. முதல் நூற்றாண்டில் நாகார்ஜுனர் மத்யாமிக (நடுச்சாலை) சூன்யவாதக் கருத்துகளை வலியுறுத்தினார். இதன் விளைவாக ஜென் பௌத்தம் தோன்றியது. இதனுடன் இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு வந்த மைத்ரேயரின் விக்ஞானவாதம் (மனம் மட்டும்) இரண்டும் சீனா, ஜப்பான், கொரியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் பரவியது.

ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீனாவுக்குச் சென்ற போதி தர்மர், "வார்த்தைகளிலும் எழுத்துகளிலும் தேடாமல், புனிதப் புத்தகங்களுக்கு அப்பால், நேராக மனதைக் குறிவைத்தால் ஒருவன் தன் இயற்கையை முழுவதும் அறிந்து, புத்தனாக முடியும்!" என்றார். இதுதான் ஜென் பௌத்தத்தின் அடிப்படைக் கருத்து.

தன் இயற்கையை அறிவதை 'கென்ஷோ' என்கிறார்கள். இதைச் சாதிக்க ஜென் குருமார்கள் பலவிதமான வழிகள் சொல்கிறார்கள். உங்கள் மூச்சின் எண்ணிக்கையை அறிவது, உங்கள் மூச்சை மனத்தில் தொடர்வது, அமைதியாக எண்ணங்களற்று உட்கார்ந்திருப்பது, 'கோன்' என்னும் விடுகதைகள் போடுவது ... இவ்வாறு பலவிதமான முறைகள் உள்ளன. இவற்றை ஜென் மஹாயான பௌத்தத்தின் சாரம் என்று சொல்லலாம். எப்படியும் ஜென் பௌத்தத்தின் இறுதிக் குறிக்கோள், புத்த பகவான் சொன்னதை நடைமுறையில் பழகி ஆசை, கோபம், அறியாமை போன்றவையால் வரும் துன்பங்களிலிருந்து தானும் விடுபட்டு மற்றவரையும் விடுவிப்பதே!

ஜப்பானிய தேசத்தின் அன்றாட வாழ்வு, அவர்களின் சாமுராய் கலாசாரம், கலை, இலக்கியம், சித்திரம் அனைத்திலும் ஜென் பாதிப்பு உள்ளது.

ஆயிரம் வருஷங்களாகச் சின்னச் சின்னக் கதைகள், வினோத வேடிக்கைகள், கவிதைகள் போன்றவற்றின் மூலம் சட்டென்று

உங்கள் மனதை அறிந்துகொள்ள முடியும் என்று நம்புகிறது ஜென். தனிப்பட்ட இறைவன் ஒருவனை அடையாளம் காட்டாமல், 'ஸாட்டோரி' என்னும் முக்தி நிலையை அல்லது ஞான மின்னலை, கடவுளின் அனுபவமாகச் சொல்கிறது. நம் யோக சாஸ்திரம் சில சமயம் இதற்கு அருகில் நெருங்கி வருகிறது.

ஜென்னை அறிந்து கொள்ள முதலில் மனத்தூய்மை வேண்டும். உதாரணமாக ஒரு ஜென் கதையைப் பார்க்கலாம்.

இருபது பிட்சுகளும் ஒரு பிட்சுணியும் ஒரு ஜென் குருவிடம் பயின்று வந்தார்கள். அவர்களில் ஒரே பெண்ணான இஷ்ன் தலையை மழித்திருந்தாலும் உடலை மறைக்கும் உடை அணிந்திருந்தாலும் தோற்றத்தில் மிக அழகாக இருந்தாள். பல சீடர்கள் அவளை ரகசியமாகக் காதலித்தனர். ஒருவர் காதல் கடிதம் எழுதி அவளிடம் தனிமையில் சந்திக்குமாறு கேட்டிருந்தார்.

இஷ்ன் பதில் எழுதவில்லை. மறுநாள் குரு அவர்களுக்குப் பாடம் எடுத்து முடித்ததும் இஷ்ன் எழுந்து நின்றாள். அவளுக்குக் கடிதம் எழுதிய சீடனை நோக்கி, "உனக்கு என்மேல் அத்தனை காதல் என்றால், வா ... என்னை இப்போதே கட்டித் தழுவு!" என்றாள்.

இந்தக் கதை முதலில் ஒரு வேடிக்கைக் கதையாகத்தான் தோன்றும். மெள்ள இதன் உள்ளர்த்தத்தை யோசிக்கும்போது, மேம்போக்குத்தனம் விலகி, 'உன்னை நீ அறிந்துகொள்ள முதலில் உன் உள்மனத்தைக் காலி செய்து, பாசாங்குகளை நீக்க வேண்டும்!' என்னும் அறிவுரை பொதிந்திருப்பதை உணரலாம்.

மற்றோர் உலகப் பிரசித்தி பெற்ற கதை. நான்–யின் ஒரு ஜென் மாஸ்டர். 1868–1912–ல் வாழ்ந்தவர். அவரிடம் ஒரு கல்லூரிப் பேராசிரியர், ஜென் பற்றிக் கேட்க வந்தார். நான்–யின் அவருக்குக் கோப்பையில் தேநீர் அளித்தார். கோப்பை நிரம்பி வழிந்தும் அவர் தேநீர் ஊற்றுவதை நிறுத்தவில்லை. பேராசிரியர் இதைப் பார்த்து தாங்க முடியாமல், "கோப்பை நிரம்பி வழிகிறது!" என்றார்.

"இந்தக் கோப்பை போலத்தான் நீ. மனம் முழுதும் கருத்துகளும் ஐயங்களும் நிரப்பி வைத்திருக்கிறாய். உன் கோப்பையைக் காலி செய்யாமல் நான் எப்படி உனக்கு ஜென்னைக் காட்ட முடியும்?" என்றார் நான்–யின்.

மனதின் எண்ணங்களை காலி செய்வது அத்தனை சுலபமல்ல. சிந்தனையே இல்லாமல் ஓர் இரண்டு நிமிஷம் இருந்து பாருங்கள் ... தெரியும்!

கேள்விகள் மூலமும் நம் சிந்தனையைத் தூண்டுகிறது ஜென். உதாரணம்:

'வரும்போது அவனை இந்த உலகமே நிறுத்த முடியாது. செல்லும் போது அவனை இந்த உலகமே தடுக்க முடியாது. யார் அவன்?'

இதை யோசித்துப் பாருங்கள்.

ஹக்குவின் என்பவரின் சீடர் சுன்லோ. நல்ல குரு. ஒரு முறை தன் சீடர் சுன்லோவிடம், "ஒற்றைக் கைதட்டல் ஓசையைக் கேட்டு விட்டு வா!" என்று கூறி அனுப்பினார்.

சீடர் மூன்று வருஷம் யோசித்தார். இறுதியில், "எனக்குக் கேட்கவில்லை. தோற்றுவிட்டேன். அவமானத்தில் என் கிராமத்துக்குத் திரும்புகிறேன்!" என்றார்.

"யோசி... மீண்டும் ஒரு வாரம் கழித்து வா!" என்றார் குரு.

ஒரு வாரம் கழித்து வந்தான் சீடன். "ம்ஹூம்... கேட்க முடிய வில்லை!"

"இன்னொரு வாரம் முயற்சி செய்!" என்றார்.

அப்போதும் ஒரு கை ஓசை கேட்கவில்லை.

"இன்னும் இரண்டு நாள்..." என்றார் குரு.

சீடன் நொந்துபோய், "என்னை ஆளை விடுங்கள்!" என்றான்.

ஐந்து நாள் கழித்து வரச் சொன்னார் குரு.

அதன்படியே வந்தான் சீடன் சுன்லோ. ஆனால், ஒற்றைக் கை தட்டல் ஓசை கேட்கவில்லை.

"இன்னும் மூன்று நாள் பார். கேட்கவில்லை என்றால், தற்கொலை செய்துகொள்!" என்றார் குரு.

இரண்டாவது தினமே அவனுக்கு ஞானம் பிறந்தது!

உங்களுக்கு?

9

ஷிந்தோ (ஷிண்டோ என்றும் சொல்வார்கள்!) என்பது புராதனமான ஜப்பானிய மதம். கி.மு.500–ல் துவங்கியதாகச் சொல்கிறார்கள். இயற்கை வழிபாடு, பிள்ளைப்பேறுக்கான சடங்குகள், குறி சொல்வது, வீர வழிபாடு, மந்திர தந்திரங்கள் இப்படி எல்லாம் சேர்ந்த வடிவற்ற ஒரு கலவை அது. இதன் பெயர் 'ஷின், தூ' என்னும் சீனமொழிச் சொற்கள் இரண்டிலிருந்து உருவானது. 'கடவுள்களின் வழிகள்' என்பது இதன் பொருள்.

கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் யாமோடோ என்னும் வம்சம், நாடு முழுவதையும் ஆட்சி செய்தது. அப்போது, பேரரசின் குடும்பத்தினருக்கு கடவுள் ஸ்தானம் அளித்து, அவர்களை 'அவதாரங்கள்' என்று மக்கள் நம்பத் துவங்கினர். ஷிந்தோ, பௌத்தத்துடன் சேர்ந்து ஜப்பானின் முக்கிய மத நம்பிக்கையாயிற்று. மதமும் அரசியலும் அப்போது கலந்தது. இரண்டாம் உலகப் போரின் இறுதிவரை அந்நாட்டில் இந்த நிலைமை நீடித்தது. போரில் தோற்றபோது ஜப்பானியச் சக்ரவர்த்தியின் தெய்வப் பதவியை அமெரிக்கர்கள் பறித்துவிட்டனர். ஆனால், இன்றும் பல ஜப்பானியர்களுக்கு சக்ரவர்த்திதான் கடவுள்.

மற்ற மதங்களைப் போல ஷிந்தோவை யாரும் நிறுவவில்லை. இந்த விதத்தில் இது இந்து மதம் போல என்று சொல்லலாம். திருக்குர்ஆன், பைபிள் போல புத்தகங்கள் எதுவும் இதற்குச் சொல்லப் படவில்லை. சட்டதிட்டங்கள், கோட்பாடுகள் இல்லை. ஷிந்தோ மதத்தின் போதகர்களுக்கு அதிகமான அதிகாரங்களோ சலுகைகளோ கிடையாது.

ஷிந்தோ பல கடவுள்களைப் பேசுகிறது. அந்தக் கடவுள்களை 'காமி' என்கிறார்கள். ஒரு தெய்வத் தம்பதியினர்தான் ஜப்பானியத் தீவுகளை முதலில் சிருஷ்டித்தார்களாம். அவர்களின் குழந்தைகளே குட்டி தெய்வங்கள். ஜப்பானில் உள்ள வெவ்வேறு இனத்தவருக்கான காவல் தெய்வங்கள் இந்தக் குழந்தைகள்தான். இவர்களில் சூரிய தேவதைதான் மூதாதையராகக் கருதப்படுகிறது. முக்கிய தேவதையும் அவளே! பெயர் அமெதராஸு. ஓமிகாமி என்பது அவளுடைய

சகோதரன் பெயர்.

ஜப்பானியர்கள் பல கடவுள்களை நம்பினார்கள். மலை, காற்று, ஏன் ... உணவைக்கூட கடவுள் என்கிறார்கள். காமி, ஒவ்வோர் இனத்தையும் காப்பாற்றுவார். சிறந்தவர்கள் அனைவரும் கடவுள் களே– ஜப்பானிய சக்ரவர்த்தி உட்பட! அதேபோல கண்ணுக்குத் தெரியாத சக்திகளும் காமிதான். கோபம் இல்லாத காக்கும் கடவுள்கள்.

ஜப்பானில் 84 சதவிகிதத்தினர் ஷிந்தோ, பௌத்தம் ஆகிய இரண்டு மதங்களையும் கடைப்பிடிக்கிறார்கள். புத்தரை ஒரு காமி என்று வர்ணிக்கிறது ஷிந்தோ மதம். 'காமி'க்களை போதிசத்துவர்கள், ஞானமடைந்தவர்கள் என்று சொல்கிறது பௌத்தம். இரு மதங்களும் இவ்வாறு ஒருங்கிணைக்கின்றன. ஜப்பானில் திருமணங்களை ஷிந்தோ மத குருமார்கள் நடத்துகிறார்கள். அந்திமச் சடங்குகளை பௌத்த முறைப்படி செய்கிறார்கள். ஷிந்தோக்களுக்கென்று தனிப்பட்ட விதிமுறைப் புத்தகம் எதும் இல்லாத சூழ்நிலையில், கன்ஃபூஷியஸின் போதனைகளை அவர்கள் பின்பற்றுகிறார்கள் (கன்ஃபூஷியஸ் பற்றி அடுத்த கட்டுரையில் சொல்கிறேன்). சொர்க்கம் – நரகம் பற்றி வர்ணனை உள்ளது. ஆனால், விவரமாக இல்லை. 'சொர்க்கம் என்பது மேலான இடம். நரகம் என்பது இருள்!' என்று சொல்கிறார்கள். முன்னோர்களை வழிபடுதலும் அவர்களுக்கு மரியாதை செலுத்துவதும் முக்கியம். மனிதர்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகள். அதனால் அனைவரையும் நேசிக்க வேண்டும். 'காமி' ஒன்றிணைக்கிறார். படைக்கிறார்.

நான்கு விஷயங்கள் ஷிந்தோவுக்கு முக்கியம்.

1. சம்பிரதாயங்களையும் குடும்பத்தையும் பாராட்டுவது, 2. இயற்கையை நேசிப்பது, 3.அந்தரங்க சுத்தி, 4.'காமி'க்களுக்கும், முன்னோர்களின் ஆவிகளுக்கும் மரியாதை செலுத்துவது.

ஷிந்தோக்களுக்குப் பல புனிதத் தலங்கள் உண்டு. மலைகள், சுனைகள் உட்பட நம்மூர் பிள்ளையார், அனுமார் கோயில் போல ஒவ்வொரு 'காமி'க்கும் தனிப்பட்ட கோயில் உண்டு. கோயிலின் வாசலைக் கடக்கும்போது உலகத்துக்கும் சொர்க்கத்துக்கும் உள்ள விளிம்பைக் கடப்பதாக ஐதீகம். கோயிலுக்குள் நுழையும்போது கைகழுவிவிட்டு வாய் கொப்பளித்துந் துப்பிவிட்டுச் செல்ல வேண்டும்.

மிருகங்களை, 'கடவுளின் தூதர்கள்' என்று நம்புகிறார்கள். கோயிலின் உள்ளே இரண்டு நாய் பொம்மைகள் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டு இருக்கும். கமா, இனு என்று அவற்றுக்குப் பெயர். தாயத்து, ரட்சை எல்லாம் உண்டு. மாதம் ஒரு நாள் உபவாசமிருந்து அதன் செலவு மிச்சத்தைக் கோயிலுக்குக் கொடுக்க வேண்டும்.

ஷிண்டோவில் நான்கு வகை உள்ளன. நான்கும் மற்ற மதங்களையும் அதன் கடவுள்களையும் வெறுப்பதில்லை. சகிப்புத்தன்மையை போதிக்கும் மென்மையான மதம் அது.

10

தாவ் (dao என்று உச்சரிக்கிறார்கள்) – இந்தச் சொல்லுக்குக் குத்துமதிப் பாகப் பாதை அல்லது வழி என்று பொருள் கூறலாம். அறுதியிட்டு, 'இதுதான்!' என்று சொல்ல.

லாவ் ட்சே (ஓவியம்)

முடியாத ஓர் அனுபவம். அது ஒரு சக்தி. எல்லாப் பொருட்களையும் சூழ்ந்து மூடி, அவற்றை ஊடுருவியிருக்கும் சக்தி. உயிருள்ள–உயிரற்ற அனைத்திலும் விரவி இயற்கை விதிகளை, இயக்கச் சக்திகளைச் சமனப்படுத்தி எதிர்மறைகளை ஒன்று சேர்க்கும் சக்தி அது. 'வெறுப்பு இல்லாமல் அன்பு இருக்க முடியாது; இருள் இல்லாமல் ஒளி இருக்க முடியாது; பெண் இல்லாமல் ஆண் இருக்க முடியாது!' போன்ற வாசகங்களை தாவிஸத்தில் அதிகம் பார்க்கலாம்.

இதை நிறுவியவர் லாவ் ட்சே (Lao Tse). கி.மு. 604–லிருந்து 571 வரை வாழ்ந்தவர். கன்ஃபூஷியஸ் காலத்தவர். தம் இன மக்களிடையே நிகழும் சண்டை – சச்சரவுகளைக் கண்டு அவற்றிலிருந்து விடுதலை காண ஒரு வழி தேடினார். அதை 'தாவ் டே சிங்க' என்ற புத்தகத்தில் எழுதினார்.

மனோதத்துவமாகத் துவங்கி, ஒரு மதமாக மாறியது தாவிஸம். கி.மு.449–ல் அது அரசின் அங்கிகாரம் பெற்றது. லாவ் ட்சே–வை கடவுளாகவே கருதினர். சீனாவின் முக்கிய மத நம்பிக்கைகளில் ஒன்றாக தாவிஸம் உயர்ந்தது. மற்றவை பௌத்தமும் கன்ஃபூஷியஸ் தத்துவங்களும். 1911 வரை அதன் பாதிப்பு சீனாவில் நீடித்தது. 1949–ல் கம்யூனிஸம் வந்ததும் தாவிஸக் கருத்துகள் கட்டுப்படுத்தப் பட்டன. அரசு ஆதரவு மறுக்கப்பட்டதாலும் தடை செய்யப் பட்டதாலும் இன்று தாவிஸத்தைக் கடைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை இரண்டு கோடியாகக் குறைந்துவிட்டது. அமெரிக்காவில் முப்பதாயிரம் பேர் இருக்கிறார்கள். கனடாவில் இரண்டாயிரம் பேர். இன்றைய தினத்தில் அக்குபங்ச்சர், மூலிகை வைத்தியம், தியானம், கராத்தே போன்ற கலைகளில் மட்டும் மிச்சமிருக்கிறது தாவிஸம்.

தாவிஸம் நம்புவது என்ன?

தாவ் என்பது பிரபஞ்சத்தின் முதல் காரணம். எல்லா உயிர்களின் ஊடேயும் உள்ள சக்தி

லாவ் ட்சே

அது தாவ், எல்லோரையும் சூழ்ந்திருப்பதால் எல்லோரும் அதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அனைவரின் குறிக்கோளும் தாவுடன் ஒன்றுவதே ஆகும். நம்முடைய நிர்க்குண பிரம்மம் போல அது. கடவுள்கள் அனைவரும் ஒரே தாவின் வடிவங்களே. அதை உருவாக்க முடியாது. பிரார்த்தனையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. பிரார்த்தனையைக் கேட்கும் கடவுள் என்று எவருமில்லை. ஒவ்வொருவரும் தமக்குள்ளேயே எண்ணங்களிலும் செயல்களிலும் விடை தேட வேண்டும்.

காலம் திரும்ப வரும். அதன் போக்கு நேரானதல்ல. வட்ட வடிவானது. ஆரோக்கியமும் வீரியமும் தாவிஸ்டுகளுக்கு முக்கியம். உடலில் உள்ள பஞ்ச துவாரங்கள், பஞ்சபூதங்களைச் சார்ந்தவை.

ஒவ்வொருவரும் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் 'சி' என்னும் 'மூச்சை'ப் பாதுகாக்க வேண்டும். மூன்று குணங்கள் முக்கியம். கருணை, அடக்கம், கட்டுப்பாடு என்பவையே அவை.

'வூ வெய்' என்பதுதான் தாவிஸத்தின் வழி. இயற்கையின் வழி. அதில் எந்தச் சக்தியும் குறுக்கிடக் கூடாது. உதாரணமாக, நதியை ஓட விடவேண்டும். அதற்கு அணை போடக் கூடாது. எதையும் யோசித்துச் செய்ய வேண்டும்.

மற்றவர்களிடம் பரிவாக இருந்தால், அவர்கள் நமக்குப் பரிவு காட்டுவார்கள். இயற்கையாகவே, நாம் எல்லோரும் கருணை மிக்கவர்கள். ஒரு தனிமனிதன், எந்தவித எதிர்பார்ப்புமின்றி கருணை காட்டுவான். அதுதான் அவனுடைய இயற்கை என்று நம்பினார்கள்.

தாவிஸ்டுகளின் பிரபலமான சின்னமான, 'யிங் யாங்' கொரிய தேசியக் கொடியில் இருப்பது. இதற்குப் பல விதமான அர்த்தங்கள் சொல்கிறார்கள். எதிர்க் குணங்கள் எப்போதும் உலகத்தில் உள்ளன. நல்லதில் கொஞ்சம் கெட்டதும், கெட்டதில் கொஞ்சம் நல்லதும் எப்போதும் இருக்கும்.'மாறுதல்தான் உலகின் மாறாத நியதி' போன்ற பல அர்த்தங்கள் அந்தச் சின்னத்துக்கு உண்டு.

தாவின் சில முக்கிய மேற்கோள்கள்:

மலையைப் போல அமைதியாக இரு. நதியைப் போல பெருகு. இயங்கு.

தாவ் வடிவற்றது. சாஸ்வதமானது. சொந்தக் கடவுள்கள் எல்லாம் மனித சிருஷ்டிகள். வெறுப்பையும் சகிப்பு இன்மையையும் நாங்கள்

நிராகரிக்கிறோம்.

தேவையற்ற வன்முறையை நீக்கி, ஒருமைப்பாட்டையும் அன்பையும் படிப்பினைகளையும் இயற்கையில் இருந்து பெறுகிறோம். எங்கள் வாழ்வை, தாவிடம் ஒப்படைத்துவிட்டோம் – பிரபஞ்சத்தில் இயற்கையுடன் இணைந்து இந்த ஜன்மத்திலும் இதற்குப் பின்பும் வாழ்வதற்கு!

– இவ்வாறு பல கிழக்கத்திய மதங்கள் சிருஷ்டி தத்துவத்தையும் உருவ வழிபாட்டையும் நிராகரித்தன. அவ்வளவு விஸ்தாரமாக யோசிக்காமல் அன்றாட வாழ்வில் அன்பையும் அழகு உணர்ச்சியையும் தேடின.

அடுத்த கட்டுரையில் கன்ஃபூஷியஸைக் கவனிப்போம்.

11

கன்ஃபூஷியஸ் கி.மு. 551–லிருந்து 479 வரை வாழ்ந்தவர். சீன மொழியில் 'குங்ஃபூட்ஸு' என்று உச்சரிக்கப்படும் இவர் பெயருக்கு, 'அரச எஜமானன்' என்பது பொருள். சீன மக்களின் ஞானம், அரசியல், அன்றாட வாழ்க்கை உட்பட அனைத்திலும் சமீப காலம் வரை ஆதிக்கம் கொண்டது கன்ஃபூஷியஸின் தத்துவம். சீனத்துச் சக்ரவர்த்தி வம்சத்தினரால் பேராதரவு அளிக்கப்பட்டு, கன்ஃபூஷியஸ் என்றாலே 'அறிவாளி!' என்று சொல்லக்கூடிய அளவுக்கு அது பிரபலமடைந்தது.

கடந்த கட்டுரையில் சொன்னதுபோல் தாவிஸம், பௌத்தம் – இந்த இரண்டுடன் கன்ஃபூஷியஸ் தத்துவங்களும் சீனாவில் வாழ்ந்தன. மேற்கத்திய சிந்தனைகளைவிட நூறு மடங்கு பகுத்தறிவுக்கு இணங்கி வருவது, கன்ஃபூஷியஸ் தத்துவம் என்று குறிப்பிடுகிறார்கள். அதிகக் குழப்பமில்லாத எளிதான தத்துவம் இது. 'பிறரை நேசிக்க வேண்டும். பெற்றோரை மதிக்க வேண்டும். நேர்மையானதையே செய்ய வேண்டும் – லாபம் மட்டும் தருவதை அல்ல. மற்றவர் உனக்குச் செய்ய விரும்புவதை, நீ மற்றவர்க்குச் செய்ய வேண்டும். வன்முறையை நீக்கி உதாரணங்கள் மூலம் நாட்டை ஆள வேண்டும்.'

'காற்று அடிக்கும் திசையில்தான் புல் வளையும்' என்ற கன்ஃபூஷியஸின் வாசகம் சீன தேசத்தின் பெரிய வெற்றிக்கும், வளைந்து கொடுக்கும் தன்மைக்கும் முக்கியக் காரணம்! 'சுயநலத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று சொன்னாலும் 'சுயமறுப்பை' அவர் ஆதரிக்கவில்லை. 'தனக்கு மிஞ்சித்தான் தான – தருமம்' என்னும் கொள்கை அடிப்படையில் மெள்ள கிழக்கத்திய நாடுகளின் சிந்தனை பரவியிருக்கிறது. ஜப்பானிய ரிரிதா என்னும் தத்துவமும் இதன் அடிப்படையில் ஏற்பட்டதே. சுயலாபம் – பிறர் லாபம், தனக்கும் மற்றவருக்கும் ஒரே சமயம் நல்லது நினைப்பதும் – தேடுவதும், இந்தத் தத்துவத்தின் உலகியல் கருத்து என்று சொல்லலாம். இந்து – பௌத்த மதங்களில் உள்ளது போல, துறவறமும் எல்லாவற்றையும் விட்டுவிடுவதும் கன்ஃபூஷியஸ் கருத்துகளில் இல்லை.

கன்ஃபூஷியஸ் இறைவனைப் பற்றி நேரடியாக எதுவும் குறிப்பிடவில்லை. 'கடவுள்களுக்கும் ஆவிகளுக்கும் எப்படி சேவை செய்வது?'

என்று அவரிடம் கேட்டபோது, 'உன்னால் மனிதனுக்கே சேவை செய்ய முடியவில்லை. ஆவிகளுக்கு எப்படிச் செய்வாய்?' என்றார். 'எல்லோருக்கும் நல்லவராக, அடக்கமாக வாழ்ந்தாலே போதும். அதுவே பிரார்த்தனை!' என்றார். சீன நம்பிக்கைகளில் 'சிவன்–விஷ்ணு' போல பெரிய கடவுள்கள் இல்லை. சீன மன்னர்கள், கடவுளரைத் தங்கள் குடிமக்களில் ஒருவராகத்தான் நினைத்தனர். இதனால், சீனத்துக் கடவுள்கள் குட்டி தெய்வங்களே!

கன்ஃபூஷியஸின் வாசகங்களிலிருந்து சாராம்சமாக சில கருத்துகள் கிடைக்கின்றன. அவை:

1. பிரபஞ்சத்தின் ஒருங்கமைப்பு. 'ஐம்பது வயதில் நான் பிரபஞ்சத்தின் ஆணையை... எது தப்பு, எது சரி என்பதை அறிந்து கொண்டேன்' என்றார் கன்ஃபூஷியஸ். பிரபஞ்சம் விதிக்கப்பட்டது.

2. அதே போல் வாழ்வும் சாவும் பிரபஞ்சத்தால் நிர்ணயிக்கப் பட்டது. இந்த இரண்டையும் முற்றிலுமாக அறிந்தவனுக்கே ஆட்சி செய்யும் உரிமை உண்டு. இதை அறியாதவன் பதவியில் இருப்பதற்கு உரிமை கிடையாது. இது புரட்சிகரமான கருத்து. ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய சரித்திரத்தில் பல நூற்றாண்டுகளாக அரசன் என்னதான் கொடுமைகள் செய்தாலும் அவனுக்கு மன்னிப்பு அளிக்கப் பட்டது. பிராட்டெஸ்டெண்டுகள் வரும்வரை, 'யானோ அரசன் யானே கள்வன்!' என்று சொன்ன சிலப்பதிகார மன்னன்போல், அநீதி நிகழும்போது அரசாளும் தகுதியை இழக்கிறார்கள்.

சரித்திரம் தீர்ப்பு வழங்கும் என்பதிலும் அவர்கள் நம்பிக்கை வைத்தார்கள். சீனப் பேரரசு, பல்வேறு வம்சங்களால் அடுத்தடுத்து ஆளப்பட்டது. ஒரு வம்சம் கருணையுடன் – பரிவுடன் அரசாளும்போது அதற்கு பிரபஞ்சத்தின் அல்லது கடவுளின் அல்லது சொர்க்கத்தின் அனுமதி கிடைக்கிறது. ஆட்சியில் கொடுமை நிகழும்போது அந்த வம்சம் உரிமையிழந்து அடுத்த வம்சம் பதவியேற்கும். அதற்கான பிரபஞ்ச ஆணை அல்லது அனுமதி, முன் வம்சத்தின் கொடுங் கோன்மைதான். இதை, அவர்கள் சரித்திரப் புத்தகங்களில் எழுதி விட்டுத்தான் வம்சத்தை மாற்றுவார்கள். இந்த வகையில் கடைசியாக, 1644–லிருந்து 1912–வரை ஆண்ட சீனப் பேரரசுதான் கடைசி. அதன்பின் சீனக் குடியரசால் நாடு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதுவும் கன்ஃபூஷியஸ் தத்துவம் சொல்லும் சரித்திரக் கட்டாயம்தான். அரசனுக்கு மதிப்பில்லை; அரசாட்சிக்கும் இறையாண்மைக்கும்தான் மதிப்பு.

கன்ஃபூஷியஸின் வழிமுறையை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். அவை:

1. இருப்பது: உயிர் வாழ்வது, தர்மம், கருணை, நேசம், பரிவு, பெற்றோரிடம் மரியாதை – இவை ஆதாரமான விஷயங்கள்.

2. செயல்முறை: செயலில் சரியான நடத்தை, ஒழுக்கம், அண்டை வீட்டாருடன் சுமுகமான உறவு – நேர்வழி இவை.

3. குறிக்கோள்: மற்றவருக்குக் கெடுதல் இல்லாமல் லாபம், வெற்றி, மதிப்பு – இவற்றைப் பெறுவது. நீ விரும்பாததை, மற்றவருக்குச் செய்ய விரும்பாதே.

12

'ஜூடாயிஸம்' – யூதர்களின் மதம். கிறிஸ்தவ மதத்தைவிடப் பழைமையானது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள கருத்துகளின் அடிப்படையில் உருவான இந்த மதம், ஒரே இறைவனைப் பற்றிப் பேசுகிறது. 'அவர்தான் உலகத்தைப் படைத்தார். அவர்தான் உலகை ஆள்பவர். அவர் சர்வ சக்தியுள்ளவர். எதையும் அறிந்தவர். எங்கும் நிறைந்தவர். மேலும் அவர் நியாயமானவர். கருணையுள்ளவர்.'

ஜூடாயிஸம் நல்லொழுக்கத்தை வலியுறுத்துகிறது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள பத்துக் கட்டளைகளை இஸ்ரேலைட்டுகள் ஏற்றுக் கொண்டு, அவர்கள் தங்களை அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவருடன் பழகுவதையும் அதன் அடிப்படையில் விரதமாக எடுத்துக்கொண்டார்கள்.

பத்துக் கட்டளைகள் பின்வருமாறு:

1. நானே உன் இறைவன்.

2. என் சமீபத்தில் மற்ற கடவுள்களை நீங்கள் அடையாளம் காட்டக் கூடாது.

3. உன் இறைவனின் பெயரை வீணாகப் பயன்படுத்தக் கூடாது.

4. சபாத் தினத்தை நினைவு கொள்ளுங்கள்; அதை புனிதமாக மதிக்கவும்.

5. உன் தாய் – தந்தையரை மதிக்க வேண்டும்.

6. கொலை செய்யக் கூடாது.

7. பிறன்மனை விரும்பக் கூடாது.

8. திருடக் கூடாது.

9. பொய் சாட்சி சொல்லக் கூடாது.

10. மற்றவர் சொத்துக்கு ஆசைப்படக் கூடாது.

எல்லோரும் கடைப்பிடிக்கக்கூடிய எளிய கட்டளைகள்தாம் இவை.

'ஒவ்வொருவரும் கடவுளின் பிம்பமாகத்தான் படைக்கப் பட்டிருக்கிறார்கள்' என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. இதனால் எல்லோரும் கடவுள் முன் சமம். நாம் கடவுளின் குழந்தைகள் என்பது, நம் அறிவின் திறமையிலேயே தெரிகிறது. ஜூடாயிஸம் மனிதனுக்குத் தன்னிச்சையான மனம் உண்டு என்று நம்புகிறது. இதனால் அவன் காரியங்களுக்கு அவனே பொறுப்பு. 'இறைத் தூதர் என்பவர் இறைவன் அல்ல' என்று நம்புகிறார்கள் யூதர்கள். இஸ்ரேல் நாடு கடவுளால் ஆரம்பத்திலிருந்தே யூத மக்களுக்கு சைனாய் மலையில் ஒப்படைக்கப்பட்டது என்று நம்புகிறார்கள். ஏப்ரஹாமின் காலத்திலிருந்தே யூதர்கள் இஸ்ரேல் நாட்டில் இருந்து வந்த தொடர்ச்சி உள்ளது. மெஸ்ஸையா (இறைத்தூதர்) மனிதன்தான்; கடவுள் அல்ல. டேவிட் மன்னனின் குடும்பத்திலிருந்து வந்து உலகைக் காப்பாற்றப் போகிறார். ஒற்றுமையையும் சமாதானத்தையும் நோக்கி அழைத்துச் செல்லப் போகிறார். இயேசுபிரான், இறைத் தூதர் என்பதை அவர்கள் நம்பவில்லை. இதனால் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை.

யூத நம்பிக்கைகளில் கீழ்க்காணும் பதின்மூன்று அம்சங்கள் அடிக்கடி வருகின்றன:

1. கடவுள் இருக்கிறார்.
2. அவர் ஒருவர், தனிப்பட்டவர்.
3. அவருக்கு உருவம் இல்லை.
4. அவர் சாஸ்வதமானவர்.
5. அவரை மட்டும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.
6. இறைத்தூதர்களின் வார்த்தைகள் உண்மையே.
7. மோசஸ்தான் சிறந்த இறைத்தூதர். அவர் சொன்னதெல்லாம் உண்மை.
8. மோசஸுக்கு தோரா என்னும் வேத புத்தகம் அளிக்கப்பட்டது.
9. வேறு எதும் தோரா இல்லை.
10. கடவுளுக்கு மனிதர்களின் எண்ணங்கள், செயல்கள் அனைத்தும் தெரியும்.
11. கடவுள் நல்லவர்களுக்குப் பரிசளிப்பார்; கெட்டவர்களைத் தண்டிப்பார்.
12. மெஸ்ஸையா வருவார்.
13. இறந்தவர்கள் எழுந்திருப்பார்கள்.

யூதர் அல்லாத ஒருவர், ராபி மத குரு ஒருவரிடம், "தோராவை எனக்கு விளக்குங்களேன் ..." என்று கேட்டாராம்.

குரு, "உனக்கு வெறுப்பானதை மற்றவருக்குச் செய்யாதே. அதுதான் தோராவின் சாரம். மற்றதெல்லாம் விளக்கம்" என்றாராம்.

இந்த எளிய மதம்தான் இஸ்ரேலியர்களின் சிறப்புக்கும் இதன் அடிப்படையிலான நம்பிக்கைகளில், கிறிஸ்தவ – இஸ்லாம் கருத்துகளுக்கு எதிராக உள்ள அம்சங்களுமே அவர்களின் அல்லல்களுக்குக் காரணமாக இருந்து வருகின்றன.

13

ஜூடாயிஸம் பற்றிச் சென்ற கட்டுரையில் சொன்னோம். அது, யூத மக்களுக்கும் கடவுளுக்கும் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தம். அதன் பகுதிகளாகச் சில நம்பிக்கைகளும் அன்றாட நன்னடத்தைகளும் வாழ்க்கை நெறிகளும் விதிகளும் உள்ளன.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த ஒப்பந்தம், விதி அனைத்தையும் இயேசுபிரானின் போதனைகள் இடம்பெயர்த்துவிட்டதாக நம்புகிறார்கள். கிறிஸ்தவம், ஜூடாயிஸத்தின் பகுதியாகத்தான் முதலில் ஆரம்பித்தது. இயேசுபிரானே ஒரு யூதர்தான். அவர் வாழ்ந்தது, கி.மு.3–லிருந்து கி.பி.30 வரை என்று சொல்கிறார்கள். அவர் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து போதித்தார்.

கிறிஸ்தவம், ஜூடாயிஸத்தில் இருந்து இரண்டு முக்கியக் காரணங்களுக்காகப் பிரிந்தது. தேவனின் மனித வடிவம் இயேசுபிரான் என்று கிறிஸ்தவம் கருதுகிறது. இதை யூதர்கள் சம்மதிப்பதில்லை.

கிறிஸ்தவம் என்பது ஒரு நம்பிக்கைகளின் தொகுப்பு. ஒரு வாழ்வு நெறி. ஒரு மக்கள் சமூகம். இந்த மூன்றும் அதற்கு முக்கியமானது. கிறிஸ்தவத்தின் பல்வேறு பிரிவினரிடையே இந்த மூன்றின் முக்கியத்துவ அளவில்தான் வேறுபாடு. மூன்றும் நாசரேத்தைச் சார்ந்த இயேசு நாதரின் போதனைகளின் அடிப்படையில் உருவானவை. அவர்தான் இயேசு கிறிஸ்து.

'க்ரைஸ்ட்' என்பது ஒரு கிரேக்க வார்த்தை. ஹீப்ரு மொழியில் 'இறைத்தூதர்' என்பதன் கிரேக்க வடிவம். கிறிஸ்தவம், ஜூடாயிஸம், இஸ்லாம் – இவை மூன்றும் 'கடவுள் ஒருவரே' என்கின்றன. அவர்தான் பிரபஞ்சத்தையும் அதில் உள்ளவை அனைத்தையும் படைத்தார். அவருக்கு உருவம் இல்லை. அவர் நிகழ் சரித்திரத்தில் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கிறார். நம் வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறார். அவர் சாசுவதமானவர்.

இவ்வகை நம்பிக்கைகளை 'Ethical Monotheism' என்று வகைப் படுத்துவர். ஒரே கடவுள் சார்ந்த வாழ்க்கைக்கு நன்முறைகள் சொல்லும் மதங்கள் இவை. கடவுள் பரமபிதா. மண்ணுலகையும் வானுலகையும் படைத்தவர். சக்தி வாய்ந்தவர். அவர் ஒருவர்.

வடிவற்றவர். பௌதிகப் பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டவர். அவரே படைத்த பிரபஞ்சத்துக்கு வெளிப்பட்டவர். மனிதர்கள், கடவுளின் பிம்பத்தில் படைக்கப்பட்டவர்கள். கடவுளுக்கும் நமக்கும் உறவு உண்டு. கிறிஸ்தவம் சொல்லும் இறைவன், நம்முடன் தொடர்பில்லாது தனிப்பட்டவர் அல்ல. கடவுள் நம்மையும் பாதிப்பவர்; நம்மாலும் பாதிக்கப்படுபவர். கடவுளை 'பிதா' என்று அழைப்பதன் அடிப்படை இதுதான்.

இயேசுநாதரின் முக்கியமான போதனைகளில் ஒன்று – 'கடவுள், தந்தை வடிவானவர்' என்பது. இதிலிருந்துதான் கிறிஸ்தவத்தின் 'பிதா சுதன் பரிசுத்த ஆவி' தத்துவம் கிளைத்தெழுகிறது. இந்தத் தத்துவத்தை 'ட்ரினிட்டி' என்பார்கள். இது கிறிஸ்தவத்தின் சிறப்பான தத்துவம். இயேசுநாதர், கடவுளின் ஒரே மகன் என்றும் கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். ஒரு விதத்தில் இயேசுநாதர், கடவுளின் மனித வடிவம் என்றும் சொல்கிறார்கள். "நானும் அவரும் ஒன்றே... என்னைப் பார்த்தவர் அவரைப் பார்த்துவிட்டார்கள்!" என்கிறார்.

பரிசுத்த ஆவி, கடவுளுக்கும் நமக்கும் உள்ள பாலம் – பிணைப்புப் போல; கடவுளுடன் பேச ஏற்பட்ட ஒரு கருவி போல. கிறிஸ்தவத்தின் அடிப்படைச் சக்தி – அன்பு. அன்புதான் மனித இனத்தை இணைக்கிறது. பாவ மன்னிப்பும், கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கருத்துகளில் ஒன்று. கிறிஸ்தவர்கள் மறுபிறவியை நம்புவதில்லை. ஒரு கடைசித் தினத்தில் நாம் எல்லோரும் உயிர்த்தெழுவோம். நம் பாவங்களுக்குத் தீர்ப்பளிக்கப்படுவோம்.

கிறிஸ்தவத்தின் இறைவன், அச்சமளிக்காத ஆறுதலும் அன்பும் அரவணைப்பும் தரக்கூடிய சொந்தக் கடவுள். இயேசுபிரான் தனது வாழ்க்கை மூலம் நமக்கெல்லாம் அவரை அடையாளம் காட்டுகிறார்.

14

சென்ற கட்டுரைகளில், வெவ்வேறு மத நம்பிக்கைகளில் இடம் பெற்றுள்ள இறைவனைப் பற்றிய கருத்துகளை எளிமைப்படுத்திச் சொன்னோம். பொதுவாக எல்லா மதங்களும் நம்புவது, 'இறைவன் இருக்கிறான்!' என்பதையே.

பௌத்த மதம் தவிர, மற்ற எல்லா மதங்களும் இறைவனைப் பற்றிய கற்பனைகளை விவரிக்கின்றன. 'இறைவன் எப்போதும் இருக்கிறான்!' என்பதையும் சொல்கின்றன. 'அவனுக்கு உருவமில்லை!' என்பதுதான் பெரும்பாலானவற்றின் கருத்து. (அவன்' என்று ஆண்பால் பயன்படுத்துவது ஒரு வசதிக்காகத்தான். 'ஆணல்லன் பெண்ணல்லன்' என்கிறார் நம்மாழ்வார்!)

எல்லா மதங்களும், 'மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான்? அவன் இறப்புக்குப் பின் என்ன ஆகிறது? ஏதாவது தொடர்ச்சி இருக்குமா ... ஆன்மா உண்டா?' என்றெல்லாம் விசாரிக்கின்றன.

அந்தந்த மதங்களின் சரித்திர – கால – தேசக் கட்டாயங்களுக்கு ஏற்ப அவை விடை தருகின்றன. எல்லா மதங்களும் சொர்க்கம் – நரகம் இரண்டையும் வெவ்வேறு நுட்ப அளவில் வர்ணிக்கின்றன. 'மனிதனுடன் பிரபஞ்சம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது?' என்பது பற்றியும் எல்லா மதங்களும் வெவ்வேறு கருத்துகள் சொல்கின்றன.

'மனிதன் இறந்த பின், அவனுக்கு ஏதாவது தொடர்ச்சி உண்டா?' என்பதைப் பற்றியும் கவலைப்படுகின்றன. எல்லா மதங்களும் 'Ethical' என்னும் அன்றாட நடைமுறைகளின் ஒழுங்கு சார்ந்த விஷயங் களையும் சிந்திக்கின்றன.

மதங்களை ஒருமைப்படுத்தும் கருத்தை Ecumenical என்பார்கள். 'இந்து மதத்தின் இறைக் கருத்துகள் என்ன?' என்பதைப் பற்றிப் பலரிடம் குழப்பம் இருக்கிறது. இந்து மதத்தை Monotheistic Polytheism என்று வகைப்படுத்துவார்கள்.

இப்படிச் சொல்வதே ஒரு முரண்பாடுதான். 'பல கடவுளரைச் சொல்லும் ஒரே கடவுள் தத்துவம்!' என்று சொல்லும் இந்த முரண்பாட்டை, இந்து மதம் எப்படிச் சமாளிக்கிறது?

ரிக் வேதம், 'இருப்பது ஒரே ஓர் உண்மைதான் (ஏகம் சத்). அதை, புத்திசாலிகள் பல வடிவங்களில் காண்பார்கள்' என்கிறது.

இந்து மதம் சொல்லும் ஒரே ஓர் உண்மை — 'பிரம்மம். அது அழிவில்லாதது. படைக்கப்படாதது. சாஸ்வதமானது. அதுதான் இறுதி உண்மை. அதை அடைவதுதான் ஜீவனின் – ஆத்மாவின் குறிக்கோள். ஜீவன் வேறு, பிரம்மம் வேறு.

ஜீவன் அழியக் கூடியது. பிரம்மம் அழிவில்லாதது. பிரம்மத்துக்கு வடிவமில்லை. பிரபஞ்சம் எங்கும் பிரம்மம் விரவியுள்ளது.' (இதை, 'தோற்றமாக' என்கிறார் ஆதிசங்கரர். 'உண்மையாக' என்கிறார் ராமானுஜர்).

'பிரம்மம்தான் இந்து மதத்தின் அடிப்படைக் கருத்து. இதில் எப்படிப் பல்வேறு கடவுள்களும் அவர் மனைவி – மக்களும் ஏன், மிருகங்களும்கூட வருகிறார்கள்? அவர்களை ஏன் இந்துக்கள் வழிபடுகிறார்கள்?' என்ற சிந்தனைக் குழப்பம் உள்ளது. ஆதாரமாக, பிரம்மத்துக்குக் குணமில்லை. 'நிர்க்குண பிரம்மம்' என்று அதைச் சொல்கிறார்கள். அதற்கு மானுட குணங்களைக் கொடுத்தால், அது 'சகுண பிரம்மம்' ஆகிறது. இதற்கு வடிவங்களும் ஆசாபாசங்களும் கொடுக்கிறபோது, அதை மனதால் புரிந்துகொள்ளக்கூடிய, வழிபடக் கூடிய சௌகரியம் ஏற்படுகிறது.

ஆனால், வடிவமுள்ள கடவுள்களின் மூலம் நாம் பிரம்மத்தை அடைய முடியாது. வழிபடலாம்... அவ்வளவே! அந்த வழிபாட்டின் மூலம் அடைய முடியாது. நிர்க்குண பிரம்மத்தை வழிபட முடியாது. ஆனால், அடையலாம். அதனுடன் ஆன்மா ஒன்று சேரலாம். அதைத்தான் 'மோட்சம்' அல்லது 'முக்தி' என்கிறார்கள்.

இந்த வகையில், 'இந்து மதத்தில் இருக்கும் எண்ணற்ற கடவுள் களையும், 'ஒரே உண்மை!' என்று வேத உபநிஷத்துகள் சொல்லும் ஒரே பிரம்மத்தையும் ஒருங்கிணைக்கிறார்கள். இந்து மதத்தில் நம் கருமங்களுக்கு நாமே பொறுப்பு. மறுபிறப்பு என்பது உண்டு. இந்தப் பிறப்பில் செய்கிற நல்ல காரியங்களின் தரத்துக்கேற்ப மறுபிறவியைத் தடுக்கலாம். பிறவிப் பெருங்கடலை நீந்தி, பிரம்மத்தை அடைவதே முக்தி நிலை. அதாவது மோட்ச நிலை. பிரம்மா, விஷ்ணு, சிவன் எல்லாம் ஒரே இறைவன். வடிவம்தான் மாறும். செயல்தான் மாறும். ஒரு மனிதன் வீட்டில் ஒருவனாகவும் தெருவில் ஒருவனாகவும் அலுவலகத்தில் ஒருவனாகவும் இருப்பதுபோல அது.

பிரம்மஞானிக்குக் கடவுள்களோ, பெயர்களோ, வழிபாடோ தேவையில்லை. அன்றாட வாழ்வில் கடமைகளைச் செய்து, நல்ல காரியங்கள் செய்தால் போதும்.

'அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்

அவரவர் விதிவழி அடைய நின்றனரே...'

என்னும் நம்மாழ்வார் பாசுரம், அத்தனை மதங்களையும் சேர்த்து அணைத்துக் கொள்கிறது.

அவரவர்கள் தங்கள் தங்கள் ஞானத்தால், வகை வகையான தெய்வங்களைத் தம் தெய்வங்களாக அடி பணிபவர்கள், அந்தந்த தெய்வங்கள் குறைவு இல்லாதவர்கள்தாம். அவர்களுடைய விதிமுறைகள் வழியாக, அந்த தெய்வங்களை அடைய முடியும்!

கடவுள் இருக்கிறாரா?

(2004)

கடவுள் இருக்கிறாரா?

என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி கடவுள் இருக்கிறாரா? இருக்கிறார் என்றால் அவரைப் பார்க்க முடியுமா?

இதற்கு 'பைனரி'யாக பதில் சொல்ல இயலாத நிலையில், இந்தக் கேள்விக்கு அறிவியல் என்ன சொல்கிறது என்பதை உங்களுடன் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறேன்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன் நான் 'தேவன் வருகை' என்கிற தலைப்பில் ஒரு விஞ்ஞானக் கதை எழுதினேன். அதில் கடவுள் 'ஒவ்வொரு ஊரிலும் ஒரு பொது இடத்தில் சூரிய உதயத்தின் போது காட்சி தருகிறேன், அதற்குத் தருணம் வந்துவிட்டது' என்று உலகெங்கும் அறிவித்துவிடுவார். இதை அரசாங்கம் ஏதோ புரளி என்று மறுக்கும். இருந்தும் ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவரும் தங்கள் தங்கள் கடவுள்தான் வரப்போகிறார் என்று எதிர்பார்த்து குறிப்பிட்ட தினத்தன்று அதிகாலை மைதானங்களில் போய் பரபரப்புடன் ஒரு விதமான மாஸ் ஹிஸ்டீரியாவுடன் காத்திருப்பார்கள்.

அந்தக் கதையின் கடைசி 'பாரா' இதுதான் –

'சூரிய உதயம் ஐந்து ஐம்பத்தெட்டுக்கு.

மணி ஐந்து ஐம்பத்தேழு. ஆரவாரம் கொஞ்சம்கொஞ்சமாக அடங்கி மௌனம். மிக மிக மௌனம். தூரத்தில் மெதுவாக சோலையை அலைக்கும் காற்று கேட்டது. உறங்கி எழுந்த பட்சிகளின் உற்சாகக் குரல்கள் கேட்டன. எல்லாரும் எதிரே தனியாக அமைக்கப்பட்டிருந்த அந்தக் காலியிடத்தை எதிர் நோக்கியிருந்தார்கள். ஐந்து ஐம்பத்து எட்டு ...

ஆறு மணிக்கு அவர்கள் வீடு திரும்பினார்கள்.'

– என முடித்திருந்தேன்.

பலர் என்னிடம் என்ன விளையாடுகிறாயா என்று கோபப்பட்டு எழுதியிருந்தார்கள். அந்தக் கதையில் நான் சொல்ல விரும்பியது கடவுள் அப்படி வந்திருந்தால், அவரை என் போன்ற அற்ப ஜந்துவால் வர்ணிக்க முடிந்திருந்தால் அவர் கடவுளே அல்ல என்பதே.

நம்மாழ்வாரின் 'டைலம்மா'வும் இதுதான் –

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா(து) அலியுமல்லன்
காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்
கோணை பெரிதுடைத்து எம் பெம்மானைக் கூறுதலே.

(அவன் ஆணோ, பெண்ணோ, நபும்சகனோ அல்லன். அவனைப் பார்க்க முடியாது. இருப்பவனுமல்லன். இல்லையுமல்லன். நாம் எப்படிப் பேணுகிறோமோ அந்த உருவாகும். அதுவும் அல்லன். என் கடவுளைக் கூறுவது பிரயாசம் (கோணை மிக்கது). கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு, குப்புசாமி அல்லது குமாரவேலு இருக்கிறாரா என்பதைப் போல, உடனடியாக பதில் சொல்ல இயலாது. காரணம் குப்புசாமி இருக்கிறாரா என்பதை அவர் வீட்டிலோ ஆபீசிலோ போய் எட்டிப் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியும். கடவுளை நேரில் பார்த்தவர் இதுவரை இல்லை. சொப்பனத்தில் பார்த்தவர்களும், நான்தான் கடவுள் என்று சொல்லிக் கொள்பவர்களும், கொண்டவர்களும் சரித்திரம் பூரா இறைந்திருக் கிறார்கள். இவர்கள் கடவுள் அனுபவத்தை மற்றவர் பங்கு போட முடியாதவரை இவர்கள் சொல்வதைப் பெரிதுபடுத்த முடியாது.

கடவுளை நேரில் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்பது கட்டாய மில்லை என்கிறார்கள் ஆத்திகர்கள். ஏழையின் சிரிப்பு, குழந்தையின் புன்னகை, காலை மலர்கள், ஆட்டுக்குட்டி என்றெல்லாம் தேடச் சொல்கிறார்கள். இப்போது கிளிண்டன் இருக்கிறார் என்பதைப் பற்றி சந்தேகமில்லை. அவரை நம்மில் பலர் பார்த்ததில்லை. இருந்தாலும் அவர் இருக்கிறார் என்பதை நம்புகிறோம். அவர் இருப்பதால் ஏற்படும் காரியங்களின் விளைவுகளைச் சந்திக்கிறோம். 'சி.டி.பி.டி'யில் கையெழுத்து கேட்கிறார், கைகுலுக்குகிறார், இந்தியா வுக்கு ஏற்றுமதிகளைத் தடை செய்கிறார். தளர்த்துகிறார். மோனிகாவை வாத்ஸல்யமாக வாசனை பார்க்கிறார். கிளிண்டனுடைய செயல்களைப் பார்த்து அவர் இருக்கிறார் என்பதை நம்புகிறோம். அதேபோல் கடவுளின் செயல்களை, லீலா வினோதங்களைப் பார்த்து கடவுள் இருக்கிறார் என்பதை நம்பலாம் என்பது ஆத்திகர்களின் பிரதான வாதங்களில் ஒன்று. இது சரிதானா என்றால், இல்லை!

கிளிண்டன் இருக்கிறார் என்பதை எப்போது வேண்டுமெனினும் வாஷிங்டனுக்குப் போய்த் தொட்டுப் பார்த்து சரிபார்த்துக்கொள்ள முடியும். என்ன, கொஞ்சம் செலவாகும். கடவுளை அப்படி இயலாது. அவர் இருக்கிறார் என்பதற்கு நிரூபணமாக அவர் நம்மிடையே வியக்த ரூபமாகத் தோன்றாதவரை எப்படி எப்போது நம்புவது? அவருடைய இருப்பிடம் என்ன? வடிவம் என்ன?

அறிவியலுக்கு – இயற்கையின், பிரபஞ்சத்தின் செயல்பாட்டை விளக்குவதற்கு – ஏதாவது ஒரு கட்டத்தில் அல்லது இறுதியில்,

ஒரு கடவுள் தேவைப்பட்டால் அந்தக் கடவுளை நம்பலாம்.

அறிவியலுக்குக் கடவுள் தேவைதானா? இதைக் கொஞ்சம் விவரமாகப் பார்க்கலாம். அறிவியல், குறிப்பாக இயற்பியல் என்ன சொல்கிறது? இந்தப் பிரபஞ்சம் திடப்பொருள், சக்தி இரு வகையானது. திடப்பொருள் என்பது மேசை, நீங்கள், நான், மூக்குக்கண்ணாடி., நாய்க்குட்டி, சூரியன், சந்திரன், லல்லுபிரசாத், அப்போலோ விண்கலம், பான்பராக், மரக்கட்டை, நாமக்கட்டி இதெல்லாம்தான். இவைகளை ஆதாரமாகப் பார்த்தால் கார்பன், பாஸ்பரஸ் இரும்பு, துத்தநாகம் போன்ற தனிமங்கள். இந்த தனிமங்களைப் பதம் பிரித்துப் பார்த்தால் ப்ரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான்கள். இந்த ட்ரான்களை இன்னும் நுட்பமாகப் பார்த்தால் க்வார்க்குகளால் அமைந்த ஹேட்ரான்கள், லெப்டான்கள் என்று வகுத்திருக்கிறார்கள்.

இது திடப்பொருள்.

சக்தி என்பது ஒளிக்கதிர்கள், எக்ஸ்ரே, உஷ்ணம், ரேடியோ அலைகள் போன்றவை. இவை நான்கு விதமான ஆதார ஈர்ப்பு விசைகளால் வருவது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அணுக் கருவுக்குள் உள்ள வலுவான விசை, அணுக்கருவுக்கு வெளியே உள்ள லேசான ஈர்ப்பு விசை, மின்காந்த விளைவு, புவிஈர்ப்பு. மொத்த சமாசாரமே நான்குதான். இவற்றையும் ஒருமைப்படுத்த இயலுமா என்று ஐன்ஸ்டைன் முயற்சி செய்து கைவிட்டார். அண்மையில் அப்துஸ் சலாம் போன்றவர்கள் இவைகளில் இரண்டை ஒருமைப்படுத்தி நோபல் பரிசு பெற்றனர். இந்த முயற்சி தொடர்ந்து வருகிறது. திடப்பொருள், சக்தி இரண்டுமே ஒன்றுதான் என்பதை அறிவியலால் நிரூபிக்க முடிகிறது. 'டிப்ராக்லி'யின் சமன்பாடு, க்வாண்டம் விதிகள், பாலியின் எக்ஸ்ளூஷன் ப்ரின்சிப்பிள், ஹைஸன் பர்க்கின் நிச்சயமில்லா தத்துவம் என்று பலதும் இருக்கின்றன. (இவை எல்லாம் என்ன என்பதில் ஆர்வம் உள்ளவர்கள் அருகாமையில் உள்ள இயற்பியல் பேராசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.) அறிவியல் சக்தி, திடப்பொருள் இரண்டையும் முழுமையாக, ஒருமையாகப் பார்க்கிறது. இறுதியாக, அறுதியாக அது "பிரபஞ்சத்தின் உண்மை" என்று சொல்வது கீழ்வரும் இரண்டு விஷயங்களைத்தான்.

1. பௌதிக இயற்பியல் விதிகள். ஆதாரமாக இந்த விதிகளின்படித் தான் பிரபஞ்சத்தின் அத்தனை திடப்பொருள்களும் சக்தி வடிவங் களும் இயங்குகின்றன. இந்த விதிகளை அவர்கள் சில கணித சமன்பாடுகளாக விவரிக்கிறார்கள்.

2. இந்த விதிகள் செயல்படத் துவங்கியபோது இருந்த ஆரம்பநிலை, இனிஷியல் கண்டிஷன் என்கிறார்கள். அதை வர்ணித்துவிட்டால் அதற்கு அடுத்த நிலையை விதிகளைப் பயன்படுத்திச் சொல்லிவிட முடியும். அதற்கு அடுத்த நிலை, அதற்கு அடுத்த நிலை, இப்படி இன்றைய தினம் வரை எல்லாவற்றையும் விளக்கிவிடலாம்.

சில அறிஞர்கள், விஞ்ஞானம் விதிகளை மட்டும் ஆராய்ந்தால் போதும், ஆரம்ப நிலை என்பது வேதாந்தம் தத்துவ சாஸ்திரம் மதம் போன்றவற்றின் கவலைகளாக இருக்க வேண்டும் என்கிறார்கள். ஸ்டீஃபன் ஹாக்கிங் போன்றவர்கள் இந்த ஆரம்ப நிலையையும் அறிவியல் விளக்க முற்பட வேண்டும் என்கின்றனர். சென்ற நூற்றாண்டுகளில் இயற்கையின் நிகழ்வுகள் எல்லாம் கடவுள் செயல். அதனால் அவைகளை அறிவியல் விளக்கத் தேவையில்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

எதிர்ப்பைத் தாண்டி தைரியமாக இயற்கையின் உண்மையை அறிய அறிவியலாளர்கள் உள்ளே புகுந்தார்கள்.

பிரபஞ்சம் ஏன் இப்படி இருக்கிறது என்பதற்கு, 'நேற்று இப்படி இருந்தது; அதனால் இன்று இப்படி இருக்கிறது' என்கிற எளிதான பதிலை அவர்கள் நிராகரித்தார்கள்.

இந்த ஆரம்ப நிலையையும் விதைகளையும் உன்னிப்பாக நோக்கும் போது அவைகளில் ஒரு தேர்ந்தெடுப்பும் ஒழுங்கும் இருப்பதைக் குறிப்பிடுகிறார்கள். எத்தனையோ விதத்தில் பிரபஞ்சம் ஆரம்பிக்கலாம். எத்தனையோ விதத்தில் இதன் விதிகளும் அமையலாம். ஏன் இந்த ஆரம்பமும் இந்த விதிகளும்? இவை எப்படித் தீர்மானிக்கப் பட்டன? ஏன் இவை மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டன? என்பதற்கு பதில் கிடைத்தால் கடவுள் கிடைத்துவிடுவார் என்று எதிர்பார்க்கலாம். உதாரணமாக, ப்ரோட்டான், நியூட்ரான்களுக்கு இடையே உள்ள எடை வித்தியாசம், இரண்டு எலக்ட்ரான்களின் எடைக்கு சமம். இது இப்படியில்லாமல் வேறு விதமாக இருந்திருந்தால் இன்று நாம் காணும் நூற்றுக்கணக்கான நியூக்ளியைடுகள் உண்டாகியிருக்க முடியாது. அதாவது உயிர்கள் உருவாகியிருக்க முடியாது.

அதேபோல ப்ரோட்டானின் ஈர்ப்பு எடை (Gravitational mass) என்று ஒரு சமாசாரம் இருக்கிறது. இது சற்று வேறாக இருந்தால் காலக்ஸி இல்லை. நட்சத்திரங்கள் இல்லை. சூரியன் இல்லை, அதிலிருந்த பிரிந்த பூமி இல்லை, உயிர் இல்லை, பரிணாமம் இல்லை, மனிதன் இல்லை, இந்தப் பத்திரிகை இல்லை. இந்தக் கட்டுரை இல்லை, படிக்க நீங்களும் இல்லை, பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்தில் அதன் விரிவு வேகம் சற்றுக் குறைவாக இருந்திருந்தால் அது தனக்குள்ளே சுருங்கி மடிந்துபோயிருக்கும். சற்று அதிகமாக இருந்திருந்தால் நட்சத்திரங்கள் உருவாகியிருக்க முடியாது. இந்த வேகம், இந்த விதிகள் எல்லாவற்றிற்கும் ஏன் இந்த தனித்தன்மை என்பதுதான் அவர்கள் கேள்வி.

அன்த்ராபிக் (anthropic) தத்துவம் என்று ஒன்று இருக்கிறது. இதன்படி விதிகள், ஆரம்ப நிலைகள் எல்லாமே கடைசியில் மனிதன் தோன்றி இந்தக் கேள்வியைக் கேட்பதற்காகத்தான் ஏற்பட்டவை என்கிறார்கள். எத்தனையோ பிரபஞ்சம் உருவாவதற்கு எண்ணிலாத சாத்தியக்கூறுகள் உள்ளன. எத்தனையோ ஆரம்ப நிலைகளும் எத்தனையோ விதிகளும்.

ஆனால் இந்த ஆரம்ப நிலைகளும், விதிகளும் வேறு ஏதாவதாக இருந்திருந்தால் புத்திசாலி மனிதன் தோன்றியிருக்க மாட்டான். இந்தக் கேள்வி கேட்டிருக்க மாட்டான். என்ன கேள்வி? பிரபஞ்சம் ஏன் இப்படி இருக்கிறது என்ற கேள்வி. இதற்கு பதில்: பிரபஞ்சம் இப்படி இல்லையென்றால் இந்தக் கேள்வியே வராது என்பதே.

இந்த வசீகரமான வாதம் பிரபஞ்சத்தில் காணப்படும் ஒழுங்கையும் சீரான அமைப்பையும் விளக்கினாலும் இது திருப்தி தரும் கொள்கை யல்ல.

என்போல் கொஞ்சமாவது தூக்கமிழந்து யோசித்துப் பாருங்கள்.

2

We live in the most probable of all possible worlds வால்டேரின் இந்த வாசகம், பிரபஞ்சம் ஏன் "அப்படி" இல்லாமல் "இப்படி" இருக்கிறது என்ற கேள்விக்குப் பதில் தருகிறது. இப்படி இல்லையென்றால் இந்தக் கேள்வியே வராது என்பதுதான் பதில். இது வசிகரமான வாதமாக இருந்தாலும் தப்பானது.

இந்த வாதத்தின் ஆதாரம் 'அன்த்ராபிக்' தத்துவம் என்று சொன்னோம். அது என்னவென்று ஆர்வமுள்ளர்கள் தயவுகூர்ந்து சிரமம் பாராமல் டி.வி.யில் 'டெலிபோன் மணி' போல் போன்ற நல்ல விஷயங்களைத் துறந்துவிட்டு சென்ற பகுதியைப் படித்துவிட வேண்டுகிறேன்.

கடவுள் யார் என்பதை ஆராய்வதற்கு முன், நாம் யார் என்பதை நினைவு கொள்ளலாம். நாம் ஒரு சிக்கலான மாலிக்யுலர் கூட்டணி அமைப்பு. நம் இருப்பிடம்? சூரியக் குடும்பத்தில் ஓர் அற்பமான கிரகம். சூரியனே ஒரு சராசரி நட்சத்திரம்தான். ஸ்பைரல் காலக்ஸியின் ஓர் ஓரத்தில் இருக்கிறது. இவ்வளவு அற்பமான மனிதனுக்காகத்தான் பிரபஞ்சமே உண்டாயிற்று என்ற வாதம் சரியல்ல. நாம் உருவாவதற்கு சூரியக் குடும்பமும் அருகாமையில் சில சில்லறை நட்சத்திரங்களும் அவைகளின் ஈர்ப்பும் தேவைப்பட்டிருக்கலாம், உண்மைதான். ஆனால், கோடானுகோடி காலக்ஸிகள், கோடானுகோடி நட்சத்திரங்கள் நம்மைச் சுற்றிலும் சமச்சீராகப் பரவியிருப்பதை நம்மால் நுட்பமான அறிவியல் கருவிகளைக் கொண்டு பார்க்க முடிகிறது. அவையெல்லாம் இந்த ஆறடி மனிதன் உண்டாவதற்காக என்பது 'டூ மச்!'

அன்த்ராபிக் தத்துவம் இதனால் விழுந்துவிடுகிறது. அதற்குப் பதிலாகப் பிரபஞ்சத்தின் ஆரம்ப நிலையை விளக்க வேறு ஏதாவது ஓர் ஒருமைப்பாட்டுத் தத்துவம் தேவைப்படுகிறது. எதை ஒருமைப்படுத்த வேண்டும், ஞாபகம் இருக்கிறதா? பிரபஞ்சத்தின் நான்கு சக்திகளை. இதை விளக்கிவிட்டால் திடப்பொருளையும் விளக்க முடிகிறது. தியரி ஆஃப் எவ்ரிதிங் (Theory of everything) அனைத்து விளக்க சித்தாந்தம் என்கிறார்கள். இதுதான் இயற்பியலாளர்களின் ஆதர்சம். இதில் அவர்கள் எவ்வளவு தூரம் வந்திருக்கிறார்கள் பார்ப்போம்.

அப்துஸ் சலாம், வைன்பார்க் இருவரும் இயற்கையின் நான்கு சக்திகளில் இரண்டை ஒருமைப்படுத்தி விளக்கினார்கள்.

இன்னும் சில வருடங்களில் அணுத்துகள்களுக்கு மேலும் வேகம் கொடுத்து மற்ற அணுக்கருவுக்குள் மோத வைக்கக்கூடிய, இப்போ திருப்பதைவிட அதி அதி வேக 'பார்ட்டிக்கிள் ஆக்ஸலரேட்டர்கள்' வரும்போது இவர்கள் சித்தாந்தம் மெய்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தற்போது எக்ஸ்டெண்டட் சூப்பர் கிராவிட்டி (extended supergravity) என்று ஒன்று கொண்டுவந்திருக்கிறார்கள். அதை விளக்க 'க்ராவிட்டான்,' க்ளுவான் போன்ற கற்பனைத் துகள்களை விளக்கி உங்களுடன் என்னையும் குழப்பிக்கொள்ள விரும்பவில்லை. இந்த சித்தாந்தம் ஒரு வேட்பாளர். இதைவிட லேட்டஸ்டாக ஸூப்பர் ஸ்ட்ரிங் என்று ஒரு தத்துவம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதுவும் ஒரு வேட்பாளர். எதற்கு? அனைத்து விளக்க சித்தாந்தத் தேர்தலுக்கு. இவைகள் எல்லாம் விஞ்ஞானப் பத்திரிகைகளில், மாநாடுகளில் ஆராய்ச்சிக் கருத்தரங்கங்களில் முழுவதும் நிரூபிக்கப்படாத முழுமை அடையாத தத்துவங்களாக இருக்கின்றன.

யோசித்துப் பார்த்தால் நமக்கு மூன்று சாத்தியங்கள்தான் உள்ளன. அவைகளை ஆராயலாம்.

1. எல்லா சக்திகளையும் ஒன்றுபடுத்தி விளக்கும் முழுமையான தத்துவம் ஒன்று இருக்கிறது. அது இன்னமும் கண்டுபிடிக்கப்பட வில்லை. அதை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறோம். இது முதல் சாத்தியம்.

2. முழுமையான ஒரே ஒரு தத்துவம் என்பதெல்லாம் கிடையாது. எண்ணற்ற தத்துவங்கள் இருக்கின்றன. அவைகளில் எதை வேண்டுமெனினும் வைத்துக்கொண்டு தொடர் சங்கிலி போல சிந்தித்து பிரபஞ்சத்தின் நிகழ்வுகளை விளக்கலாம்.

3. எந்தத் தத்துவமும் கிடையாது. நாம் பிரபஞ்சத்தை ஓர் அளவுக்குமேல் எதிர்நோக்கி விளக்க முடியாது, கூடாது.

இம்மூன்று சாத்தியக்கூறுகளில் மூன்றாவதில் யாருக்கும் சம்மதமில்லை. மாறாத விதிகள் இருந்தால் கடவுளின், தன் மனத்துக்கிசைந்தபடி விதிகளை அமைக்கும் சுதந்திரத்தைப் பறிப்பதாகும். அதனால் எதையும் எதிர்பார்க்க முடியாது என்கிற சென்ற நூற்றாண்டு வாதத்தால் வந்தது. இன்றைய இயற்பியலில் க்வாண்டம் தத்துவம் இந்த "எதிர்பாராத" தன்மையை சரியாக விளக்குவதால் மூன்றாவது சாத்தியக்கூறு வெளிவந்துவிடுகிறது.

ப்ளான்க் எனர்ஜி (Planck energy) என்ற ஒரு சக்தி எல்லை இரண்டாவது சாத்தியத்தை மிகவும் குறைக்கிறது.

ஆதலால், முதல் சாத்தியம்தான் பாக்கியிருக்கிறது. எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும் தத்துவம் ஒன்று இருக்கிறது. அது இன்னும்

கண்டுபிடிக்கப்படவில்லை என்பது. இதில் வெல்லப் போவது சூப்பர் கிராவிட்டியா, சூப்பர் ஸ்டிரிங்கா வேறு ஏதாவதா தெரியவில்லை. கடவுள் இருக்கிறாரா என்று கேள்வி கேட்பதற்கு முன் மேற்சொன்ன இயற்பியல் சித்தாந்தங்களை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். காரணம், இவைகள் எல்லாம் பெரும்பாலும் நுட்பமான கருவிகளை வைத்துக்கொண்டு ஆராய்ந்து பரிசோதித்து அனுமதிக்கப்பட்ட சித்தாந்தங்கள். அனைத்துமே அப்படி என்று சொல்ல முடியாது. இன்று ஒரு சில, அறிஞர்களின் மனத்திலிருந்து உருவாகி பரிசோதனைக்கான கருவிகளுக்குக் காத்திருக்கின்றன.

அறிவியலின் முறை இதுதான் – மனதுக்குள் இப்படி இருக்கலாம் என்று சிந்தித்து அறிவிப்பார்கள். இந்த நிலையில் அறிவியல், சித்திரம் வரைவது, கவிதை எழுதுவதுபோல் கற்பனை சார்ந்த சமாசாரம்தான். அதன்பின்தான் அது நுண்கலைகளிலிருந்து வேறுபடுகிறது. சும்மா பிம்பம் அமைப்பதில் பயனில்லை. அது சரிதானா என்று பரிசோதிக்க வேண்டும். அதை எப்படிச் செய்கிறார்கள்? சிந்தனைகளை எல்லாம் ஒரு விதமான கணித சமன்பாடு ஒரு 'மாத்தமாட்டிக்கல் மாட'லாக மாற்றுகிறார்கள். இந்த மாடலை வைத்துக்கொண்டு சிலது நடக்கலாம் என்று யூகங்கள் செய்கிறார்கள். அந்த யூகங்கள் சரிதானா என்று பரிசோதனை மூலம் கண்டுபிடிப்பார்கள். சிந்தனை – மாடல் – பரிசோதனை, இதுதான் அறிவியல் முறை.

உதாரணமாக, ஐன்ஸ்டைன் ஸ்பேஸ் என்னும் விண்வெளி புவிஈர்ப்பு விசை, சக்தி இவைகளின் அருகே வளைந்து கொடுக்கும் என்று சிந்தித்துச் சொன்னார். விண்வெளி வளைவதாவது என்று நியூட்டனின் இயந்திரிகப் பிரபஞ்சத்தில் பழகியவர்கள் ஒப்புக் கொள்ள மறுத்தார்கள். ஐன்ஸ்டைன் தன்னுடைய சிந்தனையைக் கணித சமன்பாடுகளாக மாற்றி அறிவித்தார். அதன்படி கணக்கிட்டதில் சூரியனுக்குப் பின்னால் இருக்கும் நட்சத்திரங்கள் சூரியனால் மறைக்கப்பட்டிருந்தாலும் விண்வெளி வளைவதால் நமக்குத் தெரிய வேண்டும் என்று யூகித்தார்கள். சூரிய கிரகணத்தின் போது அதைப் பரிசோதித்துப் பார்த்து அது ஒரு சில திருத்தங்களுடன் உண்மைதான் என்று கண்டார்கள். இதிலிருந்து ஈர்ப்பு விசையால் விண்வெளி வளைந்து கொடுக்கும் என்பதை நிறுவினார்கள் (ஈர்ப்பு விசையே இந்த வளைவினால்தான் வருகிறது என்றும் அதை நோக்குவார்கள்). இந்த முறைப்படிதான் அத்தனை சிந்தனைகளும் அங்கீகரிக்கப்படுகின்றன. Verifiable, பரிசோதித்துப் பார்க்கக்கூடியவை அவை. அதனால், அவைகளை நம்பலாம். பரிசோதனையில் எதிர்பார்த்து ஒத்துப்போகவில்லை என்றால் சித்தாந்தம் நிராகரிக்கப்படும்.

ஆனால், இந்த சித்தாந்தங்கள்தான் உண்மையின் வடிவம் என்று எண்ணக் கூடாது. இவை உண்மையை அறிய ஏற்பட்ட கருவிகள், படிமங்கள். இவைகள் மூலம்தான் அறிவியல் பிரபஞ்ச உண்மையை வெளிக்கொணருகிறது. இவைகள்தான் தனிப்பட்ட உண்மை என்று

சொல்ல இயலவில்லை. மனித மனத்திற்குப் பிரபஞ்ச உண்மையை அறிவதற்கு இம்மாதிரி 'மாடல்கள்' அமைப்பதைத் தவிர வேறு உத்திரவாதமான முறைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

மதவியலாளர்கள் கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று சொல்வது அறிவியலுக்கு ஒத்துவரவில்லை. காரணம் அந்தக் கடவுளைப் படைத்தது யார் என்கிற கேள்வியைத் தவிர்க்கவே முடியாது. தன்னையும் படைத்து தன் விதிகளையும் படைத்துக் கொண்டது பிரபஞ்சம் என்பதை விளக்கும் சித்தாந்தம் இருக்கிறதா என்பதுதான் அறிவியலின் தேடல்.

ஷ்ரோடிங்கர் என்னும் ஜெர்மானிய இயற்பியல் நோபல் விஞ்ஞானி ஒரு பூனைக் கதை சொன்னார். இது ஒரு பிரசித்தமான மனப் பயிற்சி. உங்கள் சம்பிரதாய எண்ணங்களைக் கலைத்துப் போடுவதற் கான பயிற்சி. அறிவியல் விளக்கங்களில் உள்ள சிக்கல்கள் எல்லாம் தீர்ந்துவிடும். அல்லது குழப்பம் அதிகரிக்கும். பாருங்கள் – ஒரு பூனையைப் பெட்டிக்குள் பூட்டி வைத்துவிட வேண்டும். அதன் மேல் ஒரு துப்பாக்கி குறி வைக்கப்படுகிறது. அந்த துப்பாக்கி அருகே உள்ள ஒரு அணுக்கருவிலிருந்து சக்தியோ துகளோ வெளிப் பட்டால் வெடிக்கும். பூனை செத்துப்போகும். ஒரு அணுக்கருவிலிருந்து decay 'டீகே' என்பது நிகழும் சாத்தியக்கூறு 50க்கு 50. அதாவது அது நிகழலாம்; நிகழாமல் இருக்கலாம். அதனால் பெட்டியைத் திறந்தால் பூனை செத்துப்போயிருக்கலாம்; அல்லது உயிருடன் இருக்கலாம். இதுதான் உண்மை. ஆனால், பிரச்னை பெட்டியைத் திறந்தபின் அல்ல; பெட்டியைத் திறப்பதற்கு முன் பூனையின் உண்மை நிலை என்ன? அது உயிருள்ள பூனை, செத்த பூனை இரண்டுமே என்கிறது க்வாண்டம் இயற்பியல்.

இது சம்பிரதாய சிந்தனையாளர்களுக்குப் புரிவது மிகக் கடினமாக இருந்தது. அவர்கள் கருத்துப்படி எந்த ஒரு பருப்பொருளுக்கும் ஒரே ஒரு சரித்திரம்தான் உண்டு. க்வாண்டம் இயற்பியலின்படி அதன் சரித்திரம் பற்பல சாத்தியக்கூறுகள் ஒன்றிணைந்தவை. அவைகளில் ஒன்றுதான் மற்றதை மீறிக்கொண்டு உண்மையாகிறது. அதுவரை உண்மை என்பது அத்தனை சாத்தியக்கூறுகளுமே!

ஷ்ரோடிங்கரின் பூனை கேஸில் இரண்டு சரித்திரங்களில் ஒன்று வலுவாக்கப்படுகிறது.

நம்மாழ்வாரின் பிரமிப்பூட்டும் திருவாய்மொழிப் பாடல் ஒன்று இருக்கிறது.

ஒன்றும் தேவும் உலகும்
அன்று நான்முகன் தன்னொடு
தேவருலகோடு உயிர் படைத்தான்

பைபிள் In the beginning was the word என்கிறது. இவைகள் எல்லாம் பிரபஞ்சத்தின் ஆரம்பக் கணத்தை அல்லது சிருஷ்டிக் கணத்தைச் சொல்கின்றன.

காலம் என்பது சாசுவதமானதல்ல. பிரபஞ்சம் உண்டானபோது தான் ஜனித்திருக்கிறது என்பதுதான் அறிவியலின் முடிவும். இந்த முடிவுக்கு எப்படி வந்தார்கள் என்பதைப் பின்னர் விளக்குகிறேன். காலம் பிரபஞ்சத்துடன் பதினைந்தாயிரம் கோடி வருடங்களுக்கு முன் பிறந்தது என்று 'காஸ்மாலஜி' என்னும் பிரபஞ்சவியல் சொல் கிறது. அப்படி காலத்துக்கு ஓர் ஆரம்பம் இருந்தால், பிரபஞ்சத்தை யாராவது படைக்க வேண்டும் என்றால் அவர் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பே இருக்க வேண்டும். அப்படி இருப்பதற்கு, அவர் நிலைகொள் வதற்கு காலம் தேவை! இதுதான் அறிவியலாளர்கள் கடவுளை நம்புவதில் உணரும் சிக்கல். காலம் இல்லாமல் காலத்தைப் படைக்க முடியாது – ரொம்பக் குழப்பி விட்டேன் அல்லவா? லைட்டாக முடிக்கலாம். டெல்லி சாந்தினிசௌக்கில் – மத்திய சர்க்காரில் பணிபுரியும் ஒரு எழுத்தர், அலுவலகத்திலிருந்து திரும்ப வந்து கொண்டிருந்தார். இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்தார்.

'கடவுளைக் காண முடியுமா?' என்று ஒருவன் கேட்க,'

'ஓ முடியுமே. உன் கோட்டைக் கழற்றிவிட்டு பத்தடி முன்னால் சென்று மேலே பார், கடவுள் தெரிவார்' என்றான்.

அவனும் அவ்வாறே செய்து திரும்ப வந்தான். பிரகாசமான முகத்துடன் 'தாங்க்ஸ். நீங்கள் என் கண்ணைத் திறந்து விட்டீர்கள்; கடவுளை நன்றாகப் பார்க்க முடிந்தது' என்றானாம். இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கிளார்க் அவனை அணுகி எனக்கும் கடவுளைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது என்று தன்னிச்சையாகக் கோட்டை கழற்றிக் கொடுத்துவிட்டு பத்தடி முன் சென்று வானத்தைப் பார்த்தார். காக்காய் கூடு கட்டிய டெலிஷன் ஆன்டென்னாக்களைத் தவிர வேறு ஏதும் தெரியவில்லை. திரும்பிப் பார்த்தால் இருவரையும் காணோம். கோட்டையும் காணோம். கோட்டில் அந்த மாதச் சம்பளம் . . .

3

சாந்தினி சௌக் கேப்மாரிகளைவிட கொஞ்சம் தீவிரமாக இந்தக் கேள்விக்கு விடை அளிக்க முற்படுவோம். Science must provide a mechanism for the universe to come into being. அறிவியல், பிரபஞ்சம் தோன்றுவதற்கு உண்டான வழிமுறைகளையும் தர வேண்டும் என்று ஜான் வீலர் சொன்னதுடன் பலருக்கு சம்மதமே. அந்த வழிமுறைதான் கடவுளா என்பதை ஆராயலாம்.

தாமஸ் கோல்டு என்னும் விஞ்ஞானி தன் சகா ஹெர்மன் போண்டி என்பவருடன் 1940ல் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தாராம். கனவுக்குள் கனவுக்குள் கனவுகள் நிகழும் டெட் ஆஃப் நைட் (*Dead of Night*) என்னும் படம். அதைப் பார்த்துவிட்டு இருவருக்கும் பிரபஞ்சம்கூட அப்படி இருக்கலாமே எனத் தோன்றிற்றாம். ஒரு ஆரம்பம் இல்லை. தொடர்ந்து வெடித்து துவங்கவில்லை. எப்போதும் ஒரே மாதிரி இருந்திருக்கிறது. இழந்த சக்தியையும் திடப்பொருளையும் அவ்வப்போது புதுப்பித்துக்கொள்கிறது. அதற்கான அமைப்பும் ஏற்பாடும் அதனுள் இருக்கிறது என எண்ணிப் பார்த்தார்கள். அதாவது பிரபஞ்சம் ஒரு நதி போல. மொத்தமாகப் பார்க்கையில் நதி ஒரே மாதிரிதானே தோற்றமளிக்கிறது. ஆனால், ஒவ்வொரு கணமும் அதன் நீர் புதுநீர். இந்த தத்துவத்தை அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு 'ஸ்திர நிலைத் தத்துவம்' ஸ்டெடி ஸ்டேட் தியரி (Steady State theory) என்று பெயரிட்டார்கள். அவர்கள் நண்பர் ஃப்ரெட் ஹாயில் Fred Hoyle இந்த தத்துவத்துக்கான கணித சமன்பாடுகளையெல்லாம் ஆக்கிக் கொடுத்தார். கொஞ்ச நாள் பிரபலமாயிருந்த இந்த தத்துவத்தின் ஒரே சௌகரியம் எப்போதும் அது இருந்து வருவதால் பிரபஞ்சத்துக்கு ஒரு சிருஷ்டிகர்த்தா தேவையில்லை.

ஆனால், இந்த தத்துவம் அதிக நாள் தாங்கவில்லை. 1960–களில் ராட்சத ரேடியோ டெலஸ்கோப்புகள் வந்துவிட்டன. விண்வெளியின் ஆழத்துக்குள் நுட்பமாகப் பார்க்கும்போது அதன் ஆரம்ப நாட்களிலிருந்து இப்போதுதான் நம்மை வந்து சேரும் பிரபஞ்சத்தின் சித்திரத்தைப் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. திட்டவட்டமாக அப்போது இருந்த பிரபஞ்சமும் – இப்போதுள்ள பிரபஞ்சமும் வேறு. அது விரிவடைந்திருக்கிறது; வலுவிழந்திருக்கிறது என்பது தெளிவாகியது.

மேலும் 1965–ல் பிரபஞ்சம் முழுவதும் எல்லா திசைகளிலும் லேசான உஷ்ணம் பரவியிருப்பதைக் கண்டுபிடித்தார்கள். இது ஸ்திர நிலைத் தத்துவத்தின் சவப்பெட்டியில் கடைசி ஆணியை அடித்தது. இந்த உஷ்ணம், பிரபஞ்சத்தின் ஆரம்ப மகாவெடியின் மிச்சமிருக்கும் உஷ்ணம். மைதானத்தில் வெடிகுண்டு வெடித்தபின் மிச்சமிருக்கும் புகைபோல அல்லது வாசம்போல.

பிரபஞ்சத்துக்கு ஓர் ஆரவாரமான ஆரம்பம் இருந்திருக்கிறது. அது ஒரு தீர்மானமில்லாத முடிவை நோக்கிச் சென்று கொண்டிருக் கிறது என்பதை அறிவியல் தெளிவாக நிரூபித்துவிட்டது. மனித இனத்தின் பல புராதன நம்பிக்கைகளில் முக்கியமானவை, பிரபஞ்சம் அழிவில்லாதது, சாசுவதமானது. அதற்கு பிறப்பும் இல்லை, அழிவும் இல்லை என்பது. இரண்டுமே அறிவியலால் பொய்ப்பிக்கப்பட்டிருக் கின்றன. ஓல்பர் (Olber) முரண்பாடு என்று ஒன்று இதற்கு பயன்படுகிறது. பிரபஞ்சம் சாசுவதமாக, காலத்திலும் வெளியிலும் – எல்லையற்றதாக, அழிவில்லாததாக இருந்தால் நம் இரவு நேரங்கள் இருட்டாக இருக்கக் கூடாது. அத்தனை நட்சத்திரங்களின் வெளிச்சங்களும் நம் வானத்தை நிரப்பியிருக்க வேண்டும். சின்னக் கணக்கு போட்டால் இது தெரிகிறது. பிரபஞ்சத்துக்கு வயதும் ஆரம்பமும் இருப்பதால்தான் இரவில் நம்மை வந்து சேரும் நட்சத்திரங்களின் ஒளியை மட்டும் பார்க்க முடிகிறது. வானத்தைப் பார்க்கும்போது நாம் உண்மையாக காண்பது அதன் அழிவின் வெவ்வேறு கட்டங்களைத்தான். நம்மால் நம் கருவிகள் மூலம் பார்க்க முடிகிற பதினைந்து பில்லியன் ஒளி வருடங்கள் பிரபஞ்சத்தின் வயதைத் தெரிவிக்கின்றன.

நம் கணக்கு சமன்பாடுகள், விண்வெளியில் இப்போது மிஞ்சியிருக் கும் அந்த லேசான உஷ்ணம், இவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது பிரபஞ்சத்தின் அதிர்ச்சிகரமான பிறந்த தேதியின் அத்தாட்சிகள் தெரிகின்றன. அந்தக் கணத்தை ஏற்படுத்தியவர் கடவுள் என்றால், அவர் பிரபஞ்சத்தை ஒரு வாண வேடிக்கை போல் பற்ற வைத்துவிட்டு அது பாட்டுக்கு இயங்கட்டும் என்று மேட்டினி பார்க்கப் போய்விட்டாரா? பிரிட்டிஷ் இயற்பியலாளர் ரஸ்ஸல் ஸ்டானார்டு, கடவுளை ஒரு புத்தகத்தின் ஆசிரியருடன் ஒப்பிடுகிறார். புத்தகம் எழுதப்பட்டுவிட்டது. காலம் அதன் பக்கங்கள். நாம் ஒன்றன்பின் ஒன்றாக படித்துக்கொண்டிருக்கிறோம். படிக்கப் படிக்கத்தான் முழுப் புத்தகமும் தெளிவாகும் – இது ஒரு கருத்து.

எப்படியும் கடவுள் சிருஷ்டியின் முதல் கணத்தை தீர்மானித்து விட்டு அதை அம்போ என்று விட்டுவிடுவார் என்பது சரியான விவாதம் இல்லை. இதனால், அவர்கள் இந்து கருத்துக்களான படைத்தல், காத்தல், அழித்தல் – மூன்றையுமே செய்பவர் கடவுள் என்பது பரவாயில்லை என்கிறார்கள். இந்து மதக் கருத்துக்களில் சிக்கல் கடவுள் அல்ல. கடவுள்கள். அவ்வளவு சக்தி படைத்த கடவுள் படைத்ததுடன், நடத்தியும் காட்டுவார் என்பதுதான் பொருத்தம்.

கடவுளை நம்புவதில் இது மட்டும் இன்றி இதைவிட ஆழமான சந்தேகங்கள் எழுகின்றன. அவைகளைப் பாரபட்சமின்றி ஓர் ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் நடைபெறும் கற்பனை விவாதமாக டாக்டர் பால் டேவிஸ் (Dr. Paul Davies) தி மைண்ட் ஆஃப் காட் (*The mind of God*) என்னும் அற்புதமான புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதை இங்கு தருகிறேன்.

நாத்திகன்: ஒரு கால கட்டத்தில் உலகத்தில் நடைபெறும் அத்தனை காரியங்களுக்கும் கடவுள்தான் காரணம். கல்லுக்குள் தேரை, கருப்பை உயிருக்கு எல்லாம் கடவுள்தான் ஏற்பாடு செய்கிறார். அடுத்த பஸ் வருவது, சிட்ஃபண்டு பணம் திரும்பி வருவதுகூட கடவுள் செயல் என்கிற விளக்கம் தேவைப்பட்டது. அது அறியாமையால் வந்தது. மெல்ல மெல்ல அறிவியல் எல்லாவற்றின் இயற்கையும் விளக்க கடவுளின் பொறுப்புகள் படிப்படியாக குறைந்து வருகிறது. அந்த முதல் வெடி வரை கடவுளே இல்லாமல் போய் விட்டார்கள். அதற்கு மட்டும் எதற்கு ஒரு கடவுள் தேவைப்படும் என்கிறாய்.

ஆத்திகன்: உங்கள் அறிவியலால் எல்லாவற்றையும் விளக்க முடியாது. உலகில் பல விந்தைகள் உள்ளன. உதாரணமாக, பெரிய வியப்பு உலகில் – முதல் உயிர் எப்படி உருவானது என்பதே சரியாக விளக்கப்படவில்லை. உங்கள் அறிவியலாளர்களே இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

நாத்திகன்: உண்மைதான். அறிவியல் எல்லாவற்றையும் இன்னும் விளக்கவில்லை. இதில் இன்னும் என்பது முக்கியமான சொல். விளக்க முடியும் என்றில்லை. கொஞ்ச நாள் ஆராய்ச்சியில் அதன் அறிவு விஸ்தாரமாக மெல்ல மெல்ல விளக்கம் கிடைக்கும். ஆத்திகர்களான எல்லாரும் எப்போதும் இதைத்தான் சொல்கிறீர்கள். உங்கள் அறிவியலால் இதை விளக்க முடியவில்லை என்பீர்கள். விளக்கி விட்டால் இது எப்படி, இதை விளக்க முடியும்? என்று அந்த நிமிடத்தில் இன்னமும் விளக்கம் காணாத ஒரு பகுதியை எடுத்துக் காட்டாக சொல்கிறீர்கள்.

இப்படி இந்த விளக்கப்படாத ஓட்டைகள் இடம் மாறிக்கொண்டே போகின்றன. மெல்ல மெல்ல குறைந்துகொண்டும் வருகின்றன. என்னைப் பொறுத்தவரை, இவை அனைத்தும் அறிவியலால் விளக்கப் பட்டுவிடும். அவகாசமும் ஆராய்ச்சி வசதிகளும் கிடைத்தால் அத்தனை பள்ளங்களும் குழிகளும் நிரப்பப்படும். கடவுள் என்கிற தத்துவத்துக்குத் தேவை இல்லாமல்; அதாவது, உங்கள் கடவுளுக்கு மெல்ல மெல்ல பவர் குறைந்து பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்ட மகாவெடிக்கு மட்டும் உண்டானவர் என்று முடியும் இன்று.

ஆத்திகன்: உங்கள் அறிவியல் பிரபஞ்சம் இயங்க கடவுள் தேவையில்லை என்று நிரூபித்தாலும், அதனை ஆரம்பிக்க ஒரு கடவுள் தேவைப்பட்டே தீருகிறார்.

நாத்திகன்: சரி... வேறு காரணம் எதுவும் இல்லாமல் கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்ற கூற்றுக்கு மட்டும் தேவைப்படுகிறார் என்றால் நீங்கள் பிரச்னைக்கு தீர்வு கண்டுவிட்டீர்களா?

ஆத்திகன்: பின்...?

நாத்திகன்: இது தீர்வு அல்ல. பிரச்னையை வேறு தடத்துக்கு திசை திருப்புவது அவ்வளவுதான். 'கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தார்'–இதற்கு என்ன அர்த்தம்? இது எனக்கு எந்த செய்தியையும் தருவதில்லை. அந்தப் படைப்புக் கணத்தின்போது யாரும் இல்லை. அதை சோதித்துப் பார்க்க முடியாது. ஒரு மர்மத்தை (பிரபஞ்சத்தின் ஆரம்பம்) விளக்க மற்றொரு மர்மத்தை (கடவுள்) பயன்படுத்துகிறீர்கள் அவ்வளவே. நான் உங்களை உடனே கேட்கலாம். கடவுளைப் படைத்தது யார்?

ஆத்திகன்: கடவுளை யாரும் படைக்கத் தேவையில்லை. அவர் சுயம்பு. அவர் ஒரு தேவை. அவர் இருந்தே ஆக வேண்டும். அதில் ஏதும் நமக்கு தேர்வு இல்லை.

நாத்திகன்: அதே போல நம் பிரபஞ்சத்தையும் யாரும் படைக்கத் தேவையில்லை. அது சுயம்பு. அது தேவை. அதில் தேர்வு ஏதும் இல்லை என்று சொல்லலாமல்லவா?

ஆத்திகன்: விஞ்ஞானிகள் தர்க்கச் சங்கிலியை கவனிக்கலாம். ஏன் மரத்திலிருந்து பழம் விழுகிறது? புவி ஈர்ப்பு விசையால். ஈர்ப்பு விசை எப்படி வந்தது?–அது ஒரு புலம் போல பரவியிருப்பதால் என்கிறீர்கள். அது விண்வெளியின் வளைவு என்கிறீர்கள். இவ்வாறு ஒரு விளக்கத்தை மற்றொரு விளக்கத்தால் இடம்பெயர்த்துக்கொண்டே போகிறீர்கள். நாங்கள் கூறும் கடைசி கடவுளை மட்டும் ஏன் மறுக்கிறீர்கள்?

நாத்திகன்: அப்படியில்லை. எங்கள் விளக்கங்கள் அனைத்தும் பரிசோதித்துப் பார்க்கக்கூடியவை. விண்வெளி வளைந்திருப்பதைக் கருவிகளையும், விசைகளையும் வைத்துக்கொண்டு அளந்து பார்க்க முடியும். இல்லையெனில், அந்த விளக்கம் நிராகரிக்கப்படும். விளக்கங்கள் எப்போதுமே திருத்தத்துக்குத் தயாராக இருப்பவை. அவை வெறும் பேப்பர் முயற்சிகள் அல்ல.

பிரபஞ்ச அறிவை விஸ்தரிக்கின்றன. அவைகளிலிருந்து நமக்குப் பயனுள்ள நூற்றுக்கணக்கான டெக்னாலஜிகளும், விண்வெளிப் பயணங்களும், அன்றாட விஷயங்களும் கிடைக்கின்றன. ஆனால், இந்த கடவுள் என்கிற தத்துவத்தை வைத்துக்கொண்டு – ஒரு பயனும் இல்லை. அது இன்னொரு சிக்கலான அம்சத்தைச் சேர்க்கிறது. மேலும், கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தாரா என்பதை நம்மால் சரிபார்க்கவே முடியாது. பரிசோதனைக்கு உட்படுத்தவோ நிரூபிக்கவோ முடியாது 'கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தார்'– என்பது வெற்று வாக்கியம், அவ்வளவுதான். அவருடைய குணங்கள் என்ன,

பொறுப்புகள் என்ன, என்ன கருவிகளைப் பயன்படுத்தினார், ஏன் இப்படிப் படைத்தார்–இந்த விவரங்கள் இல்லாமல் 'கடவுள் இருக்கிறார்' என்பதற்கு நீங்கள் வேறு விதமான நிரூபணம் தராத பட்சத்தில் அந்தக் கடவுளை என் போன்றவர்கள் நம்பத் தேவை யில்லை.

ஆத்திகன்: உங்கள் முடிவு சரியில்லை. பிரபஞ்சத்தின் ஆரம்பக் கணம் வரையில் உங்களிடம் விளக்கம் இருக்கலாம். ஆனால், அந்த ஆரம்ப கணத்தை நீங்கள் ஒரு நிகழ்வாகவே, முரட்டு உண்மை யாகவே அறிய விரும்புகிறீர்கள். அதற்கு ஓர் ஆழமான விளக்கத்தைத் தேட மறுக்கிறீர்கள்.

நாத்திகன்: நீங்களும் கடவுளை ஒரு முரட்டு உண்மையாக ஒப்புக்கொள்ள விரும்புகிறீர்கள். நாங்கள் பிரபஞ்சத்தை... அவ்வளவு தான் வித்தியாசம். வாருங்கள் காஃபி சாப்பிடலாம்.

மேலே குறிப்பிட்ட விவாதங்களில் கடவுளை நம்புவதில் உள்ள சிக்கல்கள் எல்லாம் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. பிரபஞ்சம் 'படக்' என்று தோன்றியது என்கிற மொட்டையான, விளக்கமில்லாத விவரமாக அப்படியே எடுத்துக்கொள்வதா? 'அவ்வளவுதானய்யா இது!' என்கிற வகையில் ஒப்புக்கொள்வதா?

அண்மைக் காலம்வரை இந்த முதல் கணத்தின் விளக்கத்துக்கு கடவுள் என்னும் மகா சக்தி, இயற்பியல் விதிகளுக்கு மேற்பட்ட ஒரு சக்தி தேவைப்பட்டது. இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த விவாதம் திசை திரும்பி வேறு வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. அதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

அதுவரை மேலே குறிப்பிட்டிருந்த இரண்டு கூட்சிகளில் யாருக்கு உங்கள் ஓட்டு என்பதை தீர்மானிக்கலாம்.

4

பிரபஞ்சம் தன்னைத் தானே சிருஷ்டித்துக்கொள்ள இயலுமா என்கிற ஆதாரமான கேள்விக்கு இப்போது வந்துவிட்டோம். பிரபஞ்சத்துக்கு ஓர் ஆரம்பம் இருந்திருக்கிறது என்பது அறிவியலால் நிரூபிக்கப் பட்டுவிட்டது. அதன் காரணம்தான் நிரூபிக்கப்படவில்லை. இயற்பியல் விதிகளின்படி எந்த விளைவுக்கும் ஒரு காரணம் வேண்டும் என்பதனால் இது ஒரு முரண்பாடாகவே இருந்தது. அந்த ஆரம்பத்தை அவர்கள் ஓர் 'ஒருமித்த கணமாக' பார்க்கிறார்கள். அதை Singularity என்கிறார்கள். அதற்கு முன் எதுவும் இல்லை. காலம்கூட இல்லை. காலமும் தூரமும் சேர்ந்துதான் உண்டாயின. இதனால் தான் ஒரு சிருஷ்டிகர்த்தாவை அனுமானிப்பது சுலபமாக இருக்கிறது. காலமே துவங்காமல் எப்படி சிருஷ்டி பண்ணமுடியும்? சிருஷ்டிக்க காலம் தேவை. மேலும் இயற்பியல் பௌதிக விதிகளும் அந்தக் கணத்தில்தான் தோன்றின என்கிறார்கள். விதிகள் தோன்றுவதன் முன் எந்த விதிகள் பயன்பட்டன என்பதற்கு பதில் இல்லை.

ஆகவே அந்த விதிகளுக்கே தன்னைத் தானே உண்டாக்கிக் கொள்ளும் தகுதியும் இருந்தால் பிரபஞ்சத்தை உண்டாக்க ஒரு கடவுள் தேவையில்லை. நவீன க்வாண்டம் இயற்பியலில் ஹைஸன் பர்கின் நிச்சயமில்லாத தத்துவம் Uncertaintly principle என்பது இதற்கான சாத்தியத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. ஹைஸன்பர்கின் தத்துவம் என்ன சொல்கிறது? அதற்குப் பலவிதமான விளக்கங்கள் உள்ளன. எளிமையாக சொல்லப் போனால் எந்த ஆதார குணமும் (உதாரண மாக ஒரு துகளின் வேகம், இருப்பிடம், சக்தி போன்றவை) நிச்சயமாக அறிய முடியாத, வேறுபாட்டுக்கு உள்ளானது.

காரணம் ஒரு துகளின் உண்மையை அறியும் செயலே அதன் உண்மையை மாற்றிவிடும். துகளின் இடத்தைக் கண்டுபிடித்தால் அதன் வேகம் மழுப்பப்படும். வேகத்தைக் கண்டுபிடித்தால் இருப்பிடம் மழுப்பப்படும். இந்த நிச்சயமில்லாத் தன்மையால் க்வாண்டம் விளைவுக்கு அதற்கு முற்பட்ட ஒரு காரணம் தேவையில்லை. அது ஒரு சாத்தியக் கூறு, Probabilityதான். அது நிகழ்ந்தாக வேண்டும் என்றில்லை. அந்த நிகழ்வை எதிர்பார்க்கவோ அறியவோ முடியாது. காரணமும் விளைவும் இவ்வாறு பிரிக்கப்பட்டபின் பிரபஞ்சத்தின்

தன்னிச்சையான ஆரம்பத்திற்கு ஒரு இயல்பான வழி வகுக்கப்படுகிறது. க்வாண்டம் மாறுதல்களால் பிரபஞ்சம் தோன்றலாம் என்பதாகிறது. இதற்கு எந்த இயற்பியல் விதியையும் மீறத் தேவையில்லை. பிரபஞ்சம் தான்தோன்றியாகப் பிறப்பதற்கு அதன் க்வாண்டம் விதிகளில் ஹைஸன்பர்க் தத்துவம் மூலம் இடம் இருக்கிறது.

ஆனால், க்வாண்டம் விதிகள் நுட்பமான அணுத்துகள்களுக்கு ஏற்பட்டவை. அவைகளை மிகப் பிரமாண்டமான பிரபஞ்சத்தின் ஆரம்பத்துக்குப் பயன்படுத்துவது சரியா என்பது அடுத்த கேள்வி. ஆரம்ப கணத்தில் பிரபஞ்சம் மிகச் சிறியதாக, மிக அடர்த்தியானதாக இருந்திருக்கிறது. அப்போது க்வாண்டம் இயற்பியல் விதிகள் செல்லுபடி யாகும் என்று 'க்வாண்டம் காஸ்மாலஜி' என்கிற புதிய இயலில் சொல்கிறார்கள். அவர்கள் கணக்குப்படி பிரபஞ்சம் ஆரம்பித்த முதல் செகண்டின் மிக மிக நுட்பமான ஒரு மில்லி செகண்டு என்பது ஒரு செகண்டில் ஆயிரத்தில் ஒரு பாகம். ஒரு மைக்ரோ செகண்டு என்பது பத்து லட்சத்தில் ஒரு பாகம். இப்படியே ஒன்றைத் தொடர்ந்து நாற்பத்தேழு சைபர் அளவுக்குப் பிரித்த கணத்தில் அதன் எடை அடர்த்தி மிக மிக அதிகமாக (ஒரு கன சென்டி மீட்டருக்கு ஒன்றைத் தொடர்ந்து 93 சைபர் கிராமாக) இருந்தது. அதுவரை க்வாண்டம் விதிகளை அதற்குப் பயன்படுத்த முடியும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஜேம்ஸ் ஹார்ட்டில், ஸடீஃபன் ஹாக்கிங் இருவரும் இதை விவரித்துள்ளார்கள். இந்த முதன்முதல் முதன்முதலான கணத்தை ப்ளாங்க் கணம் என்கிறார்கள். (க்வாண்டம் விதிகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானி மாக்ஸ் ப்ளாங்கின் பெயரில்) இதில்தான் பிரபஞ்சம் ஒரு சாத்தியக்கூறிலிருந்து நிஜமாவதற்கு உண்டான சூழ்நிலை இருந்திருக்கிறது. எந்த விதியையும் மீறாமல், எந்த விதிக்கும் எந்தக் காரணத்துக்கும் தேவையில்லாமல் பிரபஞ்சம் தோன்றியிருக்கலாம். இதுதான் அறிவியலின் இன்றைய முடிவு.

இந்த பிரமிக்க வைக்கும் முடிவுடன் நாம் ஒத்துப்போவதற்கு முன் இதற்கு ஏதேனும் பரிசோதனை மூலம் நிரூபணம் இருக்கிறதா என்றால் க்வாண்டம் உலகில் இன்றும் சக்தி துகளாகவும் துகள் சக்தியாகவும் அவ்வப்போது தன்னிச்சையாக Spontaneous ஆகத் தோன்றுகிறது; மாறுகிறது. இன்றைய பரிசோதனைகளில் வெளிப்படும் வெளிச்சங்கள் ஃபோட்டான்கள் அனைத்தும் இப்படி எதிர்பாராமல் தன்னிச்சையாகத் தோன்றுபவையே. க்வாண்டம் விளைவுகள் அனைத்தும் இப்படிப்பட்டவையே என்று உதாரணம் காட்டுகிறார்கள்.

இதற்கு மேல் இந்த விளக்கங்கள் மிக மிகச் சிக்கலாகின்றன. இதுவரை பிடிவாதமாகப் படித்து வந்திருக்கிறீர்கள் என்றாலே உங்கள் ஆர்வத்துக்கு ஒரு சலாம்.

பவுண்டரி கண்டிஷன்கள், கற்பனைக் காலம் போன்ற கடினமான சித்தாந்தங்களை இப்போது உள்ளே நுழைத்து மேலும் உங்களைக் குழப்ப விருப்பமில்லை. தீவிர ஆர்வமுள்ளவர்கள் ஸ்டீஃபன் ஹாக்கிங்

கின் *Black Holes and Baby Universe* என்னும் தொகுப்பில் The Origin of the Universe என்னும் கட்டுரையைப் படிக்க வேண்டுகிறேன்.

அந்தக் கட்டுரையின் இறுதி வரிகளை இங்கே கொடுத்திருக்கிறேன்.

"நாங்கள் கூறியது உண்மையென்றால் இயற்பியல் விதிகள் பிரபஞ்சத் தின் ஆரம்பத்திற்குக்கூட செல்லுபடியாகும். இதனால் கடவுளுக்குப் பிரபஞ்சத்தின் ஆரம்ப நிலையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்காது. ஆனால், கடவுளுக்குப் பிரபஞ்ச விதிகள் என்னவென்று நிர்ணயிக்கும் உரிமை இருக்கலாம். இதிலும் அவருக்குத் தேர்ந்தெடுப்பு இருக்காது. காரணம் எத்தனையோ விதிகள் இருந்தாலும் மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள விதிகளே தமக்குள் முரண்பாடில்லாமல் நின்று நிலைத்து, இறுதியில் நம்மைப் போல புத்திசாலி ஜீவன்கள் தோன்ற வழிவகுத்து, கடவுள் இருக்கிறாரா என்று கேள்வி கேட்க வைக்கும் இந்தக் கணம் வரை கொண்டு வரும். சரி... ஒரு சில விதிகள்தாம் இந்த நிலைக்குக் கொண்டு வரும் என்றால் அந்த விதிகள் என்பவை என்ன? கணிதச் சமன்பாடுகள்தானே? அவைகளை உயிர்ப்பிப்பது, மெய்ப்படுத்துவது எது? என்கிற கேள்வி எழும்போது அந்த விதிகளே தம்மைத் தாமே உசுப்பிக்கொள்ளும் குணம் படைத்தவை என்று நிரூபிக்க முடியலாம். அப்போது அறிவியல், பிரபஞ்சம் எப்படி ஆரம்பித்தது என்கிற கேள்விக்கு விடை அளித்துவிடும். ஆனால், பிரபஞ்சம் ஏன் தன்னை ஆரம்பிக்கத் தீர்மானித்தது என்பதற்கு விடை என்னிடம் இல்லை."

– இவ்வாறு அந்தக் கட்டுரையை முடித்திருக்கிறார்.

இப்போது கணிதச் சமன்பாடுகளைக் கொஞ்சம் நுட்பமாக கவனிக்கலாம். இயற்கையின் விதிகளைக் கணிதச் சமன்பாடுகளாக நாம் தெரிவிக்க முடிகிறது. $e=mc^2$ என்பது ஒரு சமன்பாடு. இது ஓர் இயற்பியல் உண்மையின் வடிவம். ஒரு சித்திரம் போலத்தான். கணிதத்தை துல்லியமான இயல் என்பார்கள். எந்தவித பிம்பங்களையும் படிமங்களையும் உண்மை வடிவங்களையும் சாராமல் கணித இயல் தனித்து இயங்க முடியும். நடைமுறை வாழ்க்கையுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாத நூற்றுக்கணக்கான தேற்றங்களும் நிரூபணங்களும் அதில் அமைக்க இயலும்.

கிரேக்கர்கள், நம் புராதன இந்திய வானவியலாளர்கள் காலத்தி லிருந்து எண் கணிதம் மனிதனை வசீகரித்து வந்திருக்கிறது. எண் களுக்கும் கடவுள் தன்மைக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்று எல்லா மதங்களிலும் நம்பிக்கைகள் இருக்கின்றன. நம் இந்து நம்பிக்கை களிலும் ஒற்றை எழுத்து, எட்டெழுத்து, ஐந்தெழுத்து, ஆறெழுத்து போன்றவையெல்லாம் கடவுளுடன் எண்களை சம்பந்தப்படுத்து கின்றன. பித்தகோரஸ், அரிஸ்டாட்டில் போன்றவர்கள் எண்களில்தான் கடவுளே இருக்கிறார். அவைகளில் பிரபஞ்ச சங்கிதமே இருப்பதாக நம்பினார்கள். எண்கள் என்பது என்ன? இலக்கங்கள். மனித மனதில் ஏற்பட்ட இலக்கங்கள் abstractions. நாம் 'எட்டாம் நம்பர் ஜெயிடுச்

சுடுச்சு' என்று சொல்லும்போது அந்த எண்ணிக்கை கொண்ட குதிரையைக் குறிக்கப் பயன்படுத்துகிறோம். இவ்வகையில் அவை குறியீடுகள். நாம் பத்து வரைதான் எண்ணுவதற்குக் காரணம் நமக்கு பத்து விரல்கள் இருப்பதால். (ஒரு கம்ப்யூட்டருக்கு இரண்டே இலக்கங்கள்தான்). இருந்தும் எண்களில் என்னவோ ஒரு விசித்திரம், மாஜிக் இருப்பதை மனிதனால் அவ்வப்போது கண்டுபிடித்து வியப்படைய முடிகிறது.

Fractals என்கிற இயலில் பல ஆச்சரியகரமான உருவங்கள் தோன்றுகின்றன. சாதாரண எண்களுக்கு சில விநோத குணங்கள் உள்ளன. உதாரணமாக, 28 என்கிற எண் அதை வகுக்கும் எண்களான (Factors) 14, 7, 4, 2, 1 இவைகளின் கூட்டுத்தொகை. அதுபோல் 6 (3 2 1) இவ்வகை எண்களை ஆதர்ச (Perfect) எண்கள் என்றார்கள். இந்த வகை எண்களுக்குக் கடவுள் தன்மை இருப்பதாக எண்ணினார்கள். கெப்ளர் கடவுளை ஒரு ஜியோமெட்ரி நிபுணர் என்றார். அசைரியர்களும் பாபிலோனியர்களும் வானத்து கிரகங்களுக்கு எண் குணங்கள் அளித்தார்கள். புராதன நம்பிக்கைகள் பலவற்றில் *1* என்ற எண் முக்கியமானதாக இருந்தது. ஹீப்ருக்கள் *40*–ஐ பெரிசாகச் சொன்னார்கள். புனித அகஸ்டைன், பைபிளில் எண்களின் பங்கை விவரமாக அலசியிருக்கிறார். எண்களுக்கு மனித மனத்திற்கு அப்பாற்பட்ட குணங்கள் ஏற்கெனவே இருக்கின்றனவா என்று யோசித்தார்கள். உதாரணமாக 1x1x1 என்பது 1; 2 x 2 x 2 என்பது *8*; 3 x 3 x 3 என்பது 27. இவைகளைக் கூட்டினால் 36. இதன் வர்க்கமூலம் 6. 1 + 2 + 3 இவைகளின் கூட்டுத் தொகை!

இந்த விநோத எண்குணம் நாம் இதைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே இருந்ததா? இருந்தால் எங்கே, எந்த மனதில் இருந்தது போன்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன.

ஒரு காலகட்டத்தில் கணிதம் கடவுள் ஸ்தானத்தை ஏற்க இருந்தது. இதை கெடல் (Godel) என்பவர் கெடுத்துத் தொலைத்தார். அதற்கு முன்னரே கிரேக்கர்களுக்குப் பெருத்த ஏமாற்றங்கள் சில எண் கணிதத்தில் நேர்ந்தன. வட்டத்தின் சுற்றளவை அதன் விட்டத்தால் வகுத்தால் வரும் எண் 'பை'. அதை அவர்கள் என்னதான் முனைந்தாலும் எண்ணாக எழுத முடியவில்லை. கணக்கிடக் கணக்கிட அனுமார் வால் போல் நீண்டுகொண்டே போகிறது. அதே போல் ஒரு சதுரத்தின் பக்கம் *1* என்று இருக்கும்போது பித்தகோரஸ் தேற்றத்தின்படி அதன் விட்டம் (டயாகனல்) *2*–ன் வர்க்கமூலம். இதையும் எண்ணால் எழுத முடியவில்லை.

5

சென்ற கட்டுரையில் சொன்னவாறு கர்ட் கெடல் (Kurt Godel) என்னும் ஆஸ்திரியா தேசத்து கணித, தர்க்கவியலாளர் 1931–ஆம் ஆண்டு ஓர் உண்மையை நிரூபித்தார். கணிதவியலில் சில கூற்றுகளை எந்த விதத்திலும் உண்மையென்றோ பொய்யென்றோ நிரூபிக்க முடியாது. ஓர் உதாரணமாக 'தம்பு' என்று ஒரு கம்ப்யூட்டர் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். திறமையாக வடிவமைக்கப் பட்டது. அதனிடம் தர்க்கவாதத்தையோ கணிதவியலையோ சார்ந்த எந்தக் கூற்றைக் (Statement) கொடுத்தாலும் அதை அலசிப் பார்த்து உண்மையா பொய்யா என்று தவறாமல் சொல்லிவிடும். இது சாத்தியமே. அதனால் இந்த விஷயத்தில அது தப்பே செய்யாது என்பது ஓர் உண்மை. அதனிடம் ஓர் எளிய கூற்று கொடுக்கப்பட்டு அது உண்மையா பொய்யா எனக் கேட்கப்படுகிறது. அது "தம்பு என்னும் கம்ப்யூட்டரால் இந்தக் கூற்று உண்மை என்று நிரூபிக்க இயலாது" என்பதே. இதை கம்ப்யூட்டர் அலசி அது உண்மைதான் என்று தீர்மானித்தால் கம்ப்யூட்டரால் அதைக் கண்டுபிடிக்க முடியாது என்பது பொய்யாகிறது. காரணம் கம்ப்யூட்டர் அதை அப்போதுதான் சாதித்திருக்கிறது. கூற்று பொய்யாக்கப்பட்டால் அது உண்மையல்ல. இதனால் கேள்விக்கு 'உண்மைதான்' என்று பதிலளிக்க முடியாது. கூற்று உண்மையாக இருந்தாலும் அதை உண்மை என்று தம்புவால் முடிவெடுக்கவே முடியாது. இதைத் தலைமுடி அதிகம் இருப்பவர்கள் நிதானமாக யோசித்துப் பாருங்கள் புரியும்.

கெடலின் சித்தாந்தப்படி இவ்வகையிலான, உண்மை என்றோ பொய் என்றோ நிட்டவட்டமாக நிரூபிக்க இயலாத கூற்றுக்கள் பல உள்ளன. கணிதவியலிலும் தர்க்கவியலிலும் இந்தக் குறைபாடு ஒரு பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியது. கடவுளை அதன்மூலம் காணலாம் என்னும் நம்பிக்கைகள் கவிழ்ந்தன.

கடவுள் தேவைதானா என்று ஒரு சாரார் கேட்கிறார்கள். இந்தக் கேள்வியின் அதாரம் என்ன? பிரபஞ்சத்துக்கு ஒரு விளக்கம் இருக்கிறது. அதனால் சுயமாகத் தன்னையே விளக்கிக்கொள்ள இயலவில்லை. பிரபஞ்சத்திற்கு வெளிப்பட்ட, அப்பாற்பட்ட ஒன்றால்தான் அதை விளக்க வேண்டும். அதைக் கடவுள் என்று சொல்லலாம் என்றால்

கடவுளை விளக்குவது எது என்கிற சங்கடமான கேள்வியிலிருந்து தப்பிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரே வழி எப்படியோ கடவுள் தன்னைத் தானே விளக்கிக் கொள்ள முடியும் என்பதே. பிரபஞ்சத்தை விளக்க கடவுள் என்பவரின் தேவை யதேச்சையானது (Contingent) என்றால் இந்த வாதச் சங்கிலி முடிந்துபோவதில்லை. கடவுளுடைய இருப்பையும் இயற்கையையும் நீர்மானிக்கும் விஷயங்கள் உள்ளன என்று ஆகிறது. அவைகள் கடவுளுக்கு அப்பாற்பட்டவையா அல்லது கடவுள் தன் காரணத்தையும் தனக்குள்ளேயே அடக்கி வைத்திருக்கிறாரா? இதை நம்மால் எண்ணிப் பார்க்க முடிகிறதா?

'பரந்த தெய்வமும் பல் உலகும்
படைத்து அன்று உடனே விழுங்கி
கரந்து உமிழ்ந்து கடந்து
இடந்தது கண்டும் தெளிய கில்லீர்

– என்னும் நம்மாழ்வாரைப் போல அத்தனை நிச்சயமாக சொல்ல முடியாமல் தவிக்கிறார்கள் விஞ்ஞானிகள். கடவுள் அவசியமானவர், கடவுள் யதேச்சையானவர். இரண்டிற்கும் சன்னமான வேறுபாடு உண்டு. ப்ளேட்டோ இதனால் இரண்டு கடவுள்களை சிருஷ்டித்து 'டெமி அர்ஜ்' என்றார்.

நவீன சிந்தனையாளர்கள் Process theology என்கிற புதிய திசையில் சிந்திக்கிறார்கள். இதன்படி பிரபஞ்சம் நிகழ்பொருள்களும் சம்பவங்களும் மட்டும் அல்ல. ஒரு திசையில் செல்லும் நிகழ்வு என்கிறார்கள். இருப்பதைவிட (being) ஆவது (becoming) முக்கியம் என்கிறார்கள். நியூட்டனின் இயந்திர உலகைவிட எதிர்காலத்தில் நிகழ்வது நிகழ் காலத்தில் நீர்மானிக்கப்படாத உலகை அவர்கள் சொல்கிறார்கள். சாத்தியக்கூறுகள் பல இருக்கின்றன. இயற்கை அவைகளில் தேர்ந்தெடுக்கிறது. ஒரு மலையோ, மனிதனோ, மேகமோ வெறும் அணுத்துகள்களின் கூட்டமைப்பு என்று சொன்னால் போதாது, இவை அனைத்தும் சூழ்நிலையைச் சார்ந்த நிறந்த அமைப்புகள் (open systems) என்கிறார்கள்.

மனிதன் என்பவன் ஆதாரமாக அணுக்கூட்டங்கள் மட்டும் அல்ல. அவன் ஒரு தகப்பன், ஒரு தலைவன், ஒரு தச்சன், கொலைகாரன், கவிஞன் என்று பலவித அடையாளங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப உள்ளன. இதனால் அணுத்துகள்களிலிருந்து மனிதனை மேல் நோக்கி சிந்திப்பதற்கு பதிலாக மனிதனிலிருந்து அணுத்துகளுக்கு செல்லும் டாப் டௌன் (Top down) அணுகுமுறை க்வாண்டம் இயற்பியல் வந்ததும் வலுப்பெற்றது. நாம் எல்லோரும் 'லாப்லஸ்' சொன்னது போல வெறும் இயற்பியல் விதிகளுக்குப் படியும் இயந்திரங்கள் அல்ல. நம் சூழ்நிலையும் நம் அடுத்த கணத்தை எதிர்பாராத விதத்தில் பாதிக்கிறது. முழு உலகம் ஒன்றுடன் ஒன்று சார்ந்த கூட்டமைப்பு. சுற்றி உள்ள மற்ற உயிர்கள் நிடப் பொருள்கள் சார்ந்த கூட்டமைப்பு என்று எண்ணுகிறார்கள். கேயாஸ் தியரி

(Chaos theory), நான்லீனியர் சிஸ்டம்ஸ் (Non-linear systems) போன்றவை அண்மைக் காலத்தில் விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்க்கின்றன.

ஆல்ஃப்ரெட் நார்த் வைட்ஹெட் – (Alfred North Whitehead) என்னும் கணிதவியல் தத்துவஞானி கடவுள் என்பவரின் பொறுப்பு உலகை ஒழுங்குபடுத்துவது. அதுவும் நேரடியாக இல்லாமல் பல சாத்தியக்கூறுகளை அமைத்துக் கொடுப்பதன் மூலம் என்கிறார். அவைகளில் ஒன்றைப் பிரபஞ்சம் இயற்பியல் விதிகளின்படி செயல் படுத்துகிறது என்றார். இந்த விதத்தில் கடவுளுக்கு அன்றாடப் பொறுப்புகள் இல்லை. அவருடைய சிருஷ்டி நல்லதை நோக்கிச் செல்ல வேண்டும் என்கிற ஒரே குறிக்கோள் மட்டும் அவருடைய தீர்மானமாக இருந்திருக்கலாம். இதுகூட ஒரு யூகம்தான். மனித உயிர் இவ்வளவு சிறப்பாக பரிணமித்து வந்திருப்பதைப் பார்க்கும்போது இது உண்மையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. நல்லது நடந்திருக்கிறது. பிரபஞ்சம் மெல்ல மெல்ல தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது என்றார். கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தவர் மட்டும் இல்லை. அதன் இயக்கத்திலும் முன்னேற்றத்திலும் பங்கு கொள்பவர் என்கிற சித்தாந்தத்தை முன்வைக்கிறார் வைட்ஹெட். கடவுள் எல்லாம் தெரிந்தவர், என்றில்லாமல் பிரபஞ்சத்தின் மாறுதல்களை உண்டாக்கி அவைகளைப் பாதிக்கிறவர், அவைகளால் பாதிக்கப்படுபவர் என்கிறார்.

கடவுள் அவசியமானவர், கடவுள் யதேச்சையானவர் – இவ்விரண்டு கருத்துக்களையும் உள்ளடக்கிய டை–போலார் (Di polar) இரு துருவக் கடவுளையும் சிலர் பேசுகிறார்கள். கித்வார்டு என்பவர் கடவுளின் சில பகுதிகள் அவசியம், சில பகுதிகள் யதேச்சை என்கிறார்.

இது ஓர் ஆறுதல் வார்த்தை என்றால் இதையெல்லாம் படித்ததில் உங்களுடன் நானும் குழம்பித்தான் போகிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். க்வாண்டம் இயற்பியலால்தான் அந்த மாதிரியான டை–போலார் சித்தாந்தங்களைக் கற்பனை செய்ய முடியும் என்று தோன்றுகிறது. அதன்படி கடவுளை அறிய முயலும் முயற்சியே கடவுளின் இயற்கையை மாற்றிவிடுகிறது. அதனால் கடவுளைப் பற்றிய முழு உண்மையை மனித மனத்தால் அறியவே முடியாது என்று தோன்றுகிறது. காரணம் மனிதனுக்கு எல்லைகள் உள்ளன. அவைகளை மனிதன் மெல்ல மெல்ல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் விஸ்தரித்தாலும் கண்ணால் பார்க்கக்கூடியவை ஒரு அலை அகலம் மட்டுமே. காதால் கேட்கக்கூடியவை சில ஒலிகள் மட்டுமே. மனதால் எண்ணக்கூடியவை மொழியின் வார்த்தைகளின் இலக்கணத்தின் எல்லைகளுக்கு உட்பட்டவை மட்டுமே.

கடவுளே பார்க்காத காட்சியாக, கேட்காத கானமாக, புரியாத வார்த்தையாக இருக்கலாமல்லவா?

Douglas Adams ஒரு பிரிட்டிஷ் சைன்ஸ் பிக்ஷன் எழுத்தாளர், தமாஷான விஞ்ஞானக் கதைகள் எழுதுவார். அவருடைய *The Hitchhiker's Guide to the Galaxy* என்கிற நாவலில் பிரபஞ்சமெங்கும்

பரவிய ஒரு ராட்சத கம்ப்யூட்டரை தீவிரமாக புரொக்ராம் பண்ணி ஒரு கேள்வி கேட்கிறார்கள், பிரபஞ்சத்தின் ரகசியம் என்ன என்று.

அந்த கம்ப்யூட்டர் நாற்பது வருஷமோ என்னவோ ராப்பகலாக கணக்கிடுகிறது. விஞ்ஞானிகள் ஆவலுடன் காத்திருக்க கடைசியில் விடை தெரிந்துவிட்டது என்கிறது. மூச்சைப் பிடித்துக்கொண்டு அந்த விடை திரையில் வரக் காத்திருக்கிறார்கள். வருகிறது.

என்ன விடை?

தி ஆன்ஸர் இஸ் 43.

இந்த அபாரமான கற்பனைக் கதையை ஞாபகத்திலிருந்துதான் சொல்லியிருக்கிறேன். அதனால் சில பிழைகள் இருக்கலாம். உள்ளர்த்தம் இதுதான். பிரபஞ்சத்தின் ரகசியத்தை நாம் அறிந்தாலும் அது நமக்குப் புரியாது. அதற்கான தகுதியை நம் புரிதலின் எல்லைகள் தடுத்துவிடலாம் என்பதே.

அவரவர் தமதமது அறிவறிவகைவகை
அவரவர் இறையவர் என்அடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே

– என்கிற திருவாய்மொழி இந்தத் தேடலுக்கு வெகு அருகில் வருகிறது. அவரவர் தங்கள் தங்கள் அறிவு அறியும் வகையில் கடவுளைக் காண்கிறார்கள். இதில் எதுவும் தப்பவில்லை. அவரவர் விதிகளின்படி அடைய முடியும் என்று அர்த்தம் கொள்ளும்போது இயற்பியல் விஞ்ஞானிகளையும் கடவுளை அறிய முயற்சிப்பவர்கள் பட்டியலில் சேர்க்க முடிகிறது. கடவுள் தேவையில்லை என்று சொல்பவரையும் 'உளன் எனில் உளன். உளன் அலன் எனின் அலன்' என்று சேர்த்துச் சொல்கிறார். இவர்கள் எல்லாருமே 'அத்ருஸ்யோ வியக்த ரூபஸ்ச' என்று சகஸ்ரநாமத்தில் சொல்லும் ஒருவரை/ஒன்றைத் தேடி அலைகிறார்கள்.

டக்ளஸ் ஆடம்ஸ்ஸின் கம்ப்யூட்டர், கற்பனைதான். ஆனால், கடவுளே ஒரு விதமான பிரபஞ்ச கம்ப்யூட்டரா என்றும் சிலர் வியந்திருக்கிறார்கள்.

6

ஜேம்ஸ் ஜீன்ஸ் என்னும் வானவியலாளர் ஒருமுறை கடவுள் ஒரு கணித மேதை என்றார். பிரபஞ்சத்தின் அமைப்பைக் கணித வடிவில் காட்ட முடியும் என்கிற நம்பிக்கைதான் அவர் சொன்னதன் அடிப்படை.

இந்தக் கருத்து புராதனமானது. கிரேக்க சிந்தனையாளர்கள், கலிலியோ, நியூட்டன், டெஸ்கார்ட்டஸ் எல்லாரும் இதை நம்பினார்கள். "இயற்கையின் புத்தகம் கணித மொழியில் எழுதப்பட்டிருக்கிறது." என்றார் கலிலியோ. இது ஏன் என்பது மிகப் பெரிய மர்மமாக இருக்கிறது. கண்டுபிடிக்க வேண்டியது ஏதோ பாக்கியிருப்பதுபோலத் தோன்றுகிறது. இயற்கையின் எல்லா விளைவுகளையும் கணித சமன்பாடுகளால் இன்று வரை விவரிக்க இயலுவதே அவர்களுக்கு வியப்பாக இருக்கிறது. இது பற்றிய அபிப்பிராயங்கள் விஞ்ஞானிகளிடம் வேறுபடுகின்றன. மனிதன் கண்டுபிடித்த சாகசம்தான் கணிதம் என்று சிலர் சொல்கிறார்கள். வேறு சிலர் இயற்கையின் கணித வடிவில் ஓர் ஆழ்ந்த உண்மை ஒளிந்துகொண்டிருக்கிறது என்கிறார்கள்.

கணிதம் மனிதன் தோன்றுவதற்கு முன்பே இருந்ததா என்கிற கேள்வியைப் பற்றி முன்பு கொஞ்சம் பேசினோம். உதாரணமாக, வகுபடா எண்கள் (Prime numbers) பற்றி நமக்குத் தெரியும். 7, 13, 17 போன்றவை உதாரணங்கள். அவைகளை 1–ஐயும் தம்மையுமே தவிர வேறு எந்த எண்ணாலும் வகுக்க முடியாது.

"இருபதுக்கு அப்புறம் உள்ள முதல் வகுபடா எண் 23." இந்தக் கணித உண்மை நாம் ப்ரைம் நம்பர்களைக் கண்டுபிடிப்பதன் முன்பே உண்மையாக இருந்ததா? இதுதான் ஆதாரமான கேள்வி. யதார்த்தவாதிகள் இந்தக் கேள்வி அர்த்தமற்றது என்று தள்ளி விட்டார்கள்.

ரோஜர் பென்ரோஸ் (Roger Penrose) ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழக கணிதப் பேராசிரியர், வேறுவிதமாக சிந்திக்கிறார். "இந்தக் கணிதக் கோட்பாடுகளில் ஓர் ஆழமான உண்மை இருப்பதாகத் தெரிகிறது. மனித சிந்தனையை ஏதோ ஒரு புற உண்மையை நோக்கி அழைத்துச் செல்வதாகவே அவை தோன்றுகின்றன. அந்த உண்மைக்கு ஒரு தனித்தன்மை இருக்கிறது. அது நமக்கு அறைகுறை

யாகத்தான் காண்பிக்கப்படுகிறது" என்றார். பென்ரோஸ் சிறந்த சிந்தனையாளர். அவர்தான் ஸ்டீஃபன் ஹாக்கிங்குடன் இணைந்து, பிரபஞ்சம் ஆரம்பமான ஒருமித்த கணத்தைச் சிந்தித்தவர். அவரை வியப்படைய வைப்பது மேண்டல்ப்ராட் என்னும் ஐபிஎம் விஞ்ஞானி கண்டுபிடித்த Fractals என்னும் வினோதமான விஷயம். இதற்கும் கேயாஸ் என்னும் குழப்பத் தத்துவத்துக்கும் சம்பந்தம் உண்டு.

மேண்டல்ப்ராட் செட் (Mandelbrot set) என்பது ஓர் எளிய கணித சமன்பாட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வினோத வடிவங்களின் தொகுப்பு.

உங்களுக்கு கணிதவியலில் காம்ப்ளெக்ஸ் எண்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்திருந்தால் அடுத்த பாராவைப் படியுங்கள். மற்றவர்கள் பாராவைத் தாண்டிவிடலாம்.

$Z - Z^2 + C$ என்கிற சமன்பாட்டில் Z.C, Complex numbers, C மாறாதது. இந்த எளிய முறையை வைத்துக்கொண்டு þஎன்பதற்கு பல மதிப்புகள் கொடுத்து கணக்கிட்டால் வருவதை ஒரு கணிப்பொறியின் திரையில் புள்ளிகளாக வைக்கலாம். அவைகளை இணைக்கும் கோலங்கள் பிரமிக்க வைக்கும் வடிவங்கள் பெறுகின்றன. இதன் அழகை வார்த்தைகளால் விவரிப்பது கடினம்.

உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கிலா
அகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

– என்று கம்பர் சொல்லும் "அலகிலா விளையாட்டு" ஃப்ராக்டல்ஸில் இருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது.

பென்ரோஸ் இந்த வினோதத்தை, வடிவங்களின் விஸ்தாரத்தை முதலில் மேண்டல்ப்ராட் அறிந்திருக்க மாட்டார் என்று எண்ணுகிறார். இந்தத் தொகுப்பை முழுவதும் நம்மால் அறியவே முடியாது. அவ்வளவு வினோத வடிவங்கள் எழுகின்றன. "எனக்கென்னவோ இது நம் மனித மனத்தின் அங்கமல்ல என்று தோன்றுகிறது. கம்ப்யூட்டரை வைத்து அவைகளை வரைய முடியுமே தவிர அதன் புதுப்புது வடிவ எல்லையைக் காணவே முடியாது. அது நிச்சயம் மனித மனத்தின் கண்டுபிடிப்பல்ல. மனதுக்குத் தெரிய வந்தது" (Not invented but discovered) என்கிறார். மார்ட்டின் கார்ட்னரும் இதை ஆமோதிக்கிறார். "கணித உண்மைகள் முன்பே இருந்தன எவரெஸ்ட் மலைபோல. நாம் அவைகளை மெல்ல மெல்ல அறிந்துகொண்டு வருகிறோம்."

இவைகள் ஒருவேளை கடவுளின் செயல்களோ அல்லது இவைகள் தான் கடவுளோ என்று தோன்றுகிறது அவர்களுக்கு.

படைப்பாளிகளுக்கும் இந்த மாதிரி உணர்வு வரும். ஒரு சித்திரக் காரரோ, இசைக் கலைஞரோ தம்முடைய சிறந்த படைப்புகளை

மனித மனதுக்கு வெளிப்பட்ட உண்மைகளோடு ஏற்படும் பரிச்சயம் என்று எண்ணுகிறார்கள்.

ரூடி ரக்கர் என்பவர் "மனவெளி (Mindscape) என்று ஒன்று இருக்கிறது. அங்கே கணித உண்மைகள் வசிக்கின்றன. அவைகளை நாம் ஒவ்வொன்றாகக் கண்டறிகிறோம்" என்கிறார்.

சில சமயம் இம்மாதிரியான உண்மைகளின் தரிசனம் சட்டென்று சற்றும் எதிர்பாராமல் நிகழ்கின்றன. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

கார்ல் காஸ் (Carl Gauss) என்னும் விஞ்ஞானிக்கு ஒரு முக்கியமான கணக்கு விடை கிடைக்காமல் மாதக்கணக்காகத் தவிக்க வைத்தது. ஒரு நாள் சட்டென்று மின்னலடித்தாற்போல விடை கிடைத்தது என்று எழுதியிருக்கிறார். காஸ் ஒரு இளம் மேதை. ஹென்றி பாயின்கேரே (Henri Poincere) என்பவரும் இம்மாதிரியான அவஸ்தைக்கு உள்ளாகி சட்டென்று ஒரு நாள் பஸ் ஏறக் கால் வைத்தபோது விடை கிடைத்தது என்கிறார்.

ஸ்ரீனிவாச ராமானுஜன் சில கணக்குகளுக்கு விடைகள் கனவில் கிடைத்ததாகச் சொல்லியிருக்கிறார். ராமானுஜன் ஓர் உன்னத உதாரணம். ஏழைக் குடும்பத்தில் பிறந்து கணிதவியலை சம்பிரதாய முறையில் கற்றுக்கொள்ளாமல் சுயமாகப் படித்துத் தெரிந்துகொண்டு மேற்கத்திய அணுகலிலிருந்து முழுவதும் மாறுபட்ட முறையில் கணிதத்தை அணுகி பல தேற்றங்களை நிரூபணம் இல்லாமலேயே குறிப்பெழுதி வைத்தார். அவைகளைத் தற்செயலாக அறிய வந்த ஹார்டி "என் வாழ்நாளில் இது மாதிரியான தேற்றங்களை இதுவரை பார்த்ததில்லை. ஒருமுறை பார்த்தாலே அவை கணிதமேதையால் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது" என்றார்.

ராமானுஜனின் தேற்றங்களை மிக சிக்கலான மேற்கத்திய முறைகளைப் பயன்படுத்தி ஹார்டி நிரூபித்தார். பல இன்னும் நிரூபிக்கப்படாமல் குறிப்புகளாகவே இருக்கின்றன. இவைகளை ராமானுஜன் கற்பனை பண்ணி எழுதியிருக்க முடியாது என்றார் ஹார்டி. ராமானுஜனை கேம்ப்ரிட்ஜுக்கு அழைத்து வைத்துக் கொண்டாடினார். ராமானுஜன் முப்பத்து மூன்று வயதில் இறந்து விட்டார். இதுவரை ராமானுஜனுக்கு எப்படி அந்த சக்தி வந்தது என்ற சரியான விளக்கமில்லை. அவருடைய மூளையிலிருந்து அவை ஒரு நதிப் பிரவாகம்போல வெளிப்பட்டிருக்கின்றன. ராமானுஜனுக்கு மனவெளியுடன் தொடர்பு இருந்திருக்கிறதா?

பங்களூரைச் சேர்ந்த சகுந்தலா தேவி ஒருமுறை டெக்ஸஸ் மாகாணத்தில் ஒரு இருநூறு இலக்க எண்ணுக்கு இருபத்து மூன்றாம் வர்க்கமூலத்தை அம்பது செகண்டுகளில் சொன்னாராம். இதைவிட வினோதங்களும் இருக்கின்றன. மனநலம் பாதிக்கப்பட்ட இரண்டு அமெரிக்க சகோதரர்கள் ஒரு கணிப்பொறியைவிட வேகமாக ஒரு எண் ப்ரைம் வகுபடா எண்ணா என்று கண்டுபிடிக்கிறார்களாம்.

இதுபோல் எந்த நூற்றாண்டில் எந்தத் தேதியைக் கொடுத்தாலும் உடனே என்ன கிழமை என்று சொல்பவர்களை டி.வி.யில் பார்க்கிறோம். இவர்கள் எல்லாம் மனவெளியுடன் நேரடித் தொடர்பு கொள்கிறார்களா? இந்த மனவெளிதான் கடவுளா? என்பதை அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.

7

மனவெளி 'மைண்ட்ஸ்கேப்' என்பது மனித மனத்துக்கு அப்பாலிருக்கிறது என்பதை அறிய முடியவில்லை. சென்ற பகுதியில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் அபார கணிதத் திறமைகள் வாய்த்தன. அது அவர்களுடைய ஜீன் என்னும் மரபணுவில் இருந்திருக்கிறதா, இத்திறமை எல்லோரிடமும் பொதிந்திருந்து சிலருக்கு மட்டும் ஸ்விட்ச் போட்டது போல பிராப்தமாகிறதா, உயிர்ப்பிக்கப் படுகிறதா, இவ்வாறெல்லாம் வியப்படைகிறார்கள். சாதாரணமாக நம்மால் மூன்று அடியோ நான்கு அடியோதான் ஹைஜம்ப் தாண்ட முடியும். நிடூர் என்று ஒருவர் வந்து அறுபதடி உயரம் தாண்டினால் எத்தனை வியப்பைத் தரும்! அதுபோல்தான் கணித மேதைகளின் திறமையும். சாதாரண மனிதர்களின் திறமையைவிடப் பன்மடங்கு பெரிதானது. ஒவ்வொரு தலைமுறையிலும் மேதைகள் அவ்வப்போது தோன்றுகிறார்கள்.

இதனால் மேதைமை நம் ஜீன் பூல் (gene pool) என்னும் மரபணுக் குளத்தில் இருக்கலாம் என்று நம்பத் தோன்றுகிறது. இத்திறமை சூழ்நிலையால் உருவாகிறது என்று சொல்ல இயலவில்லை. (ஸ்ரீனிவாச ராமானுஜன் உதாரணம்) மனித சாத்திரம் ஒரு மனித மனப் பயிற்சி என்றால் அது புற உலகின் எல்லாச் செயல்பாடுகளையும் விவரிக்கப் பயன்படுவது விந்தையிலும் விந்தை. நாம் உயிர்வாழ கணிதத் திறமை தேவையில்லை. யாராவது கல்லெறிந்தால் நியூட்டனின் விதிகளின்படி கணக்கிட்டா எறிகிறோம்? பறவைகளின் பறக்கும் திறமையில் மிகச் சிக்கலான ஏரோடைனமிக்ஸ் விதிகள் உள்ளன. ஒரு வௌவால் இருட்டில் மோதிக்கொள்ளாமல் பறக்கும் திறமையில் டி.எஸ்.பி (DSP) என்கிற சிக்கலான கணிதம் இருக்கிறது. கழுகுக்கோ வௌவாலுக்கோ இயற்பியல் அறிவு உள்ளுணர்வில் பொதிந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா? இருந்தும் பிரபஞ்சத்தின் எல்லா உயிர்களின் அத்தனை இயக்கங்களையும் கணித சமன்பாடு களாக எழுத முடிகிறது. நமக்கே தெரியாமல் நாம் இயற்பியல், வேதியியல் விதிகளின்படிதான் இயங்குகிறோம். இந்த விடுகதைதான் இன்னும் விடை கிடைக்காமல் இருக்கிறது.

இயற்கை விதிகளின் உள்ளுணர்வு (Awareness) உயிர் பிழைப்பதற்குத் தேவையானது. (உணர்வது வேறு. அறிவது வேறு.) இயற்கை விதிகளை

அறிய கணிதம் பயன்படுகிறது. கணிதத் திறமை என்பது மனப் பயிற்சி. மனம் மனிதனுக்குத் தனிப்பட்டது. நம் மூளையின் நியூரான் இணைப்புகளின் சிக்கலில் கணிதத் திறமை பொதிந்திருக்கிறது. மனித மூளை உருவாக்கும் விதிகளுக்கும் பௌதிக விதிகளுக்கும் நேரடியான தொடர்பு இல்லை. மூளை ஜெனட்டிக் விதிகளின்படி வளர்கிறது. இயற்பியல் விதிகளின் நேர்வாரிசு என்று அதைச் சொல்ல முடியாது.

மிகமிக ஆதாரமாகப் பார்த்தால்தான் ஆர்கானிக் கெமிஸ்ட்ரி, பையோகெமிஸ்ட்ரி, பையோஃபிஸிக்ஸ் போன்றவைகளால் பெரும் பாடுபட்டு விவரிக்க முடியும். இப்படி ஏற்படும் நியூரான் இணைப்பு களால் உணரப்படுவது கணித சாத்திரம். இதன் விதிகள் மனித மனத்துக்கு எந்தத் தேவையுமில்லாத பிரபஞ்சத்தின் இயக்கத்தை வருணிக்கின்றன. எங்கேயோ உதைக்கிறது. மனித மனம் பிரபஞ்சத்தை அறிந்துகொள்ள ஏற்பட்ட ஒரே ஒரு தன்னுணர்வா? மனித மனமும் பிரபஞ்சத்தின் மனமும் ஒன்றா? கிணற்றில் நீரிறைப்பதோ, மழை பெய்வதோ, வாகனங்கள் இயங்குவதோ, ஏரோப்ளேன் பறப்பதோ போன்ற அன்றாடச் செயல்களை இயக்கும் அதே விதிகள் பிரபஞ்சம் முழுவதும் செல்லுபடியாவதாகத் தெரிகிறது. ஒரு நட்சத்திம் நம்மை விட்டு விலகும் வேகத்தின் Red shift நம் ஆராய்ச்சி சாலைகளிலும் கவனிக்க முடிகிறது.

ஸ்டீபன் ஹாக்கிங் பங்குபெற்ற ஒரு விரிவுரையின்போது ஒரு பெண்மணி எழுந்து 'நீங்கள் சொல்வதெல்லாம் தப்பு. பூமியை ஒரு பெரிய ஆமை தாங்குகிறது' என்றாராம். 'மேடம் அந்த ஆமையை எது தாங்குகிறது?' என்று கேட்டதற்கு பெண்மணி 'கடைசி வரை ஆமைதான்' என்று பதிலளித்தாராம். இந்தச் சம்பவம் நம் சங்கடத்தை எடுத்துக்காட்டுகிறது. உலகம் எப்படி வந்தது என்று அறிய விரும்பு கிறோம். சில விதிகள் தென்படுகின்றன. இந்த விதிகள் எப்படி வந்தன என்று ஆராய்கிறோம். மற்றொரு செட் விதிகள் வருகின்றன. இப்படி முடிவில்லாமல் ஒன்றுக்குள் ஒன்றாத இருக்கும் பெட்டிகள் போலச் செல்கிறது. கட்டக் கடைசியில் ஒரு சிருஷ்டிகர்த்தா தேவைப்படுகிறது. ஆமைமேல் ஆமைமேல் ஆமைமேல். இதில் கடைசி ஆமை காரணம் தேவையில்லாமல் தன்னைத் தானே உண்டாக்கிக்கொள்ள முடியுமா?

க்வாண்டம் இயற்பியலின்படி பார்வையாளர் பங்கீடு இயற்பிய லுக்கு வேண்டும். பார்ப்பதினால் சில தகவல்கள் தெரிய வருகின்றன. அதிலிருந்து சில விதிகள் உருவாகின்றன. அந்த விதிகளில் ஒன்று பார்வையாளர் பங்கீடு இயற்பியலுக்கு வேண்டும் என்பது! 'மரத்தை மறைத்தது மாமத யானை மரத்தில் மறைந்தது மாமத யாணை' எல்லாமே மனிதன் தோன்றி மனம் விரிவடைந்து அதன் சிந்தனையி னால் பிரபஞ்சத்திற்கு விளக்கம் தேடுவதால் வருகிறது. விளக்கம் தேடித்தான் ஆக வேண்டுமா? கணிதம் போன்ற நுட்பமான சாத்திரங்

களைப் பயன்படுத்தி உண்மையைத் தேடும்போது முழுமையாக நமக்கு வடிவம் கிடைப்பதில்லை. காரணம் கெடல் (Godel) சித்தாந்தத்தின்படி கணிதமே குறைபட்டது. சில கூற்றுக்களை உண்மையென்றோ பொய் என்றோ நிரூபிக்க இயலாது. கணிதத்தினால் முழு உண்மையை அறியவே முடியாது. எனவே மனத்தால் அறிய இயலாத உண்மைகள் இருக்கலாம். அறிவதையும் – விளக்கத்தையும் நாம் தனிப்படுத்த வேண்டியிருக்கிறது. விளக்கம் முழுமை பெறாமல் இருக்கலாம். ஆனால், அறிந்துகொள்வது உணர்வது சாத்தியமாக இருக்கலாம் என்கிறார்கள்.

இதை Mystical Knowledge என்கிறார்கள். விளக்கமில்லாமல் உணர்ந்து கொள்வது. இது ஏதும் மாய மந்திரம், ஆவி சமாசாரம் இல்லை. மிகச் சிறந்த சிந்தனையாளர்களான ஐன்ஸ்டைன், பாலி, ஹைஸன்பர்க், ஷ்ரோடிங்கர், எடிங்டன், ஜீன்ஸ் எல்லோரும் உணர்வு பூர்வமாக உண்மை அறிதலைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்வதன் சாரம் இது – விஞ்ஞானத்தால் ஓரளவுக்கு விளக்கங்களைச் சொல்ல முடியும். கடைசி கடைசி கேள்வியான பிரபஞ்சத்தைப் படைத்தது யார் என்பதுவரை. 'எப்படி' என்பதை விஞ்ஞானத்தால் விளக்க முடியும். 'ஏன்' வரும்போது அறிவியலும் தர்க்க சாத்திரமும் கணித சாத்திரமும் தோற்றுப்போகின்றன. விஞ்ஞானத்தால் ஏன் என்பதை விளக்க இயலாது. இதுதான் அவர்களின் முடிவு. ஆதலால் வேறுவிதமாகத்தான் உண்மையை உணர முடியும். அதை சிலர் மனதின் உள்ளே ஏற்படும் ஒரு வினோதமான அமைதி என்கிறார்கள். ஐன்ஸ்டைன் அதை Cosmic religious feeling என்கிறார். இந்த ஆன்மிக அனுபவம் ஓர் அற்புதக் கணத்தில் பிரபஞ்சம் முழுவதையுமே கடவுளுடன் சேர்ந்து முழுமையாகப் பார்க்கும் ஓர் அனுபவம் என்கிறார்கள். உண்மையுடன் ஏற்படும் தொடர்பு வார்த்தைகள், கணிதக் குறியீடுகள், பெயர்கள், எண்ணங்கள் போன்ற இடைத்தரகர்கள் எவருமின்றி ஏற்படும் ஒரு தரிசனம். ஜென் பௌத்தம் வேறு வார்த்தையில்லாததால் அதை Suchness என்று குறிப்பிடுகிறது.

ருக் வேதத்தில் பத்தாவது மண்டலம் தொண்ணூறாவது ஸூக்தமாகப் பதினாறு மந்திரங்கள் உள்ளன. அதை புருஷ ஸூக்தம் என்பர். அது சில மாறுதல்களுடன் யஜுர், சாம, அதர்வண வேதங்களிலும் உள்ளது. இதில் புருஷன் என்பவரைப் பற்றிப் பேசுகிறது. நாம் இந்து கடவுள் தத்துவங்களின் ஆதாரம் இதுதான்.

"ஆயிரக்கணக்கான தலைகள் உள்ளவர், ஆயிரக்கணக்கான கண்கள் உள்ளவர். ஆயிரக்கணக்கான பாதங்கள் உள்ளவர். அவர் பூமியெங்கும் வியாபித்தவர். பத்து விரல்களைக் கொண்டு எண்ணும் கணக்கைக் கடந்து நிற்கிறார். எது முன்னிருந்ததோ எது இனி வரப்போவதோ எது இப்போது காணப்படுகிறதோ எல்லாம் பரம புருஷனே. சாகா நிலைக்கு ஈசனாக இருப்பவரும் பரமபுருஷனே. எது அன்னமயமான

இப்பிரஞ்சத்தால் மறைவிலிருந்து வெளிப்படுகிறதோ அதுவும் புருஷனே. இங்கு காணப்படுபவையெல்லாம் அவருடைய மகாத்மியமே. இவையனைத்தைக் காட்டிலும் அப்பரம புருஷனே அதிகமானவர். உண்டானவை அவருடைய கால்பாகம். முக்கால் பாகம் அழிவற்றதாய் பரமபதத்திலிருக்கிறது. இவ்வாறு நம் அங்குலக் கணக்கைக் கடந்த உண்மையை நம் முன்னோர்கள் தேடி விவரிக்க முயன்றிருக்கிறார்கள். நம்மாழ்வார்,

திடவிசம்பு எரி வளி நீர் நிலம்
– இவை மிசை
படர்பொருள் முழுவதுமாய்
அவையவைதொறும்
உடல்மிசை உயிரெனக்
கரந்தெங்கும் பரந்துளன்
சுடர் மிகு சுருதியுள் இவை
உண்ட சுரனே

விண்வெளி, தீ, காற்று, நீர், நிலம் இவைகளை ஆதாரமாகக் கொண்ட பொருள்களில் மறைந்து உள்ளேயும் வெளியேயும் வியாபித்து வேதத்தில் உள்ளவனானான். இவைகளை எல்லாம் உண்டவனும் அவனே.

8

கடவுளைப் பற்றி உபநிஷதுகள் சிந்திக்கின்றன. உப என்றால் அருகில், நி என்றால் கீழே, சத என்றால் உட்கார்வது. அருகே உட்கார்ந்துகொண்டு மாணாக்கர்கள் குருவிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளும் ஞானம் என்று பொருள் சொல்கிறார்கள். வேதங்களிலிருந்து தோன்றிய உபநிஷதுகளின் எண்ணிக்கையை 232, 108, 180 என்று வேறு வேறு கணக்கு சொல்கிறார்கள். ஆனால், பத்து உபநிஷதுகள் முக்கியமானவை. அவை ஈசோ, கேனோ, முண்டக, மாண்டுக்ய, தைத்ரேய, ஐதரேய, சாந்தோக்ய, பிருகதாரண்ய, ப்ரச்ன, கடோபதி நிஷதுகள். இவைகள் சிலவற்றில் இன்றைய விஞ்ஞானிகள் பிரபஞ்சத்தைப் பற்றி கேட்கும் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன.

ஈசோபநிஷது யஜுர்வேதத்தில் உள்ளது. ஈசா வாஸ்யம் இதம் சர்வம் என்று துவங்குகிறது. அனைத்தும் ஈசன் வசிப்பதற்கு! வாஸ்ய என்பதற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. மேலுடை போல அணிவது enveloping அல்லது சூழ்ந்து கொள்வது என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் சொல்கிறார். எல்லாமே ஈசனை அணிந்தது.

கேன என்றால் யாரால் என்பது பொருள். கேனோபநிஷது சாம வேதத்தைச் சேர்ந்தது. அது இப்படித் துவங்குகிறது.

"யாரால் விதிக்கப்பட்டு மனம் அதன் இலக்கை அடைகிறது? யாரால் முதல் பிராணன் அதன் பாதையில் செல்கிறது? யாரால் செலுத்தப்பட்டு வார்த்தை இயங்குகிறது? கேட்பதையும் பார்ப்பதையும் யார் அமைத்தது?" என்று கேட்டுவிட்டு. கேட்பதின் கேட்பது, மனதின் மனது, வார்த்தை கடந்த வார்த்தை, உயிரின் உயிர், பார்வையின் பார்வை இதைத் தெரிந்தவர்கள் சாவதில்லை என்று தொடரும்போது கேட்பது, பார்ப்பது, சிந்திப்பது இவைகளுக்கெல்லாம் அப்பால் உள்ளதை எண்ணத் தூண்டுகிறது.

அங்கு பார்வை செல்வதில்லை. வார்த்தை செல்வதில்லை. மனமும் செல்வதில்லை. அதை எப்படி அறிந்து போதிப்பது எதுவும் நமக்குத் தெரியாது, காரணம் அது தெரிந்ததல்ல தெரியாததுமல்ல. அதற்கும் மேற்பட்டது அப்பாற்பட்டது. வார்த்தைகளால் அறியப் படாதது விவரிக்கப்படாதது. வார்த்தைகளை அறிவது அதுதான்

பிரம்மன். அது மனதால் நினைப்பதில்லை அது மனதை நினைக்கிறது. கண்ணால் பார்ப்பதல்ல பார்வையைப் பார்ப்பது. காதால் கேளாதது கேட்பதைப் கேட்பது. சுவாசத்தைச் செலுத்துவது – இதுதான் பிரம்மம்.

– என்கிறது கேனோபநிஷது. வார்த்தைகளுக்கும் சம்பிதாய எண்ணங்களுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டதை அதே புலன் களைக் கொண்டு அறியும் முயற்சிகள் இவை. ஹைசன்பர்கின் சாயல் இதிலும் தெரிகிறதல்லவா?

கடவுள் என்பதை 'தத்' அது என்ற ஒரே வார்த்தையின் எளிமையின் எளிமையில் அதன் குணாதிசயங்களை யோசித்துப் பார்த்திருக் கிறார்கள்.

உளன் எனில் உளன் அவன்
உருவம் இவ்வுருவுகள்
உளன் அலன் எனில் அவன்
அருவம் இவ்வுருவுகள்
உளன் என இலன் என அவை
குணம் உடைமையில்
உளன் இரு தகைமையோடு
ஒழிவிலன் பரந்தே

– என்கிற நம்மாழ்வார் பாசுரமும் இந்தக் கருத்தை சொல்கிறது. ஈச்வரன் இருக்கிறான் என்று சொன்னாலும் இல்லையென்று சொன்னாலும் இருக்கிறான். உளன், அலன் என்கிற இரண்டு குணங்களையும் உடையவன் என்பதால் உருவமுள்ளது உருவமற்றது எல்லாமே அவனுடைய ஸ்தூல சரீரமும் சூட்சும சரீரமுமாகும். எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் உள்ளவன்.

யானும் தானாய் ஒழிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பிணைத்த தனி முதலை
தேனும் பாலும் கன்னலும்
அமுதம் ஆகித் தித்தித்து என்
ஊனின் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே

வேத உபநிஷதுகளை யாத்த பெரியவர்களும், நம்மாழ்வார் போன்றவர்களும் மிஸ்டிக் என்கிற அனுபவத்தில்தான், உணர்வில்தான் கடவுளைக் காண முயற்சித்தார்கள்.

இந்த மிஸ்டிக் அனுபவம் வாழ்நாளில் கிடைப்பவர்கள் பாக்கியசாலி கள். அவர்களுக்கு அந்த அனுபவத்திற்குப் பிறகு சந்தேகமே எழுவ தில்லை. இதரர் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்கிற சங்கடத்தில் முழு வாழ்நாளையும் செலுத்துகிறார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வில்லியம் பாலே (William Paley) என்கிற மதமவியலாளருக்கு இந்த சந்தேகம் இல்லை. "ஒரு சோலையில் நடக்கும்போது பாதையில் ஒரு கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதை எடுத்துத் திறந்து பார்க்கிறீர்கள். அதன் அமைப்பில் இருக்கும் ஒழுங்கையும் நேர்த்தியையும் கவனிக்கிறீர்கள். அதன் பாகங்கள் அனைத்தும் ஒரு மையக் காரணத்துக்காக ஒத்துழைப்பதையும் காண்கிறீர்கள். இதற்கு முன் நீங்கள் வாழ்நாளில் கடிகாரத்தையே கண்டதில்லை என்றாலும், அது எதற்கு எனத் தெரியாவிட்டாலும் அதை நுட்பமாக கவனிக்கும் போது இது எதற்கோ ஏற்பட்ட ஒரு சாதனம், யாரோ செய்தது என்று முடிவு கட்டுவீர்கள். அதுபோல இயற்கையில் இருக்கும் மிக மிக ஒழுங்கான அமைப்பை நோக்கும்போது இதே முடிவுக்குத்தான் வரவேண்டும். இந்த ஆச்சரியமான அமைப்புக்கு ஒரு கர்த்தா இருக்கத்தான் வேண்டும். அதுதான் கடவுள்" என்கிறார்.

இது ஒரு வசீகரமான வாதம்தான். இதை ஹ்யும் (Hume) என்கிற தத்துவஞானி எதிர்த்தார். இந்த வாதத்தில் உள்ள குறை, ஒன்றுடன் ஒன்றை ஒப்பிடுவது. பிரபஞ்சம் ஒரு சிக்கலான கடிகாரத்துக்கு ஒப்பானது. கடிகாரத்தை வடிவமைத்தவன் ஒருவன் இருந்தே தீர வேண்டும். அதேபோல பிரபஞ்சத்தை வடிவமைத்தவன் ஒருவன் இருந்தே ஆக வேண்டும். இம்மாதிரியான வாதம் நிரூபணமாகாது. திட்டவட்டமாகக் கடவுள் இருக்கிறார் என்று தீர்மானிக்க இது போதாது. நிரூபிக்க உதவி செய்யலாம். உலகத்தில் உள்ள அத்தனை கல்லிலும் கடவுள் செய்தது என்று இலச்சினை இட்டிருந்தாலும் ஹ்யும் போன்றவர்கள் நம்பப் போவதில்லை. மேலும் ரிச்சர்டு டாக்கின்ஸ் *The Blind Watchmaker* என்கிற புத்தகத்தில் இந்த வாதத்தை டார்வினிசப் பார்வையில் வீழ்த்தியிருக்கிறார்.

பிரபஞ்ச அமைப்பிற்குக் காரணம் இருக்கிறது. அது நமக்குப் புலப்படாமல் எங்கோ ஒளிந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு நம் விஞ்ஞானம் இன்னும் வளரவில்லை என்பதுதான் பெரும்பாலானோர் சிந்தனை.

கார்ள் சாகன் 'காண்டாக்ட்' என்னும் ஒரு நாவலில் பிரபஞ்ச ரகசியம் 'பை' π என்பதைக் கணக்கிடும்போது கிடைக்கும் இலக்கங்களில் எங்கேயோ சாமர்த்தியமாக மறைக்கப்பட்டிருக்கிறது என்கிற கதை சொல்கிறார். நியூட்டன், நம் சூரியக் குடும்ப கிரகங்கள் அமைந்திருக்கிற விதத்தைப் பார்க்கையில் அவை தன்னிச்சையாக இயல்பாக இப்படி அமைந்திருக்க முடியாது. ஒரு கர்த்தா இருக்க வேண்டும் என்று சொன்னது தற்கால விஞ்ஞானத்தில் அடிபட்டுப் போய்விட்டது. சூரியக் குடும்பம் எப்படி அமைந்திருக்கும், எப்படி இன்றைய ஒழுங்குக்கு வந்திருக்கும், மனிதன் எப்படித் தோன்றியிருப்பான் என்பதற்கெல்லாம் கடவுள் இல்லாமலேயே விளக்கம் இருக்கிறது. ஏன் ஃபேய்ன்மன் போன்றவர்கள் பிரபஞ்சத்தின் ஆரம்ப கணத்தில்

சூன்யத்திலிருந்து பிரமாண்டம் தோன்றியிருக்க முடியும் என்பதை தன் 'க்வாண்டம் கிராவிட்டி' தத்துவத்தில் விளக்கியுள்ளார். பிரபஞ்சத்தில் உள்ள மொத்த சக்தியும் மொத்த திடப்பொருளும் ஒன்றை ஒன்று சமனாக, எதிராக இருப்பதால் பிரபஞ்சம் சூன்யத்திலிருந்து உண்டாகியிருக்கலாம் என்றுகூட நம்பத் தோன்றுகிறது. பிரபஞ்சத்தின் நான்கு சக்திகளையும் இணைக்கும் விதத்தில் 'ஸ்டிரிங் தியரி' என்ற ஒன்று உருவாகி வருகிறது.

எல்லாமே ஒரு குறுக்கெழுத்து சதுரம் போல இருக்கிறது. மேலிருந்து கீழ், இடமிருந்து வலம் என்று வார்த்தைகளுக்கான குறிப்புகள் கிடைக்கின்றன. வெள்ளைக் கட்டங்களை நிரப்புகிறோம். பல வார்த்தைகள் கிடைத்துவிட்டன. சில வார்த்தைகளுக்கு எழுத்துக்கள் தான் உள்ளன. சில வார்த்தைகள் காலியாகவே இருக்கின்றன. என்றாவது ஒரு நாள் இது நிரப்பப்படும்.

ஜேம்ஸ் ஜீன்ஸ் என்னும் பிரிட்டிஷ் வானவியலாளர் சொன்னது, "பிரபஞ்சத்தில் ஒரு காரணமும் வடிவமைப்பும் நோக்கமும் இருப்பதைப் பார்க்கிறோம். அந்த காரணம் அந்த சக்திக்கு நம் மனித மனத்தைப் போல ஒரு குணம் இருப்பதாகத் தெரிகிறது. அழகுணர்ச்சி, பாசம், நீதி போன்ற குணங்கள். மனித மனம் ஒரு கணிதத்தை எப்படி சிந்திக்கிறதோ அதே முறையில் கடவுள் சிந்தித்திருக்கலாம்."

கடவுளுக்கு ஒரு 'மனம்' இருக்கிறது என்பதை பெரும்பாலான அறிஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். கடவுளே ஒரு மனம்தானோ என்று வியக்கிறார்கள்.

அன்றாட நிகழ்ச்சிகளையும் பிரபஞ்சம் இயங்கும் விதத்தையும் விளக்க கடவுள் தேவையில்லை. அடுத்த ரயில் சரியான நேரத்துக்கு வருவதோ வராததோ கடவுள் செயல் என்று சொல்வது அபத்தம். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது சரியில்லை. அணு அசைவது க்வாண்டம், கிராவிட்டி, கேயாஸ் தியரிகளின்படி. ஆனால், இது எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் இருக்கிறது என அவர்கள் எண்ணுகிறார்கள். அதைக் கடவுள் என்று அழைத்தாலும் அந்தக் கடவுளை நம் புலன்களின் எல்லைகளை மீறி எண்ண வேண்டியிருக்கிறது. அதற்கு விஞ்ஞானம் இடம் கொடுப்பதில்லை. கடவுளைப் பற்றி சிந்திக்க அது குறைபட்ட ஞானம்.

அவரவர் தமதமது அறிவறி
வகைவகை
அவரவர் இறையவர் எனவடி
அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர்
இறையவர்
அவரவர் விதிவழி அடைய
நின்றனரே

அவரவர் தத்தம் அறிவுக்கு எட்டியபடி தெய்வங்களை அமைத்து அடி சேர்கிறார்கள். அதில் எதுவும் குறைவில்லை. இறைவனை அவரவர் விதிப்படி அடையலாம்.

எனவே கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு அறிவியலின் பதில் – "இருக்கலாம்." ஆன்மிகத்தின் பதில் "இருக்கிறார்."

என் பதில் it depends!

என்ன ஆச்சரியம்!

(2004)

புத்தம் புதுசு!

"உலகிலேயே மிக அழகான அனுபவம் ஆச்சரியங்களை – எதிர் பாராததைச் சந்திப்பதுதான். எல்லாக் கலைகளுக்கும் அறிவியலுக்கும் அதுதான் ஊற்று..."

– இதைச் சொன்னவர், உலக சரித்திரத்தின் தலைசிறந்த இயற்பியல் விஞ்ஞானியான ஆல்பர்ட் ஐன்ஸ்டைன். "அறிவியலில் எல்லா வினாக்களுக்கும் விடை இல்லை..." என்றும் அவரே சொல்லியிருக்கிறார். அற்புதச் செயல்களும் அதிசயங்களும் அறிவியல் விதிகளை மீறுகின்றன.

அறிவியல் விதிகளின்படிதான் அன்றாட உலகில் எல்லாம் ஒழுங்காகவோ ஒழுங்கற்றோ நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனால் அதிசயங்களற்றது அன்றாடம். பஸ்கள் பறப்பதில்லை. பறவைகள் பேசுவதில்லை, பெண்கள் பேசாமல் இருப்பதில்லை.

ஆனால், மனிதன் ஆதிகாலத்திலிருந்து தன்னைச் சுற்றிய உலகத்தில் அற்புதங்கள் பல உள்ளன என்று நம்பி வந்தன. நம் புராணங்களிலும் பைபிள், குர்–ஆன் போன்ற எல்லா மத நூல்களிலும் பல அற்புதச் செயல்கள் உள்ளன. சமீபகாலமாகத்தான் அவை குறைந்துவிட்டன போல் தோன்றுகிறது. முன்பெல்லாம் கடவுள் அசால்ட்டாகக் கனவுகளில் வந்து 'ஓவர்நைட்' ஒரு ஆளை ராசாவாகவோ அல்லது கன்றுக்குட்டியாகவோ மாற்றிவிடுவார். இப்போது அந்த மாதிரி கனவுகள் வருவதில்லை. வந்தாலும் பலிப்பதில்லை. காரணம், அறிவியல் விதிகள் மெள்ள மெள்ள இரக்கமற்ற, உணர்ச்சியற்ற நிலவரத்துக்கு வந்து கனவுகளைக் கலைத்துவிட்டதுதான்.

நான் ஒரு சிறுகதை எழுதினேன்... ரிட்டயரான ஒருவர் பார்க்கில் தனியாக உட்கார்ந்திருக்கும்போது முழுசாக ஒரு பறக்கும் தட்டு வந்திறங்கி, கால்மீட்டர் ஆசாமி ஒருவன் வெளியே வந்து கண்ணடித்து 'உள்ளே வா' என்று கூப்பிடுகிறான். உள்ளே 'எங்களுடன் விண்பயணம் செய்ய வருவாயா...?' என்று பச்சைநிற மனிதர்கள் கேட்கிறார்கள்.

அதை உடனே வீட்டுக்குப் போய் மனைவி மக்களிடம் சொல்லி, ஊரையே திரட்டிக்கொண்டு மைதானத்துக்கு வருகிறார். வந்து

பார்த்தால், பறக்குமாவது தட்டாவது... எதையுமே காணோம்! 'நான் பார்த்தேன், பார்த்தேன்' என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார். சுற்றுப்பட்டவர்கள் 'அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது' என்று வேப்பிலை அடித்து, சாமியாடி ஆஸ்பத்திரியில் சேர்த்து, சங்கிலியால் பிணைத்து, அவர் அந்த இம்சையிலிருந்து தப்பி வருவதற்கு போதும் போதும் என்றாகிவிடுகிறது.

எல்லாம் ஓய்ந்தபின் 'அப்பாடா' என்று மற்றொரு நாள் பார்க்குக்குத் தனியாகச் செல்லும்போது, 'ஹவ்' என்ற அந்தத் தட்டு வந்திறங்கி அதே ஆசாமி அவரைக் கண்ணடித்துக் கூப்பிடுகிறான். இவர் என்ன செய்கிறார்...? திரும்பிப் பார்க்காமல் அந்த இடத்தைவிட்டு ஒரே ஓட்டம்!

எந்த அதிசயத்துக்கும் நம்புவதற்கு கராபேரஷன் (Corroboration) தேவை. இரண்டு பேராவது ஒத்துப்போக வேண்டும்.

நாளை ஆறு முப்பத்து மூன்றுக்கு ரம்பா திருத்துறைப்பூண்டியில் உங்கள் வீட்டுக்கு வந்து 'அஸ்க்' என்று தும்முவார் என்று ஒருவர் சொல்லி, அது நாளை நடந்தால் அதிசயம். அப்படியும் இந்த ஆசாமி ரம்பாவிடம் ஏதோ சொல்லி வைத்திருக்கிறார் என்பதைத்தான் முதலில் நம்ப விரும்புவோம்.

ராஜீவ் காந்தி, கென்னடி போன்றவர்கள் இறந்துபோவதை எப்போதோ சொல்லிவிட்டேன் என்று ஒரு கோஷ்டி அலைகிறது. உன்னிப்பாகப் பார்த்தால், ஹேஷ்யங்களில் குருட்டாம்போக்குதான் அதிகமிருக்கும் அல்லது டெல்லி பிளாட்பாரத்தில் இழந்த சக்தி வைத்தியனின் ஹேஷ்யங்கள் போல மிகையிருக்கும். அவன் பழுப்பாக உடும்புத் தைலத்தை உங்களுக்கு விற்குமுன், 'இதை ஒரு அவுன்ஸ் ராத்திரி குடித்துப் பார். அதோ, அந்த எலெக்ட்ரிக் கம்பம் போல நிற்கும்' என்பான். அந்த மாதிரி நின்றால், அது ஓர் அதிசயம்தானே!

சில சமயம் நம்பிக்கையையும் நம் பகுத்தறிவையும் சந்தேகப்படும் படியான நிகழ்ச்சிகள் உலக சரித்திரத்தில் நிகழ்ந்திருக்கின்றன. முதலில் ஒரு சாம்பிள் பார்க்கலாம்...

மார்கன் ராபர்ட்ஸன் என்பவர் ஒரு நாவல் எழுதினார். பெயர் டைட்டனின் அழிவு அல்லது நாசம் (The Wreck of the Titan or Futility). அந்த நாவலில் டைட்டன் என்கிற உலகிலேயே பெரிய சொகுசுக் கப்பல், ஒரு ஐஸ்பாறையில் மோதி மூழ்கிப்போகிறது. பல பேர் இறந்துபோகிறார்கள் என்பது அதன் கதை.

எங்கோ கேட்ட கதை போல இருக்கிறதல்லவா...?

1912-ல் டைட்டானிக் என்னும் கப்பல் ஐஸ்பர்க்கின் மேல் நிஜமாக மோதி மூழ்கியது. நாவல் எழுதியது 1898. நாவலுக்கும் நிஜத்துக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பாருங்கள்...

இதை எந்த வகை ஆச்சரியம் என்பீர்கள்...? இயற்பியல் விதிகளையும் மீறிய அமானுஷ்ய சக்தி ஏதும் உலகில் இருக்கிறதா...?

பார்க்கலாம்!

நாஸ்ட்ராடமஸ்

எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்கூட்டியே சொல்வது மனித சரித்திரத்தில் ஒரு வசிகரமான அம்சமாக இருந்துவருகிறது. கலி முற்றிப்போய் உலகம் அழியும் என்பதும் ஹேஷ்யம்தான், 'நாளை மறுநாள் நான் உன்னை வந்து சந்தித்து பாக்கி பணத்தைக் கொடுத்து விடுவேன்' என்பதும் ஹேஷ்யம்தான் ... இரண்டுக்கும் இடையில் எத்தனையோ வருமுன் கூறல்கள் உள்ளன. அவற்றை வைத்து இடையில் எத்தனையோ பேர் பிழைக்கிறார்கள். பந்தயங்களில் வெல்பவர்களிலிருந்து பாலக்கரை ஜோதியர்கள் வரை, பங்குச் சந்தையிலிருந்து பதவி வேட்பாளர் வரை ஏதோ ஒருவிதத்தில் எதிர்காலத்தை முன்மொழிகிறார்கள். எதிர்பாராத தன்மைதான் அதன் வசிகரம்.

அடுத்த மூன்று வருஷத்துக்கு உண்டான அத்தனை எதிர்கால சம்பவங்களும் நமக்குத் தெரிந்துவிட்டால் போர் அடித்துவிடும். யோசித்துப் பாருங்கள் ... உலகக் கோப்பை கிரிக்கெட்டில் ஒவ்வொரு மாட்சிலும் யார் வெல்லப்போகிறார்கள் என்பதும் ஜெயலலிதா எப்போது மத்திய அரசின் காலை வாரப்போகிறார் என்பதும் இப்போதே தெரிந்துவிட்டால் அதில் த்ரில் இருக்காது! தொலைக் காட்சியில் முடிவு தெரிந்த பழைய படங்களைப் பார்ப்பதுபோல் இது.

அநிச்சயம் வாழ்வில் முக்கியம். அதிர்ச்சி, ஆச்சரியம் முக்கியம். கிறித்துவ வேதமான பைபிளில்கூட பழைய ஏற்பாட்டில் ஏசுநாதரின் வரவைப் பற்றிய எதிர்பார்ப்புகள் மறைமுகமாக இருப்பதாக கிறிஸ்தவர் கள் (இசையா 35–4–6 போன்ற பகுதிகளில்) நம்புகிறார்கள். யூதர்கள் நம்பவில்லை. இரு மதங்களுக்கும் ஆதார வேறுபாடு இதனால்தான் வந்தது.

ஆரக்கிள் என்ற குறிசொல்லும் தேவ தேவதைகள் கிரேக்க புராணங்களில் நிறையவே உண்டு. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் க்ரோசியஸ் என்னும் மன்னன் யாரை நம்பி கூட்டணி சேரலாம் என்பதை அந்த தேவகுறி சொல்லும் ஆரக்கிள்களிடம் கேட்குமுன் இதெல்லாம் 'உட்டாலக்கடி'யோ என்று அவனுக்குச் சந்தேகம்

வந்திருக்கிறது. அதனால் ஏழு திசைகளில் ஏழு ஆரக்கிள்களிடம் தன் சேவகர்களை அனுப்பிவைத்து, 'இன்றிலிருந்து சரியாக நூறு நாள் கழித்து அந்த தாத்தாக்களிடம் கேளுங்கள் ... இந்த நேரத்தில் அரசன் க்ரோசியஸ் என்ன செய்துகொண்டிருக்கிறார்? என்று. அவர்கள் தரும் விடையை உடனே என்னிடம் ஓடிவந்து சொல்லுங்கள்' என்று பணித்தான் மன்னன்.

அந்த நூறாவது நாளில் மிக விநோதமாக, யாரும் தற்செயலாக சொல்லிவிட முடியாதபடி ஒரு ஆமை, ஒரு ஆடு இரண்டையும் கொன்று ஒரு வெண்கலப் பாத்திரத்தில் வெண்கல மூடிபோட்டு வேகவைத்துக்கொண்டிருந்தானாம்! டெல்ஃபை என்னும் ஆரக்கிள் "எனக்கு ஆமை வாசனை தெரிகிறது ... நெருப்பில் ஒரு ஆட்டுக் குட்டியின் சதையும் பொசுங்குகிறது. கீழே வெண்கலப் பாத்திரம். அதன் மூடியும் வெண்கலம்" என்றதாம். இதை எப்படி விஞ்ஞான பூர்வமாக விளக்க முடியும் என்று யோசித்து வையுங்கள்.

நாஸ்ட்ராடமஸ் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். தெற்கு பிரான்ஸில் ரெமி என்னும் நகரில் 1503–ல் பிறந்த நாஸ்ட்ராடமஸ், தின வாழ்வில் வைத்தியம் பார்த்தாலும் சுமார் ஆயிரம் எதிர்காலச் சம்பவங்கள் வரும் என்று அவர் குறி சொல்லியிருக்கும் 'நூற்றாண்டுகள்' என்கிற தலைப்பில் பதிப்பித்த புத்தகம்தான் மிகப் பிரபலமானது. எல்லாமே கவிதையில் ஒரு மாதிரியான ஸ்டைலில் இப்படியும் இல்லாமல் அப்படியும் இல்லாமல் அயோமயமாக அதை நமக்கு ஏற்பட எடுத்துக்கொள்ளும்படி இருக்கிறது. பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியன் வாழ்வும் தாழ்வும் ... இப்படி ஆரம்பித்து இரண்டு உலகப் போர்கள், காந்தி இறந்தது, இரான் – இராக் சண்டை, வளைகுடா சண்டை (ஏன் எங்கள் நாய் மிமி குட்டி போட்டதுகூட நாஸ்ட்ராடமஸில் இருக்கிறது என்று சொல்லுபவர்கள் உண்டு.) இப்படி அதற்குத் தேவையான மழுப்பலுடன் இருக்கிறது!

ஆனால், நாஸ்ட்ராடமஸில் ஒரு பெரிய ஆச்சரியம் இருக்கிறது. ஹிட்லர் பற்றி அதில் ஆச்சரியமான குறிப்பு 'ஹிஸ்டர்' என்ற பெயரில்:

"சுதந்திரம் மறுக்கப்படும். ஒரு கரிய கொடிய வில்லன் மற்ற பேருடன் சேர்ந்து சுதந்திரத்தைப் பறிப்பான். வெனிஸ் நகரம் ஹிஸ்டரால் அழியும். பசித்த மிருகங்கள் நதிகளைத் தாண்டும். பெரும்பாலானோர் ஹிஸ்டருக்கு எதிராக இருப்பார்கள். தலைவனை இரும்புக் கூண்டில் அடைப்பான். ஜெர்மனியின் புதல்வன் சட்ட திட்டங்களைப் பார்க்க மாட்டான்." இதை அதிசயம் என்று சொல்லத்தான் தோன்றுகிறது.

இதெல்லாம் பழங்காலம். கொஞ்சம் அதிகப்படியாகவே சுலப மாகவே மக்கள் நம்பிவந்த காலம். இந்த நூற்றாண்டில் இம்மாதிரியான திடுக்கிட வைக்கும் எதிர்காணல்கள் இருக்கின்றனவா? ஏராளம் என்கிறார்கள். இவற்றில் சில:

செப்டம்பர் 1918–ல் 'எவ்ரிபடி' என்னும் பத்திரிகை யுத்தத்தைப் பற்றிய ஒரு செய்தி வெளியிட்டது.

ஆகஸ்ட் 23, 1980–ல் ஆவியோடு பேசும் அலெக்ஸ்டானஸ் என்பவர் என்.பி.சி. ரேடியோவின் 'விளக்க முடியாத நிகழ்வுகள்' என்னும் நிகழ்ச்சியில் ஒரு பேட்டியில் இவ்வாறு கூறினார்–

"ஒரு மிகப் பிரபல ராக் பாடகர் அகாலமாக இறந்துபோவார். இது இந்தக் கணத்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் நிகழலாம். அகால மரணம் என்று நான் சொல்வது எதனால் எனில், அந்த மரணம் பலர் மனசாட்சியைப் பாதிக்கும் – இறந்தவரின் பிரபலத்தால்!"

இந்தப் பேட்டி செப்டம்பர் 5–ம் தேதி ஒலிபரப்பாகியது. டிசம்பர் 8–ம் தேதி ஜான் லென்னன், உலகின் மிகப் பிரபலமான பீட்டில்ஸ் பாடகர் தன் அபார்ட்மெண்ட் வாசலில் சுட்டுக் கொல்லப்பட்டார். யார் சாகக்கூடும் என்று வானொலி நிலையத்தார் ஆறு பெயர்களைப் பட்டியலிட்டிருந்தார்கள்.

அதில் முதல் பெயர்?

ஜான் லென்னன்!

இனி வாழ்வில் உள்ள முரண்பாடுகளைப் பார்ப்போம். உங்கள் வாழ்வில் ஏதாவது இந்த மாதிரியான சம்பவங்கள் நிகழ்ந்திருந்தால் சுருக்கமாக, ரீல் விடாமல் எழுதுங்கள் ...

கனவுகள்

மனித சரித்திரத்தில் கனவுகள் முக்கியம்... அவை எதனால், எதற்காக வருகின்றன என்பது பற்றி உளவியல் ஆராய்ச்சியாளர்கள் பல காரணங்கள் சொல்கிறார்கள். இதுவரை யாரும் தெளிவு பெறவில்லை. புராணக் கதைகளில் சௌகரியமாக ஆண்டவன் கனவில் தோன்றி 'காலை எழுந்ததும் முதல் காரியமாக இன்ன இன்ன பண்ணு' என்று சொல்லிவிடுவார். அதைக் கனவு கண்டவர் நிறைவேற்றுவார். சுற்றுப்பட்டவர்களும் நம்பினார்கள். ஃபிராய்டு கனவுகளை அக்கக்காக அலசியிருக்கிறார். கனவுகள் உள்மன விருப்பங் கள், இச்சைகள் என்கிறார். 'அவைகள் இன்று நேற்றைய இச்சைகள் மட்டும் அல்ல... எப்போதாவது ஏற்பட்ட ஒரு ஆசையாகவும் இருக்கலாம்' என்கிறார்.

கனவுகள் அவசியம் என்று ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்திருக் கிறார்கள். சில பேரைத் தூங்கவைத்துவிட்டு ரெம் (Rem - Rapid Eye Movement) என்னும் நிலை வரும்போது எழுப்பி விட்டிருக்கிறார்கள். இந்த ரெம் நிலையின்போதுதான் நாம் எல்லோரும் கனவு காண் கிறோம், எனவே தவறாமல் இவ்வாறு கனவு கலைக்கப்பட்டவர்கள் விரைவில் மனபாதிப்பு ஏற்பட்டு பகலில் உருவெளித் தோற்றங்களைக் காண ஆரம்பித்துவிட்டார்கள் என்று கண்டறிந்திருக்கிறார்கள். கனவு எதற்கோ தேவை என்பது மட்டும் புரிகிறது. ஒரு சித்தாந்தத்தின்படி கனவுகள் மூளையில் உள்ள வேண்டாத விஷயங்களைத் துடைப்பதற்கு ஏற்பட்ட பயிற்சிகள் என்று சொல்கிறார்கள்.

இந்த வகையில் சில ஆச்சரியமான கனவுகளுக்கு நம்மால் காரணம் காட்ட முடியும்.

ஆனால், சில கனவுகள் இம்மாதிரி விளக்கவே முடியாத ஆச்சரியங் கள். உதாரணமாக, திருமதி பாட்ரிக் காம்பெல் நல்ல நடிகை... முன்னாள் அழகி. அவள் உடல்நலமில்லாது படுத்த படுக்கையாக இருக்கும்போது ஸேரா ஆல்குட் என்னும் இளம் நடிகை அவளுக்கு உதவி செய்தாள். குணமானதற்கு நன்றியாக திருமதி காம்பெல், ஸேராவுக்கு ஒரு படத்தைப் பரிசாகக் கொடுத்தாள். ஒரு நாரையின் வாட்டர்கலர் சித்திரம் அது. அதன்பின் திருமதி காம்பெல் பிரான்ஸுக் குப் போய்விட்டாள்.

ஸேரா, ஹாலிவுட் போய்விட்டாள். வருஷம் 1940. ஸேரா ஒரு புதிய வீட்டில் குடிபுகுந்தாள். அங்கு அவளுடைய முதல் கனவில் திருமதி காம்பெல் வந்தாள். வினோதமான கனவு. "கல்லறையிலிருந்து நான் கொடுத்த பரிசைக் கண்டுபிடித்தாயா? படத்துக்குப் பின்னால் பார்த்தாயா?" என்று காம்பெல் கேட்பது போல் கனவு. ஸேராவுக்கு அந்தக் கனவு வியப்பூட்டியது.

கல்லறையா?

திருமதி காம்பெல்தான் பிரான்ஸில் உயிருடன் இருக்கிறாளே என்று பிரமித்து அவள் கொடுத்த படத்தைச் சட்டம் பிரித்து பின்பக்கம் பார்த்தாள். மற்றொரு ஆச்சரியம் அதில் ஒரு கோட்டுச் சித்திரம் இருந்தது. அது மேக்ஸ் பீர்பாம் என்கிற பிரபல விமரிசகர் சித்திரக்காரர் திருமதி காம்பெல்லை வரைந்தது. அப்போதே இரண்டாயிரம் டாலர் தேறும் விலை உயர்ந்த சித்திரம்.

ஸேரா ஆல்குடுக்குப் பிற்பாடுதான் செய்தி தெரிந்தது–திருமதி காம்பெல் அவள் கனவு கண்ட அதே தினத்தில் பிரான்ஸில் இறந்திருக்கிறாள் என்று. இதை எப்படி விளக்க முடியும்?

சிக்மண்ட் ஃப்ராய்டு "Dreams of the death of beloved persons" என்கிற புகழ்பெற்ற கட்டுரையில் இவ்வாறு எழுதியுள்ளார். "யாரேனும் தனக்கு மிக நெருக்கமானவர்கள் இறந்துபோவதுபோல, உரிய வருத்தத்துடன், கனவு கண்டால் அந்த நெருக்கமானவரின் சாவை அவர்கள் இப்போது விரும்புகிறார்கள் என்ற முடிவுக்கு வரமாட்டேன். கனவுகளைப் பற்றிய என் சித்தாந்தத்துக்கு இந்த முடிவு தேவையில்லை. இந்த மரணம் கனவு கண்டவரின் இளமைக் காலத்தில் எப்போதாவது விரும்பப்பட்டிருக்கிறது என்பதே என் முடிவு. இதைக் கனவு கண்டவர்கள் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். 'நான் அப்படி வாழ்வில் எண்ணியதே இல்லை' என்று சாதிப்பார்கள். எனவே இந்தக் கனவுகளைக் கொண்டு அவர்களின் மறந்துபோன, மறைந்து போன மன வாழ்க்கையின் ஒரு பகுதியை நான் மீண்டும் வடிவமைத்துக் கொள்கிறேன்" என்கிறார்.

எனவே உயிருடன் இருக்கும் பெற்றோரோ, மகனோ, மகளோ, சகோதர சகோதரியரோ, குழந்தையோ செத்துப்போவதாக கனவு கண்டால் அச்சப்படாதீர்கள். சின்ன வயசில் மகனின் தொல்லை தாங்காமல் ஒரு தாய் 'கடங்காரா! செத்து ஒழியேன்' என்று திட்டும்போது அந்தக் கணத்துக்கு மட்டும் அவன் இறந்துபோவதை அவள் உண்மையாகவே விரும்புகிறாள். இந்த எண்ணம் ஆழ்மனதில் புதைந்து எப்போதாவது பிற்காலத்தில் ஒரு கதிகலக்கும் கனவாக வரும் சந்தர்ப்பம் இருக்கலாம் என்கிறார் ஃப்ராய்டு.

கனவுகளில் கடவுள் ஏதோ நம்மிடம் சொல்ல விரும்புகிறாரா?

ஆனால், பெங்களூரில் எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பலா மரத்தடியில் கோதைப் பாட்டியும் கிளிண்ட்டனும் இரண்டாம்

முறையாக உட்கார்ந்துகொண்டு கையில் எண்ணெய் தடவி பழங்களை சுளை பிரித்துக்கொண்டே கோதைப் பாட்டி 'இந்த வருஷம் பலாப்பழம் சீசனில்லை' என்றதற்கு கிளிண்ட்டன் 'கார்த்திகை மாசம் சரியா மழை பெய்யலையோல்லியோ ... அதனால்தான்' என்று பதில் சொல்லிவிட்டு ஒரு முழு சுளையை 'மோனிக்காவுக்கு ரொம்பப் பிடிக்கும்' என்று சொல்லிவிட்டு லபக்கென்று முழுங்குவது போல் நான் முந்தாநாள் கண்ட கனவு எந்த வகையில் சேரும்?

கிரிஸ்டல் பந்து ஞானிகள்!

ஏற்கெனவே சொன்னதுபோல, கனவுகளின் மூலம் எதிர்காலத்தைப் பற்றிய எச்சரிக்கை கிடைக்கிறது என்ற நம்பிக்கையும் உதாரணங்களும் உலகம் முழுக்க இருக்கிறது. கனவு கண்டு குறி சொல்கிற ஆண் – பெண் ப்ரொஃபஷனல்களும் இருக்கிறார்கள்.

அப்படியில்லாமல், கிரிஸ்டல் பந்து, முகம் பார்க்கும் கண்ணாடி, தேக்கி வைத்த தண்ணீர், பேப்பரில் தெளிக்கப்பட்ட இங்க்கின் ஒழுங்கற்ற உருவங்கள் இவற்றைப் பார்த்து (?) அதற்கெல்லாம் தங்களுக்குத் தோன்றுகிறபடி விளக்கம் தருகிற ஆட்களில் பலர் பிரபலம்.

இந்த கிரிஸ்டல் பந்து 'ஞானி'களில் ஜோசப் டி லூயிஸ் முக்கிய பிரபலம்!

ஜனவரி மாதம் 16–ம் தேதி, 1969. சிகாகோ நகரத்தில் ஓர் ஓட்டலின் பாரில் நுழைந்து, "பேப்பர் கொடுப்பா ... ரயில் விபத்தைப் பற்றி என்ன போட்டிருக்கான்னு பார்க்கணும் ..." என்றார் ஜோசப் டி லூயிஸ்.

"விபத்தா ...? என்ன ரயில் ...? என்ன விபத்து ...? பேப்பர்ல ஏதும் இல்லையே ..." என்றார்கள் சுற்றுப்பட்டவர்கள்.

"இங்கிருந்து தெற்காலப்பா ... ரெண்டு ரயில், பனிமூட்டத்துல ஒண்ணோட ஒண்ணு மோதிக்கிட்டு நிறைய பேர் அடிபட்டு செத்துட்டாங்கப்பா ... பேப்பர்ல வரலை...?" என்றார் ஜோசப் டி லூயிஸ்.

ரேடியோ போட்டார்கள். ராத்திரி பதினோரு மணி ... விபத்தைப் பற்றி எந்தச் செய்தியும் இல்லை. இரண்டு மணி நேரம் கழித்து, இரவு ஒரு மணிக்கு இல்லினாய் சென்ட்ரல் ரயில்கள் இரண்டு பனியில் மோதிக்கொண்டன, சிகாகோவுக்குத் தெற்கே. நாற்பத்தேழு பேருக்குப் பயங்கர அடி. மூன்று பேர் இறந்துபோனார்கள்.

யார் இந்த ஜோசப் டி லூயிஸ் ... ஒரு முடிதிருத்தக் கலைஞர். எட்டாவதுக்கு மேல் படிக்கவில்லை. டி.வி–யிலும் பத்திரிகைகளிலும் எதிர்வரப்போகும் விபத்துகள் பற்றி நிறைய பேசினார். பல பலித்தன.

1967, நவம்பர் 25–ம் தேதி 'ஒரு பாலம் இடிந்து விழும்' என்றார்.

மூன்று வாரம் கழித்து டிசம்பர் 16–ம் தேதி ஒஹையோ நதியின் குறுக்கே இருந்த 'வெள்ளிப் பாலம்' என்பது இடிந்து விழுந்து முப்பத்தாறு பேர் இறந்தனர். பத்துப் பேரைக் காணவில்லை.

1968, ஜனவரி 8–ம் தேதி. டி லூயிஸ் 'நாட்டில் கலவரம் வரும்' என்றார். ஏப்ரல் 7–ம் தேதி சிகாகோவில் பெரிய கலவரம் வந்து, ஐயாயிரம் மைய அரசுப் படையினர் வரவேண்டியிருந்தது. டிசம்பர் 15, 1968–ல் டி லூயிஸ் 'கென்னடி குடும்பத்துக்குத் தண்ணீர் மூலம் ஒரு கண்டம் இருக்கிறது' என்றார். 'ஒரு பெண் நீரில் மூழ்குவதைப் பார்த்தேன்' என்றார்.

ஜூலை 18, 1969. மேரி ஜோ என்னும் பெண், எட்வர்ட் கென்னடியுடன் காரில் சென்றுகொண்டிருக்கும்போது நீரில் மூழ்கிய சம்பவம் எட்வர்ட் கென்னடியின் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

மே 21, 1969–ல் டி லூயிஸ், 'ஒரு விமானம் விபத்துக்குள்ளாகும். எழுபத்தொன்பது பேர் செத்துப்போவார்கள்' என்றார். செப்டம்பர் 9–ம் தேதி அலிகனி ஏர்லைன்ஸின் விமானம், ஒரு தனியார் விமானத்துடன் மோதி நான்கு பைலட்டுகளும் எழுபத்தொன்பது பயணிகளும் இறந்தனர்.

டி லூயிஸ் எப்படிப்பட்ட மனிதர் ...? அவர் எதிர்காலத்தை அறிந்தவரா ... ? அட்வான்ஸாகக் கடவுளோ, யாரோ வந்து அவருக்குச் சொல்கிறார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.

இந்தியாவில் இந்த மாதிரி ஹேஷ்யங்களுக்குக் குறைவே இல்லை. எல்லாப் பத்திரிகைகளிலும் பஞ்சாங்கங்களிலும் அடுத்த வாரம், அடுத்த வருஷம் நடக்கப்போவதை மழுப்பலாகச் சொல்வார்கள். சில பலிக்கும் ... சில பலிக்காது. நாடி ஜோசியம் இதில் மிகப் பிரபலம். உங்கள் பேர், அப்பா பேர், அம்மா பேர், கடல் கடந்து போவான் போன்ற சமாசாரங்கள் விருத்தத்தில் எழுதி ஓலை ஓலையாக இருக்கும். இந்தச் சமாசாரம் பற்றிப் பின்னால் ஆராய்வோம்.

டெல்ஃபை என்னும் குறி சொல்லும் தேவதை பற்றி முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். அறிவியல்படி, எதிர்காலத்தைக் கணிப்பதற்கும் டெல்ஃபை என்ற முறை உள்ளது. இதன்படி ஒரு பொருளைப் பற்றி இரண்டு வாக்கெடுப்புகள் செய்வார்கள். பல துறைகளின் நிபுணர் குழுவை முதலில் எதிர்காலத்தில் அவர்கள் துறையில் என்னென்ன நிகழப்போகிறது என்று குறிப்பிடச் சொல்வார்கள். முதல் பதில்களைக் குழுவின் மற்ற அங்கத்தினர்களுக்குக் கொடுப்பார்கள். தன் சக நிபுணர்களின் கருத்துகளை அறிந்தபின், மீண்டும் தேவைப்பட்டால் தன் எதிர்பார்ப்புகளைத் திருத்தியமைக்க அனுமதிப்பார்கள். இந்த முறைப்படி அனைவரும் ஏறத்தாழ ஒத்துப் போகும்படியான எதிர்காலக் குறிப்புகள் கிடைக்கும். முதல் முறையைவிட அதிகமாகப் பலிக்கும் சாத்தியமுள்ள இவற்றைப் பிரசுரிப்பார்கள்.

இந்த முறையில் எதிர்காலக் கணிப்புகள் நம் நண்பர் டி லூயிஸின்

ஹேஷ்யங்களைப் போலவே பலிக்கின்றன.

டெல்ஃபை முறையில் மற்றொரு சிறப்பு – வருஷாவருஷம் அது திருத்தப்படுவது.

நான் 'நிர்வாண நகரம்' என்று ஒரு நாவல் எழுதினேன். அதில் சமூகத்துடன் கோபம் கொண்ட ஓர் இளைஞன், ஒரு நீதிபதி சாகப்போகிறார் என்று போலீஸ் அதிகாரிக்குக் கடிதம் எழுதுகிறான். அடுத்த மாதங்களில் ஒரு நீதிபதி கடற்கரையில் கொல்லப்படுகிறார். அதற்கு அந்த இளைஞன், நான்தான் அதைச் செய்தேன் என்று சொல்கிறான். அடுத்தது ஒரு டாக்டர் என்கிறான். டாக்டர் சாகிறார். நான்தான் என்கிறான் (ஒரு த்ரில்லுக்காக!). கொன்றது அவனே அல்ல.

அடுத்தது அரசியல்வாதி. இவ்வாறான நபர்கள் மக்கள் தொகையில் அவ்வப்போது செத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதனால் அவ்வாறு ஒன்று நடக்கப்போகிறது என்று பொதுப்படை யாகச் சொல்வது எதிர்காலத்தைச் சொல்வதல்ல. இந்த வகையில்தான் டி. லூயிஸின் பெரும்பாலான ஹேஷ்யங்கள் வரும். ஓரிரண்டு சம்பவங்களைத் தவிர ... சிகாகோ ரயில் விபத்து, கென்னடி விபத்தில் ஒரு பெண் நீரில் மூழ்குவாள் என்று சொன்னதும்தான் கொஞ்சம் ஆச்சரியப்பட வைக்கிறது. மற்றதெல்லாம் அகஸ்மாத்து அல்லது தற்செயல்தான். நண்பர் ஒருவர் வைத்தீஸ்வரன் கோயில் சென்று, ஒரு நாடி ஓலை படித்து வந்தார். அதில் கீழ்வருமாறு எழுதியிருந்தது –

'கேளப்பா கண்ணன் மகனே ... கெடுவப்பா நாலு கற்பம் ... ஆளப்பா அழகன் அப்பா ... ஆண்டுதோறும் தீயை ஆள்வாய் ... கோளப்பா சுக்ரன் ... உனக்குக் குறையப்பா கண்கள் ஒன்றில் ... நாளப்பா நகர்வதற்கு ... நலமப்பா மனைவி மூலம் ...'

நண்பரின் தந்தை பெயர் கிருஷ்ணமூர்த்தி. கூடப் பிறந்தது நாலு பேர். தான் அழகானவர் என்பதில் அவருக்கு ஐயமில்லை. அவர் ஒரு ஃபவுண்டரியில் பணிபுரிவதால் தீயை ஆள்வாய் என்பது பொருந்துகிறது. கண்ணுக்குக் கண்ணாடி போட்டிருக்கிறார். வேலையை மாற்றலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார். மனைவி தங்கமானவள். இதெல்லாம் அதில் இருக்கிறது என்கிறார்.

சரியா ...?

சர்ச்சிலுக்குள்ளே ஒரு சக்தி!

"ஆதாரமில்லாத பரிசோதிக்கப்படாத உள்ளுணர்வு என்பது உண்மைக்கு உத்தரவாதம் அல்ல..." என்கிறார் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல். இருந்தும் இன்சைட் – உள்ளுணர்வு என்பதை நம்மால் வாழ்வில் பல தருணங்களில் சந்திக்க முடியும்.

கணிதமேதை சீனிவாச ராமானுஜன் தன் கனவில் தேவி வந்து, நம்பர் தியரியில் சில சிக்கலான கணக்குகளுக்கு விடை தெரிவித்தாள் என்று சொல்லியிருக்கிறார்.

எனக்கு சில சமயம் கதையை எப்படி முடிப்பது என்று தவிக்கும் போது, எழுதுவதை, நிறுத்திவிட்டுப் படுத்தால் கனவில் தெளிவாக ஒரு முடிவு வந்துவிடும். இதையெல்லாம்தான் 'இன்சைட் – உள்ளுணர்வு' என்று சொல்கிறோம்.

ப்ரிமானிஷன் என்பது முன்னெச்சரிக்கை. முன்னறிவிப்பல்ல. பெங்களூரில் நான் வசித்து வந்தபோது, ஒரு சர்க்கஸ் தீ விபத்தில் பல பேர் இறந்தார்கள். என்னுடன் பி.இ.எல்–லில் பணிபுரிந்த ஒருவர், "நான் அன்னிக்கு நிச்சயம் சர்க்கஸ் போயே ஆகணும்னு தீர்மானிச்சு மனைவி, குழந்தைகள் எல்லாருக்கும் சொல்லிவிட்டு, டிரஸ் பண்ணிட்டு புறப்பட இருந்தேங்க... நாளைக்குப் போகலாம்'னு சட்டுனு தீர்மானிச்சேன். அவர்களுக்கெல்லாம், குறிப்பா குழந்தைகளுக்குக் கடும் கோபம். 'இவர் எப்பவும் இப்படித்தான். ஸ்திரபுத்தியே கிடையாது. திடீர்னு மூடு மாறிவிடும்' என்று அழக்கூட அழுதார்கள். சாயங்காலம் பேப்பர் பார்த்தா, பயங்கர தீ விபத்தில் நூற்றுக்கணக்கான பேர் நெரிபட்டு மிதிபட்டு கருகிச் செத்திருக்காங்க. ஏன் சார் எனக்கு அப்படித் தோணிச்சு...? யார் தோண வெச்சாங்க...?" என்று கேட்டார்.

அவர் மிகவும் மரியாதைப்பட்டவர். பொய் சொல்லமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவர் மனதில் சர்க்கஸ் போகாதே என்று தோன்ற வைத்தது என்ன என்பதற்கு அறிவியல் காரணம் இல்லை.

சர்ச்சிலுக்கு இந்த மாதிரி நிகழ்ந்ததாம். இரண்டாம் உலக

யுத்தத்தின்போது லண்டன் நகரம் குண்டுவீச்சுக்கு உட்பட்டு அலை அலையாக ஜெர்மன் விமானங்கள் வந்து வந்து குண்டு போட்டுவிட்டுச் சென்ற யுத்தத்தின் உச்சகாலம் அது. சர்ச்சில், இங்கிலாந்து பிரதமர். குண்டுவீச்சின் இடையே மிகவும் தைரியமாக இருந்தாலும் அவர் உள்மனதின் எச்சரிக்கைகளைப் புறக்கணிக்கவில்லை.

ஒரு நாள் ராத்திரி சர்ச்சில் தன் டவுனிங் தெரு பத்தாம் நம்பர் வீட்டில் மூன்று மந்திரிகளை டின்னருக்கு அழைத்திருந்தார். விருந்து நடந்துகொண்டிருந்தபோது விமானத் தாக்குதல் தொடங்கியது. சாப்பிட்டுக்கொண்டிருந்த சர்ச்சில், திடீரென்று எழுந்து சமையலறைக்குச் சென்று அங்கிருந்த சிப்பந்திகளிடம் "சாப்பாட்டை டைனிங் ரூமில் ஒரு மேஜைமேல் வைத்துவிட்டு, உடனே பாம் ஷெல்டர் பாதுகாப்புக்குச் சென்றுவிடுங்கள்" என்று ஆணையிட்டு விட்டுத் திரும்பி வந்தார். மூன்று நிமிஷம் கழித்து, வீட்டின் பின் பக்கத்தில் பாம் விழுந்து சமையலறை முழுவதும் நாசமாகியது. சமையல்காரரும் பணிப்பெண்ணும் காப்பாற்றப்பட்டார்கள். அந்த நிமிஷத்தில் சமையலறைக்கு எழுந்து போய், அவர்களை வெளியே அனுப்பச் சொன்னது எது என்று சர்ச்சில் பின்னர் வியந்திருக்கிறார்.

மற்றொரு முறை சர்ச்சில் லண்டனில் காரில் செல்லத் தயாரானார். அவர் எப்போதும் உட்காரும் பக்கத்தின் கதவு திறந்து, கார் காத்திருந்தது. ஒரே ஒரு விதிவிலக்காக, அன்று அவர் சுற்றிவந்து எதிர்பக்கத்து கதவைத் திறந்து ஏறிக்கொண்டார். தெருவில் இருட்டில் செல்லும் போது ஒரு பாம் பக்கத்தில் விழுந்து கார் கன்னாபின்னாவென்று நிலையிழந்து இரண்டு சக்கரத்தில் கொஞ்ச தூரம் போய் விழுவிருந்தது. சர்ச்சில் உயர்ந்த பக்கத்தில் உட்கார்ந்திருந்ததால், கார் மீண்டும் சமநிலைக்கு வந்து தப்பித்தது. "குண்டாக இருந்ததால் தப்பித்தேன்" என்றார் சர்ச்சில். வழக்கம்போல கார் ஸீட்டில் உட்கார்ந்திருந்தால் செத்திருப்பார்.

சர்ச்சிலின் மனைவி இதைப் பற்றிக் கேட்டபோது, "ஏதோ ஒன்று காரை அணுகும்போது, 'நில்! அந்தப் பக்கம் ஏறிக்கொள்' என்று சொன்னது. அதனால் இடம் மாறி உட்கார்ந்தேன்!" என்றார். இதற்கு அறிவியல் ஆதார விளக்கம் இல்லை. உள்மன எச்சரிக்கை நம்மில் பெரும்பாலானவரிடம் இருக்கிறது என்று நம்புகிறார்கள். அமெரிக்காவில் ஒரு ரயில்வே கம்பெனி ஒரு விநோதமான புள்ளி விவரம் வைத்திருக்கிறார்கள்.

இல்லினாய் மாகாணத்தில் ஒரு முறை ரயில் விபத்து ஏற்பட்டது. பயணிகள் இறந்தார்கள். விபத்துக்கு முந்தைய ஆறு தினங்களில் அந்த ரயிலில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 68, 60, 48, 62, 70.

விபத்து நடந்த தினம், ஒன்பது பேர் மட்டும்தான் பயணம் செய்தார்கள்! இதற்கு என்ன அர்த்தம்? பல பேருக்குப் 'போகாதே' என்ற உள்ளுணர்வு தோன்றியிருக்கிறதா?

தென்னக ரயில்வேயில் விபத்துகள் பல ஏற்பட்டிருக்கின்றன. விபத்து நாளில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை சராசரிக்குக் குறைவாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இதைத் தென்னக ரயில்வே புள்ளிவிவரம் வைத்துச் சோதித்துப் பார்த்து கட்டுரை எழுதினால் ஸைக்கிக் ரிசர்ச் பத்திரிகையில் பிரசுரிப்பார்கள்!

உங்கள் வாழ்வில் ஏதாவது இவ்வாறான முன்னெச்சரிக்கை ஏற்பட்டிருக்கிறதா?

பக்கத்து கேபினில் ஒரு மாய ஜோடி!

பகவான் சத்ய சாய்பாபாவின் பக்தர்கள் பலர் பெரிய பதவியில் இருப்பவர்கள், வெளிநாட்டுக்காரர்கள், டாக்டர் பகவந்தம் போன்ற விஞ்ஞானிகள், அர்ஜுன ரணதுங்கா போன்ற கிரிக்கெட் வீரர்கள். சாதாரணமாகப் பொய் சொல்ல மாட்டார்கள். பொய் சொல்லத் தேவையில்லாதவர்கள். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உள்ள பலர் சாய்பாபாவின் அற்புதச் செயல்களை விவரிப்பதைக் கேட்டு நான் வியந்திருக்கிறேன். அவற்றில் போபாலில் பி.ஹெச்.இ.எல். நிறுவனத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த குமார்சிங் என்கிற தீவிர பக்தர் சொன்னதுதான் என்னை மிகவும் பிரமிக்க வைத்தது.

"ஒரு நாள் வியாழக்கிழமை குவார்ட்டர்ஸில், எங்கள் வீட்டில் வழக்கம்போல பஜனை நடந்துகொண்டிருந்தது. பக்தர்கள் எல்லோரும் உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்தார்கள். அன்று என்னவோ உற்சாகம் மிக அதிகமாகவே இருப்பது போலவும் அனைவரும் ஏதோ ஒரு நிலையில் மெய்மறந்துவிட்டதும் தெரிந்தது. நான் கண்ணை மூடிக் கொண்டு ஆழ்ந்திருந்தவன். ஒருமுறை கண்ணைத் திறந்து பார்த்தபோது அறைவாசலில் பாபா கையில் ஒரு தாமரைப் பூவை வைத்துக்கொண்டு புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தார். எனக்குப் பிரமிப்பில் எதுவும் பேசத் தோன்றவில்லை. எப்படி சார் போபாலுக்கு அவரால் வர முடியும் ...? அந்த நேரத்தில் அவர் புட்டபர்த்தியில் இருக்கிறார் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் அவர்தான் அது. லேசாக மூச்சுவிடுவது, மார்பெலும்பு எழுந்து தணிவதுகூடத் தெரிந்தது. அவ்வளவு உயிருடன் அவ்வளவு கிட்டத்தில்!" என்றார்.

குமார்சிங், ஒரு சிஸ்டம்ஸ் இன்ஜினியர். அவர் பொய் சொல்லத் தேவையில்லை. என்னை நம்பவைக்கும் அவசியமும் இல்லை. பின் இது எப்படி ...? நம் அறிவியல், இயற்பியல் விதிகளின் இன்றைய டெக்னாலஜிப்படி இது சாத்தியமில்லை. டெலிபோர்ட்டிங் என்பதெல்லாம் விஞ்ஞானக் கட்டுக்கதைகளில்தான் சாத்தியம் (ஒரே ஒரு சாத்தியம் உள்ளது. அதுபற்றிப் பிறகு தொடரின் இறுதியில் சொல்கிறேன்.)

நான் குமார்சிங்கிடம் கேட்டது ஒரே கேள்வி: "வேறு யாராவது பார்த்தார்களா ...?"

"பார்த்திருக்கலாம். அவர்கள் அனைவரும் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் இருந்தார்கள். அவர்களை உசுப்பி 'பார்' என்று சொல்ல எனக்கு அந்தப் பிரமிப்பில் தோன்றவே இல்லை. தோன்றியபோது, அவர் மறைந்துவிட்டார் ..."

இம்மாதிரியான அற்புதச் செயல் வருணனைகளில் இதுதான் குறை. நாம் முன்பு சொன்னபடி கராபரேஷன், குறைந்தபட்சம் இரண்டு பேராவது பார்த்திருக்க வேண்டும். அது இருக்காது. கராபரேஷன் உள்ள ஓரிரு சம்பவங்களையும் நான் படித்திருக்கிறேன். நம் இந்தியாவில் அல்ல ... மற்ற நாடுகளில் இம்மாதிரி ஒருவன், இரண்டு இடங்களில் இருப்பதை இருவர் பார்த்திருக்கிறார்கள். கணவனும் மனைவியும்!

மிக வியப்பான ஒரு சம்பவம் இது ...

அமெரிக்கா கலிபோர்னியாவின் இங்கிள்வுட் என்னும் இடத்தைச் சேர்ந்த பால் மக்காஹன் தம்பதிக்கு செப்டம்பர் 4, 1956-ல் நடந்தது இது. இருவரும் கிராண்ட் கன்யன் என்னும் சுற்றுலாப் பிரதேசத்துக்குச் சென்றிருக்கிறார்கள். மாலை நேரம். அவர்கள் தங்கியிருக்கும் காபினுக்குப் பக்கத்து காபினில் ஒரு பெண்மணி, தன் கணவன், லக்கேஜைத் தூக்கிக்கொண்டு வந்த ஒரு பையன் இருவருடன் செல்வதைப் பார்த்தாள் திருமதி மக்காஹன். அந்தப் பெண்மணியுடன் ஒரு வருஷம் முன்பு ஒரு கோர்ட் கேஸில் ஜூரியாகப் பணிபுரிந்திருக் கிறாள். அதைத் தன் கணவரிடம் சொன்னாள். அந்தப் பெண்மணியின் கணவருக்கு ஒரு கை இல்லை என்பதையும் குறிப்பிட்டாள்.

"எதற்கு ராத்திரியில் தொந்தரவு செய்ய வேண்டும் ...? காலை சந்திக்கலாம் ..." என்று கணவர் சொல்லிவிட்டார்.

"மறுநாள் காலை அவர்களை வராந்தாவில் பார்த்ததும் அருகில் சென்று பேசினோம். எங்கள் கணவர்களும் சந்தித்துக்கொண்டார்கள். இருவரும் இயல்பாகச் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, முதல் நாள் சாயங்காலம் அவர்கள் வந்து சேர்ந்ததைக் கவனித்ததைச் சொன்னேன். அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். காரணம், இருவரும் அப்போதுதான் டூரிஸ்ட் பஸ்ஸில் வந்து இறங்கியிருக் கிறார்கள்!

என் கணவரும் பார்த்திருக்கிறார். நானும் பார்த்திருக்கிறேன். நாங்கள் அவர்களை முதல் நாள் பார்த்தபோது பத்துப் பதினைந்தடி தூரம்கூட இருக்காது. மறுநாள் சந்திக்கலாம் என்றுதான் உடனே விசாரிக்கவில்லை ..."

இருவருக்கும் லேசாகத்தான் பரிச்சயம். இருவர் வாழ்விலும் எந்தவிதப் பரபரப்போ, பயமோ, அபாயமோ இல்லை. இரண்டு குடும்பங்களுக்கும் அதற்குமுன் எந்தவித உறவோ, தொடர்போ

இல்லை. முதல் நாள் சாயங்காலம் அவர்களைப் பற்றி யோசிக்க, மனதில் கொண்டுவரக் காரணமே இல்லை. பார்த்தது யார் அல்லது என்ன ...?

சட்டென்று அது உருவெளித் தோற்றம் என்றாலும் அந்த எண்ணத்தை உருவாக்க ஏதேனும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். இம்மாதிரியான அனுபவங்கள் 'அமெரிக்கன் சொஸைட்டி ஃபார் சைக்கிக் ரிசர்ச்' பத்திரிகையில் பதிப்பித்திருக்கிறார்கள். இன்றைய டெக்னாலஜியில் வர்ச்சுவல் ரியாலட்டி என்று ஒன்று புதிதாக வந்திருக்கிறது. கணிப்பொறி மாட்டிக்கொண்டு பார்த்தால், ஒரு மாயவெளியில் மாயத்தோற்றங்களின் ஊடே நடந்து செல்லலாம்.

உண்மையான அனுபவம் போலிருக்கும். வீட்டிலேயே இருந்து கொண்டு, ஆப்பிரிக்கக் காடுகளில் சிங்கங்களின் ஊடே திரியலாம். ரே ப்ராட்பரி இதை வைத்து 'தி வெல்ட் (The Veldt)' என்று அருமையான சிறுகதை எழுதியிருக்கிறார். ஆனால், வி.ஆர். டெக்னாலஜிக்குத் தனிப்பட்ட கணிப்பொறியும் மென்பொருளும் கண்ணாடிகளும் தேவைப்படும். வெட்டவெளியில் இந்தத் தோற்றம் ஹோலோகிராபி மூலம் சாத்தியம் எனலாம். ஆனால், இன்றைய ஹோலோகிராப பிம்பங்கள் அவ்வளவு திருத்தமானவை அல்ல.

பின்னே என்னதான் இது ...?

எதிர்கால விஞ்ஞானம்தான் பதில் சொல்ல முடியும்!

நடுங்க வைத்த நாடி ஜோசிய நாவல்

டி லூயிஸ் பற்றி சிந்தித்துப் பார்த்தீர்களா? அவர் எதிர்காலத்தை அறிந்து சொன்னாரா, குருட்டாம்போக்கில் சொன்னாரா? நான் இப்போது "எதிர்காலத்தில் ஒரு விமான விபத்து நிகழப்போகிறது" என்று எழுதினால் அது எதிர்காலத்தை அறிந்து சொல்வதல்ல. உலகெங்கும் அத்தனை விமானங்கள் பறந்துகொண்டிருக்கும் போது எங்கோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு விமானம் கவிழ்வது எதிர் பார்க்கக்கூடியதே. இதற்குப் பதிலாக கனடாவில் நோவாஸ்கோஷியா அருகில் கடலில் ஒரு ஸ்விஸ் ஏர்டக்ளஸ் விமானம் செப்டம்பர் 3–ம் தேதி விழுந்து நொறுங்கி 211 பேர் செத்துப்போவார்கள் என்று நான் செப்டம்பர் 1–ம் தேதி எழுதியிருந்தேனெனில் என்னை சி.பி.ஐ –காரர்கள் அழைத்துச் சென்று பிரகாசமான விளக்கின் அடியில் வைத்து கேள்வி கேட்பார்கள்.

பொதுப்படையான எதிர்நோக்கல்களுக்கும் குறிப்பான எதிர் நோக்கல்களுக்கும் வேறுபாடு தெரிய வேண்டும் நமக்கு.

எதையாவது எழுதி அது ஒரு மாதிரி பலித்துப்போவது எழுத்தாள னான எனக்கு நிறையவே நிகழ்ந்திருக்கிறது. 'வானமென்னும் வீதியிலே' என்று ஒரு தொடர்கதையில் பாகிஸ்தானுக்கு ஓர் இந்திய விமானம் 'ஹைஜாக்' செய்யப்படுவதாக எழுதினேன். சில மாதங்களில் அது நிகழ்ந்தது. ஆனால், நான் எழுதியது கராச்சிக்கு காரவல் விமானம்; கடத்தியது ராவல்பிண்டிக்கு ஃபாக்கர் விமானம். நாக்கில சனி ... சொன்னான்னா அப்படியே நடந்துடும் என்று திட்டுபவர்களும் உண்டு. தி. ஜானகிராமன் 'பரதேசி வந்தான்' என்று ஓர் அருமையான சிறுகதை எழுதியிருக்கிறார். கல்யாணச் சாப்பாட்டின்போது பாதிக் கவளத்தில் எழுப்பப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட ஒரு பிச்சைக்காரன், 'நீ அழுதுகொண்டே போடும் சோற்றுக்குப் பத்து நாள்ள வரேண்டா' என்று சபித்துவிட்டுச் செல்கிறான்.

கல்யாண மாப்பிள்ளை மாரடைப்பால் இறந்துபோகிறார். தவறாமல் பரதேசி சவுண்டிக்கு வந்துவிடுகிறான். என்ன ஒரு கதை! சாபங்கள் எல்லாம் ஒரு வகையில் எதிர்கால நோக்கங்களே.

என் 'நிர்வாண நகர'த்தின் புரட்சிகரமான கதாநாயகன் பெயர் ஷெராஜன்! அதை என்னிடம் பலர் விசாரித்தார்கள். காரணம் தெரிந்ததே.

'பதவிக்காக' என்பதில் மந்திரிசபையைக் கலிழ்ப்பதற்கு எம்.எல்.ஏக்களைக் கடத்துவது பற்றி எழுதியது ஆந்திரப் பிரதேசத்தில் நிகழ்ந்தது.

1972–ம் ஆண்டு ரிஜன்சி அச்சகம் ஒரு நாவலை வெளியிட்டது. அதன் பெயர் 'கருப்புக் கடத்தல்காரன்' (*Black Abductor*) எழுதியவர் ஹாரிசன் ஜேம்ஸ். புனைப்பெயர் ஜேம்ஸ் ரஸ்க்.

அந்த நாவலில் தீவிரவாதிகள் குழு ஒன்று வலதுசாரி சிந்தனையுள்ள ஒரு பெரிய பணக்காரரின் மகளைக் கடத்துகிறது. அவள் ஒரு கல்லூரி மாணவி, பெயர் பாட்ரிஷியா. கடத்தும்போது அவளுடன் இருந்த பாய் ஃப்ரெண்டு அடித்து நொறுக்கப்படுகிறான். அவனை முதலில் சந்தேகப்படுகிறார்கள். பாட்ரிஷியா முதலில் தன்னைக் கடத்தினவர்களை எதிர்க்கிறாள். ஆனால், விரைவில் அவர்களின் கொள்கைகளின் வசிகரத்துக்கு அடிமையாகிறாள். அவளுடைய போலராய்டு போட்டோக்களை அவள் தந்தைக்கு அனுப்பி அமெரிக்காவின் முதல் அரசியல் கடத்தல் என்று அது பிரபலமாகிறது. இறுதியில் அவர்களைப் போலீஸ் பிடித்து கண்ணீர்ப் புகை வைத்து மடக்கிக் கொல்லப்படுகிறார்கள். இது நாவலின் கதை.

இந்த நாவல் வெளியாகி ஒது மாதம் கழித்து ராண்டால்ப் ஹர்ஸ்ட் – என்னும் வலதுசாரிப் பத்திரிகை முதலாளி பெரிய பணக்காரரின் மகள் பாட்ரிஷியா ஹர்ஸ்ட் என்பவள் அவளுடைய கல்லூரி வளாகத்தில் அபார்ட்மெண்ட்டிலிருந்து 'சிம்பயானிஸ் விடுதலைப்படை' என்கிற குழுவினரால் கடத்தப்படுகிறாள். நாவலில் உள்ளதுபோலவே பாட்ரிஷியா தன்னைக் கடத்தினவர்களை நேசித்து செய்திகள் அனுப்பத் துவங்கினாள். 1974–ல் எஃப்.பி.ஐ. அதிகாரிகள் அந்த நாவலின் ஆசிரியர் ரஸ்கைச் சந்தித்து சந்தேகப்பட்டுக் கேள்விகள் கேட்டபோது, நான் எழுதியது முழுக்க முழுக்க கற்பனைக் கதை, குற்றத்துக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை என்றார். பாட்ரிஷியா என்கிற பெயர், பணக்காரத் தந்தை, அவள் மனமாற்றம் எல்லாமே பொருந்துகிறது. இதைத் தற்செயல் என்பதா, கடத்தல்காரர்கள் ரஸ்கின் நாவலைப் படித்துவிட்டு அப்படியே செய்தார்களா என்று கண்டுகொள்ளவே முடியவில்லை. காரணம், போலீஸ் அவர்கள் அனைவரையும் சூழ்ந்து கொன்றுவிட்டது. அவர்களைக் கேட்டும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ரஸ்க் அதன்பின் நாடி ஜோசிய டைப்பில் இப்படிப்பட்ட நாவல்கள் எழுதுவதை நிறுத்திவிட்டு அம்புலிமாமா வகைக் கதைகள் எழுதி வருகிறார் என்று கேள்வி.

இங்கிலாந்து கணித இயற்பியல் பேராசிரியர் வாஸ்ஸர்மன் என்பவர் ஒரு சித்தாந்தம் சொல்கிறார்:

'உலகத்தில் உள்ள நடக்கிற, நடக்கப்போகிற சம்பவங்கள் அனைத்தும் காலமற்ற மனபிம்பங்களாக வடிவு கொண்டிருக்கின்றன. அவைகளுடன் உலகில் உள்ள ஒவ்வொரு உயிருள்ள, உயிரற்ற துகளுக்கும் சம்பந்தம் உள்ளது' என்கிறார். ரொம்ப குழப்புகிறதல்லவா? அவர் சொன்னதின் சாரம் இது: எல்லா சம்பவங்களுக்கும் இடையில் ஒரு தொடர்பிணைப்பு சங்கிலி போல இருக்கிறது. இவையெல்லாம் மனங்கள் மூலம் ஏற்படும் இணைப்புகள். உங்கள் ஸ்கூட்டரில் ஒரு விநோதமான சத்தம் வந்தால் சீக்கிரமே இன்ஜின் நின்று போகப்போகிறது என்று நாம் எப்படி யூகிக்கிறோம்? மூளையில் ஏற்படும் ஒரு பிம்பத்துக்கும் சலனத்துக்கும் எதிர்காலச் சம்பவத்துக்கும் ஓர் இணைப்பு மனத்திலேயே இருக்கிறதே. அதுபோல சிலருக்கு இந்த இணைப்பு கொஞ்சம் விஸ்தாரமாகவே இருந்து எதிர்காலத்தை அவர்களால் சொல்ல முடியும் என்று சொல்கிறார்கள்.

கேம்ப்ரிட்ஜ் பேராசிரியர் ஏட்ரியன் டாப்ஸ் என்பவர் சைட்ரானிக் அலை முகப்புகள் psitronic wavefronts என்கிற சங்கதி சொல்லியிருக்கிறார் – மிகவும் குழப்படிக்கும். அதைச் சொன்னால் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு 'பெப்ஸி உங்கள் சாய்ஸ்'க்கு போன் பண்ணச் சென்று விடுவீர்கள். அறிவியல் மூலம் எதிர்காலத்தை அறிவதை விளக்கும் முயற்சிகள்தாம் இவை. இதுவரை யாரும் திருப்தியாக அதைச் செய்யவில்லை.

கொம்பு முளைத்தவர்கள்!

(முரண் என்பது மாறுபடுதல், விரோதம் போன்ற பொருள்களில் புறநானூற்றுக் காலத்திலிருந்து பயிலும் தமிழ்ச்சொல். (கடு முரண் முதலை, புறம் 37) இப்போது இன்னும் நளினமான அர்த்தங்கள் பெற்று அனாமலி போன்ற ஆங்கில வார்த்தைக்கு ஈடாக அதைப் பயன்படுத்த முடிகிறது.

இவ்வகையில் முரண்பாடு என்பது எதிர்பார்த்த அமைப்பு, விதி, அல்லது வழக்கத்திலிருந்து விலகிய நிகழ்ச்சி.)

உலகில் பல முரண்பாடுகளைச் சரித்திரத்தில் குறிப்பிட்டிருக் கிறார்கள். அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்தில் ஓர் இடத்தில் புதைந்திருந்த சில மண்டையோடுகளைத் தோண்டியெடுத் தார்கள். மனித மண்டைகள்தாம். ஆனால், எல்லாவற்றிலும் சின்ன முளை போலக் கொம்புகள் இருந்தன என்று சத்தியம் பண்ணியிருக் கிறார்கள். ஏதோ ஓர் அருங்காட்சியகத்தில் வைத்திருக்கிறார்களாம்.

மற்றொரு இடத்தில், இது மினிசோட்டா மாகாணத்தில், ஏழு எலும்புக்கூடுகளைத் தோண்டியெடுத்தார்கள். ஏழும் வாயில் இரண்டு இரண்டு வரிசையில் பற்கள், அதாவது மேல் வரிசை இரண்டு கீழ்வரிசை இரண்டு. மொத்தம் நாலு! கொஞ்சம் நன்றாக அரைத்துச் சாப்பிட்டிருப்பார்கள் போல.

வயோமிங் மாகாணத்தில் ஒரு பதினாலு அங்குல முழு மனிதனின் உடலைக் கண்டெடுத்தார்கள். கைகால் எல்லாம் சரியான விகிதாசாரத் தில், சர்க்கஸ் குள்ளர்கள் போல ஏறுக்கு மாறாக இல்லாமல்.

இவைகளெல்லாம்தான் முரண்பாடுகள். செய்தித்தாள்களிலும் படங்களிலும் பதிந்து வைத்திருந்தாலும் இவைகளை நம்புவதற்கு நாம் சொந்தமாகப் போய் இருக்கிற அடையாள சாட்சியங்களைப் பார்த்துத்தான் திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியும்.

ஆனால், ஸ்காட்லந்தில் ஓர் இடத்தில் கற்பாறையைப் பிளந்தபோது அதனுள் ஒரே ஒரு தங்க இழை பிசிறாக நீட்டிக்கொண்டிருக்கிறது. அது எப்படி பாறைக்குள் போயிருக்கும் என்று இதுவரை யாரும் சரியாக விளக்கம் சொல்ல முடியவில்லை.

தென்ஆப்ரிக்கா மாலியில் டோகான் என்னும் பழங்குடி மக்கள் சிரியஸ் பி என்னும் நட்சத்திரத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். அவர்கள் நாட்டுப்புற வழக்கில் இதைப் பற்றிய குறிப்புகள் உள்ளனவாம்.

இதில் விந்தை இந்த நட்சத்திரங்கள் இரவில் நம் கண்ணுக்குத் தெரியாதது. வான இயலின் நவீன நாட்களில்தான், மிகவும் சக்தி வாய்ந்த டெலஸ்கோப்புகள் மூலம் அது கண்டுபிடிக்கப்பட்டது. அதுபற்றி டெலஸ்கோப்பும் மேற்கத்திய அறிவியலறிவும் இல்லாமல் பழங்குடியினருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

கார்ல் சாகன் கார்னெல் பல்கலைக்கழகத்தின் வானஇயல் நிபுணர், பிரபலமான அறிவியல் எழுத்தாளர். பிரபஞ்சத்தில் இருக்கும் கோடானுகோடிக்கணக்கான நட்சத்திரக் கூட்டங்களில் மிகமிகச் சிறு விழுக்காடு சாத்தியக்கூறு இருந்தால்கூட நம் பூமியில் போல உயிரினங்கள் வாழ்ந்து அழிந்ததற்கான சாத்தியங்கள் பல விண்வெளிக் கிரகங்களில் இருந்திருக்கலாம் என்று எழுதியிருக்கிறார்.

ஆனால், ஆப்ரிக்க 'டோகான்' பழங்குடியினருக்கு சிரியஸ் நட்சத்திரத்தைப் பற்றிய அறிவு விண்வெளி மனிதர்களிடமிருந்து வந்திருக்கலாம் என்கிற சித்தாந்தத்தை சாகன் ஒப்புக்கொள்ளவில்லை.

பதிலாக ஐரோப்பாவிலிருந்து போன யாராவது அவர்களுக்கு இந்த அறிவு புகட்டியிருக்கலாம் என்று தன்னுடைய 'காஸ்மிக் கனெக்ஷன்' என்னும் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

இதைப் பலர் ஒப்புக்கொள்ளவில்லை. காரணம், அந்தப் பழங்குடியினருடன் ஐரோப்பியர்கள் என்ன மொழியில் பேசி அவ்வளவு நுட்பமான வானஇயல் அறிவைக் கொடுத்திருக்க முடியும் என்பது பதில் பெறாத கேள்வியாகிறது.

மக்ரியா என்னும் பிரிட்டிஷ் வானியல் நிபுணர் 'டோகான்' பழங்குடி மக்கள் பாலைவனத்தில் சிரியஸ் நட்சத்திரத்தைக் கானல் நீர் மாய பிம்பமாக மிராஜ் ரூபத்தில் பார்த்திருக்க முடியும் (சிலவேளை சிரியஸ் மாலை வேளைகளில் தோன்றும்) என்ற ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருக்கிறார்.

இதையும் பலர் ஒப்புக்கொள்வதில்லை.

மிஸிஸிப்பி நதியின் மேற்கரையில் செயிண்ட் லூயிஸ் என்னும் இடத்தில் ஒரு கற்படுகையைத் தோண்டியெடுத்தார்கள்.

அதில் ஒரு ஜோடி மனிதக்கால்களின் காலடிச்சுவடு பதிந்திருக்கிறது. பத்தரை அங்குல நீளம், நாலு அங்குல அகலம், முன்னங்கால் பகுதியில் இரு பின்னங்கால்களுக்கும் இடையே ஆறேகால் அங்குலமும் இரு கட்டை விரல்களிடையே பதின்மூன்றரை அங்குலமும் கொண்ட அழுத்தமான பதிவு. அது பதிந்திருக்கும் விதத்தைப் பார்த்தால், அந்தக் கற்படுகை மிக நெகிழ்வாக இருந்தபோது பதிந்தது என்று சொல்லமுடிகிறது. கல்லில் அத்தனை அழுத்தமாகக் கால் பதிக்க

முடியாது. இதில் என்ன அதிசயம் என்கிறீர்களா?

பூமியியல், ஜியாலஜிப்படி அந்தக் கற்படுகையின் வயதை அறிவியல் முறைகளில் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தக் காலடிகள் 27 கோடி வருடங்களுக்கு முன் பதிந்தவை என்று தெரிகிறது.

அப்போது மனிதன், மனிதரூபத்தில்தான் இருந்தானா என்பதற்கோ சக்தி படைத்திருந்தானா என்பதற்கோ, இப்போது நாம் நடப்பது போல்தான் நடந்து கொண்டிருந்தானா அல்லது நம்பவே முடியாத அளவுக்கு வெகுதூரம் வரை பல நாட்கள் விடாமல் நடந்து கொண்டே இருக்கும் சக்தி பெற்றிருந்தானா என்பதற்கோ எந்த சாட்சியமும் இல்லை.

அகஸ்டஸ் ஹேரும் பிளாட்பார பெண்மணியும்!

"Coincidence" என்கிற ஆங்கில வார்த்தைக்கு தற்செயல் என்பது நேரடியான சொல் அல்ல. கொஞ்சம் அதிசயம் கலந்த தற்செயல் என்று வேண்டுமானால் மொழிமாற்றலாம். தற்செயலான நிகழ்ச்சிகள் எப்போதும் மனிதர்களுக்கு மகிழ்ச்சி அளித்து வந்திருக்கின்றன. (உதாரணம் லாட்டரி டிக்கெட்) காரணம்... உலகின் சம்பவங்களுக்குள் பௌதிக விதிகளுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு விதி அல்லது தொடர்பு அல்லது காரணம் இருப்பது போல பிரமையை அவை ஏற்படுத்துகின்றன. நம் சோதிட சாத்திரங்கள் அனைத்தும் இந்த தற்செயல் நிகழ்வின்பாற்பட்டவைதான். நாம் பிறந்த அதே சமயத்தில் வானத்தில் கிரகங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட பாதையில் குறிப்பிட்ட இடத்தில் இருந்திருக்கின்றன. அந்த 'செலஸ்டியல்' நிகழ்ச்சி தனித்தன்மை கொண்டது. அது நம் வாழ்க்கையின் சம்பவங்களைப் பாதிக்கின்றன என்னும்போது ஆதாரம் ஒரு கோயின்சிடன்ஸ்தானே?

இந்த பொருத்த நிகழ்வுகளை நாம் மனத்தால் கட்டுப்படுத்த இயலுமா? அல்லது அவை கடவுளின் மனதில் தோன்றும் விருப்பமா? அல்லது மனித இனத்துக்கே பொதுவான ஓர் ஒருமித்த ஞாபகம் அல்லது உணர்வு இருக்கிறதா?– இப்படி அடுக்கடுக்காகச் சிந்திக்க வைக்கின்றன இந்த தற்செயலான சம்பவங்கள்.

உதாரணமாக, பிரெஞ்சு தேசத்து பதினாறாம் லூயி மன்னன் பிறந்தபோது ஒரு சோதிடர் 'இந்தக் குழந்தை ஒவ்வொரு மாதமும் 21–ம் தேதி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று சொன்னார். அந்த மன்னன் வாழ்வின் மிக முக்கியமான திருப்புமுனை சம்பவங்கள் எல்லாம் 21–ம் தேதிகளில் நிகழ்ந்தன. ஜூன் 21, 1791–ல் மன்னனும் ராணியும் ப்ரெஞ்ச் புரட்சியின்போது கைது செய்யப்பட்டனர். செப்டம்பர் 21–ல் பிரான்ஸ் குடியரசாகத் தன்னை அறிவித்துக் கொண்டது. ஜனவரி 21, 1793–ல் லூயி மன்னன் தூக்கிலிடப்பட்டான். இந்த சம்பவத்தைப் பாருங்கள்... அகஸ்டஸ் ஹேர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு நல்ல எழுத்தாளர். சித்திரக்காரர். பேய்க் கதைகளுக்குப் பெயர் போனவர். 1830–ல் பதினாலு மாதக் குழந்தையாக

அவருடைய அத்தைக்குத் தத்து (சுவீகாரமாக) கொடுக்கப்பட்டவர்.

வளர்ந்து ஆளாகி ஆக்ஸ்போர்டில் படித்துப் பெரும்பாலும் ஐரோப்பாவில் வாழ்ந்த அவர். எப்போதாவது இங்கிலாந்து வருவார். வந்தவர் தன் சுயசரித்திரத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் –

"நான் தத்து எடுக்கப்பட்ட பதினேழு ஆண்டுகள் கழிந்த அதே தினத்தில் என் அத்தையோடு சேர்ந்து இருக்கச் சென்றேன். அன்று ரயில்வே ஸ்டேஷனில் ஓர் ஏழைப் பெண்மணி பிளாட்பாரத்தில் அழுதுகொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு சிறு குழந்தை இருந்தது. என் அத்தை அவளிடம் போய் 'என்னம்மா துக்கம் உனக்கு? ஏன் அழுகிறாய்? ஏதாவது பிரச்னையா?' என்று கேட்டாள்.

"என் குழந்தை பதிமூணு மாசம்தான் ஆகிறது. இன்றைக்கு இந்த ரயிலில் வருகிறவர் அதை எடுத்துச் செல்லப் போகிறார். இதை இதன் அத்தைக்குத் தத்தாகக் கொடுத்துவிடப் போகிறேன். இனி இந்தக் குழந்தையை நான் பார்க்கவே மாட்டேன். அதற்காகத்தான் அழுகிறேன்' என்றாள்!" அற்புதமான தற்செயல் இது!

இதில் கடவுள் செயல் இருந்தால் அதன் காரணம் என்ன என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

'இல்லை, உலகத்தில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. அவ்வப்போது அவற்றைப் பொருத்திப் பார்த்தால் இம்மாதிரியான அபூர்வ பொருத்தங்கள் அடிக்கடி நிகழ்ந்துதான் ஆகவேண்டும்' என்று சொல்பவர்களும் உண்டு. 'நான் இருக்கிறேன் என்று கடவுள் நேரடியாகத் தோன்றாமல் மறைமுகமாக உணர்த்தும் தருணங்கள் இவை' என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

கடைசியாக இந்த சம்பவத்தைப் பாருங்கள் –

ஜோசப் எய்கனர் என்பவர் ஒரு சித்திரக்காரர். தன் 18–ம் வயதில் தூக்கு போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தார். இது வியன்னாவில் 1836ம் ஆண்டில் நடந்தது. அந்த தற்கொலை முயற்சியை கடைசி கணத்தில் காப்புச்சின் இயக்கத்தைச் சேர்ந்த சாமியார் ஒருவர் வந்து தடுத்தார். எய்கனர் நான்கு வருஷம் கழித்து புடாபெஸ்ட் நகரில் மறுபடி தற்கொலை முயற்சித்தபோது அதே சாமியார் வந்து தடுத்தார். எட்டு வருஷம் கழித்து எய்கனர் கைது செய்யப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டார். கடைசி சமயத்தில் ஒரு சாமியார் சொல்லி தூக்குமேடையிலிருந்து காப்பாற்றப்பட்டார். அதே காப்புச்சின் சாமியார்! இறுதியில் 68 வயசில் எய்கனர் தன் விருப்பப்படியே துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக்கொண்டு உயிர் துறந்தார். அவருடைய அந்திமக் கிரியைகளை நடத்திக் கொடுத்தவர்? ஒரு சாமியார் ... அதே சாமியார்தான்! அவருடைய பெயரை எய்கனர் இறுதி வரை தெரிந்துகொள்ளவே இல்லை. வந்துபோனது சாமியாரா ... இல்லை ஏதோ ஒரு தேவ தூதரா? இந்தக் கதை ரிப்ளியின் 'நம்பினால் நம்புங்கள்' புத்தகத்தில் உள்ளது

பகீர் பொருத்தம் பதினாறு!

ஆர்தர் கோஸ்லர் என் அபிமான எழுத்தாளர்களில் ஒருவர். அவருடைய ஆக்ட் ஆஃப் க்ரியேஷன் (படைப்புச் செயல்) என்னும் புத்தகம் எனக்கு படைப்பிலக்கியத்தைப் பற்றிய பல கருத்துக்களைத் தெளிவுபடுத்தியது. அவர் 'தி ரூட்ஸ் ஆஃப் கோயின்சிடன்ஸ்' (தற்செயலின் ஆதாரங்கள்) என்று ஓர் அருமையான புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் தற்செயலான நிகழ்ச்சிகளுக்கு ஒருவிதமான அறிவியல் ரீதியான விளக்கம் தந்திருக்கிறார். கொஞ்சம் சிக்கலான விளக்கம். அந்தப் புத்தகத்தை எழுதியதும், கோஸ்லருக்குப் பல கடிதங்கள் வந்தன. அவைகளில் மிக சுவாரஸ்யமானது, டப்ளின் அயர்லாந்திலிருந்து ஆந்தொனி க்ளான்ஸி என்பவர் கடிதம்.

நான் வாரத்தின் ஏழாவது நாள் பிறந்தேன். ஏழாவது மாதம், ஏழாம் தேதி. நான் ஏழாவது குழந்தையாகப் பிறந்தவருக்குப் பிறந்த ஏழாவது குழந்தை. எனக்கு ஏழு சகோதரர்கள். என் 27–வது பிறந்த நாளில் எனக்கு ஒரு குதிரைப் பந்தயத்துக்குப் போயிருந்தேன். ஏழாவது பந்தயத்தில் ஓடும் குதிரைகளின் பட்டியலைப் பார்த்தபோது, ஏழாவது குதிரையின் பெயர் 'ஏழாவது சொர்க்கம்' என்றிருந்தது. அதன்மேல் ஏழு ஷில்லிங் கட்டினேன். அந்தக் குதிரை ஏழாயிரம் பவுண்ட் ஜெயித்தது என்று சொல்லியிருந்தால், கடிதத்தை நம்புவதில் தயக்கம் ஏற்படும். மாறாக, கடிதம் இப்படி முடிகிறது:

அந்தக் குதிரை ஏழாவதாக வந்தது!

பல பேருக்கு எண் ராசியில் நம்பிக்கை உண்டு. அதுவும் தமிழ் நாட்டில் இது மிக அதிகம். நியூமராலஜிப்படி ஏக்கர் கணக்கில் ஜோசியங்கள் பத்திரிகைகளில் வருகின்றன.

சென்னையில் பல கார்களின் எண்களைக் கூட்டினால் ஒன்பது வரும். இந்த ஒன்பது, தமிழ்நாட்டின் செல்லப்பிள்ளை. இதற்காக ஆர்.டி.ஓ. ஆபீஸில் தனிக் கட்டணம் வாங்குகிறார்கள். மிகவும் ராசியில்லாத எண் எட்டு. இதை யாரும் சிந்த மாட்டார்கள் – என் நண்பர், டைரக்டர் ஷங்கரைத் தவிர!

அவர் கார் வாங்கும்போது வேண்டுமென்றே எட்டாம் நம்பரைத்

தேர்ந்தெடுத்தார். அவர் வாங்கிய மாருதி 1000 காரின் பதிவு நம்பர் எட்டு! சமீபத்தில் அதை விற்றுவிட்டு ஒரு ஹோண்டா சிட்டி கார் வாங்கினார். இந்த முறை என்ன நம்பராக இருந்தாலும் பரவாயில்லை என்றார். அவருக்கு வந்த எண்? எட்டு!

அவரிடம் வாஸ்து சாஸ்திரத்தைப் பற்றி ஒரு தனிப்பட்ட கதை இருக்கிறது. இனி, சரித்திரப் பிரசித்திப் பெற்ற அமெரிக்க ஜனாதிபதி களின் பதினாறு பொருத்தங்களைப் பார்க்கலாம்:

1. லிங்கன் 1860–லும் கென்னடி 1960–லும் ஜனாதிபதியானார்கள். சரியாக நூறு வருஷம்!

2. இருவரும் நீக்ரோ இனத்தினரின் உரிமைகளில் தீவிரமாக அழ்ந்திருந்தார்கள்.

3. இருவரும் வெள்ளிக்கிழமை தத்தம் மனைவிகளின் அருகில் இருக்கும்போது, சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

4. இரு மனைவியரும் வெள்ளை மாளிகையில் வாழும்போது பிள்ளை பெற்று, பிறந்ததும் குழந்தை இறந்தது.

5. கென்னடி, லிங்கன் இருவரும் தலையின் பின்பகுதியில் குண்டு துளைத்துச் செத்தார்கள்.

6. லிங்கன் இறந்தது ஃபோர்டு அரங்கத்தில். கென்னடி செத்தது – லிங்கன் என்ற பெயர் கொண்ட காரில்! அந்த காரைத் தயாரித்தது ஃபோர்டு மோட்டார் கம்பெனி!

7. இருவரும் இறந்த பின்னர், ஜான்சன் என்ற பெயருள்ளவர்கள் ஜனாதிபதியாக உடனே பதவியேற்றார்கள். ஆண்ட்ரு ஜான்சன், லிண்டன் ஜான்சன்.

8. ஆண்ட்ரு ஜான்சன் பிறந்தது 1808. லிண்டன் ஜான்சன் பிறந்தது 1908.

9. லிங்கனின் செயலாளரின் முன்பெயர் ஜான். அதே சமயம், ஜான் கென்னடியின் செயலாளரின் பின்பெயர் லிங்கன்!

10. இருவரையும் கொன்றவர்கள் பிறந்த வருடங்கள் ஜான் வில்க்ஸ் பூத் 1839, லீ ஹார்வி ஆஸ்வார்டு 1939. சரியாக நூறு வருஷம்!

11. கொன்ற இருவரும் தென்மாநிலத் தீவிரவாதிகள்.

12. இருவரும் பிடிபட்டு, வழக்குத் தொடுப்பதற்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

13. பூத், லிங்கனை ஒரு அரங்கத்தில் கொன்றுவிட்டு ஒரு கிடங்குக்கு ஓடினான். ஆஸ்வால்டு, ஒரு கிடங்கிலிருந்து கொன்றுவிட்டு தியேட்டர் நோக்கி ஓடினான்.

14. லிங்கன், கென்னடி இரண்டு பெயர்களும் ஆங்கிலத்தில் ஏழு எழுத்துக்கள்.

15. அடுத்த ஜனாதிபதியான ஆண்ட்ரு ஜான்சன், லிண்டன் ஜான்சன் இருவர் பெயரும் 13 எழுத்துக்கள்.

16. கொன்றவர்களான ஜான் வில்க்ஸ் பூத், லீ ஹார்வி ஆஸ்வால்டு இருவர் பெயரும் (இங்கிலீஷில்தான்) 15 எழுத்துக்கள்!

இறுதியாக –

லிங்கன் முதல் முறை ஜனாதிபதி பதவிக்கு மனுபோடும்போது, ஜான் கென்னடி என்பவரை உபஜனாதிபதியாகப் பரிந்துரைத்திருந்தார்.

என்ன பொருத்தம்? எத்தனை பொருத்தம்!

இது தற்செயலா?

ரெண்டல்லோ . . . ரெண்டும் ஒன்றல்லோ!

போன கேள்விக்குப் பதில் அளிக்கும் முன் விதி பற்றிச் பேசலாம். நம்முடைய நம்பிக்கைகளில் விதி முக்கிய அங்கம் வகிக்கிறது. பிரமன் தலையில் எழுதி வைத்தபடிதான் நடக்கும் என்பதுதான் அடிக்கடி ஆறுதல்கள். (வள்ளுவர் 'ஊழ்' என்று ஒரு முக்கியமான அதிகாரம் எழுதியிருக்கிறார். 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்கிறவர், பின்னர் மற்றொரு அதிகாரத்தில் (ஆள்வினை உடைமை) 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்று மாற்றுக் கருத்து சொல்கிறார்.)

என் நோக்கமும் இதுதான். ஊழ் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகத் தோன்றினாலும், அதை வெல்ல முடியும் என்கிற நம்பிக்கை நம்மைச் செலுத்தவேண்டும். இல்லையேல், 'எல்லாம் விதிப்படி நடக்கட்டும், நமக்கு அதில் எந்தக் கட்டுப்பாடும் பொறுப்பும் இல்லை' என்று சும்மா இருந்துவிடும் அபாயம் உள்ளது. 'ஊழிற்றாக நின்செய்கை என்று புறநானூறில் வருவதுபோல் முறைப்படி நடத்தல் என்கிற அர்த்தத்திலும் அந்த வார்த்தை பயன்படுகிறது.

சில சம்பவங்களைப் பார்க்கையில் அவற்றில் முன்பே விதிக்கப் பட்ட, தீர்மானித்த ஓர் அம்சம் இருப்பதுபோலத் தோன்றுகிறது. பெர்முடாவில் ஒருவர் தன் குட்டி ஸ்கூட்டர் மொபெட்டில் சென்றுகொண்டிருந்தபோது, சாலையில் ஒரு டாக்ஸி இடித்து விபத்தில் இறந்துபோனார். சரியாக ஒரு வருஷம் கழித்து 1975–இல் அவருடைய சகோதரர் அதே தெருவில் அதே மொபெட்டில் சென்றுகொண்டிருந்தபோது அதே டாக்ஸி டிரைவரால் (அதே பிரயாணி) அடிபட்டு இறந்துபோனார். டூமச்!

நாம் பார்த்த கென்னடி – லிங்கன் சம்பவங்களை மனதில் கொண்டு வாருங்கள். இதற்கு அதிசயமற்ற விளக்கம் ஒன்றும் தரமுடியும் – வாழ்க்கை என்பது பல்லாயிரக்கணக்கான சம்பவங்கள் நிறைந்தது. இந்த நிலையில் எந்த இருவரின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டு சம்பவங்களை ஒப்பிட்டாலும், ஒரு பத்துப் பதினைந்து

பொருந்தத்தான் செய்யும். என் தந்தையாரிடம் என் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கலைப் பற்றி சொல்லும்போது 'எனக்கும் உன் வயசுல இதே மாதிரி நடந்திருக்குடா. என் வாழ்க்கையின் பிரச்னைகளைத்தான் நீ மறுபடி வாழ்கிறாய். உன் வாழ்க்கையின் பிரச்னைகளை வேறு வடிவத்தில் உன் மகன்கள் திரும்ப வாழ்வார்கள்' என்று சொல்வார்.

கவனமாக ஒப்பிட்டுப் பார்த்தால், கிரேக்கத் துன்பியல் நாடகங்கள் போல எல்லோர் வாழ்க்கையும் அவர்தம் பெற்றோர்களின் வாழ்க்கையின் மறுபிரதிதான், மறு நிகழ்வுதான் என்று ஒரு மிக வலுவான கருத்துக்கு ஆதாரம் கிடைக்கும்.

இது சரியா என்று உங்கள் வாழ்வின் சம்பவங்களை உங்கள் தந்தை – தாயாருடன் ஒப்பிட்டுச் சொல்லுங்களேன்.

ஆனால், நான் சொல்ல வருவது எந்த இருவரின் வாழ்வையும் ஒப்பிட்டால், சில பொருத்தங்கள் இருந்தே தீரும். அவை ஸ்டாட்டிஸ்டிக்ஸ் விதிகளின்படித்தான் இயங்குகின்றன. அதில்கூட, தற்செயல்தான் அதிகம். கடவுள் செயல் இல்லை. எல்லோரும் பொருத்தங்களைப் பற்றிப் பேசும்போது, அந்த பொருத்த விதிக்கு உட்படாத சம்பவங்களைச் சொல்லாமல் விட்டுவிடுவார்கள். சொன்ன சம்பவங்களைவிட சொல்லாததையும் சேர்த்துப் பார்த்தால், பொதுவாக ஒரு சில ஒற்றுமைகளைத்தான் கண்டுபிடிக்க முடியும். தவிர அவற்றை அற்புதச் செயல், கடவுள் செயல் என்று சொல்கிற அளவுக்கு இருக்காது. இவ்வகையில் உங்கள் வாழ்க்கையும் இந்திரா காந்தி, ரஜினிகாந்த் அவர்கள் வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கூட பொருத்தங்கள் பல இருக்கும். வாழ்க்கையின் திருப்பம் எனக்கு ஒரு போன்கால் மூலம் வந்தது, ரஜினிக்கும் அவ்வாறு வந்திருக்கலாம்.

எல்லாச் சம்பவங்களையும் அவை நிகழ்ந்த பிறகு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவற்றில் ஒற்றுமை இருப்பதைக் கண்டுபிடிப்பது எளிது. நடக்கப்போவதைச் சொல்வது பலித்தால்தான் அதை அதிசயம் என்று சொல்லலாம். இதுவரை பார்த்தவை முழுவதும் அதிசயம் இல்லை. ஆச்சரியப்பட வைத்தவைதான் சில.

இரட்டையரில் ஒருவருக்கு ஏதாவது என்றால் அது மற்றவர் எங்கிருந்தாலும் பாதிக்கும் என்று சொல்கிறார்கள். அதை 'க்ரோனோ ஜெனட்டிக்ஸ்' என்று ஓர் இயலாகவே சொல்கிறார்கள். இதை இரட்டையர் பெற்றோர் என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். ஜானும் ஆர்தரும் இரட்டையர்கள். மே மாதம் 22, 1975–இல் இருவருக்கும் ஒருவருக்கொருவர் அறியாமல் நெஞ்சுவலி வந்தது.

இருவரையும் ஆஸ்பத்திரிக்கு விரைவில் அழைத்துச் சென்றார்கள். ஒருவர் ப்ரிஸ்டலில் ஒரு மருத்துவமனையிலும், மற்றவர் அங்கிருந்து எண்பது மைல் தூரத்திலும். இருவரும் ஆஸ்பத்திரி வந்து சேர்ந்த உடன் ஹார்ட் அட்டாக்கில் இறந்துபோனார்கள்!

கண்ணாலே மெழுகுவர்த்தி கொளுத்த முடியுமா?

பகவான் ஸ்ரீ சத்யசாய்பாபாவைப் பற்றி சில வாரங்களுக்கு முன் எழுதியிருந்தது நினைவிருக்கலாம். அதைத் தொடர்ந்து ஓர் அன்பர் மூன்று நாட்களுக்கு ஒரு முறை எனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக் கிறார். சாய்பாபாவின் அற்புதச் செயல்களைப் பற்றிய பற்பல புத்தகங்களிலிருந்து ஜெராக்ஸ் எடுத்து அனுப்புகிறார். அதில் ஒரு புத்தகத்தில் பேராசிரியர் பாரனாவ்ஸ்கி என்பவர் சாய்பாபா பூஜை நடைபெற்ற ஒரு வீட்டின் ஹாலிலிருந்து மாடிக்கு ஓர் இருண்ட அறைக்குச் சென்றபோது அதில் ஸ்டூலில் வைத்திருந்த ஒரு மெழுகு வத்தி திடீரென்று தானாகவே பற்றிக்கொண்டு ஜோதி காட்டியதில் அதில் சாய்பாபா படம் தெரிந்ததாம். இந்த மாதிரியான அதிசயங்கள் பல பட்டியலிட்டிருந்தார். அதை அதிசயம் என்று உங்களால் ஒப்புக்கொள்ள முடிந்தால் சரி.

ஆங்கிலத்தில் Poltergeist என்று இந்த மாதிரியான தன்னிச்சையான இயற்கை மீறல்களைச் சொல்கிறார்கள். கனடாவில் பாராசைக்காலஜி ஆராய்ச்சி செய்யும் பல பல்கலைக்கழகங்கள் உள்ளன. தொலைக்காட்சி யில் டிஸ்கவரி சானலில் Equinox (ஈக்வினாக்ஸ்) என்கிற ஒரு சுவாரஸ்ய மான நிகழ்ச்சி வருகிறது. அற்புதச் செயல்கள் என்று சொல்வதெல்லாம் எப்படிச் செய்கிறார்கள் என்று விலாவாரியாகக் காட்டுகிறார்கள். ஒரு இளைஞர் கையை அந்தரத்தில் ஆட்டினால் மேஜைமேல் வைத்திருக்கும் பைபிளின் பக்கங்கள் தானாகவே புரள்கின்றன. இது எப்படி சாத்தியம்? அந்த இளைஞர் சுவாசப்பையில் காற்று நிரப்பி மூச்சுக்காற்றை சத்தமே இல்லாமல் வெளியிடும் வித்தையைப் பழகியிருக்கிறார் ... இவ்வாறு பல அற்புதச் செயல்கள் தந்திரமாக மறைக்கப்பட்ட தினசரி இயக்கங்கள்தாம். ஜேம்ஸ் ராண்டி (James Randy) என்பவர், இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்ட எதையாவது யாரேனும் தான் நம்பும் வகையில் செய்து காட்டினால் 11 லட்சம் டாலர் பரிசளிப்பதாக அறிவித்திருக்கிறார். இதுவரை யாரும் அந்தப் பரிசை அடையவில்லை.

ஆகவே, எனக்கு தபால் போடும் அன்பருக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் பெயர், விலாசம் இரண்டையும் கொடுங்கள். 'ஒரு சாய் பக்தர்' என்று மட்டும் கையெழுத்திடுகிறீர்கள். தபால் முத்திரையிலிருந்து சென்னையில் இருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. பெயர், விலாசம் கொடுத்தால் நிருபர் ஒருவர் தங்களை வந்து சந்தித்து தாங்கள் குறிப்பிடும் அற்புதச் செயல்களைத் தங்களைத் தவிர மற்றவர்கள் பார்த்தார்களா என்று விவரம் தெரிந்து மேல்விவரம் விசாரிப்பார்கள்.

உலகின் தலைசிறந்த மாஜிக் நிபுணர்களான டேவிட் காப்பர்ஃபீல்டு, சொர்க்கார் போன்றவர்கள் தானாகவே பற்றிக்கொள்ளும் அந்த மெழுகுவத்தியை மிகச் சுலபமாக செய்து காட்ட முடியும். அப்படிக் காட்ட முடியவில்லை என்றால்தான் அது அற்புதச் செயல்.

Para psychology-யின் புதிய வரையறைகளின்படி ஆவி, உருவெளித் தோற்றம் போன்ற சமாசாரங்கள் எல்லாம் மனத்தால் உருவாக்கப்பட்டு உடலுக்கு வெளியே தெரிபவை. எனவே, நான் ஒரு ஆவியைப் பார்த்தேன் என்று ஒருவர் சொன்னால் மட்டும் போதாது. இருவர், மூவர், பலர் பார்த்திருக்க வேண்டும். அறிவியலாலும் அதை விளக்க முடியாமல் இருக்க வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு நீதிக் கதை சொல்ல ஆசைப்படுகிறேன். அதை வைத்து மேற்கொண்டு நீங்கள் முடிவு செய்யலாம்.

"கொம்பு முளைச்ச குதிரையைப் பார்த்தேன்!"

பொதுவாக நீதிக்கதைகளை இரண்டு விதமாகப் படிக்க வேண்டும். ஒன்று ஒரு சிறு குழந்தையின் ஆர்வத்துடன் அறியாமையுடன். மற்றது அனுபவமுள்ள உலக விசித்திரங்கள் தெரிந்தவரின் விரக்தியுடன். இரண்டு தளங்களில் இயங்கும் இக்கதைகளில் பொதிந்த அர்த்தங்களைக் கண்டுகொண்டு பிரித்துப் பார்ப்பதில்தான் பலருக்கு சந்தோஷம். உதாரணமாக, அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளரான ஜேம்ஸ் தர்பர் *'Fables of our Time'* என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். ஓல்லியான அருமையான புத்தகம். பெங்வின் பதிப்பித்திருக்கிறார்கள். வாங்கிப் படியுங்கள். அதில் "The Unicorn in the Garden" என்கிற நீதிக்கதை உலகப் பிரசித்தமானது.

அது இப்படிப் போகிறது–

ஒரு கணவன் அதிகாலை எழுந்து சன்னல் திரையைத் திறந்து பார்த்துவிட்டு 'யுனிகார்ன்' 'யுனிகார்ன்' என்று கத்தினார். (யுனிகார்ன் என்பது ஒரு கற்பனையான அதிசய குதிரை மிருகம். தலையில் கொம்பு முளைத்த குதிரை இது. கையில் எந்நேரமும் கண்ணாடி வைத்திருக்கும் ஒரு கன்னிப் பெண்ணால் மட்டுமே இந்த ஒற்றைக் கொம்புக் குதிரையைக் கட்டுப்படுத்தி தன் வசம் வைத்திருக்க முடியும் என்பது ஒரு பிரெஞ்சு நாட்டு நம்பிக்கை! 'யுனிகார்ன்' ஒரு செக்ஸ் சின்னம் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். நம்முடைய தேவலோகத்து 'யாளி' போல. எங்களூர் ஸ்ரீரங்கத்தில் யாளியின் சிற்பங்கள் உள்ளன. அரங்கனுக்கு ஒரு வாகனம்கூட உண்டு. ஆனால், அம்மாதிரி மிருகம் எதும் ஜூவாலஜிப்படி கிடையாது.) கணவன் உடனே தன் மனைவியை அழைத்து 'பாரு பாரு... தோட்டத்தில் யுனிகார்ன் மேயுது' என்று சமையலறைக்கு ஓடிவந்து சொன்னான். மனைவி போட்டது போட்டபடி ஓடிவந்து பார்த்தாள். பார்த்தால் கொம்புக் குதிரையாவது ஒண்ணாவது... மனைவி கணவனை முறைத்துப் பார்த்தாள். "காலைலயே குடிக்க ஆரம்பிச்சுட்டீங்களா?"

"சேச்சே ... நிஜமாவே யுனிகார்னைப் பார்த்தேன் கண்ணு!"

"அது ஒரு புராணக் கற்பனை. அந்த மாதிரி மிருகம் உலகத்தில் இல்லை. இருக்க முடியாது."

"நான் பார்த்தேன்!"

"எப்படி பார்த்திருக்க முடியும்? உங்களுக்கு மண்டைல மூளை இல்லையா?"

இவ்வாறு வாக்குவாதம் வலுத்தது. அடுத்த வாரம் முழுவதும் கணவன் இதைப்பற்றியே வரும் போகும் நண்பர்களிடமும் அந்நியர் களிடமும் பேசிக்கொண்டிருக்க, மனைவிக்கு கெட்ட கோபம் வந்தது. "பாருங்க ... நீங்க யுனிகார்ன் புராணத்தை நிறுத்தப் போறீங்களா இல்லையா? கடைசி முறையா கேக்கறேன்."

"நான் பார்த்தேனே! எப்படி பொய் சொல்ல முடியும்?"

"The Unicorn is a mythical animal" என்று இரைந்தாள். "நான் பார்த்தேனே!" என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் மண்டையில் ஒரு பிசுபிசுப்பற்ற டெலிப்லான் தோசை திருப்பியால் அடித்துவிட்டு நேராக ஒரு மனோதத்துவ டாக்டரைப் பார்க்கச் சென்றாள். "டாக்டர் ... தோட்டத்தில் யுனிகார்னைப் பார்த்தேன்கறார் டாக்டர்!"

"மேடம் யுனிகார்ன்ங்கறது ஒரு கற்பனை மிருகம்"

"அதைத்தான் நான் சொன்னேன். அவர் நான் பார்த்தேன்னு போற வரவங்க எல்லார்கிட்டயும் சொல்றார். அன்னிக்குப் பாருங்க ... பேப்பர் பில் கேக்க வந்த சின்னப் பையன்கிட்ட சொல்றார் – 'தோட்டத்தில் நிதானமா மேஞ்சுகிட்டு இருந்தது தம்பி! சொன்னா யாரும் கேக்க மாட்டாங்கறாங்க'ன்னு! அவன் 'முனியப்பன் கோயில் விபூதி அடிச்சுருங்கம்மா ஒருமுறை' என்கிறாள்."

டாக்டர் யோசித்தார். "பாருங்கம்மா உங்க கணவருக்கு ஹலுசினே ஷன்–சித்தப்பிரமை. அடுத்த ஸ்டேஜ்க்குப் போனா சேர்க்க வேண்டி வரும். அதனால் நாளை காலை பதினோரு மணிக்கு போலிஸ் பக்கபலத்தோட நான் வரேன்" என்று சொல்லிவிட்டு, அவள் சென்றதும் ஒரு தடிமனான புத்தகத்தைப் புரட்டி மருத்துவ சரித்திரத்தில் யாரேனும் யுனிகார்ன் பார்த்ததாகச் சொல்லியிருக் கிறார்களா என்று தேடிப்பார்த்தார். ஒரு அட்சரம் இல்லை!

மறுதினம் காலை 11–க்கு ஒரு போலீஸ் ஜீப் வாசலில் காத்திருக்க ... டாக்டர் உள்ளே நுழைந்து கணவனைச் சந்தித்தார்.

"என்ன சார் ... எப்படி இருக்கீங்க?"

"அதை நீங்கன்னா சொல்லணும் ..."

"உங்க மனைவி சொல்றாங்க. நீங்க தோட்டத்தில் யுனிகார்ன் மிருகத்தைப் பார்த்ததா ..."

"யுனிகார்னா? நானா? பார்த்தனா?"

"ஆமாம்! அப்படித்தான் சொன்னாங்க."

"டாக்டர்! யுனிகார்ன்ங்கறது ஒரு கற்பனை மிருகம். அதை யாராலும் பார்க்க முடியாது"

"அப்ப நீங்க பார்த்ததா இவங்க சொன்னது?"

"இவ எப்பவுமே இப்படித்தான். ஒரு மாதிரி லேசா கிறுக்கு!" என்று தலையில் பக்கவாட்டில் ஆள்காட்டி விரலைக் காட்டித் திருகிக் காட்டினார்.

"என்ன சொன்னே!" என்று ஆக்ரோஷத்துடன் மனைவி ஒரு பெரிய பால்காய்ச்சும் பாத்திரத்தை கணவன் மேல் எறிய, நூலிழையில் தப்பினார்.

"இதான் டாக்டர் தினம்!"

மனைவி அலமாரியில் வைத்திருந்த, காதி கிராஃப்டில் வாங்கிய அலங்காரப் பிள்ளையார்களை எல்லோர் மேலும் எறியத் துவங்க... பொதுவாக அந்த இடத்து அமைதி குலைந்தது.

"பேஷண்ட் வன்முறையில் ஈடுபடுகிறார். எடுத்துச் செல்லுங்கள்" என்று மனைவியின் கைகாலை பின்பக்கம் பிணைத்து வாயில் பட்டையாக டேப் ஒட்டி தத்தி தத்தி அழைத்துச்சென்றார்கள்.

தர்பர் ஒரு பக்கம்தான் எழுதியிருக்கும் இந்தக் கதையை என் பாணியில் லேசாக விஸ்தரித்து எழுதியிருக்கிறேன். தர்பர் இதன் இறுதியில் ஒரு நீதியும் சொல்லியிருக்கிறார். நவீன வாழ்க்கையின் கோணத்தில் பார்த்தால் பல நீதிகள் இதில் உள்ளன. உதாரணமாக, உண்மை என்பது சில சமயம்தான் சரிப்படும்.

உயிருக்கு ஆபத்தென்றால் உண்மையையும் கைவிடலாம்.

ஒரு சம்பவத்தை இருவராவது பார்த்தால்தான் அது உண்மை. இதைத்தான் நான் எனக்கு சாய்பாபா பற்றி கடிதமெழுதும் அன்பருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

தலை சுற்றும் தற்செயல்கள்!

கோயின்சிடன்ஸ் – தற்செயல் பொருத்தங்களைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லி, விட்டுவிடுவோம். சில சிறிய சிறிய தற்செயல் சம்பவங்களின் தொகுப்பு இது.

ரயில் மூவர்

மூன்று ஆங்கிலேயர்கள் தென் அமெரிக்க பெரு நாட்டில் 1920ல் ஒரு ரயில் வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தபோது ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொண்டார்கள் முதல் முறையாக. அவர்கள் மூன்று பேர்தான் மொத்தமே ரயிலில்.

அவர்கள் பெயர்கள்? முதல்வர் பெயர் பிங்ஹம். இரண்டாமவர் பெயர் போவெல். மூன்றாமவர் பெயர் பிங்ஹம் போவெல்!

இரண்டு ரிக்டர்கள்

ப்ராங்க் ரிக்டர் என்பவர் முதல் உலகப் போரிலிருந்து ஓய்வு பெற்று அமெரிக்க பேருந்து கம்பெனி ஒன்றில் பணிபுரிந்து வந்தார். அவருக்கு ஒரு முறை நிமோனியா வந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார். அதே ஆஸ்பத்திரியில் மற்றொரு ப்ராங்க் ரிக்டர் என்பவரும் அதே நிமோனியாவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். வேடிக்கை என்னவென்றால், அந்த ரிக்டரும் முதல் உலக யுத்தத்திலிருந்து ஓய்வு பெற்று ஒரு பேருந்துநிலையத்தில் பணிபுரிபவர்!

டிரைவர் ஆனபோதும்...!

1974–ம் வருடம் 'தி சண்டே டைம்ஸ்' பத்திரிகை நடத்திய வாசகர் போட்டியில் நம்பமுடியாத தற்செயல் பற்றி எக்கச்சக்கமான வர்கள் தக்க ஆதாரத்துடன் தங்கள் வாழ்க்கைக் கதையை எழுதினார் கள். அதிலும்; பேஜ் என்ற முன்னாள் ராணுவ வீரனின் கதைதான் எல்லோரையும் விழிபிதுங்க வைத்தது. அவர் இப்படிச் சொல்லி யிருந்தார்–'1940–ம் வருடம் ஜூலை மாதம் இங்கிலாந்து ராணுவத்தில் நான் ஒரு இளம் ராணுவ வீரன். ரொம்ப நாளாக நான் பாதுகாத் திருந்த கல்யாண போட்டோக்களை என் மனைவி போஸ்டில் அனுப்பி வைத்தாள். எனக்கு வந்த கவரை ஆர்வத்தோடு நான்

பிரித்துப் பார்த்தபோது, அதில் இருந்தது கிட்டத்தட்ட என் வயதில் இருந்த வேறு ஒருவரின் கல்யாண போட்டோக்கள். லெட்டர் யாருக்கு வந்திருக்கிறது என்று உறையைத் திருப்பி சரியாகப் பார்த்தேன். 'பேஜ்' என்ற பெயருக்கு அல்ல, 'பேப்' என்ற பெயருக்கு. என்னுடைய ராணுவ நம்பர் 1509321. ஆனால், அந்த 'பேப்' என்பவர் எனக்கு அடுத்த நம்பர் – 1509322. அதே ராணுவ முகாமில் இன்னொரு குழுவுடன் பணி புரிந்துகொண்டிருந்த பேப்பிடம் அவர் கல்யாணப் படங்களை ஒப்படைக்கப் போனால், என் மனைவியிடமிருந்து வந்த கல்யாண போட்டோக்களைத் தவறுதலாகப் பிரித்துப் பார்த்துவிட்டு குழப்பத்தோடு உட்கார்ந்திருந்தார்.

ராணுவத்தை விட்ட பின் லண்டன் டிரான்ஸ்போர்ட்டில் டிரைவர் வேலையில் சேர்ந்தேன். ஒருமுறை எனக்கு வந்த சம்பள கவரில் சம்பள அளவு குறைச்சலாக இருந்தது. கவரைத் திருப்பிப் பார்த்தேன். அது என் கவர். திருப்பிக் கொடுக்கப் போனால், என் கவரை வைத்துக்கொண்டு, அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் திருதிருவென்று நின்றிருந்தார் அதே ராணுவ ஆசாமி! தற்செயலாக அவர் லைசென்ஸ் நம்பரை வாங்கிப் பார்த்தேன் 29223. ராணுவம் போலவே இங்கும் எனக்கு அடுத்த நம்பர். என் நம்பர் 29222.'

வானத்திலிருந்து விழுந்த குழந்தை

ஜோசப் பிக்லாக் என்பவர் டெட்ராய்ட் நகரில் (1930) ஒரு தெருவில் நடந்துகொண்டு இருந்தபோது மாடியிலிருந்து ஒரு குழந்தை தொபுக்கடீர் என்று அவர் மேல் விழுந்து உயிர்தப்பியது.

ஒரு வருஷம் கழித்து அதே குழந்தை அதே மாடி ஜன்னலிலிருந்து அதே அவர்மேல் விழுந்தது.

இந்த முறையும் உயிர்தப்பியது.

நண்பர்கள்

அமெரிக்காவில் பிரபல தொலைக்காட்சி நிருபரான க்யு ப்ரிமெட் என்பவர் 1953–ல் லண்டனுக்கு எலிசபெத் அரசியின் முடிசூட்டு விழாவை நேரடியாக விவரிப்பதற்காக சென்றிருந்தார். அங்கே சவாய் ஓட்டலில் தங்கினார். அந்த ஓட்டல் அறையில் இருந்த ஒரு இழுப்பறையைத் திறந்தபோது ஆச்சரியம் ... அவருடைய பழைய நண்பர் ஹாரி ஹான் என்பவரின் பொருள்கள் சில இருந்தன. 'விட்டுப்போயிருப்பார் ... அமெரிக்கா திரும்பியதும் கொடுத்து விடலாம்' என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது ஹானிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவரை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

'நான் இங்கே பாரீஸில் தங்கியிருக்கிறேன். இந்த ஓட்டல் அறையில் இழுப்பறையைத் திறந்தபோது உன்னுடைய பெயர் பொறித்த டை ஒன்று இருந்தது. அதை உனக்கு அனுப்பிவிடவா?' என்று கேட்டிருந்தார் கடிதத்தில்.

நாய்கூட

நாற்பது வருஷத்துக்கு முன் இரட்டையர்கள் பிறந்த சிறிது நேரத்தில் வெவ்றே குடும்பங்களில் வளர்வதற்காக கொடுக்கப்பட்டு விட்டனர். ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்ளவே இல்லை. வேறு வேறு ஊரில் வளர்ந்தார்கள். 1979–ல் அவர்களுக்கு 39 வயசாக இருக்கும்போதுதான் அவர்கள் சந்தித்துக்கொண்டனர் முதன் முறையாக.

தங்கள் வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இருவருக்கும் ஆச்சரியம். இருவருக்கும் ஜேம்ஸ் என்று பெயர். இருவரும் சட்ட மீறல் தடுப்பு உத்தியோகத்தில் இருந்தார்கள். இருவருக்கும் சித்திரம் வரைவதிலும் தச்சு வேலைகளிலும் இஷ்டம். இருவருக்கும் மனைவி யின் பெயர் லிண்டா. இருவருக்கும் ஒரே ஒரு மகன். மகன்கள் மனைவியரின் பெயர் விண்டா. இருவருக்கும் ஒரே ஒரு மகன். மகள்கள் இருவர் பெயரும் ஜேம்ஸ் ஆலன். (இரண்டாவது ஆலனுக்கு ஸ்பெல்லிங்கில் ஒரு 'எல்' எழுத்து அதிகம். அவ்வளவுதான்!). இருவரும் விவாகரத்தாகி மீண்டும் கல்யாணம் செய்துகொண்டவர்கள். அந்தப் பெண்களின் பெயர் பெட்டி. இருவரும் நாய் வளர்த்தார்கள். பெயர்? இரண்டுமே டைனி!

நம்ப முடிகிறதா? ரீடர்ஸ் டைஜஸ்ட், ஜனவரி 1980 இதழில் இதைப் படித்தேன்.

விசுவாசக் கடிகாரம்

பதினான்காம் லூயி மன்னன் வைத்திருந்த ஒரு அலங்காரக் கடிகாரம் அந்த மன்னன் இறந்த அதே கணத்தில் நின்றுபோனதாம். சரியாக காலை 7.45 செப்டம்பர் 1, 1715. அதற்கப்புறம் ஓடவே இல்லை.

அண்ணனின் அங்கி

ஜேம்ஸ் ஸ்பைசட் என்பர் 1787–ம் ஆண்டு ஜனவரி 25–ம் தேதி யுத்தத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் அப்போது அணிந்திருந்த கோட்டு, அவருடைய அண்ணன் டானியலுடையது. அதை அணிந்திருந்தபோதுதான் மூத்தவர் மூன்று வருஷத்துக்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே கோட்டு மட்டும் இல்லை... அண்ணன் மார்பில் துளைத்த அதே துளையின் மூலம்தான் குண்டு பாய்ந்து தம்பியும் இறந்தாராம். இது எப்படி?

இனி இந்த மறுபிறவி சமாசாரத்தைப் பார்க்கலாம்.

பூர்வஜென்ம ஞாபக ஸ்பெஷலிஸ்ட்!

மறுபிறவித் தத்துவத்தின் பிறப்பிடம் இந்தியாதான். இந்தியாவில் பிறந்த மதங்கள் அனைத்தும் மறுபிறவியில் நம்பிக்கை கொண்டுள்ளன. பல புராதன மதங்களும் ஏதாவது ஒரு விதத்தில் மறுபிறவியை நம்புகின்றன. காலத்தால் புதிய கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களில்தான் மறுபிறவி என்பது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை– அதே சமயம், இறந்துபோன ஆத்மா காத்திருந்து சொர்க்கத்துக்குப் போவது இருக்கிறது.

இந்த நம்பிக்கைகளில் முக்கியமானது மறுபிறவி. டார்வினின் பரிணாமத் தத்துவத்தைப் பிற்காலத்தில் எதிர்பார்த்து வழிமொழியப் பட்ட தத்துவம் இது என்று கூறுபவர்கள் உண்டு. பரிணாமத் தத்துவத்தின்படி நாமெல்லோரும் ஒற்றை செல் உயிரினமாக பாக்டீரியாவிலிருந்து பிரதியெடுக்கும்போது தப்பு ஏற்பட்டு, அப்படித் தப்பாகப் பிரிந்த செல், உயிர் நீடிக்கும் சாத்தியக்கூறு அதிகமாகி மெல்ல மெல்ல ம்யுட்டேஷன் என்று சொல்லக்கூடிய பிரதியெடுக்கும் பிழைகளால் மீனாகி, புழுவாகி, பறவையாகி, விலங்காகி, குரங்காகி கடைசியில் மனிதப் பிறவிகளாகப் பரிணமித்தோம். அதற்கு வேண்டிய அளவு பலவித தப்புக்கள் நேர்ந்து, தட்டித் தடுக்கி ஒரு சரியான உயிரினமாகப் பரிணமிக்கத் தேவைப்படும் கால இடைவெளி இருந்திருக்கிறது. கோடானு கோடி வருஷங்களுக்குப் பின்தான் நாம் இந்த வடிவத்துக்கு வந்திருக்கிறோம் என்பது அறிவியலாளர்களால் பல்வேறு சாட்சியங்களைக் கொண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சித்தாந்தம்.

மறுபிறவிக் கருத்துக்களுடன் இதை ஒப்பிடும்போது, ஒரு சில விஷயங்களில் பொருந்துவது அதிசயமே. கீழ்நிலை உயிரினங்களாக இருந்து இருந்து மேல்நிலை உயிரினமாக வளர்ந்தது மனிதர்கள் என்கிற கருத்து சரியே. ஆனால், தப்புப் பண்ணிவிட்டால், மீண்டும் மனிதநிலை இழந்து ஒரு புழுவாகவோ காட்டுப் பன்றியாகவோ பிறப்போம் என்கிற கருத்தை அறிவியல் ஒப்புக்கொள்ளாது. இது ஒரு புத்திசாலித்தனமான பயமுறுத்தல். இதற்கு சமூக இயல்படி காரணங்கள் கற்பிக்கலாம்.

'இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்' என்று பக்தியுடன் பாடும்போத பல பிறவிகள் எடுத்து, அதில் நல்ல உத்தம ஆத்மாக்களாக இருந்து விட்டுத்தான் கடைசியில் மோட்சம் என்கிற கருத்து. இவை அனைத்துமே மனித வாழ்க்கையில் காட்டுமிராண்டியாக இல்லாமல், மனிதர்கள் நல்லதனமாக நடந்துகொள்ள ஏற்பட்ட வற்புறுத்தல்கள், மேலும் இதை யோசித்தால், பலவீனர்களை முரடர்களிடமிருந்து – காப்பதற்காக ஏற்பட்ட ஓர் உத்தி என்றும் யோசிக்க முடிகிறது. அல்லது மனித வாழ்க்கையின் இறுதியில் வயசாகிப்போவதால் ஏற்படும் சோகத்தையும் சங்கடங்களையும் சமாளிக்க ஒரு சொர்க்கம் என்னும் மறுகோடிப் பிரகாசம் தேவைப்படுகிறது.

ராஜஸ்தானில் ஒரு சிறுவன் தன்னுடைய முற்பிறவியின் சம்பவங் களைத் துல்லியமாக, பிறந்த இடம், பெற்றோர் பெயர்கள் போன்ற பல விரவங்களும் ஞாபகப்படுத்திக்கொண்டது சில வருஷங்களுக்கு முன் பிரபலமாகப் பேசப்பட்டது. பின்னர் அந்த விவகாரமே ஒரு செட்டப், பையனின் தந்தை போதித்தது என்று நிரூபிக்கப்பட்டது. (அதனால்தானோ தெரியவில்லை தற்போது மறுபிறவி கேஸ்கள் அதிகம் இல்லை).

ப்ரையன் வைஸ் என்கிற ஒரு மனோதத்துவ டாக்டர் (Brian L Weiless), Many Lives, Many Masters 'பல பிறவிகள் பல எஜமானர்கள்' என்கிற சுவாரஸ்யமான புத்தகத்தில் காத்தரின் என்கிற ஒரு பெண்ணின் வினோதமான 'வியாதி'யைப் பற்றி எழுதியிருக்கிறார்.

டாக்டர் வைஸ், ஒரு சம்பிரதாயமான சைக்கோதெராபிஸ்ட். காத்தரினுக்கு அவர் வழக்கம் போலத்தான் ட்ரங்க்விலைசர் ஆண்ட்டி டிப்ரெஸண்ட் மருந்துகளைக் கொடுத்தார். அவள் பயங்கள் நீரவில்லை. அவளை ஹிப்னாட்டிசத் தூக்கத்துக்கு ஆழ்த்தி, தன் இளமைக்கால நினைவுகளைக் கொண்டுவர வைத்தபோது ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

காத்தரினின் அண்மைக்கால நினைவுகளில் எந்தவித அதிர்ச்சிகர மான சம்பவங்களும் இல்லை. ஆனால், அவள் இன்னும் பின்னே போய் தன்னுடைய முற்பிறவியின் அதிர்ச்சிகர சம்பவங்களையும் கொண்டுவந்தாள். முதலில் இந்தப் பெண் ஏதோ இட்டுக்கட்டித்தான் சொல்கிறாள் என்று நம்பாமல் இருந்தார் டாக்டர். பின்னர் காத்தரின் பிறவிகளின் இடைவெளிகளிலிருந்தும் சில செய்திகள் கொண்டுவந்த போது, டாக்டர் ஆச்சரியப்பட்டார். அந்தச் செய்திகளில் டாக்டரின் குடும்பத்தைப் பற்றியும் அவருடைய இறந்துபோன மகனைப் பற்றியும் விவரங்கள் இருந்தன. அனைத்தும் சரியான தகவல்கள். காத்தரினுக்கு அவைகளைத் தெரிந்திருக்க சந்தர்ப்பமே இல்லை.

டாக்டர் வைஸ், இப்போது தன் கிளினிக்குக்கு வரும் எல்லா பேஷண்டுகளையும் முற்பிறவிக்கு அழைத்துச்சென்று, அந்தப் பிறவியில் ஏற்பட்ட அதிர்ச்சிகளை மறுபடியும் வரவழைத்து குணப்படுத்துகிறார்.

இந்தப் புதிய முறையைப் பலர் கேலி செய்கிறார்கள். ஆனால், வைஸ் மிகத் தீவிரமாக முற்பிறவியை நம்புகிறார். அவர் எதும் சாதாரண வைத்தியர் அல்ல... கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் யேல் மருத்துவப் பள்ளியிலும் படித்து எம்.டி. பட்டம் பெற்றவர். அவரை முற்பிறவியில் நம்ப வைத்த அந்த காத்தரினின் கதைதான் என்ன?

அதற்கு முன் எனக்கு நேர்ந்த 'முற்பிறவி' அனுபவம் பற்றிச் சொல்கிறேன். ஆனந்த விகடனில் எழுதிய ஒரு தொடர்கதை மூலம் இது எனக்கு ஏற்பட்டது.

தேடி வந்த மருமகன்!

சில ஆண்டுகளுக்கு முன் பெங்களூரில் இருக்கும்போது ஆனந்த விகடனில் 'ஆ' என்ற தலைப்பில் ஒரு தொடர்கதை எழுதினேன். அதில் கதாநாயகன் காதில் சில ஓசைகள் கேட்கின்றன. 'ஆடிட்டரி ஹாலூசினேஷன்' என்பதைப்பற்றி ஒரு மருத்துவ புத்தகத்தில் படித்தது, அதை எழுத எனக்கு ஐடியா கொடுத்தது. கதாநாயகனை, அடிக்கடி காதில் கேட்கும் குரல்கள் 'செத்துப்போ' என்று வற்புறுத்துகின்றன. அதை டாக்டர் தீவிரமாக விசாரிக்கையில், கதாநாயகனுடைய முற்பிறவியில் நடந்த ஒரு சம்பவத்துக்குச் செல்கிறது. அதில் நிகழ்ந்த ஒரு துரோகச் செயலுக்குக் கதை செல்கிறது.

கதையை முழுவதும் தருவது என் எண்ணம் இல்லை. மறுபிறவியைப் பற்றி கொஞ்சம் ஆழமாகவே படித்து ஆராய்ச்சி செய்து கதையில் ஓர் உண்மைத்தனம் படியும்படி எழுதியது வம்பாகப் போயிற்று.

கதை முடியும் தறுவாயில் இருக்கும்போது ஒரு நாள் இரவு பதினோரு மணிக்கு ஓர் இளைஞன் பெங்களூரில் எங்கள் வீட்டை விசாரித்துக்கொண்டு வந்தான். அவன், 'நான்தான் உங்கள் கதையின் நாயகன். முற்பிறவியில் நான் உங்கள் மருமகனாக இருந்திருக்கிறேன். இப்போது மீண்டும் உங்கள் மகளை கல்யாணம் செய்துகொள்ள வந்திருக்கிறேன்' என்றான்!

அவன் அதை தீவிரமாக நம்பினான் என்பது விரோதமற்ற முகத் தோற்றத்திலிருந்தும் எதிர்பார்ப்பிலிருந்தும் தெரிந்தது. அந்த இளைஞன் திருநெல்வேலியைச் சேர்ந்தவன். ராத்திரி பஸ் பிடித்து, வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டு, என்னைப் பார்க்க வந்திருக்கிறான். மேலும் விசாரித்ததில், அவனுக்கு ஷிட்ஸோப்ரீனியாவுக்காக ஊரில் சிகிச்சை தருகிறார்கள் என்பதும் தெரிந்தது. வரிசையாக அவனுக்கு ஷாக் மின் அதிர்ச்சி ட்ரீட்மெண்ட் கொடுக்கப்பட்டிருந்தது. அவனுடைய மன உலகில் என்னுடைய கற்பனைக் கதை நிஜம் என்று நம்பி, அதன் கதாநாயகனுடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு விட்டான். எனக்கு பெண் கிடையாது என்று சொல்லிப்பார்த்தேன். 'உங்களுக்கு அருகில் இருந்து ஏதாவது வேலையாவது செய்கிறேன்.

அதுதான் போன ஜென்மத்தில் நடந்தது' என்றான். தந்தையின் விலாசம் கண்டுபிடித்து தபால் எழுதி, இளைஞனுக்கு பஸ்சார்ஜ் கொடுத்து தக்க துணையுடன் அனுப்பிவைத்தேன். 'அடுத்த ஜென்மத்தில் வரும்போது கட்டாயம் பெண்ணைக் கொடுக்கிறேன்' என்று அனுப்பிவைத்தேன் ஒருவழியாக!

அடுத்து திருநெல்வேலி சென்றபோது, அவனுடைய தந்தை என்னை சந்தித்து நன்றி சொன்னார். 'இவனுக்குப் பார்க்காத வைத்தியம் இல்லை. இப்போது பரவாயில்லை' என்று சொன்னார்.

இந்த உதாரணம், எனக்கு இரண்டு பாடங்களைத் தந்தது. நாம் எழுதுவது ஒரு மனத்தை எப்படிப் பாதிக்கிறது என்று சொல்லவே முடியாது. இரண்டாவது, மறுபிறவி நம்பிக்கைகள் எல்லாம் சில சமயம் மனத்தில் ஏற்படும் கோளாறுகளினால் ஏற்படுவது என்று சிந்திக்க வைக்கிறது. கார்ல் யுங் என்கிற மிகப்பெரிய மனோதத்துவ அறிஞர் Collective unconscious - ஒருமித்த உணர்வற்ற தன்மை என்று ஒன்று சொல்கிறார்.

மனித இனத்தின் அத்தனை நினைவுகளும் நம்மைச் சுற்றிலும் பரவியிருக்கும் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி என்று சொல்கிறார். இந்த முற்பிறவி நினைவுகள் எல்லாம் அதனுடன் தற்செயலாக ஏற்படும் தொடர்பாக இருக்கலாம் என்று ஒரு விளக்கம் உண்டு. நாம் காணும் உண்மைகள் எல்லாம் மன பிம்பங்களே. அந்த பிம்பங்களையும் நிஜங்களையும் சிலரால் பாகுபடுத்த முடியாத நிலையில், சில வலுக்கட்டாயமான நம்பிக்கைகள் ஏற்படும். என்னதான் அறிவியல் ரீதியாக அது வெறும் கற்பனை அல்லது கண்கட்டு வித்தை என்று நிரூபித்தாலும், சில அற்புதச் செயல்களைப் பிடிவாதமாக நம்புபவர்களைக் கலைக்கவே முடியாது. பார்க்கப்போனால், மனித வாழ்வில் பல்வேறு வடிவங்களில் இந்த பிடிவாதங்கள் உண்டு. முதல் பிடிவாதம், 'நான் செய்தது எப்போதுமே சரியானது' என்கிற பிடிவாதம்.

இதிலிருந்து விடுபட்டு ஒருவர் தன் தப்பை ஒப்புக்கொள்ளும்போதே அவர் ஒரு மேல் மனிதராகிறார். சிலர் தான் செய்தது சரி என்று நிரூபிக்க சுப்ரீம் கோர்ட் வரை வாதாடுவார்கள். சிலர், தவறு என்று தெரிந்தும், அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சிலருக்கு மனதில் தான் நினைப்பது தவறு என்றே தெரியாது. இந்த வகையைச் சேர்ந்தவர்கள் ஆச்சரியங்களையும் அதிசயங்களையும் சுலபமாக நம்புவர்கள். ஆங்கிலத்தில் இவர்கள் gullible என்று விவரிப்பார்கள். என்னைப் பொறுத்தவரை நான் இந்தத் தொடரில் காட்டும் ஆச்சரியங்கள் எல்லாம் இதுவரை அறிவியலால் விளக்கம் பெறாதது என்கிற வகையில்தான் சேர்ப்பேன். எப்போதாவது விளக்கம் கிடைத்துவிடும் இவை அனைத்தும் தற்போதைய ஆச்சரியங்கள். உலகில் நடைபெறும் எல்லா சம்பவங்களுக்கும் காரணம் இருக்கிறது. சம்பவம் நடைபெறும்போது நம்மால் அதை எதிர்பார்க்கவோ அல்லது காரணம்

காட்டவோ முடியாத நிலையில் இருக்கலாம். (காலமும் பொறுமையும் தான் காரணங்களைக் காட்டும்.)

இந்தப் பின்னணியில் காத்தூரின் கதையைக் கொஞ்சம் விரிவாகத் தொட்டுப் பார்ப்போம்.

காத்தரின் கண்ட கனவுகள்!

காத்தரின், டாக்டர் வைஸை வந்து பார்த்தபோது, தன் பயங்களைப் பற்றி விவரமாகச் சொன்னாள்.

மேசைமேல் முழங்கையை வைத்துக்கொண்டாள் படபடவென்று பேசினாள்: "டாக்டர் என் வாழ்க்கை முழுவதுமே பயங்கள்தான். தண்ணீரைக் கண்டால் பயம். இருட்டைக் கண்டால் பயம். மாத்திரை சாப்பிடும்போது தொண்டை அடைத்துவிடுமோ என்று பயம். ஏரோப்ளேனில் போனால் பயம் பயம்."

"என்ன பயம்?"

"செத்துப்போய்விடுவேனோ என்று. என்னவோ தெரியவில்லை சமீபத்தில் இந்தப் பயங்கள் அதிகரித்து விட்டன, வீட்டில் தனியாக உறங்க பயமாக இருக்கிறது. யாராவது என்னை தாக்க வருவார்களோ என்று அலமாரிக்குள் கதவை மூடிக்கொண்டு தூங்க முயற்சிக்கிறேன். இரண்டு மூன்று மணிநேரம் தூக்கமே வருவதில்லை. பயம்... பயம்! அதன்பின் அசதி மேற்கொண்டு தூங்கிவிடுகிறேன். கனவு கண்டு எழுந்துவிடுகிறேன். சின்ன வயசில் தூக்கத்தில் நடப்பேனாம். இப்போது மறுபடி அதே பிரச்னை. தூக்கத்தில் எழுந்து நடந்து செல்கிறேன்." காத்தரின் பேசப் பேச டாக்டர் வைஸ் ஆச்சரியம் எதுவும் அடையவில்லை அவர் இந்த மாதிரி பேஷண்டுகள் பலரைப் பார்த்திருக்கிறார். சுலபமாகச் சரிபண்ண முடியும் என்று எண்ணினார். வழக்கம்போல் அவள் சிறுவயது ஞாபகங்களைப் பற்றிக் கேட்டார். அதில் ஏதாவது அதிர்ச்சிகரமான சம்பவம் நடந்திருக்கிறதா என்று பார்க்க. மெள்ள அவள் நினைவை அவள் இளமைக் காலத்துக்குக் கொண்டுசென்றார்.

அவள் இளமைக் காலத்தில் எதுவும் அதிர்ச்சியளிக்கக்கூடியதாக நிகழவே இல்லை.

நினைக்க நினைக்க அவள் இளமை நினைவுகளின் துண்டுப்படங்கள் ஓடின. ஒருமுறை அவளை, நீச்சல் குளத்தில் டைவ் அடிக்கும் பலகையிலிருந்து எதிர்பாராமல் தள்ளிவிட்டது அவள் ஞாபகத்தில் இருந்தது. பதினோரு வயதில் அவள் தாய் சற்றே பட்டும் படாமல்

இருந்தது அவள் மனதில் பாதித்திருந்தது. இதெல்லாம் ஒன்றும் பெரிய அதிர்ச்சிகள் இல்லை. அதிகம் நண்பர்கள் இல்லை. ஒரு சில நெருக்கமான நண்பர்கள் இருந்தார்கள். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவள். எளிமையான கடவுள் நம்பிக்கை இருந்தது.

பள்ளிப்படிப்பு முடிந்து லாப் டெக்னீஷியனுக்காகப் படித்தாள். சொந்த ஊரிலிருந்து விலகி மையாமி என்னும் நகருக்கு வேலைதேடிச் சென்றாள். அங்கே ஒரு யூத இளைஞனை சந்தித்து காதலித்து மணம் செய்துகொண்டாள். இரண்டு குழந்தைகள். சில மாதங்களுக்கு முன் தொண்டையில் ஒரு சிறிய அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கிறாள். அவ்வளவுதான். அவள் வாழ்வில் விபரீதமான சம்பவம் எதுவுமே இல்லை. சம்பிரதாயமான இளமைப்பருவம், சம்பிரதாயமான படிப்பு, சந்தோஷங்கள், பயங்கள், அவ்வளவுதான். ஆபரேஷன் முடிந்து நினைவு திரும்பும்போது மட்டும் மிகுந்த பய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

காத்தரின் அந்த நாட்களில் இரண்டு கனவுகள் கண்டாள். அதிலிருந்து ஆரம்பித்தது வினை. காரில் ஒரு மரப்பாலத்தைக் கடக்கும்போது பாலம் உடைந்து நீரில் விழுந்து மூழ்குவதாகவும் ஓர் இருட்டறையில் மாட்டிக்கொண்டு தடுமாறுவதாகவும், கனவுகள் திரும்பத் திரும்ப வந்தன. அதன்பின்தான் டாக்டர் வைஸை சந்திக்க வந்தாள். டாக்டர் வைஸ் அவளுக்கு பதினெட்டு மாதம் சிகிச்சை அளித்தார். தொடர்ந்து சம்பிரதாய மனோதத்துவ முறைப்படி சிகிச்சை. அவளது பழைய ஞாபகங்களை மறுபடி வரவழைத்து அதில் ஏதாவது காரணம் இருந்தால் இது அபாயமானதல்ல, வெறும் நினைவுத் துணுக்கு என்று காட்டிவிட்டு மெள்ள அவள் பயங்களைப் போக்கும் முறை. இந்த முறை பலரிடம் பயனளித்திருக்கிறது. அதைத்தான் முயன்றார்.

அவள் பயங்கள் விலகவில்லை. கெட்ட கனவுகள் இரட்டிப்பாகத் திரும்பின. பயங்கள், இருட்டைக் கண்டாலும் தண்ணீரைக் கண்டாலும் தொடர்ந்தன.

டாக்டர் வைஸுக்குப் புரியவே இல்லை. இளம் வயதில் இந்த பயங்களுக்கு காரணமே இல்லையே? என்ன இப்படி தொடர்ந்து பயப்படுகிறாள் என்பது விளங்கவில்லை. ஏமாற்றம், இவளை எப்படியாவது குணப்படுத்த வேண்டும் என்கிற வைராக்கியத்தை உண்டு பண்ணியது. அப்போது ஒரு முக்கியமான நிகழ்ச்சி அவள் வாழ்வில் ஏற்பட்டது.

காத்தரினுக்கு எப்போதுமே விமானத்தில் செல்ல பயம். அவள் கணவன் ஸ்டூவர்ட் சிகாகோ நகரத்துக்கு ஒரு மாநாட்டில் கலந்து கொள்ள செல்ல வேண்டியிருந்தது. காத்தரின் தன்னிச்சையாக நானும் வருகிறேன் என்றாள். சிகாகோ நகரில் ஒரு அரும்பொருளகத்தில் புராதன எகிப்திய கலைக் கண்காட்சிக்குச் சென்றாள். காத்தரினுக்குப் பொதுவாகவே புராதன எகிப்திய சரித்திரத்தில் ஆர்வம் உண்டு.

அந்த கண்காட்சியில் அவள் பார்த்த பொருட்கள் எல்லாம் அவளுக்கு மிகவும் பரிச்சயமானதாக இருந்தன. வழிகாட்டி கைடு நப்பாக ஏதோ சொல்ல, இல்லை அது அப்படியில்லை என்று திருத்தினாள். அவளுடைய முற்பிறவிப் பயணம் துவங்கியது.

"முழுகுகிறேன் . . . மூச்சு முட்டுகிறது!"

தான் இருப்பது 1863 என்று காத்தரின் சொன்னபோது டாக்டர் வைஸுக்கு முதலில் குழப்பமாக இருந்தது. 'சரி இன்னும் பல ஆண்டுகள் முன்னே வா, இப்போது என்ன பார்க்கிறாய் சொல்லு?' என்றார்.

"சொன்னேனே . . . சமையல் அடுப்பு தெரிகிறது. என் பெயர் கிளியஸ்ட்ரா. என் மகள் பெயர் ரேச்சல்."

வைஸ் அதிர்ந்துபோனார். அவள் மிகத் தெளிவாகப் பேசினாள். தேதி, உடைகள், மரங்களின் வருணனை எதிலும் குழப்பமே இல்லை. காத்தரின் தொடர்ந்தாள் – "அப்போதுதான் வெள்ளம் வந்தது – தப்பிக்க இடம் இல்லை . . . எங்கும் வெள்ளம். தண்ணீர் மிகக் குளிர்ந்து இருக்கிறது. என் குழந்தையை நான் காப்பாற்ற வேண்டும். முடியவில்லை . . . முழுகுகிறேன்! நீரை விழுங்குகிறேன். மூச்சு முட்டுகிறது. என் குழந்தை என்னிடமிருந்து பறிக்கப்படுகிறது." காத்தரின் இப்போது மெள்ள நிதானமாக மூச்சுவிட்டாள்." படபடப்பு அடங்கி கொஞ்ச நேரம் சும்மா இருந்தாள். "மேகங்களைப் பார்க்கிறேன். குழந்தை என்னிடம் இருக்கிறது. கிராமத்தில் மற்றவர்களும் இருக் கிறார்கள். என் சகோதரனைப் பார்க்கிறேன்!"

அவள் சொல்வது எதிலும் பாசாங்கே இல்லை. பொய் சொல்கிறாள் என்று சொல்லவே முடியவில்லை. அவள் பேசிய விதம், அவள் கொடுத்த நுட்பமான விவரங்கள் அனைத்தும் ஒழுங்காக . . . சீராக . . . கோர்வையாக இருந்தன.

ஷிகிட்ஸோப்ரீனியா இருக்குமோ என்று சந்தேகித்தார். இந்த உபாதையில் உள்ளவர்கள் வேறுவேறு குணாதிசயங்கள் கொண்டு வேறு மனிதர்களாகவே மாறுவார்கள்.

காத்தரின் அப்படியில்லை. ஒரே காத்தரின்தான். அவள் சொல்வது எதுவும் கற்பித்ததோ, கற்பனை செய்ததோ இல்லை. பின் அந்த நினைவுகள் யாவை? அது அவள் முன்ஜென்ம நினைவுகள்தானா?

டாக்டர் வைஸுக்கு மறுபிறவி, முன்ஜென்மம் பற்றி எதுவுமே தெரியாது. அவர் அதை நம்புபவரும் இல்லை. அவர் படித்தது அறிவியல். இப்போது அவர் கண்ணெதிரே ஒரு விளக்கமில்லாத மறுபிறவிக்கான சாட்சியங்கள் ... அத்தாட்சிகள்!

"வேறு ஏதாவது ஞாபகமிருக்கிறதா?" என்றார்.

"கறுப்பு லேஸ் என் தலையில் அணிந்திருக்கிறேன். தலை நரைத்திருக்கிறது. 1756–ம் ஆண்டு நான் ஒரு ஸ்பெயின் தேசப் பெண் – பெயர் லுயிஸ்ஸா. 56 வயது.

நடனமாடிக்கொண்டிருக்கிறேன். மற்றவரும் நடனமாடுகிறார்கள். ஜுரம்! நிறைய பேருக்கு ஜுரம். மக்கள் இறந்துபோகிறார்கள். டாக்டர்களுக்கு அது நீரிலிருந்து வந்த வியாதி என்பது தெரியவில்லை. பலர் இறந்துபோகிறார்கள்!"

டாக்டர் வைஸ் சட்டென காத்தரினை உலுக்கி நிகழ்காலத்துக்குக் கொண்டுவர, தலை வலிக்கிறது என்று சொன்னாள். எல்லாம் அந்த ஜுரத்தால் என்றாள். அந்த ஜென்மத் தலைவலி!

சற்று நேரத்துக்குப் பின் காத்தரின் அந்த வாழ்வில் தான் ஒரு விலைமகள் என்றாள். இதை முன்னால் சொல்ல வெட்கப்பட்டதாகச் சொன்னாள்.

டாக்டர் வைஸ், "இதில் நான் யார்?" என்று கேட்டார்!

"நீங்கள் என் ஆசிரியர். புத்தகங்களிலிருந்து சொல்லிக் கொடுக்கிறீர்கள். உங்களுக்கு வயசாகி தலை நரைத்துவிட்டது உங்கள் பெயர் டயாஜின்ஸ். வருஷம் 1568" என்று மறுபடி ரொம்ப பழைய ஜென்மத்து(?)க்குப் போனாள்.

"இன்று சிகிச்சை போதும்" என்று முடித்துவிட்டார்.

அவள் சென்றதும் டாக்டர் வைஸ் அதைப்பற்றி பிரமிப்புடன் யோசித்தார். காத்தரின் நிச்சயம் அதைக் கற்பனை செய்துதான் சொல்கிறாள் என்கிற தீர்மானத்துக்கு வந்தார். அவர் மனம் மறுபிறவித் தத்துவத்தை ஏற்க முழுவதும் மறுத்தது. டாக்டர் வைஸ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் படிக்கையில் மதங்களின் ஒப்பியல் பாடம் இருந்தது. அந்தப் பாடப் புத்தகங்களை எடுத்துப் பார்த்தார்.

பைபிளின் பழைய, புதிய ஏற்பாடுகளில் மறுபிறவியைப் பற்றிய குறிப்புக்கள் ஆரம்பத்தில் இருந்தனவாம். கி.பி. 325–ல் கான்ஸ்டண்டைன் என்ற ரோமானியச் சக்ரவர்த்தி தன் தாய் ஹெலினாவின் விருப்பப்படி புதிய ஏற்பாட்டில் உள்ள மறுபிறவிக் குறிப்புக்களை நீக்கிவிட்டாராம்.

கான்ஸ்டாண்ட்டிநோப்பிள் நகரில் கி.பி. 553–ல் இரண்டாவது கவுன்சில் கூட்டத்தில் அந்தக் குறிப்புக்களை நீக்கியது சரியே என்று தீர்மானித்து, மறுபிறவியைப் பற்றி பேசுவது மதக்குற்றம் என்று தடை செய்யச் சொன்னார்கள். சர்ச்சின் வலுவான பாதிப்பில்

மறுபிறவி தத்துவத்தை ஒப்புக்கொண்டால், மானுடர்களுக்குப் பாவமன்னிப்புக்கு அதிக சமயம் கிடைப்பதை அவர்கள் விரும்ப வில்லை. என்பதைக் காரணமாகச் சொல்கிறார்கள்.

எப்படியும் ஆரம்ப காலத்தில் மறுபிறவிக் குறிப்புகள் வேதாகமத்தில் இருந்ததாகத்தான் சொல்கிறார்கள். க்னாஸ்டிக்ஸ் (Gnostics) என்று சொல்லப்படும் ஆரம்பகால கிறித்துவ சிறுபான்மையினர், தாங்கள் முன்னால் ஒரு பிறவி எடுத்திருந்ததாகவும் இனியும் பிறப்போம் என்றும் நம்பியிருக்கிறார்கள். பிற்பாடுதான் அந்தத் தத்துவம் திருத்தப் பட்டது. இருக்கட்டும், காத்தரின் மன அமைதி பெற்றாளா?

கல்லறை சொன்ன கதை

அதன்பின் காத்தரினின் பயங்கள் மெள்ள விலக ஆரம்பித்தன. வாரம் தவறாமல் அவள் டாக்டர் வைஸின் க்ளினிக்குக்குத் திரும்பி வந்தாள். ஒவ்வொரு வாரமும் அவள் ஹிப்னாடிசத் தூக்கத்தில் தன் பூர்வ ஜன்மங்களை – நுட்பமாக விவரித்தாள். "பல தேசங்கள், பல மொழிகள், பல காலகட்டங்கள், பல வயகுகள். மெள்ள மெள்ள அவளுக்கு 'சைக்கிக் பவர்' என்று சொல்லும் மனோசக்தி அதிக மாகியது!" என்று டாக்டர் வைஸ் சொல்கிறார். அவளால் குதிரைப் பந்தயங்களில் ஜெயிக்கும் குதிரைகளை முன்கூட்டியே யூகிக்க முடிந்தது. மறுபிறவியை நம்பாத டாக்டர் வைஸ் அதன் மேல் முழு நம்பிக்கை வைக்கத் துவங்கினார். அவர் குடும்பமே ஏறக்குறைய நம்மூர் சாமியார் குடும்பம் போல ஆகிவிட்டது என்பதைப் புத்தகத்தில் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார்.

கடைசியில் எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக காத்தரின், டாக்டர் வைஸின் முன்பிறவியைப் பற்றிச் சொன்னாள்.

"டாக்டர்! உன்னுடைய கல்லறையைப் பார்க்கிறேன்!" என்றாள்.

"என்னுடையதா?"

"ஆம் . . .!"

"அதில் என்ன எழுதியிருக்கிறது?"

"நோபிள் என்று பெயர் எழுதியிருக்கிறது. 1668 – 1724. அதன் மேல் ஒரு மலர் வைத்திருக்கிறது. பிரான்சிலா, ரஷ்யாவிலா தெரிய வில்லை. நீ சிவப்பில் சிருடை அணிந்திருக்கிறாய். ஒரு குதிரையிலிருந்து தள்ளப்பட்டு விழுந்துவிட்டாய். கையில் தங்க மோதிரம். அதில் ஒரு இலச்சினை . . ."

காத்தரின், டாக்டர் வைஸ் – இருவரின் பூர்வஜன்ம உரையாடல்கள் அதனுடன் முடிந்தன.

பின் அவள் பயங்கள் அனைத்தும் விலகி, நார்மலாகிவிட்டாள்.

காத்தரினின் இந்தக் கதையை நான் கொஞ்சம் விவரமாக கொடுத்ததற்குக் காரணம், மேற்கத்திய நகர நாகரிகத்திலும் பலர்

மறுபிறவியில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்த்தவே. இந்து, பௌத்த மதங்களில் இயல்பாகவே மறுபிறவிக் கருத்துக்கள் இருப்பதால், நம் நாடுகளில் அந்த நம்பிக்கைகள் அதிகம் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அவர்கள் மதத்தில் அந்த கருத்துக்கள் நீக்கப்பட்டு விட்டன.

இருந்தும் நவீன அமெரிக்காவில் குறிப்பாக கலிபோர்னியாவில் இந்த மாதிரி தத்துவங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்பதுதான் அதில் ஆச்சரியம்.

இதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்கலாம். இல்லை. மறுபிறவித் தத்துவத்தின் ஆதார காரணங்களை ஆராய்வது எனக்கு சுவாரஸ்யமாக இருக்கிறது. அவ்வளவே!

மறுபிறவிக்கு நாம் முன்பு சொன்னதுபோல் ஒரு தேவை இருக்கிறது. நாம் இறந்தபின், அப்படியே காணாமற் போய்விடப் போவதில்லை. ஏதோ ஒரு தொடர்ச்சி இருக்கப் போகிறது என்கிற எண்ணம். ஒரு சுகமான எண்ணம்.

மீண்டும் வந்து நாம் மிச்சம் வைத்த காரியங்களை முடிக்கலாம். மிச்ச வைத்த ஆசைகளை நிறைவேற்றலாம் என்கிற கருத்து!

ரே–ப்ராட்பரியின் அழகான சிறுகதையில் ஒரு மாணவன் தன்னை விட வயதில் மூத்த ஆசிரியை மேல் மையல் கொள்கிறான். அவளைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறான். அவள் சிரித்து, 'பாரப்பா! இதை சமூகம் ஒப்புக்கொள்ளாது!' என்று சமாதானப்படுத்துகிறாள். அதன்பின் இருவரும் பிரிந்துவிடுகிறார்கள். வேறு ஊருக்கு வந்து சில வருஷங்கள் கழித்து, ஒரு பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்துகொள்கிறான். மனைவியிடம், தன் சிறுவயதில் செய்த பைத்தியக் காரத்தனத்தை விவரிக்கிறான். அவள் புன்னகைக்கிறாள். ஒருமுறை அவன் தான் படித்த பள்ளிக்குத் திரும்பச் செல்கிறான். அந்த டீச்சரைப் பற்றி விசாரிக்கிறான். 'அவள் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலேயே இறந்துவிட்டாள்' என்று சொல்கிறார்கள். அவள் கல்லறையைத் தேடி மனைவியுடன் செல்கிறான்.

கல்லறையில் அந்த டீச்சர் பிறந்த தேதியும் இறந்த தேதியும் பொறித்திருக்கிறது.

அவனுடன் இருக்கும் மனைவி, "இதில் ஆச்சரியம் பார்த்தீர்களா?" என்றாள்.

"என்ன ...?"

"இவள் இறந்த தேதியில்தான் நான் பிறந்திருக்கிறேன்!" என்கிறாள்.

கிங்ஸ்லி ஏமிஸ்ஸின் கவிதை வரிகள் எனக்கு மிகவும் பிடித்தது.

"மரணத்துக்காக படுக்கையை விட்டு எழுந்திருக்கத் தேவையில்லை. எங்கிருந்தாலும் இலவசமாகக் கொண்டு தருவார்கள்!" என்கிறார்.

Death has got something to be said for it
There is no need to get out of bed for it
Wherever you may be
They bring it to you free

இம்மாதிரி வேடிக்கை பண்ணுவதற்குக் காரணம்? பயத்தை மறைக்கத் தான் !

பயமுறுத்தும் முக்கோணம்

பெர்முடா முக்கோணம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அமெரிக்காவில் ஃப்ளாரிடா கடற்கரைக்குக் கிழக்கே கடலில் ஒரு முக்கோணப் பரப்பில் பல விமானங்களும் கப்பல்களும் காணாமல் போயிருக்கின்றன. இதைத் தற்செயலான விஷயம் என்று சொல்வது கஷ்டமாக இருக்கிறது. 'அந்தப் பகுதியில் ஏதோ ஒரு மாய சக்தி இருக்கிறது... அது கப்பல்களையும் விமானங்களையும் சாப்பிடுகிறது' என்று சொல்கிறவர்கள் இன்றும் இருக்கிறார்கள். உண்மை விபத்துக்கள் ஒருசிலவற்றுடன் பலவித கற்பனைச் சம்பவங்கள் சேர்ந்து பெர்முடா முக்கோணம் ஒரு அமானுஷ்யமான அபாயப் பிரதேசம் என்று சொல்லுமளவுக்கு ஒரு காலகட்டத்தில் பிரபலமடைந்தது.

இதன் ஆரம்ப சம்பவமான விமான விபத்தில் ஒரு அதிசயம் இருக்கத்தான் இருக்கிறது. 1945, டிசம்பர் 6–ம் தேதி 'அவென்ஜர்' என்று பெயர் படைத்த டார்பிடோ குண்டுவீச்சு விமானங்கள் ஐந்து, 320 மைல் பயிற்சிப் பயணத்துக்காகப் புறப்பட்டன. முதலில் கிழக்கே போய், அதன் பின் வடக்கே போய் பஹாமா தீவுகள் வரை போய், தென்மேற்காகத் திரும்பி, புறப்பட்ட இடத்துக்கு வந்து சேரும் பயிற்சி அது.

இந்த ஐந்து விமானங்கள் அடங்கிய குழுவுக்கு காப்டன் சார்லஸ் கரால் டெய்லர். நல்ல அனுபவமுள்ளவர். அவருடன் மற்றொரு அனுபவமுள்ள பைல்ட் இருந்தார். மற்ற பன்னிரெண்டு விமானிகள், ரேடியோ, ஆபரேட்டர்கள், நாவிகேட்டர்கள் என்னும் வழிகாட்டிகள் அனைவரும் கற்றுக்குட்டிகள். மதியம் 2.10க்கு ஐந்து விமானங்களும் புறப்பட்டன. இரண்டு மணி நேரம்கூட ஆகவில்லை... காப்டனிடமிருந்து "என் இரண்டு காம்பஸ்களும் பழுதாகிவிட்டன. எங்கிருக்கிறேன் எனத் தெரியவில்லை. கீழே தரை தெரிகிறது. சிதறலாகத் தெரிகிறது. பஹாமாசின் மேலேதான் பறக்கிறேன் என எண்ணுகிறேன். திரும்பும் வழி தெரியவில்லை..." என்று ரேடியோ செய்தி வந்தது.

அடுத்த இரண்டு மணி நேரத்துக்கு அவர்களிடமிருந்து அவ்வப்போது செய்தி வந்தது. சற்று நேரத்தில் அவர்கள் பறந்து பறந்து, வழி தப்பி, பெட்ரோல் குறைந்துபோய் விமானங்கள் லொக் லொக்

என்று இரும ஆரம்பிக்க... காப்டன் அனைத்து விமானிகளுக்கும் ஆணை கொடுத்தார். "எல்லோரும் கடலில் இறங்கத் தயாராகுங்கள். முதலில் எந்த விமானத்தில் பெட்ரோல் ஐந்து காலனுக்கு குறைகிறதோ, அப்போது எல்லோரும் கடலில் இறங்கிவிடுவோம்..." என்ற ஆணை தான் கடைசி. அந்த ஐந்து விமானங்களைத் தேடி ஒரு விமானம் உடனே புறப்பட்டது. அரைமணியில் தேடிச் சென்ற விமானம் வெடித்து நெருப்புப் பிழம்பானதைத் தேடிச் சென்ற ஒரு கப்பலிலிருந்து பார்த்தார்கள்.

முதலில் புறப்பட்ட அந்த அதிர்ஷ்டமற்ற விமானங்கள், எந்தத் தடயமுமின்றிக் காணாமல் போய்விட்டன. கடல் அவர்களை விழுங்கிவிட்டது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர், மெள்ள மெள்ள அந்தப் பிரதேசத்தின் 'புகழ்' அதிகரித்தது! விண்வெளி வேற்றுக் கிரக உயிரினங்கள் அங்கே வந்து இறங்குவதாகவும், அவர்கள்தான் நம் விமானத்தைத் திசைதிருப்பிக் கடத்திச் சென்றிருக்க வேண்டும் என்றெல்லாம் நம்ப ஆரம்பித்தார்கள்.

இந்தச் சம்பவத்தில் இன்று விடை கிடைக்காத ஒரு விஷயம் இருக்கிறது. காப்டன் டெய்லரின் காம்பஸ் இரண்டும் ஒரே சமயத்தில் ஏன் பழுதாக வேண்டும்? அதுவும் விமானம் புறப்படுவதற்கு முன் இரண்டையும் சரியாகச் சோதித்துப் பார்த்துதான் அனுப்பினார்கள். சட்டென்று அவை இரண்டையும் தப்பாக திசைகாட்ட வைத்து எது? அந்த விமானம் வழிதவறி, பெட்ரோல் தீர்ந்துபோய்தான் விழுந்து காணாமல் போயிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். இருந்தும் ஏன் இதுவரை அதன் ஒரு துண்டுகூடக் கிடைக்கவில்லை? ஏன் அந்த இடத்தில் தொடர்ந்து விபத்துக்கள் நடந்துகொண்டே இருக்கின்றன? தேடிச் சென்ற விமானத்தைச் சுட்டது யார்? இதுவரை அந்த முக்கோணப் பகுதிக்குள் போய், ஐந்து கப்பல்களும் ஐந்து விமானங்களும் மறைந்திருக்கின்றன... ஏன்?

இதனால் வேற்று கிரகத்தில் மனிதர்கள் அல்லது உயிரினங்கள் நம்மைவிடப் புத்திசாலிகள் இருக்கிறார்களா...?' என்ற ஆராய்ச்சியை இன்றும் உயிருடன் வைத்திருப்பது பெர்முடா முக்கோணம்தான்!

வேற்றுக் கிரகத்தில் உயிரினங்கள் சாத்தியமா...? இதைப் பற்றி இனி பார்ப்போம்.

அழுக்குவான் அச்சங்கள்!

அதற்குமுன் செத்துப் பிழைத்தவர்கள் பேசுகிறார்கள் ... லயால் வாட்ஸன் என்கிறவர் அவர்களுடைய அனுபவங்களை வைத்து ஒரு முழு புத்தகமே எழுதியிருக்கிறார். சாவுக்கு அருகாமை அனுபவங்கள் Near death experience என்று சொல்கிறார். பெரும்பாலும் விபத்தில் நினைவிழந்தவர்கள் அல்லது இதயதாக்கம் வந்து செத்துவிட்டார் என்று கைவிடப்பட்டவர்கள், ஷாக் அடித்து செத்துவிட்டு முதலுதவி கொடுத்துப் பிழைத்தவர்கள் சொன்ன அனுபவங்களை அலசும்போது தெரிவது இது. எல்லோரும் உடலிலிருந்து விடுபட்டு தனியாக ஓர் உணர்வு பிரிந்ததை நிச்சயம் சொல்கிறார்கள். 'நான் செத்துப் போயிருக்கிறேன். எல்லோரும் அழுகிறார்கள். 'ஏன் அழுகிறீர்கள்? என்று கேட்க முடியவில்லை. மெள்ள அறையை விட்டு வெளியே வந்து லேசாக என்னால் எங்கும் செல்ல அல்லது மிதக்க முடிந்தது.'

இவ்வாறான அனுபவங்களைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அந்த அனுபவங்களை அதிசயம் என்று ஒப்புக்கொள்ளும் முன் செத்துப் பிழைத்தவர்களுக்குக் கொஞ்சம் மிகையாக அந்த அனுபவத்தை சொல்லும் இச்சை இருக்கும் என்பதையும் 'ஸ்லீப் பராலிஸிஸ்' என்கிற ஒரு சமாசாரத்தைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

உங்களில் பெரும்பாலானவர்கள் இதை உணர்ந்திருப்பீர்கள். குறிப்பாக, மதியம் லேசாகத் தூங்கும்போதோ அல்லது அதிகாலை எழுந்திருக்கும்போதோ விழிப்பு கண்டு நினைவு வந்துவிடும். ஆனால், கையைக் காலை அசைக்க முடியாது. 'யாராவது வந்து என்னை அசைக்க மாட்டார்களா?' என்று திணறித் திணறிப் பார்ப்போம். ம்ஹூம். முடியாது சற்று நேரத்தில் தூக்கிவாரிப் போட்டாற்போல் அசையும் சக்தி திரும்ப வந்துவிடும். இதைப் பலருடன் நானும் உணர்ந்திருக்கிறேன்.

(இந்தச் சமயங்களில் நான், 'என்ன போச்சு ... கொஞ்ச நேரம் காத்திருந்தால் அசைக்கும் சக்தி வந்துவிடப்போகிறது' என்று சும்மா இருந்துவிட்டு அவ்வப்போது கைகாலை அசைத்துப் பார்ப்பேன்.)

இதன் மொத்த அனுபவமே பத்துப் பதினைந்து செகண்டுகள்தான்

என்று சொல்கிறார்கள். இருந்தும், ஒரு யுகத்துக்கு நீடிப்பதுபோல இருக்கும். இது, ஒரு விதத்தில் மிகுந்த அச்சத்தைக் கொடுக்கக்கூடிய அனுபவம். அதன் ஆதார காரணம், மிக எளிதானது. நம் சரீரத்தின் அசைவுகளை மூளையில் கட்டுப்படுத்தும் பகுதிக்கு மோட்டார் கண்ட்ரோல் என்கிறார்கள். நம் நினைவைக் கட்டுப்படுத்தும் பகுதி மூளையில் வேறு இடத்தில் இருக்கிறது. பாதித் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்போது இரண்டும் ஒரே சமயத்தில் விழித்தெழுந்தால் பிரச்னை இல்லை.

நினைவு முதலில் திரும்பி வந்து, உடலசைவுகள் சற்று நேரம் கழித்து வந்தால்தான் இந்த மாதிரியான அவஸ்தை ஏற்படும். உணர்வு முதலில் வந்து உடல் அசைவு அதன் பின் வருவதால் ஏற்படும் விளைவு இது!

'அமுக்குவான்' என்று எங்கள் பக்கத்தில் சொல்லும் இந்த நிலை நம்மை யோசிக்க வைக்கிறது. உடலுக்கு வெளிப்பட்ட உணர்வு என்று தனிப்பட்டு இருக்கிறதா? கார்ல் யுங்கின் 'ஒருமித்த உணர்வு' என்பது அதுதானா அல்லது நம் உணர்வு மட்டுமே உடலிலிருந்து வெளிப்பட்டு தனித்து இயங்க முடியுமா போன்ற கேள்விகள் நேராக நம்மை, ஆத்மா என்கிற தத்துவத்துக்கும் இந்து மதத்தின் ஆதாரமான கருத்துக்களான ஜீவாத்மா – பரமாத்மாவுக்கும் கொண்டு செல்கிறது.

'உடல்மிசை உயிர் என' என்று ஆழ்வார் சொல்லும்போது இரண்டையும் பிரித்துத்தான் சொல்கிறார். உயிர் என்பதுதான் ஆத்மாவா அல்லது உயிர் என்பதைவிட நுட்பமானதா ஆத்மா? அதற்கு அழிவில்லை என்பது நம் இந்துக்களின் தீவிர நம்பிக்கை. உடல்கள் எல்லாம் ஆத்மாவுக்குப் போடப்பட்ட சட்டை, மோட்சம் என்பது ஆத்மா, தான் பிரிந்துவந்த பெரிய ஆத்மாவுடன் கலப்பது என்ற கருத்துக்கள் இருப்பதால் செத்தபின் ஞாபகம் மட்டும் தனித் தியங்குவதாகப் பலரும் நம்ப விரும்புகிறார்கள். மேற்கத்திய கிறிஸ்தவ சிந்தனைகளில் இறந்தவர்கள் ஒரு கடைசி தினத்தில் எல்லாரும் எழுப்பப்பட்டு, அவரவர் பாவ – புண்ணியங்களுக்கு ஏற்ப, சொர்க்கத் துக்கோ, நரகத்துக்கோ அனுப்பப்படுகிறார்கள். இதற்கும் சாவுக்குப் பின் ஒரு நீட்டிப்புத் தேவை.

எல்லா மதங்களிலும் சொர்க்கம் – நரகம் இருக்கிறது ஆனால், அவைகளின் வருணனைகள் மனித சாதியின் சுக துக்கங்களைச் சார்ந்திருக்கின்றன. நரகம் என்பது சாசுவத நெருப்பில் எறிவது, எரிவது. சொர்க்கம் என்பது சாசுவத தேவகானங்கள், சந்தோஷங்கள் எல்லாம் பூமியில் உள்ள சந்தோஷங்களைச் சார்ந்திருக்கின்றன. வேறு வடிவ சந்தோஷத்தையோ, துக்கத்தையோ நம்மால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

இவைகளை மீறிய – நமக்குத் தெரியாத சந்தோஷங்கள் இருக்கின்ற னவா? 'ஒரு நாயின் சொர்க்கம் எப்படி இருக்கும்? ஒரு முக்கோணத்

தின் சொர்க்கம் எப்படி இருக்கும்?' என்று யோசித்துப் பாருங்கள்.

மருத்துவ இயலின் 'கிளினிக்கல் டெத்' என்பதற்கு வெவ்வேறு வரையறைகள் உள்ளன. தேசத்துக்கு தேசம் வேறுபடுகின்றன. இதயம் நின்றால் இறந்துபோகிறோமோ இல்லை மூளையால் மூச்சும் இதயமும் வேலை செய்தாலும் இறந்தவன் என்று கருதும் பழக்கம் அதிகரித்து வருகிறது. அதற்கு மாற்று உறுப்புகள் சிகிச்சை காரணம். மனிதனைப் பொறுத்தவரை—உயிர் என்பது உடல் இயக்கமா அல்லது அவன் நினைவுகளா? கோமாவில் இருப்பவர்கள் நினைவெற்றுப் படுத்திருப்பார்கள். மாதக்கணக்கில், வருஷக்கணக்கில் அவர்களுக்கு நினைவில்லை. அப்படியானால் அவர்கள் செத்தவர்களா?

உயிர் ஒரு தொடர்கதை!

ஆனால், ஆன்மா ... மனிதன் ... இதுபற்றிய விவரங்கள் எடுக்க எடுக்க வந்துகொண்டே இருப்பதால், இன்னும் கொஞ்சம் 'ஆன்மா தரிசனம்' முடித்துவிட்டு பிறகு வேற்றுகிரகவாசிகளை வரவழைப்போம்.

கோமாவில் இருப்பவர்கள் இறந்தவர்களா இருப்பவர்களா என்று யோசிக்கும்போது சில உண்மைகளை நாம் மனதில் கொள்ள வேண்டும். அப்போதுதான் 'உயிருடன்' என்பதற்கு அர்த்தம் விளங்கும். கோமாவில் இருப்பவர்கள் பலருக்கு நினைவு திரும்பிவிடுகிறது. நவீன மருத்துவத்தின் சாகசத்தால் ஒரு நாளோ ஒரு வருஷமோ அவர்களை பெட்சோர் வராமல் போற்றிப் பாதுகாத்தால் விழித்தெழுந்து விடுகிறார்கள். தமிழக மக்கள் தேர்தல் வந்ததும் விழித்தெழுவதைப்போல.

(கோமா என்பது சாதாரணமாக மூளையில் ரத்தக்கசிவால் காயத்தால் ஏற்படுகிறது. காயம் ஆறி அல்லது ரத்தக் கட்டிகள் கரைந்ததும், நினைவு திரும்புகிறது.)

அப்போது அவர்கள் புதிய மனிதர்களாக நினைவு திரும்புகிறார்களா? இல்லை... பழைய ஞாபகங்கள் பத்திரமாகத்தான் இருக்கின்றன.

"என்ன ராமு சார், நான் யார் என்று தெரிகிறதா?" என்று மாரைப் பிறாண்டிக் கேட்டால், மெள்ளத் தலையசைத்து, "நீ சேஷாத்திரி தானே, நீ எனக்கு ஆயிரம் ரூபாய் கடன் பாக்கி தரணுமே. ஞாபகம் இருக்கா!" என்று நம்மிடமே கேட்கும்போது அவர் பழைய ராமுதான். ஆபரேஷனிலோ கோமாவிலோ நினைவிழந்து திரும்புவர் அந்த இடைவெளியில் செத்துப்போவதில்லை. பார்க்கப்போனால் தினம் தூங்கும்போது கொஞ்சம் செத்துப்போகிறோம்.

ஆதலால் உயிர் என்பது என்ன என்று ஆதாரமாகச் சிந்திக்கும் போது, நம் ஞாபகங்கள்தான் உயிர். கோமாவில் இருப்பவர் செத்துப் போவதில்லை. ஆனால், அம்னீஷியா, அல்ஷைமர் போன்ற வியாதிகள் வந்து மொத்த நினைவையும் இழக்கும் ஒருவர் உயிருடன் இருந்தாலும், செத்தவர் ஆகிறார்.

நினைவுகள் மட்டும் இல்லை. குணாதிசயங்கள், முகஜாடை, கோபம், சிரிப்பு, கன்னத்தில் விழும் குழி எல்லாமே உயிரின் அடையாளங்கள். அவைகள் தொடரும்வரை உயிர் தொடர்கிறது.

நாம் எல்லோரும் ஆதிகாலத்து உயிரின் தொடர்ச்சிகள் என்பது நவீன அறிவியலில் மாலிக்யுலர் பயாலஜியில் டி.என்.ஏ. சரத்தை அலசும்போது, கண்டுபிடித்திருக்கிறார்கள். நம் வம்ச அடையாளங்கள் அனைத்தும் நம் டி.என்ஏ. சரத்தில் க்ரோமோசோம்களில் இருக்கின்றன. அதனால், யாரும் சாவதில்லை. ஏதோ ஒரு டி.என்.ஏ–வின் தொடர்ச்சி யாகத் தொடர்ந்து வாழ்கிறோம் என்கிற கருத்து எனக்கு மறுபிறவிக் கருத்தைவிட வசீகரமாக இருக்கிறது.

இந்த ரீதியில்தான் ஒரு புதிய இயலைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

"நம் உடலில் இருக்கும் ஞாபக சக்தியைக் காப்பாற்றும் சாதனம் கெட்டுவிட்டாலும், நம் உள் இருக்கும் 'நான்' அதாவது ஆன்மா நம் உடலுக்குள் இருந்துகொண்டு வருகிறது. அதனால், நாம் உயிருடன் இருக்கிறோம். ஆன்மாவுக்கு எப்போதும் குறை ஏற்படுவதில்லை. அது அழிவதில்லை." போன்ற கிரிதாரி பிரசாதின் கீதை விளக்கங்கள் இந்து நம்பிக்கைகளின் உதாரணங்கள்.

இந்த ஆன்மாவுக்கு அழிவில்லை என்கிற கருத்து டி.என்.ஏ. செய்திக்கு அழிவில்லை என்கிற கருத்துடன் நெருக்கமாக வருகிறது. 'நம் ஒவ்வொருவர் டி.என்.ஏ.–யிலும் ஆதிமுதல்வனின் டி.ஏன்.ஏ.வின் செய்தியின் ஒரு துளுக்கு என்பது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அதிசயம். Dawson–ன் Selfish Gene என்கிற புத்தகத்தில் இதை விவரமாகப் பார்க்கலாம்.

அதனால் நாம் இறக்கும்போது, நம் தொடர்ச்சி நம் குழந்தைகளிடம் தொடர்கிறது.

இதுதான் அறிவியல் ரீதியான மறுபிறவி.

எவல்யூஷன் என்னும் பரிணாமத் தத்துவத்தின்படி மனிதன் ஓரிரவில் சிருஷ்டிக்கப்படவில்லை. படிப்படியாகத்தான் பல்லாயிரம் பலகோடி நூறாயிரம் வருஷங்களாக மாறிமாறி உயர்ந்து இந்த உன்னதம் பெற்றிருக்கிறோம் என்று சொல்கிறவர்களின் பக்கம்தான் அறிவியல் சாட்சியங்கள் உள்ளன. இதை நம்பும்போது, உயிரின் தொடர்ச்சி, மிருகங்களுக்கும், சுலபமாக நீட்டப்பட்டு நம்மை ஒரு அனாதி காலத்து பாக்டீரியா வரை தொடர் சங்கிலியை பின்னோக்கி அறிய முடியும்.

அதனால், பலவகைப் பிறப்புக்கள் பிறந்துவிட்டுக் கடைசியில் மனித உருவத்துக்கு வந்திருக்கிறோம் என்று சொல்வதில் அபத்த மில்லை. அடுத்த பிறவியில் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மண் புழுவாகவோ கிளிண்டனின் பேரனாகவோ பிறப்போம் என்று சொல்வதுதான், தூய தமிழில் சொன்னால், 'உட்டாலக்கடி.' அறிவியலுக்கு சரிப்படவில்லை.

1988ல் 'செயற்கை உயிர்' முதல் மாநாடு அமெரிக்காவில் நடந்தது. அதை ஏ–லைஃப் (A-life) என்கிறார்கள்.

இது என்ன செயற்கை உயிர்?

‘செல்’ மேல் வாழ்க்கை!

ஏ–லைஃப் (A life) என்பது என்ன? உயிரின் காரணத்தையும் சாரத்தையும் உடலுக்கு வெளியேயும் முயற்சி பண்ணுவது.

உயிர் உள்ளதற்கும் உயிரற்றதற்கும் அறிவியல் என்ன வேறுபாடு சொல்கிறது?

மிக ஆதாரமாகப் பார்த்தால் நாம் எல்லாரும் கார்பன், பாஸ்பரஸ், கால்ஷியம், ஆக்ஸிஜன் போன்ற ரசாயனப் பொருள்களால் ஆனவர்கள் தான். ஆனால் ஒரு மேஜைக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? உயிரணு என்னும் செல்.

செல் என்பது இந்த வகை ரசாயனப் பொருள்களாலான மிகப் பெரிய கூட்டணு (மாலிக்யுல்). அப்படியானால், உயிரின் அடையாளம் பெரிய கூட்டணுவா? அதுவும் இல்லை!

ப்ளாஸ்டிக் கூட பெரிய கூட்டணுதான். உயிரின் கூட்டணுவுக்கு ஒரு தனிப்பட்ட குணாதிசயம் இருக்கிறது. ரெப்ளிகேஷன் – தானாகப் பிரதியெடுத்தல் அல்லது படியெடுத்தல். அது பிறந்த சிறிது நேரத்திலேயே இரண்டு பாதியாகப் பிரிந்துவிடுகிறது–ஒரு ஜிப் பிரிவதைப் போல. பிரிந்த இரண்டு பாதியும் சுற்றுப்புறத்தில் உள்ள வஸ்துக்களுடன் ரசாயன முறையில் உறவாடிக் கலந்து, இரண்டு முழுமையான புதிய பிரதிகளாக ஆகிவிடுகின்றன. ஒரு ஜெராக்ஸ் மிஷினுடன் ஒப்பிட்டால் தப்பு. ஒரு கவிதை எழுதிய பக்கத்தை நீளவாட்டில் இரண்டு பாதியாக்கி, அவ்விரு பாதிகளையும் தனித்தனியே படியெடுக்கும்போது கிடைக்கும் இரண்டு பக்கங்களிலுமே அந்தக் கவிதை முழுமையாகவே கிடைப்பது போன்று கற்பனை பண்ணிப்பாருங்கள். உயிரின் சாகசம் புரியும்.

இதுதான் நம் நனவுலகத்தின் மிகப் பெரிய ஆச்சரியம். பரிணாம தத்துவக்காரர்கள். இந்த இரட்டிப்பு என்பதே தற்செயலாகத்தான் நிகழத் துவங்கியது என்கிறார்கள். எப்படியோ ... அதுதான் உயிரின் அடையாளம். இரட்டிப்புத் தொடர்ச்சி.

இந்தக் கட்டுரையை நீங்கள் படித்துக்கொண்டிருக்கும்போது உங்கள் உடலில் பல்லாயிரக்கணக்கான செல்கள் இறந்து பிறந்து

கொண்டிருக்கின்றன – சருமம், தலைமயிர், நகம், ரத்தம் அனைத்திலும்! எனவே அறிவியல்படி பார்த்தால், நாம் எல்லோரும் நிமிஷத்துக்கு நிமிஷம் இறக்கிறோம் புதிதாகப் பிறக்கிறோம். இப்படி இரட்டிப்பாகும் வேகம் உயிருக்கு உயிர் வேறுபடும். எனவே, உயிர் வாழ்வதன் செல் அளவில் விதிகள் என்ன என்ன ...?

பிரிவது, இரண்டாக மாறுவது, இரண்டிலும் அடையாளங்களைக் கடத்துவது, பிரிந்தவை மீண்டும் இரண்டாவது, பிரிவது. இப்படிப் பிரியும்போது, பிரதியெடுக்கும்போது, சில பிழைகள் நிகழ்ந்து புதிதாகப் பிரிந்த செல் பழைய செல்லைவிட சற்றே வேறுபட்டதாகலாம். அப்போது அந்தப் புதிய செல் ஒரு புதிய அல்லது திருத்தப்பட்ட நகலாகிறது. இந்த நகல் தன் சூழ்நிலையைத் தன் தாய் செல்லைவிட சாமர்த்தியமாகச் சமாளிக்க முடிந்தால், அந்த நகல் நீண்டநாள் தொடர்கிறது. மறுபடியும் ஒரு பிழை, மறுபடி ஒரு திருத்தப்பட்ட உயிரினம். இதைத்தான் 'ம்யூட்டேஷன்' என்கிறார்கள்.

இவ்வாறான சின்னச் சின்னத் தப்புக்களால்தான் – திருத்தங்களால் தான் பாக்டீரியாவிலிருந்து துவங்கிய உயிர் இன்று மனிதனாக மாறியிருக்கிறோம். அதற்கான கோடிக்கணக்கான வருஷங்கள் நமக்கிருந் திருக்கிறது. அதற்கான வானிலையும் சூழ்நிலையும் பூமியில் கிடைத் திருக்கிறது.

'செல்லுலர் ஆட்டோமேட்டா' என்கிற புதிய இயலில் (Cellular Automata) ஒரு கணிப்பொறியில் உயிரினங்களின் பரிணாம விளை யாட்டை விளையாடிப் பார்க்கிறார்கள். ஆதாரமாக ஓர் உயிரில் ஆரம்பித்து, அது தன் அருகே உள்ள செல்களைப் பொறுத்து, தொடர்ந்து உயிர் வாழ்வது அல்லது செத்துப்போவது என்ற விதிகளை கம்ப்யூட்டரில் அமைத்து, நூதன உயிரினங்களை உண்டுபண்ணி, அவை எத்தனை காலம் பிழைக்கின்றன என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வகையில் பரிணாம விதிகள் போல நிஜமாகவே கோடிக்கணக்கான வருஷங்களை எடுத்துக்கொள்ளாமல் சில செகண்டுகளிலேயே புதிய உயிரினங்களை வம்சங்களை, ம்யூட்டேஷன் விதிகளை மாற்றி மாற்றி ஆராய முடியும்.

எதிர்காலத்தில் மனிதன் எப்படி மாறுவான் என்பதையும் கணிக்க முடியும்.

'வினஸ்' என்ற ஒரு புதிய கணிப்பொறி வடிவமைப்பையும் கொண்டுவந்திருக்கிறார்கள். Virtual Evolution in Nondeterminstic Universe Simulation - VENUS.

முன்தீர்மானிக்காத பிரபஞ்சத்தின் கற்பனைப் பரிணாம உலகை கணிப்பொறியில் சிருஷ்டி செய்து அதில் 1க்குப் பின் 35000 சைபர் களைக் கொண்ட அத்தனை இணைப்பு சாத்தியக்கூறுகளை 'கனெக்ஷன் மெஷின்' என்கிற கணிப்பொறி இணைப்பால் ஆராய முடியும்.

எனவே அடுத்த கோடி வருஷங்களில் எப்படி உயிர் வடிவங்கள் மாறலாம் என்பதை இப்போதே தெரிந்துகொள்ளலாம். அது சரியா என்று பார்க்க, நாம் பிழைத்திருப்பதுதான் கொஞ்சம் கஷ்டம். இப்படிப் பரிசோதித்துக்கொண்டே இருக்கும்போது திடீர் என்று கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்கு விடையும் கிடைக்கலாம்.

வேற்றுக் கிரகவாசிகளா . . .
வெற்றுக்கதை ஜீவன்களா . . .?

கணிப்பொறியில் உயிர்களை அமைத்து விளையாடலாம் என்று பார்த்தோம். இன்டர்நெட்டில்கூட இந்த மாதிரி விளையாட்டுக்கள் இருக்கின்றன.

இப்போது சூரியக் குடும்பத்தில் பூமியைத் தவிர, வேற்று கிரகங்களில் உயிரினங்கள் இருக்க முடியுமா என்பதைப் பற்றியும் பல ஆராய்ச்சிகள் உள்ளன.

வேற்று கிரகங்களில் உயிரினங்கள் இருந்தால் அவை மனித உருவத்தில் இருக்கும் என்று கொள்வதே தப்பு என்று சொல்கிறார்கள். இந்தப் பிடிவாதத்துக்கு anthropomorphism மனிதவடிவ விருப்பம் என்கிறார்கள்.

பெரும்பாலான அமெரிக்கர்கள் பறக்கும் தட்டுக்களில் வேற்று கிரகவாசிகள் அடிக்கடி நம் பூமிக்கு வந்து இறங்கி நம்மில் சிலரைக் கடத்திக்கொண்டு போவதாக நம்புகிறார்கள்.

1992ல் 6,000 அமெரிக்கர்களிடம் நாடு தழுவிய கருத்துக்கணிப்பு எடுத்தபோது 18 சதவிகிதம் பேர் திடீரென்று இரவில் செயலற்று விழித்தெழுந்ததையும் வீட்டுக்குள்ளே விநோதமான உயிரினங்கள் வந்துபோனதையும் சத்தியமடித்துச் சொன்னார்கள். மூன்று சதவிகிதத்தினர் அப்போது காலம் ஓடாமல் நின்றுபோன விநோத அனுபவங்களைக் கூறினார்கள்.

பத்து சதவிகிதத்தினர் மற்ற எந்த சாதனத்தின் உதவியும் இன்றி காற்றில் பறந்து சென்ற அனுபவத்தைக் கூறினர். இரண்டு சதவிகிதத் தினர் வேற்று கிரகவாசிகளால் கடத்தப்பட்டு அவர்களுடைய வாகனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு தம் உடல்மேல் பரிசோதனைகள் நடந்ததாகச் சொன்னார்கள்.

இவர்கள் எல்லோரும் பொய் சொன்னார்களா? இதைப்பற்றி பெரிய 'ரோப்பர் ரிப்போர்ட்' என்று ஒன்று இருக்கிறது. அனைவரும் பார்த்தது ஏதோ ஒரு மாயத் தோற்றமா, மனத்தோற்றத்தில் மயங்

னவர்களா, தப்பாக அர்த்தம் பண்ணிக்கொண்டவர்களா? எல்லோரும் பொய் சொல்லத் தேவையில்லாத மரியாதைப்பட்ட சாதாரண குடிமக்கள்.

'எக்ஸ் ஃபைல்ஸ்' என்னும் டெலிவிஷன் தொடர் ஸ்டார் டிவியில் வருகிறது. நீங்கள் பார்த்திருப்பீர்கள். அமெரிக்காவில் மிகப் பிரபலமான தொடர் இது. இதில் அடிக்கடி வேற்றுக் கிரகமனிதர்கள் வந்து நம் மேல் பரிசோதனை செய்வதாக கதைகள், மிக நுட்பமாக மிகவும் நம்பகமாகக் காட்டப்படும் கதைகள் வருகின்றன. இறுதியில் 'நாசா', எஃப்பிஐ. போன்ற நிறுவனங்கள் உண்மையை மறைக்கிறார்கள் என்று சந்தேகத்தில் முடியும். வேறு கிரக மனிதர்கள் நம் ஊருக்கு வந்து காரியங்கள் செய்துவிட்டு காணாமற்போகிறார்கள் என்பதை உண்மையாகவே கொண்டால் சில 'ஏன்'கள் மிஞ்சுகின்றன.

பிரபஞ்ச வெளியில் பயணம் செய்து நம் உலகத்துக்கு வரக்கூடிய இயற்பியல் விண்வெளியியலில் முன்னேற்றம் உள்ளவர்கள். அவர்களுடைய உயிரியல் அறிவில் மட்டும் ஏன் அத்தனை பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும்? அவர்கள் நம்மைப்பற்றி ரகசியமாக ஆராய்ச்சி செய்ய விரும்பி சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட விரும்பினால் அவர்களைச் சந்தித்த அனுபவத்தை நம் மனத்திலிருந்து ஞாபகத்தை அழித்துவிட முடியுமே. ஏன் அவர்கள் நம்மைப் பரிசோதிக்கும் கருவிகள் எல்லாம் நம் கருவிகள் போலவே இருக்கின்றன? ஆயிரக்கணக்கான 'கடத்தப்பட்டவர்கள்' சொல்லும் அனுபவங்களில் புதுசாக எதும் கருவிகள் இல்லை. வந்தவர்கள் மனித வடிவத்திலேயே இருக்கிறார்கள். மனிதக் கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். இதற்கும் நம் புராணங்களின் கடவுளர்கள், தேவாசுரர்கள் மனித வடிவமும் மனித குணங்களும் பெற்று இருப்பதற்கும் ஒற்றுமை இருப்பதைக் கவனிக்கலாம்.

மனிதனால் மனித உருவத்தை மீறிய, மனித இயல்பை மீறிய உயிரைக் கற்பனை பண்ணிப் பார்க்க இயலாது. அதற்கான சிந்தனைத் தகுதிகள் அவனிடம் இல்லை.

ஜான் லாக் சொன்னது இது:

'உண்மையை நேசிப்பதின் தவறாக அடையாளம் ஒன்று இருக்கிறது. எதுவரை ஒரு கூற்று நிரூபிக்கப்பட்டிருக்கிறதோ அதுவரை மட்டும் அந்தக் கூற்றை நம்புவது!'

வேற்று கிரகவாசிகள் உண்மையாக வந்தார்கள் என்பதற்கு நிரூபணம் இன்னும் போதவில்லை.

மற்றொரு முக்கியமான விஷயம் உயிர் என்பது என்ன என்பதை அறுதியிடுவது. அதைப்பற்றி சென்ற பகுதியில் பார்த்தோம். ஜே.பி.எஸ். ஹால்டேன் என்னும் விஞ்ஞானி, உயிர் என்பது 'சுயமாக நீடிக்கக்கூடிய ரசாயன மாற்றம்' என்றார்.

இதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். காரணம் இதன்படி பார்த்தால்

எரியும் நெருப்பைக்கூட உயிருள்ளது என்று சொல்ல வேண்டும். அது ஒரு ரசாயன மாற்றம். காற்றில் ஆக்ஸிஜனும் எரிபொருளும் இருக்கிறவரை எரிந்துகொண்டே இருக்கும்.

வாழ்க்கையும் அப்படித்தானே உணவும் சூழ்காற்றும் உள்ளவரை உயிர் இருந்துகொண்டே இருக்கிறது! அதனால்தான் தற்சமயத்துக்கு அறிவியலாளர்கள் 'வளரும், பிரதியெடுக்கும், தன்னை அல்லது தன் இனத்தை நீடிக்கும் எதுவும் உயிருள்ளது' என்று சொல்லி வருகிறார்கள்.

ஆன்ட்டெனா தலையர்கள் முதுகில் மூளை!

'**வ**ளரும், பிரதியெடுக்கும், தன்னை அல்லது தன் இனத்தை நீடிக்கும் எதுவும் உயிருள்ளது' என்னும் இந்தக் கோட்பாட்டின்படி வைரஸ் கிருமிகள் உயிருள்ளவையா என்றால் இல்லை. உதாரணமாக, புகையிலையில் மட்டும் வளரக்கூடிய வைரஸ் இருக்கிறது. அதனால் புகையிலை செல்களில் மட்டும்தான் அது பெருக முடியும். தனிப்பட்டு வாழ முடியாது. அவைகளை பாரசைட்ஸ் 'ஒட்டுயிர்கள்' என்று சொல்வார்கள். இவ்வகைகளைப் பாதி உயிர் என்றுதான் கொள்கிறார்கள். இதேபோல் வைரஸைவிட சற்றே உயர்ந்த இனமான பாக்டீரியாக்கள் பல மற்ற உயிரினங்களின் உள் செல்களில்தான் வாழ்வதால் – அவைகளைத் தனிப்பட்ட உயிர்களாகக் கொள்வதில் தயக்கம் இருக்கிறது. எனினும் பாக்டீரியாக்கள் சில தனிப்பட்டு இயங்கக்கூடியவை. அவைதான் உயிரின் ஆரம்பங்கள்.

உயிரினங்கள் உண்டாவதற்கு கார்பன், கரி சார்ந்த ரசாயனப் பொருள்களும் தக்க சூழ்நிலையும் தேவை. சரியான சிதோஷ்ணமும் இருந்து நீண்ட நாட்களும் பரிணாமம் அடைந்து நம்மைப் போல் கண், காது, இதயம், ரத்தம் கொண்ட உயிரினமாக மாற முடியும்.

மற்ற கிரகங்களில் அதே சூழ்நிலை இல்லையெனில் மனித வடிவில் உயிரினங்கள் தோன்றுவது மிக மிக அரிது. சாத்தியமில்லை. நம் சூரியக் குடும்பத்து மற்ற கிரங்களைப் பார்க்கும்போது முதலில் அவைகளில் மிதமான உஷ்ணம் அல்லது குளிர், அமில மழை போன்ற வேறு விதமான ரசாயனச் சூழலைத்தான் காண்கிறோம். அவைகளில் கண், காது வைத்து இடுப்பில் ஒரு 'வாக்மேனுடன் ஒரு மனிதன் உருவாகி வருவான்' என்று எதிர்பார்ப்பது அபத்தம் அல்லவா?

சிலிக்கன் ரசாயனப் பொருள்கள் மிக அதிகம் உஷ்ணத்தைத் தாங்கக்கூடியது. சிலிக்கன் சார்ந்த உயிரினம் கூடுதல் உஷ்ணத்தில் உருவாகும் சாத்தியம் உண்டு. அம்மோனியா சார்ந்த உயிரினங்கள் குறைந்த உஷ்ணத்தில் வரலாம் என்கிறார்கள்.

ஹைட்ரோகார்பன்கள் (பெட்ரோல் போன்றவை) சமுத்திரமாகவே ஜூப்பிடரில் இருக்கலாம் என்பதை விஞ்ஞானிகளால் மறுக்க

முடியவில்லை. கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஹைன்ஸ் ஹாபர் என்பவர் வீனஸ் கிரகத்தின் மேல் பரவியுள்ள அதிசய மேகங்களில் உயிரினங்கள் ஆவி வடிவத்தில் இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். கிரகத்தின் தரைப்பகுதியிலிருந்து சரியான உயரத்தில் உயிர் வாழத் தகுதியான உஷ்ணத்தில் அமைந்திருக்கலாம் என்கிறார்.

ஆனால், அந்த உயிரினங்கள் நம்மைப் போலவே காது, மூக்குடன் சதிப் பார்வையுடன் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது, மயிலாப்பூர் கோயிலில் மோனிக்கா லெவின்ஸ்கி சனீஸ்வரனைச் சுற்றும் காட்சியைப் பார்ப்பதுபோல, மிக அரிதான சாத்தியமே. சில விஞ்ஞானிகள் மாற்றுக் கருத்துள்ளவர்களாக இருக்கிறார்கள். வேற்று கிரகங்களில் உயிர் தோன்றினால் நம் மனிதர்கள்போல எந்தச் சூழலையும் சமாளிப்பதற்கு ஆதாரத் தேவைகளான உள்ளே ஒரு எலும்புக்கூடு, மூளை, (அங்கே வெளிச்சம் இருந்தால்) கண்கள், நடந்து செல்ல கால் இப்படித்தான் வளரும் என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இதைத் தீவிரமாக மறுப்பவர்கள் சொல்வது – மனித வடிவம் ஆதாரமாக மீன் வடிவத்திலிருந்து பரிணமித்தது. ஆதி காலத்து மீன்களுக்கு நான்கு செதில்கள் இருந்தன. அவைதான் கை, கால்களாயின. மனித வடிவம் என்பதே ஆதர்சமானதல்ல. கொஞ்சம் அதிகமாக கை, கால்கள் இருந்தால், இன்னும்கூட சௌகரியமாக இருக்கும் உதாரணமாக, யானை நான்கு கால்களுடன் – ஒரு தும்பிக்கை யையும் சேர்த்துக்கொண்டது. அதனால்தான் அத்தனை பெரிய மிருகம் இன்னும் வழக்கொழியாமல் இருந்துகொண்டே இருக்கிறது. உலகிலேயே மிகச் சிறந்த உயிரினத்துக்கு ஆறு கால்கள் பூச்சிக்களுக்குப் போல ஆன்ட்டெனாவும் முதுகில் மூளையும் தேவைப்படலாம்.

எனவே, மற்ற கிரகவாசிகள் நாம் வளர்ந்த பாதையில் வளர்ந்தாலும், அவர்களுக்கு ஆறு கால்கள் இருக்கலாம். முட்டையிட்டு குஞ்சு பொரிக்கலாம். மூளை முதுகில் இருக்கலாம்.

சூரியக் குடும்பத்தின் கிரகங்களில் உயிர் இருக்கும் சாத்தியங்களை பாரபட்சமின்றி பார்த்தால், மெர்க்குரியில் மட்டும் இருக்க சாத்தியமே இல்லை என்கிறார்கள்.

செவ்வாய் கிரகத்தில் ஏதோ ஒரு சில உயிரினங்கள் இருக்கலாம் என்கிறார்கள். இது சூரியக் குடும்பத்தில். பிரபஞ்சம் என்று பார்க்கும் போது கோடானுகோடி நட்சத்திரங்கள் – காலக்ஸிக்கள். இவைகளில் நம் பூமியைப் போல கிரகங்கள் இருக்க குறைந்தபட்ச சாத்தியங்கள் நிச்சயம் உள்ளன.

நம் அருகாமையில் இருக்கும் ஆண்ட்ரமீடா காலக்ஸியில்கூட இருக்கலாம். ஆனால், அங்கிருப்பவர்கள் இங்கே நம்மை பார்வையிட ஒளி வேகத்தில் வந்தாலும் வருஷங்கள் போதாது. அதற்குள் உலகமே அழிந்துவிடலாம்.

எனக்குத் தெரிந்த எட்டாவது அதிசயம்!

இதுவரை அதிசயமாக உயிர் தப்பியவர்கள், முரண்பாடுகள், தற்செயலான அதிசய நிகழ்ச்சிகள், மறுபிறவி, வேற்றுக் கிரகத்தில் உயிர்கள் போன்றவற்றையெல்லாம் பார்த்தோம். அறிவியலின் இன்றைய விதிகளுக்கேற்ப அவற்றை விளக்கவும் முயற்சித்தோம். பலவற்றுக்கு விளக்கம் உள்ளது. சிலவற்றுக்கு இன்னும் விளக்கம் இல்லை. ஆனால், அவற்றின் வினோதம் அறிவியல் விதிகளை மாற்றும் அல்லது திருத்தும் அளவுக்கு இல்லை என்பதே இந்தக் கட்டுரையின் மையக் கருத்து.

பின் உலகத்தின் மிகப் பெரிய ஆச்சரியம்தான் என்ன?

லூயிஸ் தாமஸ் ஒரு கட்டுரையில் உலகின் ஏழு அதிசயங்களாகத் தான் கருதுவது எவை என்று ஒரு பட்டியலிட்டிருக்கிறார். முதல் அதிசயம் இந்த உலகமே.

இரண்டாவது ஒரு பாக்டீரியா. மிக அதிக உஷ்ணத்தில் உயிர் வாழப் பழகிவிட்ட ஒரு நுண்கிருமி.

மூன்றாவது அதிசயம் ஒரு வகை வண்டு. உயிர் வாழ்வதற்காக அது செய்யும் சாகசச் காரியங்கள்.

நான்காவது ஸ்க்ரேப்பி என்னும் வைரஸ் அதி நுண்கிருமி.

ஐந்தாவது நம் மூக்கு. வாசனை கண்டுபிடிக்கும் செல் கூட்டம். வாராவாரம் தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் அதன் அதிசய ந்யுரான்கள். மூளைக்கு உரியதை மூக்கில் வைத்திருக்கிறோம் என்கிறார்.

ஆறாவது அதிசயம் கரையான். தனிப்பட்ட அடையாளம் எதுவுமே இல்லாத இந்த ஜந்து ஒரு குழுவாக இயங்கும்போது புற்றை சரியான உயரம், சரியான வளைவுகளுடன் ஒரு சர்ச் மாதிரி கட்டும் திறமை. அந்தத் திறமை குழுவில் யாரிடம் இருக்கிறது என்று தெரியாமல் அனைத்தும் ஓர் உயிர் போல இயங்கும் அதிசயம்.

ஏழாவது அதிசயம் குழந்தைகள். பிறந்த மூன்று வருஷத்துக்குள் ஒரு மொழியின் அத்தனை விதிகளையும் கற்றுக்கொண்டு இலக்கணம்

பிசகாமல் பேசும் திறமை.

தாமஸின் ஆச்சரியப் பட்டியலுடன் எனக்கு சம்மதமே. நான் எட்டாவது அதிசயமாக ஒன்று சேர்த்துக்கொள்வேன். நம்முடைய டி.என்.ஏ. என்னும் மரபணு. அமெரிக்காவில் HUGO - Human Genome Organisation என்கிற குழு உள்ளது. உலகின் பல பகுதிகளிலும் விஞ்ஞானிகள் ஒத்துழைத்து மனிதனின் டி.என்.ஏ. என்னும் மரபணுவின் முழு அமைப்பை அறுதியிடுவது. இது அத்தனை சுலபமல்ல. நூற்றுக்கணக்கானவர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். மிக நவீனமான கருவிகளைக் கொண்டு மாலிக்யுலர் பயாலஜி முறைகளைப் பயன்படுத்தி நம் மரபணுக்களில் சுமார் எண்பதாயிரம் ஜீன்களைக் கணக்கெடுத்து அடையாளம் கண்டுகொண்டு மனிதனை உருவாக்குவதிலும் அழிப்பதிலும் அதனதன் பங்கைக் கண்டுகொள்ளப் போகிறார்கள். இந்தத் திட்டம் 2005–ல் முடிந்துவிடும் என்கிறார்கள். முடிந்தபின் அது மற்றொரு ஆரம்பம்.

இப்போதே நம் மரபணுவை அங்கங்கே கத்தரித்து வேறு ஜீன்களைப் புகுத்தி பரிசோதனைகள் செய்து வருகிறார்கள். உதாரணமாக ஒரு எலியின் மரபணுவை ஓரிடத்தில் கத்தரித்து அதன் நார்மலான ஜீனுக்குப் பதில் ஒரு மனிதனின் 'ஸிக்கில் செல் அனீமியா' என்கிற வியாதிக்கு உண்டான ஜீனை ஒட்டவைத்து எலிக்கு என்ன ஆகிறது என்று பார்த்து விதவிதமான மருந்துகளையும் கொடுத்து அவை எந்தவிதத்தில் பயன்படுகின்றன என்று ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள்.

இந்த வெட்டி ஒட்டும் வேலையில் பல வியாதிகளின் காரணங்கள் மரபணுவின் எந்த ஜீனில் அல்லது ஜீன்களில் உள்ள பிழையால் நிகழ்கிறது என்று கண்டுபிடிக்க முடிகிறது. இந்த ஆராய்ச்சி தொடர்ந்தால் இன்னும் இருபது ஆண்டுகளில் நம் எல்லா வியாதிகளுக்கும் மரபணுக் கோளாறுகளைக் கண்டுபிடித்து அதை பிழைத்திருத்தம் பண்ணி சாகா வரம் பெறமுடியும் என்று தோன்றுகிறது. ஆரம்பக் கட்டத்தில் இருந்தாலும் இந்த ஆராய்ச்சி செல்லும் திசை இவ்வாறு எண்ணத் தூண்டுகிறது. இன்னும் ஐம்பது வருஷத்தில் நம் மரபணு முழுவதும் படிக்கப்பட்டு எட்டாவது ஜீனில் டயபடீஸ், பத்தொன்பதாவதில் ரத்த அழுத்தம், முப்பத்தாறாயிரத்து தொண்ணூறில் வலிப்புநோய் ... இவ்வாறு அறுதியிட முடிந்தால், தப்பாக அச்சிடப்பட்ட புத்தகத்தை ப்ரூஃப் பார்த்துப் பிழைதிருத்துவது போல பிணி மூப்பு சாக்காடு துன்பங்கள் ஏதும் இன்றி சதா ஒரே மனிதனாக இருக்கமுடியும் என்று தோன்றுகிறது.

இந்த உரையாடல் எதிர்காலத்தில் சாத்தியம் என்று தோன்றுகிறது –

'மூத்த தலைவரே! உங்க பிறந்ததின விழாவைக் கொண்டாட விரும்பறோம்!"

"எத்தனாவது பிறந்த தினம்னு ஞாபகமில்லை தொண்டரே ..."

"பதினெட்டாவதுங்க... அதுக்கப்புறம் வயசாகவே இல்லையே!"

இந்த உரையாடலை சாத்தியமாக்கக்கூடிய மரபணு விந்தையில் விந்தை. மனிதன் கடவுளாக மாறப்போகிறான் என்பது அதனினும் பெரிய விந்தை! டாலி எனும் ஆடு பற்றி, க்ளோனிங் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆண் பெண் சேர்க்கையில் குழந்தை பிறக்கும்போது கொஞ்சம் ஆண் குணங்கள், ஜாடைகள் கொஞ்சம் பெண் குணங்கள், ஜாடைகள் என்று பிறப்பது இயற்கை.

ஒரு ஆண் அல்லது பெண்ணை ஜெராக்ஸ் (நகல் போல) படியெடுப்பது க்ளோனிங் மரபணுவின் பிரதி. உங்களைப் போல் ஓர் ஆசாமி நூறு சதவிகிதம் உங்களைப் போலவே இருப்பது உங்களுக்கே தாங்குமா? அப்படிப் படியெடுப்பது சாத்தியம் என்று தெரிகிறது. ஆனால் அது தர்மமா என்பது தெரியவில்லை.

"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை"

என்று பாரதி எழுதியது க்ளோனிங்குக்குப் பொருந்துகிறது. இதில் சங்கடம் – எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்பது நிஜமாகவே வந்துவிட்டால் என்னதான் ஆகும்?

யோசித்துப் பாருங்கள்.

அறிவோம் சிந்திப்போம்

(1993)

மாற்ற முடியாத விதிகள்!

ஓம்!

நல்ல காரியங்களை 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தில் தான் துவக்குகிறார்கள். நாமும் அவ்வாறு துவக்கலாம். ஓம்!

ஆனால் இந்த ஓம் சம்ஸ்கிருத ஓம் அல்ல. (ஓம் விதியைக் கண்டுபிடித்த ஜெர்மானிய விஞ்ஞானியின் பெயர். மிக எளிய ஒரு விதி அது. ஸ்விட்சைப் போட்டால் மின் விளக்கு எரிகிறது. எப்படி? "மின்சாரம் அதன் ஃபிலமெண்ட் கம்பிச் சுருளில் பாயும் போது அதைத் தடுக்கிறது. அப்போது சுருள் சூடாகி ஒளிர்கிறது. இந்த ரெஸிஸ்டன்ஸ் (Resistance) என்னும் மின் தடையை நிர்ணயிக்க ஏற்பட்ட விதி. 'ஓம்' விதி. ஒரு மின் இணைப்பில் இணைக்கப்படும் மின்சக்திக்கும் அதில் பாயும் மின்சாரத்துக்கும் உள்ள உறவே மின் தடை. பன்னிரெண்டு வோல்ட் பாட்டரியிலிருந்து ஒரு இணைப்பில் இரண்டு ஆம்பியர் மின்சாரம் பாய்ந்தால் அந்த இணைப்பின் மின்தடை பன்னிரெண்டின் கீழ் இரண்டு = ஆறு ஓம் ஆகும். இது ஓம் விதி.

எளிய விதிதான். மின்சாரப் போக்கு அனைத்தையும் கட்டுப் படுத்தும் ஆதார விதி. அதே போல் விஞ்ஞானத்தில் பல விதிகள் உள்ளன. பாஸ்கல் விதி, புவி ஈர்ப்பு விதி, க்வாண்டம் விதி என்னும் சில மிக ஆதாரமானவை. சில விளைவுகள் சம்பந்தப்பட்டவை.

ஓம் விதி கண்டுபிடிக்கப்பட்டது சென்ற நூற்றாண்டில்; அதற்கு முன் பாட்டரி கண்டுபிடித்தார்கள். அதற்கு முன், மின்சாரம். இப்படி அதற்கு முன் – அதற்கு முன் என்று பிரபஞ்சத்தின் ஆரம்ப நாட்கள் வரை சிந்திக்கலாம். அப்போது மின்சாரம் இல்லை. உலோகங்கள் இல்லை. பாட்டரி இல்லை. கம்பி இல்லை. ஆதாரத் துகள்கள்தான் இருந்திருக்கின்றன. அப்போது இந்த ஓம் விதி இருந்ததா? சிந்தித்துப் பாருங்கள். இருந்தது என்றால் எங்கு இருந்தது.

எங்கேயாவது எழுதி வைக்கப்பட்டிருந்ததா? எங்கேயாவது நினைக்கப்பட்டிருந்ததா? மின் இணைப்புக்களே இல்லாத காலத்தில் மின் இணைப்புக்களைப் பற்றிய விதி இருந்திருக்க முடியுமா?

ஓம் விதி மட்டுமல்ல, எல்லா விதிகளும் கண்டுபிடிக்கு முன் எங்கிருந்தன?

ஆரம்ப நாட்களில் மனிதன் இயற்கையை விவரிக்க கடவுள்களை நாடினான். மழைக்கு ஒரு கடவுள், வெயிலுக்கு ஒரு கடவுள் என்று சுலபமாக விளக்கம் தந்தான். ஆனால் அவன் அறிவு இயற்பியலிலும் வேதியியலிலும் அதிகரிக்க இந்த தனிப்பட்ட கடவுள்கள் எல்லாம் தேவையற்றுப்போய் ஆதார விதிகளை அமைத்த, ஒரு ஆதியாரம்பக் கடவுள்தான் இப்போது பாக்கியிருக்கிறார். பிரபஞ்சத்தை சிருஷ்டித்து விதியமைத்து மேற்பார்வை பார்க்கும் மஹாபுருஷன் என்பவர் எல்லா இடத்திலும் பரவி எப்போதும் இருப்பவர்.

இந்த மஹாபுருஷர்கூட இன்றைய அறிவியல் விளக்கத்துக்குத் தேவைப்படுவதில்லை. பிரபஞ்சத்தின் அனைத்துச் செயல்பாடுகளும் ஒரு சில விதிகளுக்கு உட்பட்டு நடப்பதை இன்று பார்க்கிறோம். இந்த விதிகள் கடவுளின் இடத்தைப் பிடித்துவிட்டன. ஆரம்பத்தில் கடவுளை வருணித்ததுபோல், இந்த விதிகள் வருணிக்கப்படுகின்றன. எல்லா இடத்திலும் பரவி எப்போதும் இருப்பவை இவ்விதிகள்!

இந்த விதிகளை நம்மால் மாற்ற முடியாது. நம்மால் நம் சூழ் நிலையை மாற்ற முடியும். பாலைவனத்தைக் குளிராக்க முடியும். நதிகளை திசை மாற்றி மின்சாரம் எடுக்க முடியும். வாழ்நாளை நீடிக்க முடியும். டெக்னாலஜி என்பதே இயற்கையை நமக்கு ஏற்ப மாற்றிக்கொள்வதுதானே. ஆனால் எல்லா மாற்றங்களையும் இந்த விதிகளுக்கு உட்பட்டுதான் கொண்டுவர முடியும். புவிஈர்ப்பு விதிகள், க்வாண்டம் விதிகள், தர்மோடைனமிக்ஸ் விதிகள்... பிரபஞ்சமெங்கும் செலாவணி ஆகும். இந்த விதிகளை அமைத்தது யார்? அல்லது எது? இவ்விதிகள் பிரபஞ்சம் அமைவதற்கு முன்பே எழுதி வைத்தவையா? இவை கட்டுப்படுத்துபவையா அல்லது பிரபஞ்சம் இயங்கும் செயல்பாட்டை வருணிக்கும் ஒரு முறையா, சைகையா? இவ்வாறு செல்கிறது இன்றைய சிந்தனை.

ப்ரைம் நம்பர், வகுபடா எண் என்பது பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். 11, 17... போன்றவை 'வகுபடா எண்'கள். 17 ஒரு வகுபடா எண். இந்தக் கூற்று மனிதனும் கணித சாஸ்திரமும் பிறப்பதற்கு முன்பே உண்மையாக இருந்ததா? பித்தாகரஸ் தேற்றம் பிதாகரஸுக்கு முன் எங்கே இருந்தது? அதுபோல் கண்டுபிடிக்கக் காத்திருக்கும் விதிகள் உள்ளனவா?

நவீன இயற்பியல் விதிகள் அனைத்தையும் இன்று கணித சமன் பாடுகளாக (equations) எழுத முடிகிறது. பிரபஞ்ச ரகசியம் கணிதத்தில் உள்ளதா?

சிலர் கணிதம் என்பது நாவலுக்கு 'ப்ளாட்' அமைப்பது போல. 17 ஒரு வகுபடா எண்' என்பதும் ரோமியோ ஜூலியட்டின் காதலன் என்பதும் ஒரே வகையான கூற்றுக்கள்தான். இந்த விதிகள் எல்லாம் நமக்குத் தெளிவு ஏற்பட நாம் அமைத்துக்கொண்டவை. நமக்கு

வெளியே நம் மனை பிம்பங்களுக்கு அப்பால் இவைகளுக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்கின்றனர்.

எல்லா விதிகளுக்கும் இறுதி நோக்கம். நம் பிரபஞ்சம் எப்படி உண்டானது என்பதை விளக்குவதே. இன்று நாம் கண்டுபிடித்துள்ள படி பிரபஞ்சம் 1500 கோடி வருஷங்களுக்கு முன் பிறந்தது. ஒரு மஹா வெடிப்பில் (Big bang) அந்த தருணத்தில்தான் சக்தி, காலம், தூரம் எல்லாம் பிறந்தன. அதற்கு முன்?... அதற்கு முன் என்று கேட்பதே அர்த்தமற்றது. இல்லை என்பதும் இல்லை. புனித அகஸ்டின் சொன்னபடி("உலகம் காலத்தால் செய்யப்பட்டது. காலத்தில் செய்யப்படவில்லை...")

காண்ட் என்னும் தத்துவ ஞானிக்கு, "இந்த விதிகளுக்கு உட்பட்டு பிரபஞ்சம் இயங்குகிறது என்பதில்லை. பிரபஞ்சம் இயக்குகிறது. அதை விளக்க இந்த விதிகள் தேவை."

மற்றொரு சிந்தனை "எத்தனையோ பிரபஞ்சத்தின் எத்தனையோ விதிகளின் சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆனால் நம் பிரபஞ்சத்தின் நம் விதிகள் மட்டும்தான் உலகு, மனிதன், உயிர், சிந்தனை இவைகளை அனுமதிக்கும். இந்த விதிகள் மூலம்தான் மனிதன் உண்டாகி, சிந்தனைத் திறன் பெற்று விதிகள் என்ன என்று கேள்வி கேட்க முடியும்!"

அடுத்த முறை ஸ்விட்சைப் போடும்போது யோசித்துப் பாருங்கள்.

நூறு வருஷத்துக்குப் பிறகு தமிழ்?

ஒரு பத்திரிகை என்னை 'நேர்காணல்' செய்தபோது (பேட்டிக்குப் புதிய வார்த்தை) "நூறு வருஷங்களுக்குப் பின் உங்கள் கதைகள் இருக்குமா?" என்ற கேள்விக்கு "சமூக அமைப்பில் ஆதார மாறுதல்களை ஏற்படுத்தும் நூறு வருஷங்களுக்குப் பின் தமிழே இருக்குமா?" என்று நான் அவர்களைக் கேட்டேன். துள்ளி எழுந்து பிரசுரித்தார்கள்.

இந்த பதில் கேள்வி பரபரப்பை ஏற்படுத்தி "என்ன இது என்று முளை தென்தமிழை, எங்களன்னையை, தமிழ்க் கன்னியை இப்படிப் போய் கேட்கலாமோ?' இவன் தமிழ் துரோகி; கிட்டே சேர்க்கக் கூடாது; பரிசு, ஏன் தண்ணீர்கூட கொடுக்கக் கூடாது." இவ்வாறு உணர்ச்சி வசப்பட்டார்கள். ஒரு எழுத்தாளர் கேள்வி பதிலில் "கவலைப்படாதீர்கள். ஆயிரம் வருஷம் கழித்து தமிழ்க் கன்னி அழியாமல் இருப்பாள்" என்று உத்தரவாதம் அளித்திருந்தார். இதில் வேடிக்கை – நூறு வருஷம் கழித்து இதைப் படிக்கும் நாம் அனைவரும் விதிவிலக்கின்றி இறந்துபோய்விடப்போகிறோம். தமிழ் இருக்கா இல்லையா என்று சரிபார்க்க யாரும் பிழைத்திருக்க மாட்டோம்.

இந்த பயமுறுத்தும் சிந்தனையைத் தவிர்த்துவிட்டு, நூறு வருஷம் கழித்து தமிழ் எப்படி இருக்கும் என்பதைப் பற்றிச் சிந்திப்போம். அதற்கு நம் இருவருக்கும் உரிமை இன்னும் பறிக்கப்படவில்லை. நான் அந்தப் பேட்டியில் கேட்டது அறிவியல்பூர்வமான கேள்வி. அதை உணர்ச்சிப்பூர்வமாகக் கொண்டுவிடுவது தமிழர்களின் சாபக்கேடு. சில சம்பிரதாயமான எண்ணங்களைக் கலைத்தால் பலருக்குப் பகுத்தறிவற்ற கோபம் வந்துவிடுகிறது.

வையாபுரிப் பிள்ளை போன்ற சிறந்த ஆராய்ச்சியாளரை, இன்று பண்டிதர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பதற்குக் காரணம், அவர் நம் சங்க நூல்களின் காலத்தைக் கொஞ்சம் நூற்றாண்டு தள்ளிப் போட்டதுதான். பிள்ளையவர்கள் என்னதான் அறிவுபூர்வமாக விவாதித்திருந்தும் தமிழின் தொன்மை என்பது ஒரு கோவில் மாடு. அதை யாரும் விரட்டக் கூடாது. இதுபோல் பஃறுளியாறு, எழுத்துச் சீர்திருத்தம் போன்ற தொட்டாற்சுருங்கிகள் உள்ளன.

அதுபற்றி அப்புறம்.

நூறு வருஷம் கழித்து தமிழ் எப்படி இருக்கும்?

இதை எதிர்நீட்டல் என்பர் (extrapolation). இதைக் கணிக்க சமூக அமைப்பில் ஆதார மாறுதல்களை ஏற்படுத்தும் அறிவியல் முன்னேற்ற வேகத்தைக் கவனிக்க வேண்டும். சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளில் அறிவியலில் ஏற்பட்ட முன்னேற்றத்தைவிட சென்ற ஐம்பது ஆண்டுகளில் முன்னேற்றம் அதிகம். சென்ற ஐம்பதாண்டுகளை விட சென்ற பத்து ஆண்டுகளில் அதிகம். சென்ற பத்து ஆண்டுகளை விட சென்ற ஒரு ஆண்டில் அதிகம்.

இவ்வாறு அறிவியல் தீட்டப்பட்டு கூர்மையாகக் கவலை தரும் கதியில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், உலகத்தில் எந்த மூலையிலும் யாரும் எந்த தேசத்தின் எந்தத் தெருவிலிருக்கும் மற்றொருவரை போன் மூலம் அழைத்துப் பேச முடியும். வேண்டுமென்றால் குட்டியாக டெலிவிஷன் திரையில் மறுமுனையாளரின் முகத்தையும் பார்க்க முடியும். இது அடுத்த பத்து வருஷத்துக்குள்.

இந்த ரேட்டில் போனால் அடுத்த நூறு வருஷத்தில் என்ன வெல்லாம் ஆகப்போகிறது என்று நினைத்துப்பார்க்க சுவாரஸ்யமான பயமாக இருக்கிறது. முதன்முதலாக பெட்ரோல், டீசல் தீர்ந்துவிடும். கார், பஸ் எல்லாம் மின்சக்தி, சூரிய சக்தி, அல்லது ஏதாவது தண்ணீர், ஐயான் (ion) சக்தி என்றுதான் ஓட முடியும். அல்லது பிராயத்திற்குத் தேவையே இல்லாமல் வீட்டை விட்டே விலகாமல் முழு வாழ்க்கையையும் செலவிடும் சாத்தியக் கூறும் இருக்கிறது. வீட்டில் உள்ள கணிப் பொறி திரையிலேயே ஆபீஸ் வேலை செய்ய முடியும். மார்க்கெட் போக வேண்டாம். கணிப்பொறியிலேயே வாய் வார்த்தையாக ஆர்டர் செய்ய முடியும். பிள்ளைகள் பள்ளிக்குப் போக வேண்டாம். பள்ளிப் பாடங்கள் அனைத்தும், ஏன் – உலகின் அத்தனை அறிவும் வீட்டுச் சில்லுகளில் அடங்கிவிடும். சுற்றுலா தேவையின்றி சுற்றுலாக் காட்சிகள் அனைத்தும் வீட்டுக்கே வந்துவிடும், பரிமாணம், ஓசை சகிதமாக. தமிழ்நாட்டில்தான் தமிழ் பேச வேண்டும் என்றில்லை. டெக்ஸாஸில் இருப்பவர் திருநெல்வேலிக்கு வர முடியும். வீட்டை விட்டு ஒரு அடி விலகாமல்.

அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மனிதன் வீட்டை விட்டு விலகும் தேவைகள் மறைந்துவிடும் என்று கூறுகிறார்கள். காகிதம் இருக்காது. காகிதத்துக்காகக் காடுகளை வெட்டி காலியாக யிருக்கும்; இல்லை, சட்டம் கொண்டுவந்து, மரத்தை வெட்டினால் மரணம் என்ற பயம் ஏற்பட்டிருக்கும். வீட்டுக்கு வெளியே புறப்படுமுன் முகமூடி அணியும் நிர்ப்பந்தமும் ஏற்படலாம். வீடு என்பது ஒரு நாட்டின் அத்தனை பரிமாணங்களும் கொண்ட சொந்தக் கோட்டை யாகிவிடும். கல்யாணம் இருக்குமா? சந்தேகம்தான். பெண்களிடம் பிள்ளைகள் பெற ஆண்கள் மனுப்போட வேண்டி வரும். இன்பங்கள்,

மரணம் போன்றவைகளை நாம் தேர்ந்தெடுக்கும் சௌகரியம் இருக்கும். எதிர்காலத்தில் ஆண்டி வார்ஹால் சொன்னபடி, எல்லோரும் பத்து செகண்டுக்கு உலகப் புகழ் பெறுவார்கள். எல்லாம் சாத்யக்கூறுகள்தாம்!

இந்த மாறுதல்களுக்கு மொழி ஈடு கொடுக்க வேண்டும்.

இந்த சூழ்நிலையில் தமிழ் என்ன ஆகும்? யோசித்துப் பாருங்கள். புறநானூற்றுக் காலத்தில் 'என்னைக்கு ஆடு' என்றால் என் தலைவனுக்கு வெற்றி என்று அர்த்தம். புறநானூறு ஏன்? 1937ல் எழுதப்பட்ட தமிழைப் பாருங்கள்.

"உள்ளபடியே துரையவர்கள் வித்தியாவிஷயத்தில் அதிக சாமர்த்திய பரரென்பதற்கு எள்ளளவாயினுஞ் சந்தேகமேது? அவருக்கு சபாகம்பமோ சிறிதுமில்லை. உலகத்தில் சிலர் பூரண பண்டிதர்களாயிருந்தும் நல்ல சமயத்தில் சபைக் கோழையாகி விடுவார்கள்."

இது உங்களுக்குப் புரிகிறதா, இல்லையா என்பது பிரச்சினை இல்லை. இது பத்திரிகையில் வெளிவந்த தமிழ். இதையும் இன்றைய முத்தாரத்தின் இந்த கட்டுரைத் தமிழையும் ஒப்பிடுங்கள்!

எத்தனை மாற்றம்!

சென்ற பத்து வருஷத்தில் தமிழில் எத்தனை புதிய வார்த்தைகள் வந்திருக்கின்றன? யோசித்துப் பாருங்கள்... கட் அவுட்... டிவ்ஷ் ஆண்டென்னா, ஜொள்ளு பார்ட்டி, வீடியோ டேப், ஸ்கான், பந்த், ஜோல்னாப் பை, மைக்கல் ஜாக்ஸன் போன்றவை வாழ்க்கைக்குத் தேவையாகிவிட்டன.

தமிழ் மாறிக்கொண்டு வருகிறது. இந்த மாற்றத்தின் விஞ்ஞானத்தின் போக்கையும், அறிவியல் முன்னேற்றங்களால், மாறுதல்களையும் சேர்த்துப் பார்க்கும்போது நாடு, நகரம், வீடு, என்பதற்கே அர்த்தங்கள் மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் நூறு வருஷம் மிக அதிகம் சமுத்திர மாறுதல்களைக் கொண்டுவரப்போகிறது.

நூறு வருஷத்தில் தமிழ் இன்றைய தமிழிலிருந்து நூறு சதவிகிதம் மாறிவிடும் சாத்தியக்கூறு இருக்கிறது.

இலக்கியத்திலும், அறிவியலிலும் இன்றைக்கு எழுதப்படும் அத்தனை கதை, கட்டுரைகளும் அடுத்த நூற்றாண்டுக்குத் தேவைதானா என்று பரிசீலித்து, தேவைப்பட்டதை மட்டும்தான் மைக்ரோசிப்பில் பதிந்துகொள்ள அனுமதி கொடுப்பார்கள்.

அதனால் இன்று எழுதப்படும் கடி ஜோக்குகளும், துப்பறியும் நாவல்களும், ரெண்டு பெண்டாட்டிக் கதைகளும் ஏதாவது மைக்ரோசிப்பில் இடம்பெறுவது சந்தேகமே!

அடுத்த நூற்றாண்டில் தமிழ் இருக்காது என்று நான் சந்தேகப்படவில்லை. அந்தத் தமிழ் நமக்குப் புரியாது. தேவைப்பட்டால் அடுத்த நூற்றாண்டில் நம் கதைகள் ஏதாவது சில்லுக்குள் பதிந்திருக்க

யாராவது ஆராய்ச்சியாளர்கள் படிக்கலாம். புரிந்துகொள்ள கணிப் பொறியின் உதவியை நாடலாம். இப்போது சொல்லுங்கள்–நான் கேட்ட கேள்வி சரிதானா?

'டாட்! வீடியோ பார்லர் போய் டெர்மினேட்டர் டூ கேசட் எடுத்துட்டு வாங்க டாட்' என்று இன்றைய இளைய சமுதாயம் பேசும் தமிழே அத்தனை மாறிவிட்டபோது அடுத்த நூறு ஆண்டுகளில் தமிழ் என்ற பெயர் மட்டும்தான் மிச்சமிருந்து மற்றதெல்லாம் புது வார்த்தைகளாகிவிட்டால் நான் சொர்க்கத்தில் ஆச்சரியப்பட மாட்டேன்.

"நீயும் க்வார்க் நானும் க்வார்க்"

கண்ணாடியில் காட்டினால் ஏற்படும் மாறுதல்களைப் பற்றியும் ஸிமெட்ரி (Symmetry) என்னும் தத்துவத்தைப் பற்றியும் மற்றொரு கட்டுரையில் குறிப்பிடு முன் ஒரு சின்னக் கேள்வி. கண்ணாடியில் தலைகீழாகக் காட்டினாலும் மாறாத தமிழ் வார்த்தை ஒன்று இருக்கிறது. அது என்ன?

நாம் எல்லாம் எதனால் செய்யப்பட்டிருக்கிறோம் என்பதைப் பற்றி இந்த வாரம் சிந்திக்கலாம். நீங்கள், நான், ஸ்ரீதேவி, மைக்கேல் ஜாக்ஸன், எல்.ஐ.சி. கட்டிடம், பாக்டீரியா, சூரியன், சந்திரன், நரசிம்மராவ், கோடானு கோடி தூரத்து நட்சத்திரம், பேபி ஷாம்லி... அனைவருக்கும்–அனைத்துக்கும் பொதுவாக இருப்பது எது? வேத உபநிஷத்துக்கள், நம் பிரபஞ்சம் பஞ்சபூதங்களினால் ஆனது என்று சொல்லின–நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். கிரேக்கர்கள் குறிப்பாக அரிஸ்டாட்டில் நாமெல்லோரும் நான்கு சங்கதிகளால் ஆனவர்கள் என்றார். நிலம், நீர், நெருப்பு, காற்று இவையெல்லாம் பூமியில் உள்ளவர்களின் அங்கங்கள்.

வானத்தில் உள்ள நட்சத்திரங்களும், கிரகங்களும் அமைய ஈதர் என்கிற ஐந்தாவது சமாசாரம் தேவை என்றார் அரிஸ்.

17ஆம் நூற்றாண்டின் மத்தியிலே மேற்சொன்னது எல்லாம் தப்பு என்று தெரிந்துவிட்டது. பூமியிலேயே பல தனிமங்கள் கண்டு பிடித்துவிட்டார்கள். தனிமம் என்பது தனியாக வாழக் கூடியது. அதற்கு மேல் எளிமையாகப் பிரிக்க முடியாதது. இரும்பு, நிக்கல், கரி, கந்தகம் போன்ற திடப்பொருட்கள்; ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் போன்ற வாயுப்பொருட்கள்; பாதரசம், ப்ரோமின் போன்ற திரவப் பொருட்கள், இவ்வாறு இருநூற்று சொச்சம் தனிமங்கள் கண்டு பிடித்தார்கள். அதன்பின் இயற்கை இவ்வளவு சிக்கலாக இருக்காது, இருக்கக் கூடாது என்று யோசித்து இந்த தனிமங்களுக்கு உள்ளுக்குள்ளே என்ன சமாசாரம் என்று குடைந்தார்கள். ஜே.ஜே. தாம்ஸன், ரூத்தர் போர்டு, சாட்விக் போன்ற விஞ்ஞானிகள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் முறையே எலக்ட்ரான், ப்ரோட்டான், நியுட்ரான்

என்று நுட்பமான மூன்று துகள்களால்தான் அத்தனை தனிமங்களும் ஆனது என்று கண்டுபிடித்து, "அப்பாடா! இனி நிம்மதி, இயற்கை எத்தனை எளியது" என்று டையால் முகத்தில் விசிறிக் கொண்டார்கள். இந்த நிம்மதி நிலைக்கவில்லை. 1932–ல் கார்ல் ஆண்டர்ஸன் என்னும் அமெரிக்க விஞ்ஞானி பாஸிட்டரான் என்று மற்றொரு துகளை விண்வெளியிலிருந்து வரும் காஸ்மிக் கதிர்களில் கண்டுபிடித்தார். எலக்ட்ரானின் எதிர்மறை இது. அதே எடை, ஆனால் எதிர் மின்சாரம், எலக்ட்ரானுக்கு மட்டும் ஏன் எதிர்துகள். மற்ற துகள்களான ப்ரோட்டான், நியுட்ரானுக்கும் எதிர்மறை இருந்தே ஆக வேண்டும் எனத் தேடல் துவங்கியது. 1936–ல் அதே பிடிவாத ஆண்டர்ஸன் ம்யுமெஸன் என்கிற துகளைக் கண்டுபிடித்தார். எலக்ட்ரான் போல மின்அமைப்பு, ஆனால் அதைவிட கனமானது. ப்ரோட்டான் அளவு கனமல்ல. நடுவாந்தரம். 'மெஸான்' என்ற கிரேக்க வார்த்தைக்கு நடுவாந்தரம் என்று அர்த்தம். எனவே 3ல் ஆரம்பித்து 5 துகள்களுக்கு வந்துவிட்டனர். இது 1936–ல். இதற்கு முன் உல்ஃப்காங் பாலி என்கிற ஆஸ்திரிய விஞ்ஞானி ந்யுட்ரினோ என்கிற துகளும் இருந்தால் தான் கணக்கு சரியாக வருகிறது. என்று கூறியிருந்தார். இது 1956–ல் ஊர்ஜிதமாயிற்று.

துகள்கள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்க 1960–ல் நாற்பது அம்பதாக இருந்தது. 70களில் நூற்றுக்கணக்கில் பெருகிவிட்டன. அவைகள் பேரியான், மெஸான், லெப்டான் எனும் மூன்று வகைகளில் அடங்கின. இருந்தும் – நூற்றுக்கணக்கான துகள்களா? திஸ் இஸ் டூ மச் என்று இந்த துகள்களுக்கும் உள்ளே ஆதாரமான சங்கதிகள் ஏதாவது இருக்கிறதா என்று அவைகளை ஒன்றுடன் ஒன்று அதி வேகமாக மோதவிட்டுப் பார்த்தார்கள். பார்த்ததில் இந்தத் துகள்களில் பல அல்பாயுசு, ஒரு செகண்டில் ஐநூறாயிரம் பாகமே அவைகளுக்கு வாழ்வு. அடிக்கடி இந்த துகள்கள் சக்தியாகவும் மற்ற துகள்களாகவும் மாறுகின்றன என்று கண்டுபிடித்தார்கள். அவைகளின் குணங்களில் ஒரு பொதுத் தன்மை இருக்கிறதா என்று தேடினார்கள். 1961–ல் அமெரிக்கரான முர்ரே ஜெல்மான் என்பவரும் யுவான் நீமன் என்கிற யூதரும் இந்தத் துகள்களைக் குழுப்படுத்த முடிகிறது என்று கண்டறிந்தார்கள். குறிப்பாக பேரியான், மெஸான் வகைத் துகள்கள் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனில் அவைகளுக்குள் 'க்வார்க்' என்கிற உப துகள் அல்லது உட்துகள் இருந்தாக வேண்டும் என்று யோசித்தார்கள். ஜேம்ஸ் ஜாய்ஸின் ஃபின்னிகன்ஸ் வேக் என்னும் நாவலிலிருந்து தேர்ந்தெடுக்க வார்த்தை க்வார்க். இந்த க்வார்க்கைத் தனிப்படுத்த வருஷக்கணக்கில் தேடினார்கள்.

1968–ல் ஒரு பரிசோதனையில் க்வார்க் போல் ஒரு தீற்றல் தெரிந்தது.

இன்றைய தேதிக்கு நாம் எல்லோரும் கீழ்க்காணும் வகைத் துகள்களால் பண்ணப்பட்டிருக்கிறோம்.

ஆறு க்வார்க் ஆறு லெப்டான்கள். அவ்வளவுதான். சமாசாரம் தீர்ந்துபோச்சு.

மொத்தம் பன்னிரெண்டு துகள்களும் அவைகளின் எதிர் துகள்களும், பிரபஞ்சம் அத்தனையும் அதே!

ஆறு லெப்டான்கள் என்ன என்ன?

எலக்ட்ரான், ம்யுவாவ்தான் அவைகளின் நியுட்ரினோக்கள்.

ஆறு க்வார்க்–களின் பெயர் என்ன?

மேல், கீழ், வினோதன், அழகன், உச்சி, அடி.

நிடப் பொருட்கள் அனைத்தும் மேற்சொன்னவைகளின் கலவைகள். உதாரணமாக ப்ரோட்டான் என்பது ஒரு கீழ், இரண்டு மேல் க்வார்க். நியுட்ரான் என்பது இரண்டு கீழ், ஒரு மேல்.

அடுத்த முறை யாரேனும் உங்களிடம் அலட்டிக்கொண்டால் "போடா நீயும் க்வார்க் நானும் க்வார்க்!" என்று சொல்லிவிடுங்கள்.

பனை விசிறி

உலகின் எல்லா மதங்களும் நம்பிக்கைகளும் பிரளயத்தைப் பற்றிப் பேசுகின்றன. தத்துவஞானிகளும் மத போதகர்களும் நம் இறுதி நாட்களில் வெள்ளம் வந்தோ, பூமி வெடித்தோ, அனைவரும் சாகப்போகிறோம்; "அது எப்போ என்பதுதான் சரியாகத் தெரிய வில்லை" என்று பேசி எழுதியிருக்கிறார்கள்.

அண்மையில் விஞ்ஞானிகளும் இந்த கோஷ்டியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். நம் சுற்றுச் சூழ்நிலை சூடாகிக் கொண்டிருக் கின்றது என்று எச்சரிக்கை செய்கிறார்கள்! க்ரீன் ஹவுஸ் எஃபெக்ட் என்று இதற்குப் பெயர். நம் தொழில் முன்னேற்றத்தினால், நம் கார்களும் தொழிற்சாலைகளும் எரிக்கும் எரிபொருள்கள் அதிகப் படியாக கார்பன் டையாக்ஸைடு உண்டு பண்ணி காற்றில் கலக் கிறோம். நம் பூமியின் வளிமண்டலத்தைச் சுற்றியுள்ள ஓஸோன் வாயுப் போர்வையை நம் குளிர்சாதனங்களிலும், அழகு சாதனங் களிலும் பயன்படுத்தும் க்ளோரோ ஃப்ளூரோ கார்பன் (CFC) வாயு கொஞ்சம்கொஞ்சமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் ஒன்றுசேர்ந்துகொண்டு, வளி மண்டலத்தில் புழுக்கம் ஏற்பட்டு, நம் சுற்றுப்புறம் சூடாக்கி, துருவப் பிரதேசத்து ஐஸ் உருகி, சமுத்திரங்களின் நீர்மட்டம் அதிகமாகி, ஒரு நூற்றாண்டுக்குள் அனைவரும் 'கோவிந்தா' என்று சாவு மணி அடிக்கத் துவங்கி விட்டார்கள் விஞ்ஞானிகள்.

ரியோவில் அண்மையில் உலகத் தலைவர்கள் அனைவரும் கூடி இதை சர்ச்சித்து, 'ஏதாவது பண்ண வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தார்கள். இளைஞர்கள் பல இயக்கங்கள் ஆரம்பித்து, எங்கள் சூழ்நிலையைக் கலைக்க உங்களைப் போன்ற கிழவாடிகளுக்கு உரிமையில்லை என்று ரோடுகளில் உட்கார்ந்து அடம் பிடிக்கிறார்கள். பாட்டுப் பாடுகிறார்கள்!

இந்த க்ரீன் ஹவுஸ் எஃபெக்ட் என்பது என்ன என்று சற்று உற்றுப் பார்க்கலாம்.

நிலக்கரி, பெட்ரோல், டீஸல், எரிவாயு இவைகளை நாம் பல்வேறு நாகரிகக் காரணங்களுக்காக எரிக்கும்போது நம் காற்றில் அதிகரிக்கும் கார்பன்டையாக்ஸைடு 'இன்ஃப்ராரெட்' என்று சொல்லப்படும்

உஷ்ண அலைகளைக் கிரகிக்க வல்லது. இதனால் பூமியிலிருந்து புறப்படும் உஷ்ணம் தப்பிப்பதைத் தடுக்கிறது. பூமி சூடாகிறது... இவ்வாறு உலகின் சராசரி உஷ்ணம் 30 வருஷத்துக்கு ஒரு டிகிரி அதிகமாகிறது. இதற்கு க்ரீன் ஹவுஸ் எஃபெக்ட் என்று பெயர்.

1957–சர்வதேச பூமி இயற்பியல் வருஷத்தில் பூமியின் சராசரி உஷ்ணத்தை அளந்தபோது, அடடா! ஜுரம்! என்று தீர்மானித்தார்கள். கார்பன்டையாக்ஸைடு மட்டுமன்றி நாம் வெளிப்படுத்தும் மற்ற சில வாயுக்களும் இந்த உஷ்ண அதிகரிப்புக்குக் காரணம். மீத்தேன் நம் நெல் வயல்களிலும், நம் கால்நடைகளாலும், எண்ணெய்க் கிணறுகளாலும் உண்டாவது. இது உஷ்ணத்தைக் கிரகிக்க வல்லது.

நம் செயற்கை உர உபயோகத்தால் வெளிப்படும் நைட்ரஸ் ஆக்ஸைடு முன்பு சொன்ன ஸி எஃப் ... ஏன், நீராவி, எல்லாமே இந்த சூட்டுக்குக் காரணம்!

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் இவை அனைத்தும் சுமார் 30 சதவிகிதம் அதிகரித்துள்ளன. அடுத்த நூற்றாண்டில் 5 டிகிரி உஷ்ணம் ஏறி உள் நாடுகளில் பாலைவனம் உண்டாகி கடற்கரைப் பிரதேசங்களில் புயலும், வெள்ளமும் வரப்போகிறது என்று எச்சரிக்கை தந்திருக்கிறார்கள்.

உண்மையான நிலை என்ன? நிஜமாகவே இப்படி ஒரு எதிர்காலம் வரப்போகிறதா... இந்தக் கேள்விக்கு அப்படித்தான் தோன்றுகிறது என்று மையமாகத்தான் பதில் அளிக்க முடியும். காரணம், இந்த முடியும் ஹேஷ்யம் எல்லாம் கணிப்பொறிகளை வைத்துக்கொண்டு மேத்தமாட்டிக்கல் மாடலிங், கணித முன்மாதிரி முறைப்படி ஏற்படுத்தியவை. இந்த மாடல் குற்றமற்றதல்ல. அதனால் இந்த விளைவைப் பற்றி அதிகம் இப்போது அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்கிறார்கள். இதில் விஞ்ஞானிகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. சிலர் ஆதாரமாக உஷ்ணத்தை அளந்ததிலேயே தவறுகள் இருக்கலாம் என நம்புகின்றனர்.

1940–லிருந்து 1975–வரை உலக உஷ்ண அளவு குறைந்து வந்திருக்கிறது. 1975–லிருந்து 1980–வரை ஜாஸ்தி ஆகியிருக்கிறது. 80லிருந்து முந்தா நாள் வரை எந்தவித மாற்றமும் இல்லை. இதிலிருந்து என்ன முடிவுக்கு வர முடியும் என்கிறார்கள்.

ஸாட்டிலைட்டு செயற்கைக் கோள்களிலிருந்தும் நம் வான் மண்டலத்தின் மைக்ரோவேவ் அளவுகளைக் கொண்டு நுட்பமாக உலக உஷ்ணத்தை இப்போதெல்லாம் அளவிட முடிகிறது. இதன்படி அடுத்த நூற்றாண்டு 2052–க்குள் இரண்டு டிகிரியும், நூற்றாண்டு இறுதியில் 6 டிகிரியும் அதிகமாகலாம் என்பதை ஊர்ஜிதப்படுத்த முயல்கின்றார்கள். சிலர் அடுத்த நூற்றாண்டின் இறுதியில் ஒரு டிகிரிதான் அதிகமாகும் என்கிறார்கள். சிலர் உஷ்ணமானால் என்ன? நல்லதுதான் நிகழும் என்கிறார்கள்.

ஐஸ் உருகி கடல் நீர் மட்டம் அதிகமாகி நம் எல்லோரையும்

முழுக்கிவிடும் என்பதையும் உத்திரவாதமாகச் சொல்ல முடியவில்லை. ஸாட்டிலைட்டுகளிலிருந்து பார்க்கையில் க்ரீன்லண்டு ஐஸ்பாளங்கள் இன்னும் அளவில் அதிகமாகிக்கொண்டு வருவது தெரிகிறது. இதன் விளைவாக சமுத்திரங்களின் நீர்மட்டம் குறையத்தான் வேண்டும்!

இந்தக் குழப்பத்தால் எதிர்காலத்தில் என்னதான் செய்வது? நடுரோட்டில் ஒரு அழகான டப்பா கிடக்கிறது. ஒருத்தன் சொல்கிறான். கிட்ட போகாதே வெடிக்கும் என்கிறான். மற்றொருத்தன் அது வெடிக்காது என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கிறேன் என்கிறான். என்ன செய்வது?

எதற்கு வம்பு என்று ஒதுங்கிச் செல்வதுதான் விவேகம் அல்லவா. எனவே அடுத்த நூற்றாண்டு உலகத்துக்கு ஒரு ப்ரிஸ்க்ரிப்ஷன் கீழ் வருவது.

பெட்ரோல், டீஸல் முதலியவற்றை தொலைதூரப் பயணத்துக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். நகரங்களில் பாட்டரி சக்தி, இல்லை சைக்கிள், இல்லை நடை!

அணு சக்திக்கு ஈடில்லை. அதில் இருவகை உண்டு ஃபிஷன், ஃப்யூஷன் என்று, ஃப்யூஷன் கட்டுப்பட்ட ஹைட்ரஜன் பாம் போல, அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. கல்பாக்கம் எல்லாம் ஃபிஷன் வகை. இதில் பெரிய பிரச்சனை சாம்பல். ஆயிரக்கணக்கான வருஷங்கள் அபாயகரமான கதிர் இயக்கம் இருக்கும்.

சூர்ய சக்திதான் உத்தமம். இதன் விலை இன்று அதிகம். மேலும் இன்றைய தேதிக்கு ஒரு வீட்டுக்கு உண்டான மின்சாரத்திற்கு ஒரு கால்பந்து மைதானப் பரப்புக்கு ஸோலார் ஸெல் அமைக்க வேண்டும்.

காற்று–தூத்துக்குடியில்தான் சில நாள் வேலை செய்யும். மைலாப்பூரில் ஓடாது. சமுத்திர ஆழத்தில் உள்ள உஷ்ண வித்தியாசங்களை மின்சாரமாக மாற்றலாம். ஆனால் செலவு அதிகம்.

கார்பன்–டையாக்ஸைடு நீக்க உத்தமமான முறை, காடுகளை வளர்ப்பது. இதற்கு மனிதனின் ஏழ்மை நீங்க வேண்டும். ஒரு நூற்றாண்டு போதாது. என்னென்னவோ திட்டங்கள் எல்லாம் கைவசம் வைத்திருக்கிறார்கள். சஹாரா பாலைவனம் முழுவதும் ஸோலார் சூர்ய சக்தி பானல்கள் அமைப்பது. ஆஸ்திரேலியா முழுவதும் மரம் நடுவது. இது எல்லாம் சரிப்படவில்லையென்றால் விண்வெளியில் ஏகப்பட்ட ஸாட்டிலைட்டுகளை அனுப்பி கீழே வரும் சூர்ய வெளிச்சத்தை ஜன்னல் போல கட்டுப்படுத்துவது. உபரியாக இந்த ஸாட்டிலைட்டுகள் சூர்ய சக்தியை வாங்கி மின்சாரமாக மாற்றி மைக்ரோவேவ் வடிவத்தில் கீழே அனுப்பவும் முடியும்.

எப்படியோ, பூமி சூடாவதைத் தடுத்துவிடுவார்கள் என்றுதான் நம்பிக்கை.

என் பங்குக்கு நல்லதாக ஒரு பனை விசிறி வாங்கி வைத்துக் கொள்ளப் போகிறேன்.

உலகை இயக்கும் சக்திகள்!

சென்ற கட்டுரையில் பிரபஞ்சம் முழுவதும் ஆறு க்வார்க், ஆறு லெப்டான்களால் ஆனது என்று சொன்னோம். ஆனால் பிரபஞ்சத்தின் உண்மைச் சொரூபத்தை விளக்க இது போதாது. இந்தத் துகள்களிடையே நிகழும் ஈர்ப்பு அல்லது எதிர்ப்பு விசைகளையும் கவனிக்க வேண்டும். பிரபஞ்சத்தில் இவ்வகையில் நான்கு விசைகள் உள்ளன. புவியீர்ப்பு விசை, மின்காந்த விசை, அணுக்கருக்கள் நிகழும் வலிமையான, மென்மையான விசைகள், இந்த நான்கு விசைகள் பன்னிரண்டு துகள்கள்! இவைகளில் முழு பிரபஞ்சமும் அடங்கிவிடும் என்று சொல்கிறார்கள்.

இந்த நான்கு விசைகளில் புவியீர்ப்பு விசைதான் இருப்பதிலேயே சோகை. ஆனால் புவியீர்ப்பு விசையைத்தான் நாம் நேரடியாக உணர்கிறோம். (மாடியிலிருந்து குதித்துப் பாருங்கள்) மின்காந்த விசை என்பதையும் நாம் மறைமுகமாக, விளைவுகளால் உணர்கிறோம். ஒளி, ரேடியோ அலைகள், உஷ்ணம், எக்ஸ்ரே, காமாக் கதிர்கள் இவை எல்லாம் மின்காந்த வகை மின்சாரம் மின்காந்தத்திலிருந்துதான் உண்டாகிறது. அணுக்கள் கூட்டணுக்களாவதும் மின்காந்தக் கவர்ச்சியால்தான். திடப்பொருட்கள் எல்லாம் உண்டானதும் மின்காந்தக் கவர்ச்சியால்தான்.

அணுக்கருவுக்குள் நிகழும் மிச்ச இரண்டு சக்திகளை நாம் ஆராய்ச்சிசாலைகளில்தான் உணர முடியும்.

அணுவின் மையப்பகுதியில் இருக்கும் துகள்களிடையே உள்ள ஈர்ப்பு, எதிர்ப்பு சக்தி இவை. இதில் வலிய சக்தி என்பது ப்ரோட்டான், நியுட்ரான் இவைகளை ஒட்ட வைப்பது.

மெலிய சக்தி என்பது 'அணு சக்தி' என்று நாம் பேசிக்கொள்ளும் உட்கரு சக்தி. சூரியன் போன்ற நட்சத்திரங்களில் நிகழும் சக்தி உற்பத்தி இதனால்தான்.

புவிஈர்ப்பு சக்தி எல்லா துகள்களையும் நட்சத்திரங்களையும் காலக்ஸிகளையும் பாதித்து பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளது. மின்காந்த சக்தியும் வெகுதூரம் வியாபிக்கக்கூடியது. மற்ற இரண்டு

சக்திகளுக்கு மிக மிக மிகக் குறைவான தூரத்திலேயே பாதிப்பு மறைந்துவிடும். ஆனால் இவை புவி ஈர்ப்புடன் ஒப்பிட்டால் மிக மிக வலுவானவை.

நான்கு சக்திகள் நான்கு தினுசு... இரண்டு 'வீக்'. ஆனால் வெகுதூரம் பரவக்கூடியவை. இரண்டு ரொம்ப வலுவானது. ஆனால் ரொம்ப கிட்டத்தில் மட்டும் உணரக்கூடியவை.

இந்த நான்கு சக்திகளும் ஒன்றே என்று காட்டத்தான் இப்போது தகிடுதத்தமாகக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை மட்டும் நீங்கள் நிரூபித்துவிட்டால் உங்கள் வீட்டுப் பூனைக்குட்டிக்குக் கூட நோபல் பரிசு அளித்துவிடுவார்கள்.

அதற்கு முன் இந்த சக்திகள் குறிப்பாக மின்காந்தம், புவிஈர்ப்பு இந்த இரண்டும் எப்படி அத்தனை தூரம் பரவ முடிகிறது? இது என்ன ரிமோட் 'கண்ட்ரோலா' என்று கேட்கலாம். இதை விவரிக்க பற்பல சித்தாந்தங்கள் உள்ளன. இதில் பிரபலமானது QED க்வாண்டம் எலக்ட்ரோ டைனமிக்ஸ் என்ற சித்தாந்தம்.

இதில் இரண்டு விஷயம் சொல்கிறார்கள். இந்த புவிஈர்ப்பு, மின்காந்த விசைகள் எல்லாம் சில துகள்களின் பரிமாற்றத்தால் நிகழ்கின்றன. உதாரணமாக மின்காந்த சக்தி ஃபோட்டான் என்கிற துகள்களின் பரிமாற்றம், புவி ஈர்ப்பு விசைகூட 'க்ராவிடான்' என்னும் துகள் பரிமாற்றமாக இருக்கலாம். (ஆனால் இந்த 'க்ரா விடானை' யாரும் பார்த்ததில்லை.)

இந்தத் துகள்கள் திடீர் என்று சக்தியிலிருந்து புறப்பட்டு சக்தியாக மாறவும் இயலும்...

இதற்கு மேல் விவரங்கள் சொன்னால் கொஞ்சம் தலைசுற்றும்... ஆதாரமாக இந்த சிந்தனைகள் எல்லாம் பிரபஞ்சத்தில் ஒரு எளிமை யைத் தேடுகின்றன என்பது உங்களுக்குப் புரிந்தால் சரி. விஞ்ஞானி களின் அடிப்படை நம்பிக்கை இது. பிரபஞ்சம் மிக எளியது. சிக்கலானதாக இருக்க முடியாது. ஒரு துகள், ஒரு சக்தி இதற்கு மேல் சிக்கல் இருக்கக் கூடாது; இன்னும் எளிமையாகப் போனால் ஒரு சக்தி–அப்போதும் அதிலிருந்து மற்ற சமாச்சாரங்கள் அனைத்தை யும் விளக்கிவிட்டால் அதற்கப்புறம் நிம்மதியாகப் பெருமூச்சு விடலாம்.

இந்த சக்திதான் கடவுளா? என்பதைப் பற்றி யோசிக்கலாம். இல்லை, இந்த சக்தியை, சூன்யத்தில் கரைத்துவிடலாம். இது அவர்கள் ஆதர்சம். ஆனால் இன்று வரை அந்த ஆதர்ச சிந்தனை வெகு தூரத்தில்தான் இருக்கிறது.

இந்த நான்கு சக்திகளையும் ஒன்றுபடுத்தும் முயற்சி முதலில் 1967–ல் துவங்கியது. ஸ்டீவன் வைன்பர்க் என்னும் அமெரிக்கரும் அப்துஸ் சலாம் என்னும் பாகிஸ்தானியரும் தனித்தனியாக மின்காந்த சக்தியையும் மெலிய அணுக்கரு சக்தியையும் இணைக்கும் 'எலக்ட்ரோ வீக்' சக்தி ஒன்றை விவரித்தார்கள்.

மற்ற சக்திகளை இன்றைய தேதி வரை (ஜூன் 23, 1992) யாரும் இணைக்கவில்லை.

சித்தர்களும், யோகிகளும் உடம்பைப் பற்றிப் பாடும்போது 'வெறும் சீயும் வழும்பும்' என்று விவரித்தார்கள்.

இந்தக் காலத்து சித்தர் இப்படிப் பாடலாம்:

"நான்கு சக்திகளும் லெப்டாஸும் க்வார்க்குமாய் அமைந்த பெண்ணுக்கு ஏங்குவதேன் மனமே இனிமேலும் அவள் பின்னே சுற்றாமல்..."

வாசகர்கள் மற்ற வரிகளை நிரப்பிக்கொள்ளலாம்.

சினேகித ஜோடிகள் ஆயிரம் உண்டு

பிழைகள் மனிதர்கள் செய்தி பரிமாறிக்கொள்ளும்போது நிகழ்வது இயல்பே. பெரும்பாலும் நமக்குள் நிகழும் சச்சரவுகள் நாமொன்று சொல்ல அவரொன்று அர்த்தம் பண்ணிக்கொள்ளும் பிழைகளால் வரும் விளைவே.

கணிப்பொறிகளின் இடையே செய்தி பரிமாறிக்கொள்ளும் போது இவ்வாறு பிழைகள் பல காரணங்கால் ஏற்பட்டுவிடுவதுண்டு. ஒரு கடிதம் வருகிறது. கீழ்வரும் வாக்கியத்தை அதில் படிக்கிறீர்கள்.

"நீ எப்போது இங்கு வலுகிறாய்?"

"வருகிறாய்" என்பதற்கு பதில் 'வலுகிறாய்' என்று எழுதியிருக்கும் பிழையை நாமே உணர்ந்து திருத்திக்கொள்கிறோம் அல்லவா இதற்கு error correction பிழை திருத்தம் என்று பெயர்.

ஆனால் இந்த வாக்கியம்...

"நான் உன்னை தரந்தே விரும்புகிறேன்." இதில் மூன்றாம் வார்த்தையில் பிழை இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடிகிறதே தவிர திருத்த முடியவில்லை. இதைப் பிழை உணர்தல் error detection என்பர். கணிப்பொறி இயலில் இவ்விரண்டுமே உண்டு. ஆனால் கணிப்பொறிகளுக்கு அர்த்தம் பண்ணிக்கொண்டு பிழைகளை உணர்ந்துகொள்ளும் திறமை இன்னும் வரவில்லை. ஆனால் சில எளிய புத்திசாலித்தனமான சங்கேத முறைகளின் உதவியுடன் பிழைகளைக் கண்டுபிடிக்கின்றன; திருத்திக்கொள்ளவும் செய்கின்றன. பிழை இருக்கிறது என்று கண்டுபிடிப்பது எளிது. கணிப்பொறிகளின் செய்திகள் அனைத்தும் இறுதியில் எண் வடிவத்துக்கு மாற்றி அனுப்பப்படுகின்றன. மேலும் இந்த எண்களில் உள்ள இலக்கங்கள் *1* அல்லது *0* என இரு இலக்கங்கள்தான் இருக்கும். எழுத்துக்கு எழுத்து எத்தனை *1* என்று கணக்கிட்டு அவைகளை ஒற்றைப் படையாகவோ அல்லது இரட்டைப்படையாகவோ நிரப்பி செய்தி அனுப்பும் முறை ஒன்று உண்டு. இதற்கு பாரிட்டி (Parity), பொருத்தம் என்று பெயர். செய்தி வந்து சேரும்போது அது ஒற்றைப்படையா இரட்டைப்படையா என்பது முன்பே தெரிந்திருக்கும். அதனால் ஒவ்வொரு எழுத்திலும் இருக்கும் '*1*' இலக்கங்களைக் கூட்டிப்

பார்த்து பொருத்தம் சரிவருகிறதா (ஒற்றைப் படையா இரட்டைப் படையா) என்று சோதித்து, சரியில்லையெனில் 'செய்தியில் பிழை, திருப்பி அனுப்பு' என்று எதிர்ச் செய்தி அனுப்புவார்கள். இது error detection வகை.

பிழையான இலக்கத்தைக் கண்டுபிடிக்கவும் அதைத் திருத்தவும் செய்யும் சங்கேத முறைகள் உள்ளன. இவைகளில் பிரசித்தமானது ஹாமிங் கோடு (Hamming Code) என்பது.

எண்கணிதம் கணிப்பொறி இயலில் நிறையவே பயன்படுகிறது. அதுவும் வகுபடா எண்கள் (Prime) செய்திகளை மற்றவர் புரிந்து கொள்ள முடியாதபடி ரகசிய சங்கேதத்தில் அனுப்புவதற்கு மிகவும் பயன்படுகின்றன. எண்கணிதம் மிக மிக சுவாரஸ்யமானது. எண்களே, இலக்கங்களே, மனித சிந்தனையின் படைப்பு. மனிதன் பத்து விரல் இருந்ததால் தசம எண் முறைகளைப் பயன்படுத்தினான். பத்து இலக்கங்களை வடிவப்படுத்தினான். ஆதி மனிதனுக்கு தன் ஆடுகளையும், மாடுகளையும் எண்ணத்தான் எண்கள் தேவைப்பட்டன. முதலில் ஒன்று, இரண்டு, பல என்று மூன்று வார்த்தைகள்தான் வைத்திருந்தான். இருந்தும் ஒரு ஆட்டு மந்தையில் நூறு ஆடுகளில் ஒரு ஆடு காணவில்லை என்றால் அவனால் சொல்ல முடிந்தது எப்படி? ஒவ்வொரு ஆட்டின் முகத்தையும் ஞாபகம் வைத்திருந்தானாம்! இப்போதும் இந்தத் திறமை நம் கிராமத்து மக்களுக்கு உண்டு. இருந்தும் வியாபாரம், அதிகாரம் இவைகள் எல்லாம் பெருக எண்களின் தேவையும் அதிகமாகியது.

'ஆதி மனிதர்களின் எண்கணிதங்கள் 5, 10, 20 எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. காரணம், ஒரு கை, இரு கை, கைவிரல்கள். விதிவிலக்காக சில ஆப்பிரிக்க, ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களிடம் பைனரி (இருநிலை), மூன்று, நான்கு அடிப்படைக் கணிதங்களும் இருந்திருக்கின்றன. பெரும்பாலும் 5 அடிப்படையில் தான் அதிகமாக இருந்திருக்கிறது. சில மொழிகளில் அஞ்சு என்பதற்கும் கை என்பதற்கும் ஒரே வார்த்தை. சமஸ்கிருதத்தில் 'பஞ்ச்' என்பது பர்ஸியன் மொழியில் 'பெஞ்ச்'. ஆனால் அர்த்தம் கை! பல மொழிகளில் ஒன்று, இரண்டு, மூன்று போன்ற இலக்கங்களுக்கு உண்டான வார்த்தைகள் விரல்களுக்கும் பயன்பட்டன. தென் அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் ஆறு என்பதற்கு 'மற்றொரு கையில் ஒன்று' என்கிறார்கள். பத்து என்பது 'இரு கை.' இருபது என்பது நான்கு கை. 'ஒரு இந்தியன்' இவ்வாறு ஆரம்பித்த எண்கணிதம் விரல்களிடமிருந்து விடைபெற்று இன்று மிக விஸ்தாரமான இயலாக மாறி இருக்கிறது.

எண் கணிதம் மனிதனின் சொந்த சிந்தனையின் உருவாக்கம். இப்படி உருவாக்கிய எண்களைப் பற்றி என்னவெல்லாம் யோசித்திருக்கிறார்கள் பார்க்கலாம்.

ஒரு எண்ணை முழுசாக வகுக்கும் அத்தனை எண்களையும்

கூட்டினால் ஆரம்ப எண்ணே வந்தால் அதை ஆதர்ச எண் என்பார்கள்.

உதாரணம் 6

1 + 2 + 3 = 6

அடுத்தது 28

1 + 2 + 4 + 7 + 14 = 28

இந்த ஆதர்ச எண்களை உபாசிக்கவும், அவைகளுக்கு ஒரு தெய்வத்தன்மை தரவும் முற்பட்டார்கள்.

பைபிளில், பிரபஞ்சத்தை 6 நாட்களில் படைத்தபோது, கடவுள் ஒரு ஆதர்ச எண்ணைத் தேர்ந்தெடுத்து பிரபஞ்சம் ஆதர்சமானதாக இருக்க வேண்டும் என அவர் விரும்பியதால்தான்! என புனித அகஸ்டின் கூறுகிறார்.

இந்த ஆதர்ச எண்களைக் கண்டுபிடிக்க யுக்ளிட் (Euclid) ஒரு ஃபார்முலா கண்டுபிடித்தார்.

ஆதர்ச எண்கள் போல 'சினேகித' எண்களும் உள்ளன. ஒரு எண்ணை அதை முழுசாக வகுக்கும் காரணிகளை (Factors) கண்டு பிடித்து, அவைகளைக் கூட்டினால் வரும் மற்றொரு எண்ணை இதே மாதிரி வகுக்கும் காரணிகளைக் கண்டுபிடித்து அவைகளைக் கூட்டிப் பார்த்து முதல் எண் வந்தால், இவ்விரண்டும் சினேகித எண் ஜோடிகள்.

தலைசுற்றினால் கீழ்வரும் உதாரணத்தைப் பார்த்தால் தெளிவாகி விடும்.

220, 284 இந்த வகையில் சினேகித ஜோடி. எப்படி? 220ஐ முழுசாக வகுக்கும் எண்கள் 1, 2, 4, 5, 10, 11, 20, 22, 44, 55, 110. இவைகளைக் கூட்டினால் கிடைப்பது 284. அதேபோல் 284–ன் காரணிகள் 1, 2, 4, 71, 142. இவைகளைக் கூட்டினால் 220.

இந்த ஒற்றுமையால் 220, 284 இரண்டையும் ஒற்றுமையின் சகோதரத்துவத்தின் குறியீடாக இன்றும் கருதுபவர்கள் உண்டு. பைபிளின் ஆதியாகமத்தில் யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்கு இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும் வெகுமானமாகக் கொடுக்க 220ஐத் தேர்ந்தெடுத்தது. இது சினேகித எண் ஜோடிகளில் ஒன்றாக இருப்பதால் என்று மத போதகர்கள் வியாக்கியானம் செய்வது உண்டு! மேத்தமாட்டிக்ஸ் எங்கெல்லாம் போகிறது பாருங்கள்.

220, 284 இவை இரண்டிற்கும் அடுத்த 'சினேகித ஜோடி' கி.பி. 1636ல் ஃபெர்மாட் என்பவர் கண்டுபிடித்தது. 17296ம் 18416ம். (பொழுதுபோகவில்லை என்றால் சரிபார்க்கவும்)

இன்றைய தேதிக்கு சுமார் ஆயிரம் ஜோடிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இதற்கடுத்து 'சமூகப் பொருத்தமுள்ள' எண்களைப் பற்றி சொன்னால் உங்களுக்கு ராத்திரி தூக்கம் வராது.

பிரபஞ்சம் ஆரம்பித்து மூன்று நிமிஷம்... 42 செகண்டுக்குப் பிறகு

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அந்த அன்பர் போன் செய்தார். கோவையிலிருந்து என்னைப் பார்க்க வந்திருப்பதாக. என்னைப் பார்க்க வருகிறவர்கள் இரண்டு ரகம். கம்ப்யூட்டர் படிப்பு, வேலை இவை பற்றி சந்தேகம் கேட்க வருவார்கள். இது முதல் ரகம். எழுத்தைப் பற்றிப் பேச வருகிறவர்கள் இரண்டாவது.

என்னை அன்று பார்க்க வந்த இளைஞர் தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தின் முன்மாதிரி. நான் வெவ்வேறு மாநிலங்களிலிருந்து வரும் இளைஞர்களைச் சந்திப்பதால் நம் நாட்டு இளைஞரின் குணாதிசயங்களை வகைப்படுத்த முடிகிறது. இன்றைய தினத்தின் தமிழ் இளைஞர் பொதுவாகவே உடல் அமைப்பில் சற்று ஒல்லியாக இருக்கிறார். எண்பது சதவிகிதம் பேர் சிகரெட் குடிப்பதால் உதடுகள் கருத்து இருக்கின்றன. குறிப்பாக பிராமணர்கள், மதுரை, திருநெல்வேலி பக்கத்திலிருந்து வரும் தமிழ் மாணவர்கள் கண்களில் துருதுருப்பும், ஆர்வமும் உள்ளன. ஆனால் இவர்களை நான் ஸ்ட்ரீட்ஸ்மார்ட் (Streetsmart) என்கிற வகையில் சேர்க்க மாட்டேன். பொதுவாகவே தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு–சென்னை கல்லூரிகளிலிருந்து வரும் மாணவர்கள் தவிர–ஆங்கிலம் பேசும் திறமை கம்மியாக இருக்கிறது. தலைமயிர் நிறைய வைத்துக்கொண்டு ஆங்கிலத்தைத் தமிழ் மாதிரியே பேசுகிறார்கள். ஆனால் சந்தர்ப்பம் கிடைத்ததும் அதை அபகரித்துக் கொண்டு பயங்கரமாக மாறிவிடுகிறார்கள். ஸ்ரீரங்கத்தில் ஒரு பையனுக்கு எம்.ஸி.ஏ. இடம் கிடைக்க வசதி பண்ணிக் கொடுத்தேன். அவன் பங்களூர் வந்து கம்ப்யூட்டர் வேலையில் சேர்ந்து ஒரு வருஷத்தில் அமெரிக்கா போய் அண்மையில் பார்த்தபோது குழகுழ வென்று அமெரிக்க இங்கிலீஷ் பேசுகிறான்.

என் கோவை அன்பர் எந்த வகை என்று என்னால் சொல்ல முடியவில்லை. வந்தவர் சோபாவுக்கு வலிக்குமோ என்று சன்னமாக உட்கார்ந்தார். என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார். எனக்கு மௌனமாக என்னையே பார்ப்பவர்களிடம் கொஞ்சம் பயம்.

ஒரு நிமிஷம் ஆச்சு, இரண்டு நிமிஷம் ஆச்சு, அஞ்சு நிமிஷம் ஆச்சு. அஞ்சு நிமிஷம் என்பது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்க காதலர்களாக இருந்தால்கூட – ஏராளமான அவகாசம்.

"எதுக்காக வந்திருக்கீங்க – சொல்லுங்க."

"சும்மா... ஜஸ்ட்..."

"ஏதாவது கேக்க விரும்பறீங்களா? வேற எதாவது ஜோலியா பங்களூர் வந்தீங்களா?"

"இல்லீங்க... சும்மா..."

இந்த சும்மா என்பது தமிழில் தடை செய்யப்பட வேண்டிய வார்த்தை. எனக்கு சட்டென்று கோபம் வந்தது.

"சும்மா பார்க்கத்தானே வந்தீங்க. பார்த்தாச்சில்ல" என்றேன். அவர் கண்களில் ஒரு விதமான அடிபட்ட பார்வை தெரிய, என் மனைவி இந்த சமயங்களில் காப்பாற்ற வருவாள். நீங்க எங்க படிக்கிறீங்க, சொந்த ஊர் எது? போன்ற லௌகீகமான கேள்விகளைக் கேட்டு அவருக்கு காப்பி கொடுத்தாள். அவர் அதைக் குடித்துவிட்டு உதட்டைத் துடைத்துக்கொண்டு தன் பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து எனக்குக் கொடுத்துவிட்டு, உடனே புறப்பட்டுச் சென்றார்.

Coming of Age in the Milky Way என்கிற கவிதை கலந்த தலைப்பு கொண்ட சுவாரஸ்யமான அறிவியல் புத்தகம் அது.

அந்தப் புத்தகத்தில் டிமொதி ஃபெர்ரிஸ் (Timothy Ferris) என்கிறவர் காலத்தின் விண்வெளியின் அமைப்பையும் இயற்கையையும் புரிந்து கொள்ள மனிதனின் முயற்சிகளை விஸ்தாரமாக விவரித்திருக்கிறார். ஆரம்ப காலத்தில் நம் முன்னோர்கள் நட்சத்திரங்களை வானத்தில் அடித்த டெண்ட் கூடாரம் என்றுதான் நினைத்தார்கள். மாடிக்குப் போய் பார்த்தால் கொஞ்சம் கிட்டத்தில் தெளிவாகப் பார்க்கலாம் என்று படி கட்டி உச்சாணியில் போய் உட்கார்ந்து கன்னத்தில் கை வைத்து இரவு வானத்தை யோசித்தார்கள்! வானில் உள்ள நட்சத்திரங்கள் புனிதமானவை. அங்கேதான் கடவுள்கள் வாசம் பண்ணுகிறார்கள். இந்த வகையில்தான் புராதன மனிதனின் சிந்தனை இருந்திருக்கிறது. என்றாலும் நட்சத்திரங்களையும், கிரகங்களையும் அவன் சளைக்காமல் கவனித்து வானத்தில் அவைகளின் வெவ்வேறு இடங்களையும் பருவ மாறுதல்களையும் இணைத்திருக்கிறான். துருவ நட்சத்திரத்திலிருந்து மாலுமிகள் தம் இருப்பிடத்தை அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

மெல்ல மெல்ல வானத்தைப் பற்றிய ஞானம் விரிந்து கோப்பர் நிக்கஸ், கெப்ளர், நியூட்டன் போன்ற அந்தக் காலத்து சிந்தனை யாளர்கள், ஐன்ஸ்டைன், தாம்ஸன், ரூத்தர்ஃபோர்டு, நியல்ஸ் போர் போன்ற நவீன இயற்பியலின் சிற்பிகள், க்வாண்டம் இயற்பியலின் தந்தையான மாக்ஸ் ப்ளாங்க்... அனைவரும் சேர்ந்து ஒட்டுமொத்த மாகச் சென்ற இரண்டாயிரம் வருஷங்களில் கண்டறிந்த... அத்தனை

விஞ்ஞானத்தையும் விவரிக்கிறது இந்தப் புத்தகம்.

'பிரபஞ்சத்தின் ஒரு சுருக்கமான வரலாறு' என்கிற ஒரு அனுபந்தத்தில் முதன்முதல் ஆதியோடு ஆதியில் காலம், வெளி, சக்தி இம்மூன்றும் தோன்றிய கணிதத்திலிருந்து துவங்கி நேற்று வரை பிரபஞ்ச சரித்திரத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளைப் பட்டியலிட்டிருக்கிறார். அவைகளில் சில:

பிரபஞ்சம் ஆரம்பித்து மூன்று நிமிஷம் 42 செகண்டுக்குப் பின்தான் ஹீலியம், ஹைட்ரஜன் தோன்றியது. அதன் பின் பத்து லட்சம் வருஷங்களுக்கு அப்புறம்தான் காலக்ஸி, நட்சத்திரங்கள் தோன்றின. அந்தக் காலம் இன்றிலிருந்து 1700 கோடி வருஷம் முன்பு. 450 கோடி வருஷம் முன்னால் சூரியன், மற்ற கிரகங்கள் பிறந்தன. பூமி பிறந்தது.

380 கோடி வருஷம் முன்பு நம் பூமி கொஞ்சம் சூடு குறைந்து இறுகியது.

350 கோடி வருஷம் முன் முதல் உயிரினம் நுட்பமான உயிரினம் தோன்றியது.

150 கோடி வருஷங்களுக்கு முன் முதல் தாவரம்.

90 கோடி வருஷங்களுக்கு முன் முதல் ஆண் பெண் பிரிவு.

40 கோடி முதல் பூச்சி.

20 கோடி முதல் மிருகங்கள்.

ஐந்தரைக் கோடி– குதிரை.

மூன்றரைக் கோடி–நாய், பூனை.

2 கோடி–குரங்குகள்.

சுற்றுச்சூழல் இன்றைய நிலை போல.

1.8 கோடி முதல் மனிதன் நிஜமனிதன்–ஹோமோ எரக்டஸ் – சைனாவில்.

ஆறு லட்சம் வருஷங்கள் முன் ஹோமோ ஸேபியன்ஸ்– ஆதிமனிதன்.

36000 வருஷங்கள் முன்பு...நெருப்பைத் தன் இச்சைக்கு மனிதன் பயன்படுத்தியது.

40000 வருஷங்கள் முன் முதல் மனித மொழிகள்.

35000 – முதல் இசைக் கருவி.

20000 – முதல் விவசாயம்.

5600 – முதல் வரி.

5600 – முதல் எழுத்துக்கள்.

இதன் பின் நடந்தது. நவீன இயற்பியல், வானியல், வேதியியல் என்று இன்று வரை வந்துவிட்டோம்.

பிரபஞ்சத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை அந்தப் புத்தகத் திலிருந்து அத்தனையும் தெரிந்துகொள்ள முடிந்தது.

அந்தப் புத்தகத்தை எனக்குக் கொடுத்துவிட்டு பதினைந்து நிமிஷம் 'சும்மா' என்னைப் பார்த்துவிட்டுச் சென்ற அந்த இளைஞரின் மனம்தான் புரியவில்லை.

நாமெல்லாம் ஒரே பெண்ணின் வாரிசுகளா?

மனிதர்களைப் பற்பல ஜாதிகளாகப் பாகுபடுத்தும் பழக்கம் ஆதி நாட்களிலிருந்தே இருந்து வந்திருக்கிறது. வருணாசிரமம் என்னும் சதுர்வர்ண முறை நம் துணைக் கண்டத்தை ஆக்கிரமித்து நம் சமூகப் போராட்டங்கள் அனைத்துக்கும் – சிப்பாய்க் கலகத்திலிருந்து அயோத்தி கோயில் வரை காரணமாக இருந்திருக்கிறது. எத்தனையோ அம்பேத்கர்கள் வந்து நாம் எல்லோரும் ஒன்று, ஒரே இனம், ஒரே மக்கள் என்று சொன்னாலும் சாதி என்பது நம்மை விட்டுப் போகவில்லை என்பது ஹிந்து நாளிதழின் ஞாயிற்றுக்கிழமை மேட்ரிமோனியல் விளம்பரங்களைப் பார்த்தால் புரியும்.

அறிவியல் சாதியைப் பற்றி என்ன சொல்கிறது? மருத்துவப்படி சாதிகளைப் பிரிக்க வேண்டுமென்றால் ரத்த க்ரூப் ஏ, பி, ஓ பாஸிட்டிவ், நெகட்டிவ் என்றுதான் பிரிக்கமுடியும். ரத்த தானம் செய்யும்போது பொருத்தமான ரத்தம்தானா? என்று பார்த்துக் கொடுக்கவேண்டும். அவ்வளவுதான் மருத்துவத்தின் சாதி.

அன்த்ரபாலஜி என்னும் மானிட இயலில் மனித சாதியை ஆப்ரிக்கன், ஏசியன், ஆஸ்திரேலியன், நியூகினியன், காகேசியன் என்று ஐந்து வகைகளில் அடக்கிவிடுகிறார்கள். நாமெல்லோரும் ஆசிய வகை.

இந்த வகைகளிடையே சரும நிறம், கண்களின் அளவு, அமைப்பு, தலைமயிர் சுருட்டை போன்ற வெளித்தோற்றங்களில் வேறுபாடுகள் தெரிகின்றன. ஆனால் உள்ளுறுப்புக்களின் அமைப்பில் வித்தியாசம் இல்லை. ஒரு ஆப்ரிக்கனின் இதயத்தை ஒரு ஆசியனுக்கு வைக்க முடியும்.

இவன் சிறுநீரகத்தை ஒரு காகேசியன் ஏற்கலாம். 'இறைச்சித் தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ' என்று சிவவாக்கியர் கேட்டதற்கு பதில் 'இல்லை' என்பதே. நவீன மனிதன் எப்போது உண்டானான் என்பதைப் பற்றி சுவாரஸ்யமான சர்ச்சைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. 1987–ம் ஆண்டு அமெரிக்க பர்க்லி பல்கலைக்

கழகத்தைச் சேர்ந்த அலன் வில்ஸன் என்பவர் நேச்சர் இதழில் எழுதிய ஒரு கட்டுரை இன்றும் பரபரப்பாகப் பேசப்படுகிறது. அதில் ஒரு புதிய சித்தாந்தம் கொண்டுவந்தார். நம் முன்னோர்கள், 'நியண்டர்தால்' என்னும் இனமல்ல. நவீன மனிதன் சுமார் ஒரு லட்சத்திலிருந்து ஒரு லட்சத்து நாற்பதாயிரம் வருஷங்களுக்கு முன் ஒரு ஆப்ரிக்கக் குழுவிலிருந்து தோன்றினான். இன்றைய மனித சமுதாயம் அத்தனை பேரும் அந்த ஆப்ரிக்கக் குழுவிலிருந்து தோன்றியவர்கள்தான் என்று ஆதாரம் காட்டி எழுதியிருக்கிறார் வில்ஸன். இதற்காக அவர் பயன்படுத்திய அறிவியல் வளர்ச்சி முறை மாலிக்யுலர் பயாலஜி என்னும் இயலைச் சார்ந்தது. மைட்டோ காண்ட்ரியல் டீ என் ஏ என்னும் முறை அது. இதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறேன்.

மைட்டோகாண்ட்ரியா என்பதும் நம் செல்களில், உயிரணுக்களின் ஒரு பகுதி. அதன் உட்கருவில் இல்லாமல் உட்கருவின் வெளிப்புறத்தில் உள்ளது. கர்ப்பமாகும்போது ஆணின் விந்து பெண்ணின் முட்டைக்குள் நுழைவது நமக்குத் தெரியும். இப்படி நுழையும்போது ஆணின் மைட்டோகாண்ட்ரியா பகுதி துறக்கப்படுகிறது. புதிய பாப்பாவின் செல்லில் உள்ள மைட்டோகாண்ட்ரியா முழுவதும் தாயிடமிருந்து வந்திருக்கிறது. இந்த உண்மையை வைத்துக்கொண்டு இந்த மைட்டோ காண்ட்ரியாவின் மாற்றங்களை மட்டும் அலசிப் பார்த்தார்கள். லட்சம் வருஷத்துக்கு அது ஆதார அமைப்பில் ம்யுட்டேஷன் மூலம் எப்படி மாறுகிறது? என்று கண்டுபிடித்தார்கள்.

அதன்படி அம்மா, பாட்டி, கொள்ளுப்பாட்டி, எள்ளுப்பாட்டி, என்று தாய் வழியிலேயே வம்சாவளியைப் பின்னால் தள்ளிக் கணக்கிட முடிந்தது. அவ்வாறு கணக்கிட்டால் நாம் எல்லோரும் ஒரு லட்சத்து சொச்சம் வருஷங்களுக்கு முன் ஆப்ரிக்காவில் வாழ்ந்த ஒரே பெண்மணியின் வாரிசுகள். உலகில் உயிர்வாழும் அத்தனை மனிதர்களும் இந்த மகாமகா பாட்டியிடமிருந்து மைட்டோ காண்ட்ரியா பெற்றவர்கள் என்ற ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அந்தப் பெண்மணிக்கு 'மைட்டோகாண்ட்ரியல் ஈவ்' என்று பெயரிட்டார். அதுவே கொஞ்சம் சர்ச்சையைக் கிளப்பி விட்டது.

பைபிளின் ஏவாள் இந்த மாதிரி இருக்க விரும்பவில்லை. வில்ஸன் அண்மையில் இறந்து போய்விட்டார். ஆனால் அவர் ஆராய்ச்சியின் எதிரொலி இன்றைக்கு இந்த இயலின் பெரும்பகுதியை ஆக்கிரமிக்கிறது.

இந்த ஒரே தாய் சித்தாந்தத்துக்கு எதிராக அவர்கள் மற்றொரு சித்தாந்தம் சொல்கிறார்கள். அது 'நோவாவின் படகு' சித்தாந்தம்.

இதன்படி ஆப்ரிக்காவிலிருந்த மனிதர்கள் கொஞ்சம்கொஞ்சமாக மற்ற பகுதிகளிலிருந்து வந்த நவீன மானிடர்களால் இடம் பெயர்க்கப் பட்டனர் என்ற சித்தாந்தமும் உண்டு. பிறகு ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா கண்டங்களில் அவர்கள் பரவினார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆப்ரிக்க ஏவாள் சித்தாந்தம் பலரை இன்று வசீகரித்துள்ளது.

அதன் சமூக இயல் அர்த்தங்கள் மிக மிக ஆழமானவை. மனித இனத்தினர் எல்லோருமே ஒரே தாயினின்று சனித்தவர் என்பதற்கு கொஞ்சம் தெய்வீகம் கலந்த அர்த்தமும் கிடைக்கிறது. ஆனால் எந்த மதமும், இவ்வாறு ஒரு தாய் மக்கள் நாமெல்லாம் என்று சொன்னதில்லை. பூதூச்சேரி கவிஞரைத் தவிர. நான், நீங்கள், ஹர்ஷத் மேத்தா, யெல்ஸ்ட்டின், மாண்டேலின் சீனிவாஸ், செய்தி வாசிக்கும் ரீனா கன்னா, எங்கள் வீட்டில் தோட்ட வேலை செய்யும் சுரேஷா என்னும் சிறுவன் எல்லோரும் உறவு என்றால் சந்தோஷமாகவும் கவலையாகவும் இருக்கிறது. என்னுடைய சிறிய ஃபிளாட்டில் இத்தனை பேருக்கு இடம் போதாது!

இறப்பு என்பது முற்றுப் புள்ளியா...?

சாவு என்பது என்ன என்கிற கேள்வி உபநிஷத் காலத்து நசிகேதனி லிருந்து முந்தாநாள் வரை மனித சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் விஷயம். இதற்குப் பதில் தெரிந்துவிட்டால் வாழ்க்கையில் சுவாரஸ்யம் போய்விடும். மேலும் செத்த பிறகு என்ன என்று கண்டுபிடிக்கிறதுக்கு முதற்கண் செத்துப்போவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. அதுதான் சிக்கல். பல பேர் சொர்க்கம். நரகம், அப்படி இப்படி என்று ஜல்லியடி பண்ணிக்கொண்டு பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். உண்மை என்னவென்றால் யாருக்கும் திட்டவட்டமாகத் தெரியாது.

2500 ஆண்டுகளுக்கு முன் உர் என்னும் சுமேரிய நகரத்தில் ராஜா இறந்துபோனபோது அருகே பாடிகார்டுகளும் தேரோட்டிகளும் அழகழகான பெண்களும் ஆளுக்கொரு மண்கோப்பை வைத்துக் கொண்டு ஒரு தொட்டியில் இருந்த விஷத்தை ஒரே சமயத்தில் ரொப்பிக்கொண்டு 'ராஜாவே போய்விட்டார். அவரோடு நாமும் போவோமே' என்று மடக்கென்று சிரித்துக்கொண்டு குடித்ததாகத் தகவல் இருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சி சாட்சியாக. இது நிஜமோ இல்லையோ, 1978–ல் தென் அமெரிக்கா கயானா தேசத்தில் காட்டின் மத்தியில் ஜேம்ஸ் ஜோன்ஸ் என்னும் போதகர் ஒலிபெருக்கி மூலம் தன் ஆயிரம் சிடர்களிடம் பேசி, "வாழ்வில் இனி பிரயோசன மில்லை. நாமெல்லோரும் மீண்டும் சந்திப்போம். எல்லாரும் அவரவர் ப்ளாஸ்டிக் கோப்பைகளை நிரப்பிக்கொள்ளுங்கள்" என்று ஆணையிட, தொட்டியில் இருந்த சயனைட் விஷயத்தை அனைவரும் மாந்திக் குடித்த மகா தற்கொலையை இன்னும் சமூக மனவியலாளர்கள் அலசிக்கொண்டிருக்கிறார்கள். 912 பேர் விஷமருந்தி இறந்தனர்.

இந்த இரண்டு சம்பவத்தையும் இணைப்பது சாவுக்குப் பின் ஏதோ தொடர்கிறது என்கிற நம்பிக்கையே, விஞ்ஞானம் சொல்வது ரொம்ப சிம்பிள், நாமெல்லாரும் பாஸ்பரஸ், கார்பன், நைட்ரஜன், ஹைட்ரஜன்தான். இறந்த பின் நம் எண்ணங்கள் அனைத்தும் செத்துப்போய் எரிந்தோ புதைந்தோ மறுபடி கார்பன், பாஸ்பரஸ், இத்யாதி ஆகிவிடுகிறோம். காற்றிலும், சேற்றிலும் கரைந்துவிடுகிறோம்

இறந்த பின் 'நாம்' என்பதன் மிச்சம் ஏதும் இருப்பதில்லை.

ஆனால் எல்லா மதங்களும், இறந்ததின் நம் ஆத்மா, 'ஸோல்' என்று ஏதாவது தொடருகிறது என்பதை நம்புகிறது கிரேக்க, எகிப்திய, கெல்டிக், முஸ்லிம், யூத... இந்துவோ கேட்கவே வேண்டாம். எல்லா பல்வேறு ஜந்துக்களாகப் பிறந்து கொஞ்சம்கொஞ்சமாக ஸ்டேட் பாங்க் ஊழியர் மாதிரி ப்ரமோஷன் பெற்று கட்டக் கடைசியில் போன ஜன்மத்தில் கெட்ட காரியங்கள் பண்ணாமல் உத்தமி/மனாக இருந்தால் சொர்க்க பிராப்தி, அங்கே கின்னர கிம்புருடர்களுடன் ரம்மியாடலாம் என்ற எளிய சிந்தனை, எகிப்தியர்கள் 'கா' என்கிறார்கள். நாம் ஆத்மா என்கிறோம். கிறிஸ்தவர்கள் 'ஸோல்' என்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் எலிஜாவும், புதிய ஏற்பாட்டில் ஜேம்ஸும் திட்டவட்டமாக ஆத்மா என உயிரையும் உடலையும் பிரித்துப் பேசுகிறார்கள்.

எனவே, உயிரின் தொடர்ச்சியைப் பற்றி யாரும் சந்தேகப்படவே இல்லை. அவர்கள் கவலை எல்லாம் நம் ஆத்மாவை அடைய நல்ல காரியங்கள் பண்ணுகிறோமா இல்லையா என்பதே.

நியண்டர்தால் மனிதனின் காலத்திலிருந்து மனிதர்கள் இறந்து போன பின் புதைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. காரணம் என்ன? நைஜீரியாவில் யானைகள்கூட இறந்தவைகளைப் புதைக்கின்றனவாம். ஏன் என்று யானைகளைத்தான் விசாரிக்க வேண்டும்.

மனிதன் புதைப்பதற்குக் காரணம், புதைத்த இடத்திலிருந்து புதிய உயிர் பிறக்கும் என்பதோ, ஏதாவது ஒரு தருணத்தில் அதன் ஆத்மா வந்து சேரும் என்பதோதான். இந்துக்களைப் பொறுத்தவரை உடல் என்பது சட்டை, உயிர் பிரிந்த பின் கூட்டிப் போட வேண்டிய சட்டை. ஆனால் எல்லோரும் ஆத்மா இருப்பதாகத்தான் நம்புகிறார்கள். விஞ்ஞானிகளைத் தவிர. இந்தக் கேள்விக்கு அதனால் இரண்டுவித பதில்கள் கிடைக்கின்றன. விஞ்ஞானம் தரும் பதில், மதம் தரும் பதில்.

விஞ்ஞானம் இறப்பு என்பது முற்றுப்புள்ளி என்கிறது. மதம் அது ஒரு கால்புள்ளி அல்லது அரைப்புள்ளி. அதன் பின்னும் வாக்கியம் வேறு வடிவில் தொடர்கிறது என்கிறது. இதில் எதை நம்புவது என்று உங்களுக்கு வியப்பாக இருக்கும்போது கொஞ்சம் இவ்வாறு யோசித்துப் பாருங்கள். செத்தபின் என்ன என்று தெரிந்து கொள்வதால் என்ன லாபம்? நான் செத்த பின் நானாக இருந்தால் தான் எனக்கு பிரயோசனம். என் மூளை, என் புத்தகங்கள், என் லேசான முதுகெரிச்சல்கள் எல்லாம் இருந்தால்தான் நான் நானாக இருக்க முடியும். செத்தாலும், ஆத்மா தொடர்ந்து பாஸ்னியாவிலோ இந்தோனேசியாவிலோ அல்லது வெனிஸ் நகரத்தில் ஒரு படகோட்டியாகவோ பிறப்பதில் அர்த்தமில்லை.

நான் நானாகவே தொடர வேண்டும். அதற்கு என்னை அறிந்தவர்கள் வேண்டும். உறவினர்கள், என் வாசகர்கள் வேண்டும். முத்தாரம்

வேண்டும். கட்டுரை அனுப்பினால் அதைப் பற்றி விமரிசிப்பவர்கள் வேண்டும். தமிழ் வேண்டும். அதெல்லாம் இல்லாவிடில் உயிர் என்பது தொடர்ந்தால் என்ன, முடிந்தால் என்ன? எனவே சாவு என்பது கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் நம் நினைவுகளின் அழிவு.

உலகத்தில் மிகக் கொடிய வியாதி அல்ஸைமர்ஸ் டிஸீஸ் என்பது. நம் ஞாபக செல்கள் மெல்ல மெல்லப் பழுதாகி நம் நினைவுகளை அழிப்பது. அதுதான் சாவு.

அதற்குள் எமிலி டிக்கின்டிஸன் என்னும் அற்புதமான அமெரிக்க கவிதாயினி சொன்னதுபோல் "ஒரே ஒரு இதயம் முறிவதை என்னால் நிறுத்த முடிந்தால் நான் வாழ்ந்தது வீணல்ல. ஒரே ஒரு வாழ்வின் வேதனையைக் குறைக்க முடிந்தால் அல்லது கீழே விழுந்த ஒரு குருவியை அதன் கூட்டுக்குத் திருப்பினாலே நான் வாழ்ந்தது வீணல்ல."

வருங்காலத் தொழிலாளர்கள்!

வேலை! இந்த மந்திர எழுத்துக்களைப் பற்றிச் சிந்திப்போம்.

வேலை கிடைப்பதுதான் வாழ்க்கையின் முக்கிய சூறிக்கோள். வேலை கிடைத்ததும் கல்யாணம்... அதன் பின் பிள்ளைகள் என்று ஒரு முழு சமூக அமைப்பின் ஆரம்ப சம்பவம் 'வேலை' கிடைப்பது!

இன்றைய சமுதாயத்திலும் வரப்போகிற எதிர்கால சமுதாயத்திலும் வேலை என்பதற்கு அர்த்தமே மாறிக்கொண்டு வருவதை நீங்கள் கவனிக்க வேண்டும். அதே போல 'வேலை இல்லாமை' என்பதற்கும் அர்த்தம் மாறிவிட்டது.

வேலை என்பது இருவகைப்படும்.

ஒன்று சம்பளத்துக்கு வேலை. மற்றது சம்பளமில்லாத வேலை. சம்பளத்துக்கு நாம் செய்யும் வேலைகள் எல்லாருக்கும் தெரியும். கிளார்க், இன்ஜினியர், நர்ஸ், ஸேல்ஸ்மன் இத்யாதி. சம்பளமில்லாத வேலை? அது பிள்ளைகளை வளர்ப்பது, வீட்டுக்குப் பின்கூட்டில் தோட்டம் போடுவது, ஆஸ்பத்திரிக்குப் போய் சமூக சேவை செய்வது... வீட்டிலேயே தலையணை உறை தைப்பது... இந்த மாதிரி வேலைகளும் ஒரு நாட்டுக்கு மறைமுகமாக செல்வச் சிறப்பை அளிக்கின்றன.

சம்பளம் கொடுத்து செய்யும் வேலைகளின் சம்பிரதாய வடிவத்தில் ஒரு 'விருப்பமற்ற தன்மை' எப்போதும் இருக்கும். ஒரு தொழிற் சாலையில் திரும்பத் திரும்ப ரிவேட் அடிப்பவனோ ஒரு ஆபீசில் கடிதப் பட்டுவாடா செய்கிறவனோ அந்த வேலையை விரும்பிச் செய்கிறான் என்பதில்லை. சம்பளம் கொடுக்கிறார்கள் செய்கிறான். இதில் சிருஷ்டித் தன்மையோ திருப்தியோ வேலையில் முழுமையான ஈடுபாடோ இருக்க முடியாது. இந்த வகை 'நீலக்காலர்' வேலைகள் எதிர்காலத்தில் குறையும், குறைய வேண்டும்.

இன்றைய தினம் லட்சக்கணக்கானவர்கள் டைப் அடித்தும், கயிறு சுற்றியும், மூடி போட்டும், லேபிள் ஒட்டியும் அற்பத்தனமான வேலைகளில் சிறைப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றுவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்,

டெக்னாலஜி மூலம்.

பதிலாகப் புதிய வேலைகள் தோன்றும். இப்போதே பல புதிய வேலைகள் தோன்றிக்கொண்டிருப்பதை நீங்கள் கவனிக்கலாம்.

கிராமங்களில் டிராக்டர் ரிப்பேர் செய்வது ஒரு புதிய வேலை. நகரங்களில் ஸ்டார் டி.வி. இணைப்பது புதிய வேலை. வீடியோ காஸட் வினியோகம் ஒரு புதிய வேலை. குழந்தைகள் அட்மிஷனுக்கு முதல் நாள் ராத்திரியிலேயே பெற்றோருக்கு பதிலாக க்யூவில் நிற்பது புதிய வேலை. வீடுவீடாகப் போய் டெலிபோனுக்கு சென்ட் அடிப்பது புதிய வேலை.

யோசித்தால் இவ்வித வேலைகள் சில சமூக மாற்றத்தால் உண்டானவை. ஆனால் ஆதாரமாக டெக்னாலஜி மாற்றத்தான் இவைகளின் அடிப்படை. இன்றைக்கு ஆஸ்பத்திரிகளில் ஸிடி ஸ்கான் என்எம்ஆர் எடுக்கிறார்கள். இவைகளை இயக்க டெக்னிஷியன்கள் தேவைப்படுகிறார்கள். ஃபாக்ஸ் இயந்திரம், டெலிபிரிண்டர் இவைகளை ரிப்பேர் செய்பவர்கள் வேண்டும். இதேபோல் கிராமங்களில் சூரிய ஒளி பானல்கள் அமைக்க காற்றிலிருந்து மின்சாரம் எடுக்க கடலடியில், மாங்கனிஸ் கிடைக்கிறதா என்று தேட, ஸாட்டிலைட் ஸ்டார் டி.வி. போன்றவைகளுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரிக்க...

எல்லாம் புதுப்புது வேலைகள்.

சுவாரஸ்யமான வேலைகள்.

சுவாரஸ்யமற்ற, திரும்பத் திரும்ப செய்யும் வேலைகளை கணிப் பொறிகளும், தானியங்கி இயந்திரங்களும் செய்ய இந்தப் புதிய வேலைகளைச் செய்ய புது மனிதர்கள், புதிய திறமை கொண்ட மனிதர்கள், தேவைப்படுகிறார்கள். இந்தப் புதிய சூழ்நிலையில் கடுமையான உழைப்புக்கு அத்தனை தேவை இருக்காது. திறமையான உழைப்புக்குத்தான்.

வேலை என்பதன் நிறம் மாறிக்கொண்டிருக்கிறது. ஒரு சின்தஸை ஸரையோ ஒரு மேசைக் கணிப்பொறியையோ ஏன் ஒரு மாருதி 1000 காரையோ ரிப்பேர் செய்ய வேறுவித திறமைகள் தேவைப்படு கின்றன. வேறுவித கருவிகள் வேறுவித ஞானம்.

கோடம்பாக்கம் ஸ்டுடியோக்களில் புதிதாக வரும் ரிக்கார்டிங் டப்பிங் காமிரா சாதனங்கள் அனைத்தும் மிக நவீனமானவை. இவைகளை இயக்கவும் பிழை ஏற்பட்டால் திருத்தவும் தேவைப்படும் விற்பன்னர்கள் வேறு வகைப்பட்டவர்.

எதிர்காலத் தொழிலாளர்கள் அனைவரும் விதிவிலக்கில்லாமல் ஒரு தனிப்பட்ட திறமை பெற்றிருப்பார்கள். அவர்கள் கைகளை விட மூளையை அதிகம் பயன்படுத்துவார்கள். மூளைக்கு வேலை யில்லாத ஜோலிகளைக் கணிப்பொறி பார்த்துக்கொள்ளும். பையோ டெக்னாலஜி, கணிப்பொறியின் ஸாஃப்ட்வேர், செய்தித் தொடர்பு, எலக்ட்ரானிக்ஸ் போன்ற இடங்களில் இந்த புதிய வேலைகள்

தினசரி உருவாகிக்கொண்டிருக்கின்றன.

இதற்கான பயிற்சிகள் நம் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள அந்தப் பயிற்சி தருவதே ஒரு புதிய வேலை வாய்ப்பாக அமையும்.

உதாரணமாக தினம் தினம் செய்தித்தாளில் வரும் விளம்பரங்களை கவனியுங்கள். எத்தனை பேர் உங்களுக்கு கம்ப்யூட்டர் கற்றுத் தருவேன் என்று வற்புறுத்துகின்றனர். ஸி, யுனிக்ஸ், டிபேஸ், லோட்டஸ் போன்ற வார்த்தைகளை அடிக்கடி சந்திக்கிறோம். இவையெல்லாம் என்ன என்று சரியாகத் தெரியாமலேயே ஆயிரமும் இரண்டாயிரமும் கொடுத்து நம் பிள்ளைகளுக்குப் பயிற்சி தரத் தயாராக இருக்கிறோம்.

இந்தப் புதிய வேலைகளில் மிக முக்கியமான மாறுதல் ஒரு தொழிலாளிக்கு அவன் திறமையால் மரியாதை கிடைத்திருப்பதுதான். ஒரு நாளைக்கு டெக்னிஷியன் வரவில்லை என்றால் சில டாக்டர்கள் ஆயிரக்கணக்கில் வருமானத்தை இழப்பர். அதனால் காரை அனுப்பி வைத்து அந்த தொழில் தெரிந்தவரை அழைத்து வருவார்கள். ஒரு லைனோ டைப் ஆப்பரேட்டர் வரவில்லை என்றால் பத்திரிகை நின்றுபோகும். ஒரு கணிப்பொறி விற்பன்னர் வரவில்லை என்றால் சில கம்பெனிகள் லட்சக்கணக்கில் நஷ்டப்படும்.

எனவே தொழில் தெரிந்தவர்களுக்கு மதிப்பு ஏற்பட்டுள்ளது. வருமான வாய்ப்பும் அதிகம்தான்.

இந்த மாறுதல் நம்மிடையே மௌனமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இது விரும்பத்தக்கதா? இல்லையா? என்பது பிரச்சினை இல்லை. இது தவிர்க்க இயலாத டெக்னாலஜியால் ஏற்பட்ட மாறுதல்.

இந்த மாறுதலின் எதிர்கால சாத்தியங்கள்தான் என்னை சிந்திக்க வைக்கிறது. சக்தி, பலம் இவைகளுக்குத் தேவை குறைந்துபோய் திறமைக்கும் மூளைக்கும் தேவை ஏற்படுவதால் சில அடிப்படைகள் கலைக்கப்பட்டுவிடும்.

உதாரணமாக அறுபது வயசு, எழுபது வயது முதியவர் டெலிபோன் மூலம் ஒரு சிக்கலான சாதனத்தைப் பழுது பார்த்து திருத்த முடியும். அவர் ஞானத்தை, அனுபவத்தைப் பயன்படுத்தி.

ஒரு தாய் தொட்டிலை ஆட்டிக்கொண்டே அவ்வப்போது ஒரு கணிப்பொறித் திரையில் சில தனிப்பட்ட செய்திகளை விரும்பினவர் களுக்குத் தர முடியும். அல்லது தூரத்தில் உள்ள பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தர முடியும்.

பன்னிரெண்டு வயதுச் சிறுமி தன் பன்னிரெண்டு வயதுத் திறமைகளை மட்டும் பயன்படுத்தி மாதம் ஐயாயிரம் சம்பாதிக்க முடியும்.

மற்றபடி வீடு பெருக்குதல், சாணி தெளித்தல், அலம்புதல், கூட்டுதல், இணைத்தல் போன்ற 'போர்' அடிக்கும் வேலைகளை இயந்திரங்கள் செய்யும்.

இந்த எதிர்காலம் எப்போது இந்தியாவுக்கு வரும் என்று நீங்கள் கேட்கலாம்.

எப்படிப்பட்ட எதிர்காலம்?

1. வேலை என்பது விரும்பினபோது எல்லோருக்கும் கிடைப்பது.

2. நமக்கு இருக்கும் திறமைக்கு அது எந்தத் திறமையாக இருந்தாலும் சரி, அதற்கு ஏற்ப ஒரு வேலை கிடைப்பது.

3. வேலை எப்போதும் சுவாரஸ்யமாக இருப்பது.

இந்தியாவில் இந்த நிலை எப்போதும் வரும் என்று கேட்பின் இந்த நாடு முதலில் சில சௌகரியமான அம்சங்களாகப் புரிய வேண்டும்.

கர்னாடகம், தமிழ்நாடு, ஆந்திரம், பஞ்சாப் போன்ற மாநிலங்கள் யாவும் ஜப்பானைவிட அதிகப் பரபரப்பளவும் ஜனத்தொகையும் கொண்டவை.

இவை அனைத்தும் தனிப்பட்ட சுதந்திரப் பிரதேசங்களாக நிச்சயம் பிரிந்துவிடும். இந்தப் பிரிவைப் பற்றி நாம் பயப்படவேண்டியதில்லை. இப்போது முன்னாள் சோவியத் யூனியனாகவும் ஐரோப்பியக் கண்டத்திலும் நடக்கும் நிகழ்ச்சிகள் இதற்கு முகமன் கூறுகின்றன.

ஒவ்வொரு மாநிலமும் பிரிந்த பின் அவை கலாச்சாரத்திலும், இனத்திலும் ஒன்றுபட்டு செங்குந்தர், நாடார், ஐயங்கார், கானாடு காத்தான் செட்டியார் போன்ற பிரிவினைகள் இல்லாமல் ஜப்பானியர் என்பது போல் தமிழன் என்கிற ஒருமை கிடைப்பது இந்த மாறுதல் களுக்கு முதன் முதல் தேவை.

என் கணிப்பில் அது நிகழ இன்னம் முப்பத்தேழு வருஷங்கள் ஆகும்.

மனிதனும் சிந்திக்கும் இயந்திரமும்!

கலிலியோ பதினாறாம் நூற்றாண்டில் டெலஸ்கோப்பைக் கண்டு பிடித்தார் என்பது உங்களுக்குத் தெரியும். அதை முதலில் கண்டுபிடித்து வெனிஸ் நகர செனேட் மெம்பர்களுக்கு (அக்காலத்து எம்.எல்.ஏக்கள்) காட்டினார். கடலில் தூரத்தில் மிதக்கும் கப்பல்கள் கூப்பிடு தூரத்தில் தெரிந்தன! அதனால் அதை ஒரு உளவுக் கருவியாகவே முதலில் கருதினார். எதிராளியின் கப்பல்கள் வருவதை ஒரு இரண்டு மணி நேரம் முன்கூட்டிச் சொல்லிவிடுகிற ஒரு யுத்த உதவிச் சாதனமாகவே அதைக் கருதினார்.

டெலஸ்கோப்பின் சரித்திர முக்கியத்துவம் இன்று வேறு. அது வரை மனிதன் பிரபஞ்சத்தைப் பற்றி எண்ணியிருந்த கருத்துக்களை யெல்லாம் தகர்த்துவிட்டது. பிரபஞ்சம் பற்றிய மனிதன் ஞானத்தில் ஒரு சந்தேகத்தைக் கொண்டுவந்தது. கலிலியோவின் டெலஸ்கோப் மூலம் இரவு வானத்தைப் பார்க்கையில் எண்ணற்ற புதிய நட்சத் திரங்கள் தெரிந்து பூமியும் ஒரு அளவற்ற பிரபஞ்ச வெளியில் மிதக்கும் அற்பம்தான். நாம் இந்த பிரபஞ்சத்தின் மையமல்ல என்பதைத் தெளிவுபடுத்தியது.

மூன்றரை நூற்றாண்டுக்குப் பின் கணிப்பொறியின் வரவும், அதே விளைவைத்தான் ஏற்படுத்தியுள்ளது. 'டெலஸ்கோப்' நம் பார்வையை விஸ்தரித்தது. கலிலியோவுக்கு டெலஸ்கோப் ஒரு செயற்கைப் பார்வை தந்து விண்ணில் உள்ள கிரகங்களையும் நட்சத்திரங்களையும் சுமார் நூறு மடங்கு பெரிதாகப் பார்க்க வைத்தது.

கணிப்பொறியும் ஒரு வகையில் பெரிதுபடுத்தும் சாதனம்தான் என்ன? நம் புத்தியை! புத்திக் கூர்மையை! டெலஸ்கோப் செயற்கைப் பார்வை தந்ததுபோல் கணிப்பொறி செயற்கை மூளை தந்திருக்கிறது. ஆரம்பத்தில் கணிப்பொறி நம் மூளையில் கணக்குப் போடும் திறமையை மட்டும் பெரிதுபடுத்தியது. மிகப்பெரிய கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், கணக்குகளைப் போட மனிதனுக்கு மிகுந்த நேரமாகி அதில் தவறுகளும் நிறைய நிகழ்ந்தது. கணிப்பொறிகள் இந்த வேலைகளை மிக வேகமாக, மிகச் சரியாகச் செய்தது. அந்த

ஆரம்ப நாட்களில் ஹெர்பர்ட் சைமன், அலன் நியுவெல் என்ற இரு விஞ்ஞானிகள் கணிப்பொறி என்பது வெறும் 'கால்குலேட்டர்' மட்டும் இல்லாமல் சில குறியீடுகளையும் அலசக்கூடியவை எனக் கண்டனர். இவ்விருவரும் 1956–ல் முதன் முறையாக ஒரு 'சிந்திக்கும் இயந்திரம்' செய்யப் போவதாகச் சொன்னார்கள்.

அந்த இயந்திரத்துக்கு 'லாஜிக்கல் தியரிஸ்ட்' என்று பெயர் வைத்தார்கள். ஜெனரல் ப்ராப்ளம் ஸால்வர் என்ற மற்றொரு யந்திரமும் தயாரித்தார்கள். அது செஸ் விளையாடியது. புதிர்களை விடுவித்தது. அதன் ஆதார அமைப்பில் சிந்தனை என்பதனை ஒரு பொது விதியாக சொல்ல முடியுமா என்று முயற்சி செய்தார்கள். அதற்காக சைமனும், நியுவெல்லும் விற்பன்னர்களை அழைத்து அவர்கள் ஒரு கணக்கு போடும்போதோ, ஒரு புதிரை விடுவிக்கும் போதோ, எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதை வாய் வார்த்தையாக வர்ணிக்கச் சொன்னார்கள். அதை இயந்திரத்திற்கு சொல்லிக் கொடுத்தார்கள்.

ஆதாரமாக புத்திசாலித்தனம் என்பது சிக்கலான விஷயத்தை எளிமைப்படுத்துவது என்று சைமன் எண்ணினார். பல்வேறு சாத்தியக் கூறுகளிலிருந்து ஒவ்வொன்றாக சோதித்துப் பார்த்து, எந்த கணக்குக்கும் கடைசியில் விடை கண்டுபிடித்துவிட முடியும் என்றனர். இதிலிருந்து உள்ளுணர்வு, கற்பனை, உள்நோக்கு எல்லாம் சுலபம் என்று எண்ணினார்.

இது அத்தனை சுலபமில்லை என்று சீக்கிரமே கண்டுகொண்டனர். ஒவ்வொரு முறையும் அந்த இயந்திரம் புதுசாக ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகியது. மனித யத்தனத்தில் நாம் அவ்வாறு செய்வதில்லை. இதற்கு முன் இந்த கணக்கைப் போட்டிருக்கிறோமே அப்போது என்ன செய்தோம் என்கிற அனுபவபூர்வமான அறிவைப் பயன்படுத்துகிறோம். இந்த அனுபவ அறிவை இயந்திரத்துக்குக் கற்றுத்தர முடியவில்லை.

ஆரம்ப உற்சாகம் தணிந்தது. அறிவுள்ள இயந்திரம் அமைப்பது அத்தனை சுலபமல்ல என்று கண்டுகொண்டனர்.

மனித ஜென்மங்களான நாம் சில காரியங்களை மிகச் சுலபமாகச் செய்கிறோம். உதாரணமாக மெட்ராஸ் பாஷையில் பேசப்பட்ட தமிழ் வாக்கியத்தை அர்த்தம் பண்ணிக்கொள்ள முடிகிறது. 'மியாவ்' என்று சப்தம் போட்டாலே பூனையின் முழு உருவத்தையும் கற்பனை பண்ணிக்கொள்ள நம்மால் முடிகிறது. இதையெல்லாம் ஒரு கணிப்பொறியைச் செய்ய வைப்பது மிக மிக மிக கஷ்டம். ஆனால், '12384561218ஐ 63ஆல் வகு' என்றால் கணிப்பொறி. மனிதனைக் காட்டிலும் மிக விரைவாக, மிகத் திறமையாகச் செய்துவிடும்.

மூளையின் திறமையின் வேலைப்பாடுகளை அலசிப்பார்த்தால் மனிதன் பரிணாம ரீதியாக வளர்ந்த விதத்தில் அதன் ரகசியம் இருப்பதை உணர முடியும். கணக்குப் போடும் திறமை உயிர்வாழ

அத்தனை தேவையில்லை. ஆனால் எதிராளி பேசும் பேச்சை, அது மெட்ராஸ் பாஷையாக இருந்தால்கூட அர்த்தம் பண்ணிக் கொள்வது, உயிர்வாழத் தேவைப்படும்–'த்தா டாய் பீஸ் பீஸா கீச்சுருவேன்' என்றால் உடனே அர்த்தம் பண்ணிக்கொண்டு ஓட வேண்டுமல்லவா.

எனவே மூளையின் அறிவுத் தேவைகள் வேறு!

அதனால் ஆரம்ப காலத்து முயற்சிகளைக் கைவிட்டுவிட்டு மூளை பரிணாம ரீதியாக எப்படி வளர்ந்ததோ, அப்படி., தானே வளருமாறு ஒரு கணிப்பொறி அமைத்தால் என்ன என்று யோசிக் கிறார்கள். மூளை இந்த வளர்ச்சி பெற 460 கோடி வருஷம் எடுத்துக்கொண்டிருக்கிறது. 350 கோடி வருஷம் முன்பு ஒற்றை செல் ஜந்துக்கள் தோன்றின அதன் பின் 100 கோடி வருஷம் கழித்து, முதல் தாவரம் தோன்றியது. சுமார் 55 கோடி வருஷங்களுக்கு முன் முதல் மீன்கள் தோன்றின. அதன் பின் கோடி கோடி வருஷ இடைவெளிகளில் பூச்சிகள், நகர்வன, டினோஸார்கள், மிருகங்கள், மனிதன் தற்போதைய வடிவில் 25 லட்சம் வருஷம் முன் தோன்றினவன்.

விவசாயம் 1400 வருஷம் முன் செய்தான். கி.மு. 3000–த்தில்தான் முதலில் எழுத ஆரம்பித்தான். அவனை விற்பன்னன், அறிவாளி என்று சொல்வது கடந்த சில நூற்றாண்டுகளாகத்தான்!

இத்தனை மெல்ல வளர்ந்த மூளையை ஒரு கணிப்பொறி சில வருஷங்களில் செய்ய முடியுமா? அபத்தம் என்கின்றனர் சிலர். நன்றாக செஸ் ஆடத் தெரிந்த கணிப்பொறியால் அதன் காய்களை பெட்டியிலிருந்து எடுத்து வைத்து ஆட்டத்தைத் துவக்கத் தெரியாது. மனிதனின் மிக சிக்கலான வியாதிகளைக் கண்டுபிடிக்கும் கணிப் பொறிக்கு 'மனிதன்' என்பதன் அர்த்தம் தெரியாது.

இருந்தும் கணிப்பொறிகளால் 'பரிணாம வளர்ச்சி' பெற முடியும் என்று சிலர் நம்புகிறார்கள். கணிப்பொறி மனிதன் மாதிரி அத்தனை கோடி வருஷங்கள் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஒவ்வொரு முறையும் குழந்தை பிறக்கும்போது சுத்தமான மூளையுடன் பிறக்கிறது. தாய் தந்தையர் சேர்த்து வைத்த அறிவு குழந்தைக்குப் பிறக்கும் போது கிடைப்பதில்லை. ஒவ்வொரு மனிதக் குழந்தையும் ஆரம்பத் திலிருந்துதான் கற்றுக்கொள்கிறது. இந்த முறை கணிப்பொறிக்குத் தேவையில்லை. பரிணாம வளர்ச்சியில் ஒவ்வொரு முறையும் புதுசாக ஒரு கம்ப்யூட்டர் பிறக்கும்போது அதுவரை ஒன்று சேர்ந்துள்ள அத்தனை அறிவும் அதற்கு ஆரம்பத்திலேயே கிடைத்துவிடும். எனவே, இந்தப் பரிணாமம் மிக வேகமாக நிகழும் என்கிறார்கள்.

இப்படி வளர்ந்தால் கணிப்பொறிகள் சில வருஷங்களிலேயே நம்மை மிஞ்சி அதிதூரத்துக்குச் சென்றுவிடும். நம்முடன் பேசவே அவைகளுக்கு விருப்பம் இராது. "ரொம்ப ஸ்லோப்பா நீ" அவை களுக்குப் பேச்சு என்பது ஒரு பிக்கோ செகண்டுக்கு (பிக்கோ

செகண்டு என்பது ஒரு செகண்டின் லட்சம் கோடி பாகம்) ஒரு கலைக்களஞ்சியத்தில் உள்ள அத்தனை வார்த்தைகளும் உள்ளே செல்லும் வேகம்! சீக்கிரம் நம்மிடம் பொறுமையின்றி அந்த புதிய ஜீவன்கள் விண்வெளிக்குச் சென்று அங்கே தனி சாம்ராஜ்யம் அமைத்துக்கொள்ளும் என்கிறார்கள்.

அந்த நாள் இப்போது வராது.

இப்போது கணிப்பொறிக்கு 'ஒரு கப் காப்பி' என்பதன் சமூக அர்த்தம் தெரியாது.

விண்வெளியின் சங்கீதம்

மனித சரித்திரத்தில் கணிதம் எப்போது முதலில் துவங்கியது என்று சொல்வது மிகவும் கஷ்டம். 'அரித்மெடிக்' என்று சொல்லப்படும் எண் கணிதம் ஆதி நாட்களிலேயே இருந்து வந்திருக்கிறது. மனிதன் ஆட்டையும், மாட்டையும், விரல்களையும், மனைவிகளையும் எண்ணிக்கை வைத்துக்கொள்ள அது தேவைப்பட்டிருக்கிறது. அதனால் இன்ன தேசத்தில் இன்னாரால் கணிதம் கண்டுபிடிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. மனக்கணக்காக எண்ண ஆரம்பித்தவர்கள் அதைக் குறித்து வைத்துக்கொள்ளவும் முறைகளைக் கண்டுபிடித்தார்கள். பாபிலோனியர்கள், மாயா நாகரிகத்தவர், புராதன இந்தியர்கள் என்று வெவ்வேறு பிரதேசத்தவர்களாக இருப்பினும் பெரிய எண்களை அவர்கள் எழுதும் முறையில் ஆச்சரியமான ஒற்றுமைகள் இருந்தன.

எனவே எண் கணிதத்தைக் கண்டுபிடித்தது யார் என்று நிட்ட வட்டமாகச் சொல்ல முடியாது. மாத்தமாட்டிக்ஸ் என்னும் இயல் எண் கணிதம் மட்டுமல்ல, எண்களின் மூலம் சிந்திப்பது! அது வேறு விஷயம். அதில் முதன்மையானவர் பித்தகோரஸ். சுமார் கிமு. 580–ல் ஸமோஸ் (Samos) என்னும் கிரேக்கத் தீவில் பிறந்த பித்தகோரஸ்ஸின் தேற்றம் இன்றைக்கும் நவீன கணிதத்தின் அடிப்படையான முக்கியமான விஷயம்.

பித்தகோரஸ் ஏறக்குறைய கணிதத்தை தெய்வ ஸ்தானத்துக்கு உயர்த்தினார். எண்களில்தான் இயற்கையின் ரகசியமும் அழகும் இருக்கிறது என்றார். இயற்கையின் மொழி எண்கள் என்றார். பித்தகோரஸ் சங்கீதத்திற்கும் எண்களுக்கும் ஒரு சமரசம் உண்டு என்றார். ஒரு வாத்தியத்தின் தந்தியை நிரடினால் ஒலி வருகிறது! அந்த தந்தியின் நீளத்தைப் பாதியாக்கி நிரடினாலும் ஒலி வரும். அதை மூன்றாக, நன்றாக, ஐந்தாகக் குறைத்தாலும் ஒலி வெவ்வேறு சுரங்களில் வெளிப்படும்.

இவ்வாறு முழு எண்களால் பாகப்படுத்தப்பட்டு புறப்படும் ஒலிகள் ஒன்றுடன் ஒன்று இசைந்தவை. இப்படி முழு எண்களால் வகுத்து ஒலித்தால் வரும் ஒலிகள் இனிமையாக ஒலிக்கும். அபசுரம் தட்டாது.

எனவே, எண்கள் இனிமையானவை என்றார். ஆங்கில சங்கீதத்தில்

இவ்வாறு பாதிக் கம்பி, நீளம், மூன்றில் ஒரு பாகம், நான்கில் ஐந்தில் ஒரு பாகம் ஒலிக்கும் சுரங்களை ஆக்டேவ், ஃபிஃபித், இரண்டாவது ஆக்டேவ் மேஜர் தர்ட் என்று சொல்வர். இவை அனைத்தும் ஒத்து இசைந்த இனிமையான சுரங்கள்.

பித்தகோரஸ்... விண்ணில் உள்ள கோள்கள் சூரியனைச் சுற்றி வரும் நேரங்களைக்கூட இந்த முழு எண் கணிதம் கொண்டு கணக்கிட முடியும் என்றார்.

விண்வெளியின் சங்கீதம் என்றார் அதை.

வெளி உலகத்தை நாம் பார்க்கும் பார்வையில் முக்கியமான ஒரு சித்தாந்தம் நேர் கோணம். நாம் நிற்பது புவிஈர்ப்பு சக்தியால், நிற்கும் திசை மேல் கீழ், எதிரே தொடுவானம் இடம் வலமாகப் பரவியுள்ளது! இவ்விரண்டுக்கும் இடையே உள்ள கோணம் நேர் கோணம். அல்லது எதிரே பார்த்துக்கொண்டு நான்கு முறை சமமாகத் திரும்பினால் மீண்டும் அந்தக் காட்சி வந்தால் நாம் ஒவ்வொரு முறையும் திருப்பிய கோணம் நேர் கோணம். இந்த நேர் கோணத்தை ஆதாரமாக வைத்துத்தான் மனித இனத்தின் அழகழகான கட்டிடங்களும், கோவில்களும் செய்யப்பட்டிருக்கின்றன பித்தகோரஸுக்கு முந்தைய கட்டடக் கலைஞர்களுக்கே நேர் கோணம் எப்படி அமைப்பது என்பது தெரிந்திருக்கிறது. பித்தகோரஸ் நேர் கோண முக்கோணங்களின் பக்கங்களுக்கு இடையே உள்ள உறவைக் கணிதம் மூலம் நிரூபித்தார். அந்தத் தேற்றம் உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும்.

இன்றுவரை பித்தகோரஸ் தேற்றம் கணிதத்தின் மிக முக்கியமானது. அதன் மூலம் நாம் புழங்கும் வெளிப்புறத்தின் அளவுகளை எண்களாகக் காண முடிந்தது. எண்களால், விண்ணில் காணும் கிரகங்களும் நட்சத்திரங்களும் நகரும் விதத்தைக்கூட விவரிக்க முடிந்தது. வான சாஸ்திரமும் ஆதி மனிதன் முதல் ஆர்வமாக இருந்ததற்கு இதுவே காரணம்.

கிரேக்கர்களிடமிருந்து புறப்பட்ட கணித சாஸ்திரம் அராபியர்களிடம் வளர்ந்தது. ஸ்பெயின் தேசத்தில் உள்ள அல்ஹம்ப்ரா மாளிகையின் அழகான கட்டிட அமைப்பு அராபியர்களின் அபார கணித அறிவுக்கு எடுத்துக்காட்டு என்று சொல்கிறார்கள்.

நவீன கணிதம் பிறந்தது மேற்கத்திய சிந்தனையின் அடிப்படையில், இன்றைய நாட்களில் கணிதம் இரு வகையாகப் பிரிந்திருக்கிறது என்று சொல்லலாம். மற்ற துறைகளுக்கு உதவும் கணிதம், துல்லியமான கணிதம் - Applied, Pure என்று இரு பெரிய பிரிவுகள்.

வேதியியல், இயற்பியல்–ஏன், உயிரியல் எல்லாவற்றுக்குமே கணிதத்தின் உதவி தேவைப்படுகிறது. நவீன க்வாண்டம் இயற்பியலில் பல சித்தாந்தங்கள் கணிதத்தின் உதவிகொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

எண் கணிதம் கம்ப்யூட்டர் கணிப்பொறிகளில் பயன்படுகிறது. அல்ஜிப்ரா மாடுலோ (Modulo) கணிதம் செட், கணங்கள் இவைகள்

எல்லாம் கணிப்பொறி இயலுக்குத் தேவை. கால்குலஸ் போன்ற கணிதப் பகுதியும் எலக்ட்ரானிக்ஸ் இயலில் பயன்படுகிறது.

இவ்வாறு மற்ற இயல்களுக்கு உதவும் கணிதத்தை Applied பயன் கணிதம் என்று வகைப்படுத்துகிறார்கள். Pure துல்லிய கணிதம் என்பது எண்களையும் அவைகளின் குணங்களைப் பற்றியும் தனிப் படுத்தி சிந்திப்பது. இது கொஞ்சம் சிக்கலானது.

ருசி பார்க்கிறீர்களா?

3 ஒரு எண் என்கிறோம். 3 என்றால் என்ன? 'மூன்றுத்தனம்' என்று ஏதாவது தனியாக இருக்கிறதா? 'மூன்று என்பது' ஒரு குணம். சில பொருள்களின் தொகுப்புக்கு உள்ள குணம். உதாரணம் ஒரு முக்கோணத்தின் பக்கங்கள். ஒரு குழந்தை சைக்கிளின் சக்கரங்கள், ஒரு கிளாவர் வடிவத்தின் இலைகள், பரமசிவனின் கண்கள்... இவை அனைத்துக்கும் பொதுவாக உள்ள ஒரு குணம் இந்த 'மூன்றுத்தனம்'.

எனவே 3 என்பது என்ன என்று யாராவது கேட்டால் 'மூன்றுத் தனம்' உள்ள எல்லா தொகுப்புக்களின் தொகுப்பு. A set of sets. ஒரு கூடையில் மூன்று பழங்கள் இருந்தால் அந்தக் கூடை 'மூன்று' என்ற அங்கத்தின் ஒரு அங்கத்தினன்!

3 என்பது ஒரு குறியீடோ வரிவடிவமோ அல்ல.

ஒரு குறிப்பிட்ட (மூன்றுத்தனம் எனும்) குணம் கொண்ட பொருட்களின் தொகுப்பு.

இதுவரை புரிந்தாலே பாக்கியம்! இப்போது இதிலிருந்து 'ரஸ்ஸல்ஸ் பாரடாக்ஸ்' என்னும் அடுத்த கட்டத்துக்குப் போனால் அடிக்க வருவீர்கள். இருந்தாலும் உங்களை யோசிக்க வைக்க ஒருவாறு எளிமைப்படுத்தப்பட்ட ரஸ்ஸல்ஸ் பாரடாக்ஸ்!

'சின்ன' என்பது சின்ன வார்த்தை.

ஆனால் 'பெரிய' என்பது பெரிய வார்த்தை அல்ல. எனவே தமிழ் வார்த்தைகளை இப்படி இரண்டு வகையாகப் பிரிக்க முடியும்.

1. வார்த்தையின் குணம் வார்த்தைக்கே இருப்பவை.

2. வார்த்தையின் குணம் அந்த வார்த்தைக்கே இல்லாதவை.

முதல் வகை வார்த்தைகளை 'சொந்த' என்றும், இரண்டாம் வகை வார்த்தைகளை 'அன்னிய' என்றும் பெயரிட்டு வகைப்படுத்துகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அப்போது ஒரு கேள்வி:

'அன்னிய' என்னும் வார்த்தை எந்த வகையைச் சேரும்? சொந்தமா, அன்னியமா?

இதை யோசித்து யோசித்து நீங்கள் தூக்கமோ முடியோ இழந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

நினைவாற்றல் எனும் புதிர்!

பயாலஜி என்னும் உயிரியல் விந்தையானது. உயிர் என்றால் என்ன என்று இதுவரை நமக்குத் தெரியாது. இருந்தும் உயிருள்ள ஜந்துக்களைப் பற்றி ஒரு முழுமையான இயலே இருக்கிறது. ஆர்தர் கோஸ்லர் நம் மூளையைப் பற்றிச் சொல்லும்போது 'பரிணாமத் தத்துவம் கொஞ்சம் அதிகப்படியாகவே இயங்கிவிட்டது' என்றார்.

அதாவது உயிர் வாழ்வதற்கு நம் மூளை கொஞ்சம் அதிகப்படி என்றார். இல்லையென்றால் நம் மூளைகளின் சில ஆச்சரியமான தகுதிகள் தேவையற்ற தகுதிகள் என்றார்.

உதாரணமாக எடின்பரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏ.ஸி. எய்ட்கன் என்பவர் 24 செகண்டில் 4/47 எல்லாம் பின்னத்துக்கு *0851063829787234025531914*' என்று விடை கொடுத்துவிட்டு கொஞ்சம் யோசித்துவிட்டு இன்னும் வருகிறது. '*0893617021765957446*8... இதற்கப்புறம் ரிபீட் ஆகிறது என்கிறார்! (மேலே குறித்ததில் தப்பிருந்தால் அது எய்ட்கனின் தப்பல்ல. அச்சுப்பிழை!)

நாற்பத்தாறு தசம ஸ்தானத்துக்கு ஒரு பின்னத்தைக் கணக்கிடும் இந்தத் தகுதி எதற்காக? ப்ரொபஸர் எய்ட்கன் இம்மாதிரி பல திறமைகள் காட்டுகிறார். 1981–ல் மங்களூரைச் சேர்ந்த ராஜன் மகாதேவன் 'பை' என்றால் வட்டத்தின் சுற்றளவுக்கும் குறுக்களவுக்கும் உள்ள விகிதத்தை 31811 தசம ஸ்தானத்துக்கு ஞாபகம் வைத்துக் கொண்டு சொன்னார்!

இதெல்லாம் இந்தத் தகுதியெல்லாம் உயிர் வாழத் தேவையில்லாத தகுதிகள். இருந்தும் இந்தத் தகுதி உள்ளவர்கள் பல பேரை நாம் பார்க்கிறோம். (உ.ம். சகுந்தலாதேவி) நாடக நடிகர்கள், பாரா பாராவாக வசனங்கள் ஞாபகம் வைத்துக்கொள்கிறார்கள். இளம் பெண் கம்பராமாயணத்தை முழுவதும் நினைவு வைத்து மேற்கோள் காட்டுகிறாள். எதற்காக!

இந்தத் தகுதி நம் எல்லோருக்கும் உண்டா சில தனிப்பட்டவர் களுக்கு என்றால்... ஆச்சரியம் நம் எல்லோருக்கும் இந்தத் தகுதி உண்டு! சரியான பயிற்சியும் உந்து சக்தியும் இருந்தால் மனித மூளைக்கு இந்தத் தகுதிகள் வந்துவிடுகின்றன.

எழுத்துக்களும் அச்சியந்திரமும் கல்வியும் வருவதற்கு முன்னர் நாம் உயிர்வாழ இந்தத் தகுதிகள் தேவைப்பட்டன. நம் வேதங்களும் உபநிஷத்துக்களும் வாய்மொழியாகத்தான் பரவ வேண்டியிருந்தது. அதற்காக நல்ல ஞாபக சக்தி தேவைப்பட்டது. நல்ல ஞாபக சக்தி உள்ளவர்களுக்கு சமூகத்தில் மதிப்பு இருந்தது. மதக் கொள்கைகளும் இலக்கியங்களும் பரவ அச்சியந்திரத்துக்கு முன் வாய்மொழிப் பரவலுக்கு ஞாபகம் முக்கியமாக இருந்தது. மேலும் நிறைய கதைகளை யும் பாடல்களையும் ஞாபகம் வைத்துக்கொண்டு சொல்பவர்கள் பிரபலமாக இருந்தார்கள். இதனால் உயிர் வாழவும் சமூகத்தில் மதிப்பு பெறவும் இந்தத் திறமைகள் தேவையாக இருந்த கால கட்டத்தில் மனித மூளை நிறையவே ஞாபகம் வைத்துக் கொள்ளும் தகுதி பெற்றிருந்தது. இன்று அச்சும் புத்தகமும் வந்த பின் இந்தத் தகுதிக்குத் தேவை இல்லாமல் போய்விட்டது.

இருந்தும் இன்றைய நாட்களில் நம்மில் சிலருக்கு ஆச்சரியகரமான நினைவாற்றல் இருப்பதை அவ்வப்போது பார்க்கிறோம். ஒரு ஆசாமிக்கு அங்கங்கே கன்னாபின்னா காரேமூரே என்று புள்ளியிட்ட அமைப்பை அப்படியே ஞாபகம் வைத்துக்கொண்டு திரும்ப அமைக்கும் ஆற்றல் இருந்ததாக செய்தி இருக்கிறது. இந்த வகை நினைவாற்றலை எய்ட்டிக் என்பர். இது கொஞ்சம் அரிதானது. இந்த வகை ஆற்றலில் எண்கள், புள்ளிகள் இவைகளைக் காட்சிகள் அல்லது சங்கித ஸ்வரங்கள் இவைகளுடன் சம்பந்தப்படுத்தி ஞாபகம் வைத்துக்கொள்கிறார்கள். இப்போதுகூட டெலிபோன் எண்களை சில பேர் வார்த்தைகளாக மாற்றி மனதில் எழுதிக்கொள்வதை கவனித்திருக்கிறேன். சம்பந்தமற்ற சிலவற்றை முடிச்சுப்போட்டு ஞாபகம் வைத்துக்கொள்வது சிலருக்கு மிகச் சுலபம். நீங்களே இதைப் பரிசோதித்துப் பாருங்கள். நாளைக் காலை முக்கியமாக ஒரு காகிதத்தை ஆபீசுக்கு எடுத்துப் போக வேண்டும் என்றால் அதை நினைவு வைத்துக்கொள்ள சுலபமான வழி ராத்திரி படுக்கச் செல்லுமுன் ஏதாவது வழக்கத்துக்கு விரோத மான ஒரு முரண்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். உதாரணம் சோப்புப் பெட்டியை சமையல் அறையில் வைக்கலாம். அல்லது பற்பசையைத் தலைமாட்டில் வைக்கலாம். அல்லது (நான் எப்போதும் செய்வது) ஒரு கால் செருப்பு ஒரு அறையிலும் மற்றொன்று நடை வழியிலும் வைத்துவிடுவது.

இந்த முரண்பாட்டை காலை கவனிக்கும்போது உடனே ஆபீஸ் காகிதம் ஞாபகம் வந்துவிடும்.

நம் ஆற்றல்கள் பல நம்மில் பொதிந்துள்ளன. அவைகளை மேல்தளத்துக்குக் கொண்டுவருவதில் திறமை என்பது இருக்கிறது. காலஞ்சென்ற எம்.பி. சீனிவாசன் கார்ப்பரேஷன் பள்ளியின் ஏழைக் குழந்தைகளை சுருதிசுத்தமாக 'காயர்' சங்கீதம் பாட வைத்தார்.

நிறைய கார்ப்பரேஷன் குழந்தைகள் இருக்கிறார்கள். சீனிவாசன் கள்தான் அரியவர்கள்.

பழங்கதையில் உண்மை இருக்கிறதா?

அண்மையில் திருநெல்வேலிக்குச் சென்றிருந்தேன். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாணவர்கள் படிக்கும் ஆர்வத்தைத் தவிர எந்த வசதியும் இல்லாமல் கஷ்டப்படுவதையும், நெல்லையப்பர் கோவிலின் விஸ்தாரமான மண்டபங்கள் வெறிச்சோடி இருப்பதையும், காந்திமதி அம்மனின் மூக்குத்தி அகல் வெளிச்சத்தில் ஜொலிப்பதையும் கண்டேன். மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் ஏராளமான வாசகர்கள் தாராளமாகக் கேள்வி கேட்டார்கள். அவைகளில் ஒரு கேள்வி சிந்தனைக்குரியது. 'மேற்கத்திய அறிவின் தாக்கத்தால் நாம் இழக்கித்திய சிந்தனை முறைகளையும் அறிவையும் இழந்து விட்டோமல்லவா?' உதாரணமாக வேதகாலத்திலிருந்து கணித சாஸ்திரம், மருத்துவம், இயற்பியல், வேதியியல் எல்லாம் இருந்திருக்கிறது. அவைகளை நாம் கைவிட்டுவிட்டோமல்லவா?

யோசித்துப் பார்த்தால் இதில் கொஞ்சம் உண்மை இருக்கிறது. குறிப்பாக க்வாண்டம் இயற்பியலின் விளிம்புகளைத் தொட்டவர்களின் பல கருத்துக்கள் நம் வேத உபநிஷத் கருத்துக்களுடன் ஒத்துப் போகின்றன. நவீனம் என்று எண்ணிக்கொண்டிருப்பதெல்லாம் எங்கோ? ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்கெனவே சிந்திக்கப்பட்டு எழுதப்பட்டுவிட்டன என்று தோன்றுகிறது.

அறிவியலில் நம் முன்னோர்களின் அறிவு எந்த மட்டில் இருந்தது என உணர்ச்சி வசப்படாமல் நோக்கலாம். நம் புராதனப் புத்தகங்களில் வான சாஸ்திரம் நிறைய இருக்கிறது. கிரகங்களின் சலனங்கள், கிரகணங்கள் இவைகளைக் கண்டறியும் ஆற்றல் பெற்றவர்கள் இருந்தார்கள். துரதிருஷ்டவசமாக, வான சாஸ்திரமாகப் புறப்பட்ட இந்த இயல், ஜோதிடமாக மாறி கிரகங்கள் நம் வாழ்க்கையின் சம்பவங்களை பாதிக்கின்றன. ஜாதகப் பொருத்தம் பரிகாரம் என்று பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதாகிவிட்டது. அதேபோல் வேத காலத்தில் வேதியியல், இரும்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களை உருவாக்கும் திறமை பெற்றிருந்தது. நாட்பட நாட்பட எல்லாவற்றையும் தங்கமாக மாற்றும் தகிடுதத்த வித்தைகளாக மாறி ஏமாற்று வேலை யாகியது. மருத்துவ சாஸ்திரம் ஒரு அளவுக்கு இந்த ஜுரத்திற்கு

இந்த மருந்து என அனுபவ ரீதியில் கண்டறிந்த சங்கதிகளைத் தொகுத்தது. சுஸ்ருதர் போன்றவர்கள் சஸ்திர சிகிச்சை செய்ததாகச் சொல்கிறார்கள். நம் பழைய ஜைன நூல்களில் பல விதமான மூலிகை வேர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லாமே அனுபவ வைத்தியம். மேல்நாட்டு மருத்துவ இயலும் இப்படித்தான் வளர்ந்தது. ஆனால் சென்ற நூற்றாண்டில் ரத்த ஓட்டம் பற்றிய முழு ஞானமும் வந்த பின் அவர்கள் அதுவரை அறிந்ததெல்லாம் தப்பு என்று உணர்ந்து எல்லாவற்றையும் கலைந்து கட்டி புதுசாக ஆரம்பித்தார்கள். நாம் இன்னும் பழசையே சொல்லிக்கொண்டிருக்கிறோம். நம் பழைய தமிழ் நூல்களில் நெல்லுக்குள் மருந்தை வைத்து ரத்தத்துடன் கலந்துவிடுவதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் அப்போது இன்ஜெக்ஷன் எல்லாம் இருந்திருக்கிறது என்று சொல்வது அபத்தம். இப்போது இவ்வாறு நெல்லை ரத்தத்துக்குள் செலுத்துவது அபாயமானது. அப்போதும் அபாயமானதாக இருந்திருக்க வேண்டும். சிலர் பிழைத்திருக்கிறார்கள். அவ்வளவே. நம் சங்க நூல்களில் நிறைய உயிரியல் கிடைக்கிறது. நிறைய பறவைகளின் தாவரங்களின் பெயர்கள் கிடைக்கின்றன. அதனால் அவர்கள் ஜெனட்டிக்ஸ் பற்றியோ டி என் ஏ பற்றியோ தெரிந்து வைத்திருந்தார்கள் என்றில்லை. சீவக சிந்தாமணியில் டெலிவிஷன் போல ஒரு சங்கதி வருகிறது. அதனால் அந்தக் காலத்தில் டி.வி. இருந்தது என்று சொல்ல முடியாது. கம்பர் ஏரோப்ளேன் டேக் ஆஃப் போல ஒரு பாட்டில் எழுதியுள்ளார். சைவ சமயப் பாடல்களில் சிலவற்றில் டார்வினின் பரிணாமத் தத்துவம் தெரிகிறது. பரத்வாஜரின் வைமானிக சாஸ்திரம், சுந்தர விமானம், ருக்ம விமானம், திரிபுர விமானம் என்று பொம்மை யெல்லாம் போட்டு விளக்கமாக இருக்கிறது. அம்சுபோதினி சாஸ்திரத் தில் சும்பக் மணி என்கிற வஸ்துவை ஃபோட்டோ எலக்ட்ரிக் சமாசாரம் என்று ஒரு கோஷ்டி ரிஸர்ச் பண்ணிக்கொண்டிருக்கிறது.

மனித சரித்திரத்தில் இயற்கையை அறிந்துகொள்ளும் ஆர்வம் எப்போதும் இருந்திருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நம்முடைய அறியாமை படிப்படையாகக் குறைந்துகொண்டு வந்திருக்கிறது. இன்று ஏரோப்ளேன்கள் பறக்கின்றன. டாவின்சி காலத்திலும் பரத்வாஜர் காலத்திலும் இப்படி செய்தால் பறக்கலாம் என்று முயற்சி பண்ணிக்கொண்டிருந்தார்கள். எரோடைனமிக்ஸின் ஆதார விதிகள் தெரிந்த பின்தான் பறந்து காட்ட முடிந்தது. ஆனால் அந்த ஆர்வம் அந்த முயற்சி பழுதில்லாதது. அண்மையில் நான் பாண்டிச்சேரி போயிருந்தபோது ஆசிரமத்தில் ஒருவர் தாவரங்கள் தமக்குள் பேசிக்கொண்டிருக்கின்றன என்ற நிரூபிக்க முடியும் என்றார். அதில் அவர் ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கிறார்.

விவசாயிகளிடையே பல பழைய நம்பிக்கைகள் உள்ளன. பிரான்சு தேசத்தில் வால்நட் மரங்களை அவ்வப்போது ஒரு குச்சியால் அடித்தால் அதிகம் பழங்கள் தரும் என்று நம்பினார்கள். தோட்டத்தில் சில பேர் நட்டால் மட்டும் பூக்கள் பூப்பதையும், செடிகள்

செழிப்பதையும் நானே பார்த்திருக்கிறேன்.

பெங்களூரில் ஜாகராண்டா மரங்கள் ஒரே தினத்தில் சொல்லி வைத்தாற்போல் பூப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். மரங்களுக்குள், தாவரங்களுக்குள் ரகசிய பாஷை இருப்பதாக சிலர் நம்புகிறார்கள். தைப்பற்றி சிலர் ஆராய்ச்சியும் செய்திருக்கிறார்கள். ஆப்ரிக்காவில் 'குடு' என்று ஒரு மிருகம் இருக்கிறது. மான் வகையைச் சேர்ந்தது இது. மரங்களிலும், புதர்களிலும் உள்ள இலை தழைகளை ஒடித்துச் சாப்பிடும். ஆனால் ஒரு மரத்தில் இரண்டு நிமிஷத்துக்கு மேல் சாப்பிடாது. அடுத்த மரத்துக்குச் சென்றுவிடும். என்னதான் முதல் மரத்தில் இலைகள் அடர்த்தியாக இருந்தாலும் இது ஏன் என்று ஆராய்ந்து பார்த்தபோது மரம் தன் சொந்தப் பாதுகாப்புக்காக ஒரு இலைக்கு மேல் உடைக்கப்பட்டு பறிக்கப்பட்டால் தன் இலைகளில் 'டானின்' என்கிற வஸ்துவை அதிகப்படுத்தி மிருகங்கள் சாப்பிட முடியாமல் செய்துவிடுகிறதாம். எப்படிப்பட்ட ஆச்சரியம் இது. இதைவிட ஆச்சரியம் ஒரு மரத்தைத் துன்புறுத்தினால் அதன் அருகே உள்ள மரங்களின் 'டானின்' அளவு அதிகமாவதையும் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

தன் சகோதர மரத்தின் துயரத்தை அது எப்படி அறிகிறது? வேர்கள் மூலமாகவோ அல்லது காற்றில் ஏதாவது அனுப்புகிறதா என்று வியப்படைகிறார்கள். தாவரங்கள் தமக்குள் பேசிக்கொள்கின்றன என்று சொன்னால் அதை உடனே விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளாது. அந்த 'பேச்சு' என்னும் நிகழ்ச்சியை நமக்குத் தெரிந்த உயிரியல், இயற்பியல், வேதியியல் ஏதாவது ஒரு சாத்திரத்தின்படி நிகழக் கூடிய ஒன்றாக அறிய முடியும் என்றால்தான் அறிவியல்படி அது செல்லுபடியாகும். இதற்கு ஒரு எளிய காரணம் உண்டு.

ஒரு ஆசாமி முறைத்துப் பார்த்தே ஒரு ஸ்பூனை வளைக்கிறான் என்று யாராவது சொன்னால், அதை நம்புவதற்கு இதற்கு முன் நாம் நம்பி வந்த அனைத்து இயற்பியல் விதிகளையும் ரத்து செய்ய வேண்டும்! இந்த விதிகள் நூற்றாண்டுக்கணக்காக சிந்தித்து அறிந்து கொண்டவை. பிரபஞ்சம் முழுவதும் செலவாணி ஆகும். இந்த விதிகளை ரத்து செய்வதற்கு முன் ஒருவேளை அந்த ஆசாமி ஏமாற்று வித்தை ஏதாவது செய்கிறானோ என்று ஆராய வேண்டியது முக்கியம்.

இதுதான் அறிவியலின் முறை.

புறநானூறு எனும் புதுமை

எப்போதாவது ஆச்சரியப்பட வேண்டும் என்று தோன்றினால் புறநானூற்றை எடுத்து வைத்துக்கொண்டுவிடுவேன். இது வற்றாத வியப்புக்கள் தரும் நூல். இதன் காலம் 2ம் நூற்றாண்டு என்கிறார்கள். சுமார் நூற்றெழுபது புலவர்கள் பாடிய நானூறு பாடல்கள். அனைத்தும் Dramatic Monologue என்கிற வகையில் அரசர்களையும் சாதாரணர்களையும் ஏன் ஒரு நகரத்தைக்கூட முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட கவிதைகள். இதில் என்னை வியக்க வைப்பது முதலில் இதன் அபார கவிதை நயம்.

"கேடயம் கேடயம் என்று அலறுகிறாயே, கேடயத்தின் பின் மறைந்தால் பிழைப்பாயோ? நேற்றைய போரில் நீ கொன்றவன் தம்பி குன்றுமணி போல சிவந்த கண்களுடன் கள்ளுக்கடை தேடும் குடிகாரன் போல் உன்னை வீடுவீடாய் தேடிக்கொண்டிருக்கிறான் ஓடிப்போ."

மேற்குறித்திருப்பது அரிசில்கிழார் பாட்டின் (300) எளிய வடிவம். சுமார் இரண்டாயிரம் வருஷம் முன் எழுதப்பட்டது. இதன் ஆதார உணர்ச்சி இன்றைய சமுதாயத்திலும் செல்லுபடியாக இருக்கிறது. இவ்வாறு புறநானூற்றின் பல கவிதைகள் இன்றைக்கும் புதிதாக இருப்பது முதல் வியப்பு.

அடுத்தது இந்த நூலில் தென்படும் அந்தக் காலப் பழக்கவழக்கங்கள், சகுனம் பார்த்திருக்கிறார்கள். (புள்ளும் பொழுதும் பழித்தல் (204) வழிப்பறி இருந்திருக்கிறது. அம்பு பட்டு இறந்தவர்களைக் கல்லால் மூடும் பழக்கம் இருந்திருக்கிறது. வறுமை இருந்திருக்கிறது. மகாபாரதம், ராமாயணம், சிவன், முருகன் இவைகளைப் பற்றிய குறிப்புக்கள், இந்தியாவைப் பற்றிய பொதுவான வடிவம் ('வாடா அது பனிபடு நெடுவரை வடக்கும்...') இயற்கை ஐம்புலன்களால் ஆனது என்னும் கொள்கை, போருக்குச் செல்கையில் சிவந்த உடைகள் அணியும் பழக்கம், விதவைகளை மிகுந்தியாகக் கொடுமைப்படுத்துவது, தாழியில் புதைத்தல், இறந்தவர்களை எரித்தல் அல்லது தாழியில் புதைத்தல், பலா மரத்தில் முரசைக் கட்டுதல், ஆமை இறைச்சி, இறால் மீன் உண்ணுதல், இரவு வந்தால் போரை நிறுத்திவிடுதல், சுனையில்

குதித்து வண்டலை எடுத்து இளம் பெண்களிடம் தருதல் என்று ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு செய்தி கிடைக்கிறது. பல்வேறு மரங்கள், பறவைகள், மழை, வெயிற்காலங்களின் சூழ்நிலை மாறுதல்கள் என்று உன்னிப்பாக இயற்கையை கவனித்து எழுதியிருக்கிறார்கள்.

புறநானூற்றில் உள்ள அகச்சான்றுகளை வைத்துக்கொண்டு அதன் காலத்தை நிர்ணயிக்க முடியும் எனத் தோன்றுகிறது.

'மைம்மீன் புகையினுடம் தூமம் தோன்றினும் தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்' போன்ற வரிகளில் வான சாஸ்திரக் குறிப்புக்கள் மூலம் அதன் காலத்தை அறுதியிட முடியும். தூமம் என்னும் வால் நட்சத்திரத்தைக் கபிலர் பார்த்திருக்க வேண்டும். தெளிவாக ஆராய்ந்து இன்ன தேதியில் இது எழுதப்பட்டது என்றுகூட கூறிவிடலாம்.

அந்தத் தேதி இரண்டாம் நூற்றாண்டோ ஆறாம் நூற்றாண்டோ புறநானூற்றின் ஆச்சரியம் குறையப்போவதில்லை. என்ன நாகரிகம் அது! அதில் தென்படும் சிந்தனையின் முதிர்ச்சி ஒரு தமிழன் என்பதில் இன்று பெருமை கொள்ளச் செய்கிறது. புறநானூற்றுக் காலத்து மொழியில் இன்று நான் எழுதுகிறேன் என்பதில் பெருமை ஏற்படுகிறது.

"எத்திசை செலினும் அத்திசை சோறே" என்று அபாரமான தன்னம்பிக்கை "பெரிதே உலகம் பேணுநர் பலரே" என்று பரிசல் தரவில்லையென்றால் எழுந்து போகும் கர்வம், மிக நுட்பமான உருவகங்கள்: 'ஆல் பழுத்தால் வரும் பறவைகள் போல் வரும் சுற்றத்தார்! வண்டிச் சக்கரத்துடன் சுழலும் பல்லி போல் கணவனுடன் ஒட்டி வாழும் மனைவி, அரிய உவமைகள்: அருவிக்குத் துகில் நரைத்த தலைக்கு கொக்கின் இறகு.'

இப்படி ஒவ்வொரு பாட்டிலும் தென்படும் பண்பாடு இந்த ஒரு நூல் போதும் ஒரு வாழ்நாள் முழுவதும் ஆராய்வதற்கு.

புறநானூற்றின் புலவர்கள் தங்களைப் பற்றி எந்தப் பாடலிலும் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. தொகுத்தவர்தான் திணை துறைப்படுத்தி பாடினோர், பாடப்பட்டோர் பெயரெல்லாம் கொடுத்து வகைப்படுத்தியிருக்கிறார்கள்.

"மன்னா உலகத்து மண்ணுதல் குறித்தோர் தம்புகழ் நிற்கத் தாம் மாய்ந்தனரே..." என்பது போல் உலகில் நிலைபெறக் கருதினவர்கள் தம் புகழை மட்டும் நிறுவிவிட்டு தாம் இறந்து போயினர்.

"மணல் பொம்மைகளுக்குப் பூ வைத்தோம். பொய்கையில் பெண்களைத் தழுவி அணைத்தோம், கரையோர மருத மரத்தில் ஏறி பார்ப்பவர் வியக்க நீரைப் பிளந்து மடுவில் திடும் எனப் பாய்ந்து அந்தப் பெண்களுக்கு வண்டல் மண் கொண்டுவந்தோம். 'இளமை' நரைத்த தலை தண்டு ஊன்றி நடுக்கம், அதிகம் பேச முடியாமல் இருமல் கொண்ட எங்களுக்கு அந்த இளமை இனி வருமா? இப்போது நினைத்தாலும் இரக்கமாக இருக்கிறது".

இவ்வாறு இன்றைய இளைய சமுதாயத்திற்கு புறநானூற்றைக் கலைஞர் போல் எளிமையாகச் சொல்லிக்கொடுக்க பலர் முன் வரவேண்டும்.

ஸ்பினோஸா ஒரு வழிகாட்டி

அபிமான நடிகர், அபிமான எழுத்தாளர் என்று சிலருக்கு இருக்கலாம். எனக்கு அபிமான தத்துவஞானி, அவர் பெயர் ஸ்பினோஸா (SPINOZA). 17ம் நூற்றாண்டின் முதல் பாதியில் ஆம்ஸ்டர்தாம்–ஹாலந்து தேசத்தில் வாழ்ந்த யூதர். இன்று உலகின் தலைசிறந்த தத்துவஞானிகளில் ஒருவராகக் கருதப்படுபவர். ஆரம்பத்தில் யூத மதக் கோட்பாட்டு இலக்கியங்களிலும், பைபிளின் பழைய ஏற்பாட்டிலும் உள்ள ஆழ்ந்த மத சிந்தனைகளில்தான் துவங்கினார். அதோடு நிறுத்தாமல் கடவுள் தத்துவத்தைப் பற்றியும் மனிதப் பிறப்பின் அர்த்தங்களைப் பற்றியும் கொஞ்சம் அதிகமாக ஆழமாக சிந்தித்து, தன் கருத்துக்களை வெளிப்படுத்தினார். அதனால் அந்தக் காலகட்டத்தில் அவர் ஏராளமான இன்னல்களை சந்திக்க வேண்டியிருந்தது.

யூதர்களின் சரித்திரம் ஐரோப்பிய வரலாற்றில் ஒரு காவியம் என்று சொல்வார்கள். தங்கள் சொந்த வீடான ஜெருசெலம் நகரிலிருந்து கிறித்தவர்களால் கி.பி.70ல் விரட்டப்பட்டவர்கள். 1950கள் வரை உலகெங்கும் திரிந்து பிரிந்தவர்கள், முக்கியமாக ஐரோப்பா கண்டத்தில் ரஷ்யா, ஸ்பெயின், இத்தாலி, ஹாலந்து என்று வெவ்வேறு தேசங்களின் கலாச்சாரங்களில் அவர்கள் ஒன்றிப்போனாலும் ஆதாரமான யூத அடையாளங்கள் பல மாறாமல் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த சனாதனிகள். தம் குழுவுக்குள்ளே சம்பந்தம், சதா பயத்தின் நிழலிலேயே வாழ்க்கை இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களை வெறுக்கவும் விரும்பவும் வைத்திருக்கிறது. ஸ்பினோஸா அத்தகைய சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவர். ஆரம்பத்தில் யூத மத வியாக்கியானங்களை ஆழ்ந்து படித்ததில் 'கடவுள் என்பது இந்த பிரபஞ்சம் முழுவதுமே' போன்ற கருத்துக்கள் அவரைக் கவர்ந்தன. லத்தீன் மொழி பயின்றார். சாக்ரடிஸ், ப்ளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்க ஞானிகளைப் பற்றியும் படித்தார். படிக்கப் படிக்க அவருக்கு சந்தேகங்கள் அதிகமாயின. பழைய ஏற்பாட்டிலும், யூத மத கிரந்தங்களிலும் அவருடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை. ப்ருனோ என்கிற இத்தாலிய சிந்தனையாளரின் கருத்துக்களால் கவரப்பட்டார். கி. பி. 1548லிருந்து 1600வரை

வாழ்ந்த ப்ருனோ நிஜமாகவே ஒரு புரட்சிகரமான சிந்தனையாளர். தேசத்திலிருந்து தேசம் திரிந்த அவர் மனித குலத்தின் அத்தனை மத சிந்தனைகளையும் ஊன்றிப் படித்துவிட்டு "நுழைந்த கதவிலேயே திரும்ப வெளிவந்துவிட்டேன்" என்றார். இறுதியில் ப்ருனோ கிறித்தவ மத போதர்களால் அவர் சிந்தனைகளுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு மிகுந்த பரிவுடன் ரத்தம் சிந்தாமல் உயிருடன் எரிக்கப்பட்டார். ப்ருனோ, உண்மை என்பது ஒன்றே ஒன்றுதான். அதன் காரணம் ஒன்றே ஒன்றுதான். ஆதாரமும் ஒன்றே ஒன்று. கடவுள் என்று சொல்வது இந்த உண்மையைத்தான் என்றார். ப்ருனோவின் கருத்துக்கள் ஸ்பினோஸாவை மிகவும் பாதித்தன. அதனுடன் 1965ம்–ம் ஆண்டு வரை வாழ்ந்த டெஸ்கார்ட்டெஸ் என்பவரின் கருத்துக்களும் அவரை ஈர்த்தன. டெஸ்கார்ட்டெஸ் எல்லா தத்துவங்களும் நம் மனதில்தான் துவங்குகின்றன என்றார். நான் நினைக்கிறேன்; எனவே நான் இருக்கிறேன் என்ற அவர் வாசகம் பிரசித்தமானது. (Cagito evgo sum)

1956ல் ஸ்பினோஸா யூத மதப் பெரியவர்களால் அழைக்கப்பட்டார். "கடவுளுக்கு உடல் உண்டு என்றும் அந்த வடிவம் இந்த வெளி உலகம் பிரபஞ்சம் என்றும்... தேவைகள் எல்லாம் மனத்தோற்றங்கள் என்றும் ஆத்மா என்பது உயிர்தான் என்றும் பழைய ஏற்பாட்டில் ஆத்மாவுக்கு அழிவில்லை என்பது சொல்லப்படவில்லை என்றும் என நண்பர்களிடம் பிரச்சாரம் செய்கிறாயாமே" இது நிஜமா?

ஸ்பினோஸா என்ன பதில் சொன்னாரோ தெரியவில்லை. அவருக்கு இந்தக் கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்லாமல் நிறுத்தினால் வருஷாந்திர சம்பளம் தருவதாகக் கூறப்பட்ட சலுகையை மறுத்து விட்டார். அதனால் அவர் யூத மதத்திலிருந்து 1656ல் நீக்கப்பட்டு விட்டார். நம் ஊர் பழங்கால ஜாதி பிரஷ்டத்தைவிடக் கொடுமையான தண்டனை இது. இந்த நீக்கம் வாசித்தளிக்கும்போது ஒரு கொம்பு வாத்தியம் ஒலமிடுமாம். விளக்குகளை ஒவ்வொன்றாக அணைப்பார் களாம் முழு இருட்டு வரை. அதன்பின் அவருடன் யாரும் பேசக் கூடாது. கடிதம் எழுதக் கூடாது. யாரும் அவருக்கு எந்த உதவியும் செய்யக் கூடாது. உடன் வாழக் கூடாது. அவருக்கு நாலு முழம் அருகில் செல்லக் கூடாது. அவர் எழுதினதைப் படிக்கக் கூடாது. படிப்பதைக் கேட்கக் கூடாது.

சுதந்திரமாக சிந்தித்தற்காக இந்த தண்டனை! இத்தனை எதிர்ப்பு களையும் சமாளித்து ஸ்பினோஸா உலகின் தலைசிறந்த தத்துவ ஞானியின் ஸ்தானத்துக்கு உயர்ந்ததற்கு காரணம்: அவர் சுருத்துக்களில் எளிமையும், சிந்தனைத் தாக்கமும்தான்... ஸ்பினோஸா வாழ்நாள் முழுவதும் வாடினார் என்றில்லை. முதலில் தனிமையை நாடினார். அவருடைய தந்தை அவரை ஒதுக்கிவிட அவர் சகோதரி அவருக்குச் சேர வேண்டிய சொத்தை ஏமாற்ற முயன்றார். ஸ்பினோஸா, கோர்ட்டில் கேஸ் போட்டு ஜெயித்தார். ஜெயித்த பின் வினோதமாக

அந்த சொத்தை தங்கைக்கே கொடுத்துவிட்டார். நண்பர்கள் அவரை ஒதுக்கினர். தெருவில் நடந்து செல்கையில் ஒரு தீவிர மதவாதி அவரைக் கொல்ல முயற்சித்தான்.

ஸ்பினோஸாவின் நூல்களில் 'மதமும் தேசமும்' 'அறிவும் விருத்தி' போன்றவற்றோடு 'எத்திக்ஸ்', 'நன்னடத்தை' என்பது மிக முக்கிய மானது. பின்னது கொஞ்சம் புரிய கஷ்டமாக ரத்தினச் சுருக்கமாக இருக்கும். கடவுள், இயற்கை இவைகளைப் பற்றிய கருத்துக்கள் ஆதாரமாக அவர் சொல்வது பிரபஞ்சத்தின் அத்தனை பொருள் களிலும் அடித்தளத்தில் விரவியிருக்கிறது ஒரு உண்மை (Underlying reality). இதை இவர் எளிமையாக Substance (பொருள்) என்றார். இந்தப் 'பொருள்' என்பது என்ன என்பதைப் பற்றி எட்டுத் தலைமுறை சிந்தனையாளர்கள் இன்றுவரை விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஸ்பினோஸா தின வாழ்க்கைக்குக் கொடுத்த வழிகாட்டிகள் மிக எளிமையானவை.

1. மற்றோர் புரிந்துகொள்ளப் பேசு.

2. உடல் ஆரோக்கியத்துக்குத் தேவைப்படும் இன்பங்களை மட்டும் நாடு.

3. உயிர் வாழத் தேவைப்படும் அளவுக்கு மட்டும் பணம் சம்பாதி.

4. நாம் தேடுவதற்கு ஒத்துப்போகும் பழக்கவழக்கங்களை மட்டும் நாடு.

நான்காவதுதான் சற்றே சிந்திக்க வைப்பது.

ஸ்பினோஸா தான் எழுதினபடி வாழ்ந்தார். அவருடைய பிரபஞ்சம் விரவிய கடவுள் தத்துவம், இந்த நூற்றாண்டில் ஐன்ஸ்டைன் போன்ற மாமேதைகளால் அங்கிகரிக்கப்பட்டது. சுதந்திரமாக சிந்திக்கும் ஒரே ஒரு உரிமைக்காகத் தன் வாழ்நாளைக் கொடுத்தவர் ஸ்பினோஸா!

அவர் இறந்த தினம் பிப்ரவரி 20.

அன்பு காட்டும் தாவரங்கள்!

பங்களூர் சாலைகளில் ஒரு வகை மரம் உள்ளது. ஊதா நிறத்தில் பூக்கும். இந்த மரங்களின் விசேஷம் வருஷம் பூராவும் சும்மா இருந்துவிட்டு ஒரு நாள், ஒரே நாளில் நகரத்தின் அத்தனை மரங்களும் பூக்கும். அந்த மரத்தின் பெயர் ஜாக்கராண்டா. நான் எப்போதும் வியந்ததுண்டு. எப்படி சொல்லி வைத்தாற்போல் அத்தனை மரங்களும் ஒரே நாளில் பூக்கின்றன. அவைகளுக்குள் ஏதாவது பாஷை, செய்திப் பரிமாற்ற முறை இருக்கிறதா? அதைப்போல் மாமரங்கள் சட்டென்று பூத்துக் குலுங்குவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். தாவரங்களுக்குள் 'கம்யூனிகேஷன்' இருக்கிறதோ இல்லையோ ஒருவிதமான காலப் பிரமாணம், பருவகாலப் பிரக்ஞை நிச்சயம் இருக்கத்தான் வேண்டும். நாவல் பழங்களுக்கு நிச்சயம் ஆகஸ்டு மாதம் தெரிந்திருக்கிறது.

தீவிரமான அறிவியல்வாதியான நான் தாவரங்களுக்கு உயிர், மூச்சு சாகசங்கள், எண்ணத் தொடர்புகள் எல்லாம் உண்டு என்பதை நம்பத் தயங்குகிறேன். இருந்தும் பீட்டர் டாம்கின்ஸ், கிறிஸ்டோபர் பர்ட் இருவரும் எழுதிய 'தாவரங்களின் ரகசிய வாழ்க்கை' என்கிற புத்தகம் என்னைச் சிந்திக்க வைத்தது. ஆராய்ச்சியாளர்களும் உயிரியல் நிபுணர்களும் கண்டறிந்த உண்மைகளைக் கோர்வையாக நோக்கும் போது தாவரங்களைப் பற்றி புதிதாக எண்ணத் தோன்றுகிறது.

ஒரு பூவைவிட அற்புதமான விஷயம் உலகில் அதிகம் இல்லை. நம்மைச் சுற்றியுள்ள பசுமையைவிட முக்கியமான விஷயமும் இல்லை. பசுமையான தாவரங்கள் இல்லையேல் நமக்கு உணவு இல்லை. மூச்சும் இல்லை. உலகத்தின் ஒவ்வொரு இலையும் லட்சக்கணக்கான சிறிய துவாரங்கள் மூலம் கார்பன்டை ஆக்சைடு வாங்கிக்கொண்டு பிராண வாயுவை விடுவிக்கின்றன. மொத்தம் சுமார் இரண்டரைக் கோடி சதுர மைல் பரப்பளவு இலைகள் உள்ளன, ஃபோட்டோ சின்தஸிஸ் முறையில் நம் உணவையும் ஆக்ஸிஜனையும் உண்டாக்கு வதற்கு.

வருஷம் நாம் 375 பில்லியன் டன் உணவு உண்கிறோம். (பில்லியன் என்பது நூறு கோடி.) இதில் முக்கால் பாகத்துக்கு மேல் தாவரங் களிலிருந்து கிடைப்பது. காற்றிலிருந்தும் பூமியிலிருந்தும் மாற்றித்

தரும் சாகசம். மிஞ்சியிருக்கும் கால் பாகம் மாமிசம் கூட ஆதாரமாக மாமிசப் பிராணிகள் உண்ணும் தாவரங்களின் ஆதாரம்தான்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ராவும் ஃப்ரான்ஸ் என்கிற உயிரியலாளர் தாவரங்கள் தத்தம் உடல்களைத் தம் இச்சைப்படி நகர்த்தக்கூடியவை. என்ன கொஞ்சம் மெல்ல நகர்த்தும். அதனால் தான் வித்தியாசம் என்கிறார். தாவரங்களின் வேர்கள் பூமிக்குள் தேடுகின்றன. இலைகளும், மலர்களும் மாறுதலுக்கேற்ப திரும்புகின்றன. கொடிகள் சுற்றுச்சூழலைக் கைகளால் துழாவுகின்றன. யார் சொன்னது இலைகளுக்குத் தன்னிச்சை இல்லை என்று!

தாவரத்தின் வேர்கள் ஈரம் தேடும்போது முனிசிபாலிட்டி குழாய்களில்கூட நுழைந்து விடுகின்றன. நாற்பது அடி வரை அல்ஃபால்ஃபா என்னும் தாவரம் நீர் தேடுகிறது. கான்க்ரீட்டைத் துளைக்கிறது. 'ரை' என்கிற ஒருவகைத் தாவரத்தில் வேர்களின் மொத்த நீளத்தைக் கணக்கிட்டால் 380 மைல் வருகிறது. வேர்கள் மூலம் தரையடி ஈரத்தை இலைகளுக்குக் கடத்தி அங்கே ஆவியாகி மழையாகி மறுபடி தரைக்கு வந்து இந்த இயற்கைச் சக்கரம் ஒழுங்காக நடந்து வருகிறது.

ஒரு சூர்யகாந்திச் செடி ஒரு முழு ஆசாமிக்கு உண்டான அளவுக்கு 'வியர்க்கிறது'. உண்ணும் சோறு, பருகும் பானங்கள், மருந்துகள் எல்லாமே ஃபோட்டோசின்தஸிஸ் என்னும் ஆதார தாவர குணத்தின் அடிப்படையில் உருவானதுதான்.

சர்க்கரை, ஸ்டார்ச், கொழுப்பு, எண்ணெய்கள், மெழுகுகள், செலுலோஸ், எல்லாமே தாவரங்களிலிருந்து கிடைப்பவை. நம் வீடுகள், உடைகள், எரிபொருள்கள், நம் காகிதங்கள்... எல்லாம் தாவர இனம்தான்.

மனிதனின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவை நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. குழந்தை பிறந்தால், திருமணத்தின் போது, விழாக்களின்போது மலர்களால் கொண்டாடுகிறோம். வாழைமரம் கட்டுகிறோம். இலையில் சாப்பிடுகிறோம். வீடுகளில் தோட்டம் வைக்கிறோம். அறைகளில் மலர்ச் சாடிகள் வைக்கிறோம். புல் தரைகளில் விளையாடுகிறோம்.

அரிஸ்டாட்டில் 'தாவரங்களுக்கு ஆன்மா இருக்கிறது. ஆனால் உணர்ச்சி இல்லை' என்றார். இடைக்காலங்களில் தாவரங்கள் மனிதர்களைப் போல சலனச் சக்தி இல்லாதவை என்று நம்பினார்கள். டார்வின் இது தப்பு என்றார்.

தாவரங்கள் எப்போதும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இலைகள் திசை திரும்புகின்றன. நடுங்குகின்றன. கொடிகள் கொழுகொம்பு மேடி ஒரு மணி நேரத்தில் ஒரு முழுச் சுற்று சுற்றுவிட்டு ஏதாவது ார்பு கிடைத்துவிட்டால் இருபது செகண்டுகளுக்குள் அதைச் ற்றிக்கொண்டுவிடுகின்றன. அதன்பின் 'கார்க் ஸ்க்ரூ' மாதிரி சுற்றிப் டர்ந்து சீக்கிரமே தனக்கான சக்தி பெறுகிறது.

உயரே படரும் கொடி கிட்டேயிருக்கும் ஆதாரத்தையும் தேடி அலைகிறது. ஆதாரத்தை இடம் மாற்றினால் ஒரு மணி நேரத்தில் கொடியும் திசை மாறுகிறது... தாவரத்தால் அந்த கொழுகொம்பைப் பார்க்க முடிகிறதா? இது எப்படி நிகழ்கிறது.

தாவரங்களுக்கு 'இச்சை' இருக்கிறது என்கிறார் ஃப்ரான்ஸ்.

ஸன்ட்யு என்னும் தாவரம் நிறமையாக ஈ பிடிக்கிறது. சில காளான்களுக்கு வாசனை பார்க்கக்கூடத் தெரியும் என்கிறார்கள். பூக்கள் தம் தேனை நக்க எறும்புகள் படையெடுத்தால் இதழ்கள் மூடிக்கொள்கின்றன. எறும்பு ஏறி வராதபடி, தண்டில் ஈரம் இருந்தால் தான் மறுபடி இதழ்களைத் திறக்கின்றன. சில பூக்கள் மற்ற பூச்சிகளை அண்ட விடாமல் பார்த்துக்கொண்டதற்குப் பரிசாக எறும்புகளுக்குக் கொஞ்சம் தேன் தருகின்றன!

மகரந்தச் சேர்க்கைக்குத் தோதாக சில பூக்கள் வடிவம் மாற்றிக் கொள்கின்றன. தேனீக்கள் வருகைக்காக ஸ்பெஷல் மேக் அப். ஸ்பெஷல் நறுமணம், ஸ்பெஷல் தேன், உள்ளே சறுக்க ஸ்பெஷல் பாதைகள், காரியம் முடிந்ததும் கழற்றிவிட ஸ்பெஷல் கதவுகள்.

'பார்வி ஃப்ளோரஸ்' என்னும் ஆர்க்கிட் வகைத் தாவரம் ஆண் தேனீ வருவதற்கு ஏற்ப தன் இதழ்களைப் பெண் தேனீயின் வடிவில் மாற்றிக்கொள்கிறது.

இதெல்லாம் எப்படி சாத்தியம் என்று கேட்கும்போது தாவரங்களுக்கு மற்ற உயிர்களைப் போல் எல்லா குணங்களும் இருக்கின்றன தாக்கினால் எதிர்ப்பதிலிருந்து அன்பு காட்டினால் நன்றி செலுத்துவது வரை சகல குணங்களும் இருக்கிறது என முடிவு செய்துள்ளார்கள்

நம்ப கஷ்டமாக இருக்கிறதா?

பெண்களின் இரட்டை நிலை

பெண்களும் அறிவியலும் என்கிற கட்டுரை சமீபத்தில் படித்தேன். பெண்களால் சில காரியங்கள் பண்ண முடியாது என்றில்லை. செய்வது கொஞ்சம் கஷ்டம் என்று அவர்கள் பிசியாலஸி, உடல் அமைப்பு, அவர்களுக்கென்றே ஏற்பட்ட சில கஷ்டங்கள். ஹார்மோன் வித்தியாசங்கள் இவைகளை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள். அண்மையில் நடந்த பார்ஸிலோனா ஒலிம்பிக் பந்தயத்தில் பெண்களின் ஓட்ட நேரங்களும் ஆண்களின் நேரங்களும் வித்தியாசப் பட்டதை நீங்கள் கவனித்திருக்கலாம். கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ் போன்ற ஆட்டங்களில் ஆண்களுக்கு ஈடாக அவர்களால் ஆட முடியவில்லை. இதனால் பெண்கள் ஆண்களுக்குக் குறைந்தவர்கள் என்று சொல்ல வரவில்லை. இயற்கை அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வேலை இனவிருத்தி, இதற்கான சில ஆயத்தங்கள் செய்திருக்கிறது. அவர்கள் சமூக மாறுதல்களால் இந்த வேலையின் பிரதானத்தைக் குறைத்துவிட்டிருக்கிறார்கள். இயற்கை என்னவோ அவர்கள் இன்னும் அந்தக் காரியத்துக்குத்தான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது. இதனால்தான் பிரச்னைகள். பெண்கள் சில விஷயங்களில் ஆண்களுக்கு ஈடாக இருப்பதையும் கவனிக்க முடிகிறது. எங்கள் கணிப்பொறி இயலிலும் எலக்ட்ரானிக்ஸ் நுட்ப இயலிலும் பெண்கள் ஆண்களுக்கு ஈடாக இருக்கிறார்கள். சில சமயம் ஆண்களையும் மிஞ்சிவிடுகிறார்கள். தாம் ஆண்களுக்குக் குறைவல்ல என்று நிரூபிக்கும் பரபரப்பும் ஆர்வமும் இருக்கிறது இவர்களிடம். என்னிடம் பணிபுரியும் பல பெண் இன்ஜினியர்கள் நேரத்துக்கு வருகிறார்கள். நேர்த்தியாக அதிகம் அரட்டை அடிக்காமல் வேலை செய்கிறார்கள். குறித்த கெடுவுக்குள் முடிக்கிறார்கள். பின் என்ன வித்தியாசம். நான் பார்த்தவரை எளிதில் உணர்ச்சி வசப்படுவது ஒரே ஒரு வித்தியாசம். ஒரு ஆண் ஒரு பெண் இரண்டு இன்ஜினியர்களுக்குள் ஒரு விஷயத்தைப் பற்றி கருத்து வேற்றுமை ஏற்பட்டு அதைத் தீர்த்து வைக்கும்போது பெண் இன்ஜினியர் சட்டென்று கண்ணீர் விட்டு விடுவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அவர்களிடம் 'லாஜிக்' பேசி ஒரு காரியத்தை விளக்குவதில் சிரமம் இருக்கிறது.

அமெரிக்காவில் பல நிறுவனங்களில் பெண்களுக்கு ஆண்களை விட சம்பளம் குறைவு. பெண்கள் ஒரு லெவலுக்கு மேல் பதவி உயர்வு பெற முடியாது. அறிவியல் ஆராய்ச்சி செய்வதற்கு அவர்களுக்கு வழிகாட்டி கிடைப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. நியூரோ சைன்ஸ் போன்ற இயல்களில் பெண்கள் வெளிப்படையாக நிராகரிக்கப்படா விட்டாலும் மறைமுகமாக அவர்களுக்கு நிறைய முட்டுக்கட்டை யாகவே பெண்கள் துக்கப்படுகிறார்கள். வேதியியலில் (கெமிஸ்ட்ரி) பெண்களால் ஒரு அளவுக்கு முன்னேற முடிகிறது. டைப் அடிப்பது, ஆபீசில் உதவுவது போன்ற அலங்கார உத்தியோகங்களில்தான் பெண்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறார்கள். ஜப்பானில் லிஃப்ட்டு களை இயக்குவதற்கும் ஓட்டல் வாசல்களில் சிரிப்பதற்கும் பெண்கள்தான்.

டில்லியில் கிழவர்கள் எல்லாம் சேர்ந்து மகாநாடு நடத்தும்போது அவர்களை வரவேற்கவும் மார்பில் ப்ரூச் குத்திவிடவும் பெண்கள் பயன்படுகிறார்கள். எல்லா முக்கியமான ஒப்பந்தங்களிலும் இக் கிழவர்கள் கையெழுத்திடும்போது பின்னால் கூந்தலை அலைய விட்டுக்கொண்டு ஒரு பெண் இருக்கவே இருக்கிறாள். டெலிபோன், பேச ஏர்ஹோஸ்டஸ், நர்சுகள், இவர்கள் எல்லோரும் பெண்கள். ஒரு பெண் வெல்டிங் செட் வைத்துக்கொண்டு பற்ற வைத்தாலோ டிராக்டர் ஓட்டினாலோ கொஞ்சம் வினோதமாக இருக்கிறது. பொதுவாக ஆண் பெண் சமத்துவம் பற்றி எல்லாரும் பேசினோம். ஆணும் பெண்ணும் சமம்தான். ஆனால் ஆண் கொஞ்சம் அதிக சமம் என்கிற கருத்துத்தான் உலகம் முழுவதும் அரசாள்கிறது! பல நாடுகளில் பெண்களுக்கு ஓட்டுரிமை இல்லை. முகத்தைக் காட்டும் உரிமை இல்லை. கை குலுக்கும்போதோ சல்யூட் அடிக்கும் போதோ பழகும்போதோ அவர்கள் இயக்கத்தில் சங்கடம் தெரிகிறது. சினிமாக்களில் பெண்கள் எப்போதும் லேசாக அவமானப்படுத்தப் படுகிறார்கள். ஓட்டல்களில் ஒரு பெண் நடனமாட பல ஆண்கள் அவள் அங்கங்களை பார்வையால் வருடுவது நகர நாகரிகத்தின் அம்சமாகிவிட்டது.

பெண்கள் சமைப்பது யதார்த்தம்.

ஆண்கள் சமைப்பது ஹாஸ்யம்.

பஸ்ஸைப் பிடிக்க அவர்களால் ஓட முடியாது. சுதந்திரமாகப் பாட முடியாது. இஷ்டப்பட்ட பொருளை நாட முடியாது.

பெண்களை ஆண்கள் நடத்தும் ஒரு இரட்டை நிலை... இது மாற பெண்கள் படிக்க வேண்டும்.

தவளைக் குஞ்சுகளின் தியாகம்!

மனித உடலில் மொத்தம் ஆயிரம் பில்லியன் உயிரணுக்கள் 'செல்'கள் உள்ளன. ஒரு பில்லியன் என்பது நூறு கோடி! இவைகளில் சில சருமம், சில மூளை, சில ரத்தம், சில ரோமம் என்று எங்கும் எதற்கும் செல்கள். இவைகளுக்கு என்ன என்ன வேலை என்பது நிர்மானமாக அறுதியிடப்பட்டுள்ளது. உரோமத்தைச் சேர்ந்த உயிரணு இரட்டிப்பாகும்போது அது மற்றொரு ரோம செல்லாகத்தான் மாறுகிறது. இதில் ஆச்சரியம் இத்தனை கோடானுகோடி உயிர் அணுக்களும் ஆரம்பத்தில் ஒரே ஒரு கருவுற்ற முட்டையிலிருந்து புறப்பட்டது. அதனுள் இருக்கும் 'ஜீன்'கள் ஒன்றே. அதன் அமைப்பில் உள்ள செய்தியில் எங்கே நீ கண்ணாக மாற வேண்டும். நீ காதாக, நீ தலை மயிராக என்று சில விவரம் பொதிந்திருக்கிறது. இவ்வாறு ஆரம்பித்த முட்டை ஒரு வாழ்நாளில் ஐம்பதாயிரம் கோடி தடவை பெரிதாகிறது. இருந்தும் இந்தச் செல்கள் அனைத்துக்கும் ஒரு பொதுவான குறிக்கோள் இருக்கிறது. அது ஒரு ஆரோக்கியமான முழு மனிதனை உயிருடன் வைத்திருப்பது. இந்த செல்கள் தினம் தினம் தம்மைப் புதுப்பித்துக் கொள்கின்றன. ஒவ்வொன்றும் தம் தம் காரியத்தைப் பார்த்துக்கொண்டு தினம் புதிதாகப் பிறந்தாலும் ஆதார டிஸைன் மாறாமல், நான் ஏன் தலைமயிர் செல்லாக இருக்க வேண்டும்? நகமாகவோ, சருமமாகவோ இருக்கக் கூடாதா போன்ற கேள்வியெல்லாம் கேட்காமல் ரோமத்தின் மகன் ரோமன்! என்கிற விதியை பரிபூர்ணமாக ஒப்புக்கொண்டிருப்பதால் நாம் பிறந்ததிலிருந்து சிறந்து வளர்கிறோம். இந்த செல்களில் பதிந்துள்ள ஜெனட்டிக் செய்திகள் அவ்வப்போது சின்னச் சின்ன மாறுதல்கள் நிகழும்போதோ அல்லது ம்யுட்டேஷன் என்று அவை வேறு செல்லாகும்போதோதான் குழப்பம் நிகழ்கிறது. கான்ஸர் போன்ற வியாதிகள் செய்தி தடுமாறிவிட்ட செல்களினால் ஏற்பட்ட குழப்பம்.

செல்கள் தம் அண்டை செல்களை அடையாளம் கண்டுகொள்வது மற்றொரு முக்கிய குணம். 'இம்யூன் சிஸ்டம்' என்கிற இயக்கம். நம் உடலில் பரிச்சயமில்லாத செல்லில் உள்ளே நுழைந்துவிடும்போது அவைகளை எதிர்த்து விரட்டுவதும் போராடுவதும்தான் நம் ஜுரங்கள்.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில் அன்னியன் வந்து ண்களை நீந்து" என்று பாரதி சொன்னது இம்யுனாலஜிக்கு மிகப்பொருத்தம். ஆயிரம் வகை 'நம்மாத்து' செல்களை நாம் வாங்கிக்கொள்வோம். வெளியிலிருந்து வந்தால் ரகளைதான். இதனால்தான் மாற்று சிறுநீரகம், மாற்று இதயம் இவைகளைப் பொருத்துவதில் இந்த இம்யூன் சிஸ்டத்தை ஏமாற்ற வேண்டி வருகிறது. தப்பான க்ரூப் ரத்தம் கொடுத்தால் ஆசாமி காலியாகிவிடுவதும் இதனால்தான். 'எயிட்ஸ்' போன்ற வியாதிகள், நம்மை எதிராளிகளிடமிருந்து காப்பாற்றும் இம்யூன் சிஸ்டத்தில் கோளாறு ஏற்பட்டுவிடுவதால் வருகிறது.

நம் செல்கள் உயிரணுக்கள் எப்படி இது நம்மவன், இது வேற்று ஜாதி என்று தீர்மானிக்கிறது என்பது இயற்கையின் அதிசயங்களில் ஒன்று. இதை யாரும் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

மற்றொரு அதிசயம். ஒரே ஒரு முறை மட்டும் இந்த இம்யூன் சிஸ்டம் விதிவிலக்கு கொள்கிறது. அது கர்ப்பமாகும்போது, ஒரு தாயின் வயிற்றில் வளரும் கருவில் பாதி தாயினுடைய ஜீன்கள். பாதி வேற்று மனிதன் (தந்தை) உடையது. இந்த சமயத்தில் மட்டும் இம்யூன் கேஸில் எப்படி விதிவிலக்கு என்பது உயிர் வாழ்வின் மற்றொரு அதிசயம்.

இதைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய எலிகளை பயன்படுத்தினார்கள். சிஸேரியன் பண்ணி எடுக்கப்பட்ட எலிக்குஞ்சுகள் பிரிக்கப்பட்டாலும் தத்தம் தாய் எலிகளை சுலபமாக நாடுகின்றன. இந்தப் பழக்கம் அதற்கு வயிற்றுக்குள் இருக்கும்போதுதான் கற்றுத் தரப்படுகிறது என்றும் கண்டுபிடித்தார்கள்.

இதைவிட ஆச்சரியம் தவளைகள் டாட்போல் (Tadpole) என்று சொல்லப்படும் 'தலைப் பிரட்டைகள்' தவளை முட்டைகளிலிருந்து திணறிக்கொண்டு வெளிவரும் சின்னச் சின்ன தவளைக் குஞ்சுகள். அவைகள் முட்டையிலிருந்து வெளிவரும்போது தாய்த் தவளைகள் வேறு வழிச் சென்றுவிடுகின்றன. இந்த மாதிரிப் பிரிந்த தலைப் பிரட்டைகளை ஒரு தாய் மக்களை நீல நிறத்திலும் மற்றொரு தாய் மக்களை சிவப்பிலும் கலர் கொடுத்து இரண்டையும் இரண்டறக் கலந்து ஒரு குட்டையில் விட்டார்கள். சில நிமிஷங்களில் அவை தத்தம் சகோதரர்களுடன் சேர்ந்து தனித்தனி குழுக்களாகப் பிரிந்து விட்டனவாம்.

தவளைக் குஞ்சுகளுக்கு ஒருவிதமான பொதுவாக ஒரு 'குழு மணம்' இருக்கிறதாம். அவை முட்டையிலிருந்து வெளிவருகையில் ஜவ்வு போன்ற வஸ்துவிலிருந்து இந்த மணத்தை அறிகிறதாம். இதனால் சகோதரக் குஞ்சுகளுடன் ஒன்றுசேர்ந்துகொள்ள முடிகிறது. இது ஒரு ஆச்சரியம் என்றால் மற்றொரு ஆச்சரியம் தவளைக் குஞ்சுகளின் தியாகம்! பஞ்ச காலத்தில் அதிகம் உணவு கிடைக்காத தருணத்தில் கொஞ்சம் 'வீக்காக' இருக்கும் தவளைக் குஞ்சுகள் மற்ற தம் பெரிய அண்ணன்களுக்கென்று ஒரு தனிப்பட்ட உணவு

பதார்த்தத்தை வெளிக்கொண்டுவந்துவிட்டு அந்த அசதியில் இறந்துபோய்விடுவாம். பலசாலிக் குஞ்சுகள் அந்த சமாசாரத்தை உண்டு ஜீவித்திருக்குமாம்.

தவளைகள் மட்டும் ஆச்சரியம் இல்லை. மனிதர்களிடமும் இம்மாதிரி 'ரசாயன நட்பு' இருக்கிறது. 1971-ல் மார்த்தா மக்லின்டாக் என்கிற சிகாகோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்தது மிக்க ஆச்சரியமானது. ஒரே அறையில் தங்கும் பெண்கள் ஒரே சமயத்தில் மாதவிலக்காவதைக் கண்டு அதை ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார். அந்த ஆராய்ச்சிக் குறிப்பை முழுவதும் தருவதற்கில்லை.

இயற்கையில் உள்ள ஆச்சரியங்கள் அளவில்லாதவை.

கடவுள் என்னும் அதிகாரி!

நம்ப முடியாத ஒன்றை ஒருவர் பிடிவாதமாக நம்பினால் அவரை என்ன சொல்வது? ஆங்கிலத்தில் அவர்களை க்ராங்க்ஸ் என்கின்றனர். தமிழில் அவர்களைக் கிறுக்கர்கள் என்று சொல்வதை விட பிடிவாதிகள் என்று சொல்வது நம் பண்பாட்டுக்கு நல்லது. நம் எல்லோருக்கும் ஏதாவது ஒன்றில் நம்பிக்கை இருக்கிறது. பகுத்தறிவுக்கும் அறிவியலுக்கும் ஒத்துவராத ஏதாவது ஒன்று.

இன்று பலர் 'ஈஎஸ்பி' புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வை நம்புகிறார்கள். அமெரிக்காவில் இதற்கு பல சங்கங்கள் உள்ளன. ஈஎஸ்பி போல 'பாரா நார்மல்' என்னும் 'சுபாவத்துக்கு அப்பாற்பட்ட' சமாசாரங்கள் பல உள்ளன. 'PSYCHO KINESISS' (சைக்கோ கினெஸிஸ்) என்று மனத்தில் ஒரு நிகழ்ச்சி நிகழ வேண்டும் என்று நினைத்தே அதை நடத்திக் காட்டுவது (தூரத்தில் உள்ள ஸ்பூனை வளைத்தல், கடிகாரத்தை நிற்க வைத்தல்) இதெல்லாமே பாரா நார்மல். இதை யெல்லாம் உற்சாகமாக நம்புபவர்களும் அதை நடத்திக் காட்டி நிரூபிப்பவர்களும் இருக்கிறார்கள். யூரி கெல்லர் என்பவர் இதில் பிரசித்தம்.

இந்த மாதிரி 'PSYCHIC' சைக்கிக் ஆராய்ச்சியில் ஜனங்கள் ஈடுபடுவதற்கு ஒரு வசிகரமான காரணம் சொல்லப்படுகிறது. அறிவி யலையும் மதத்தையும் இணைக்கும் முயற்சிகள்தான் இவை என்று. பிரபஞ்சத்தில் சிருஷ்டி, காரணம், இவைகளுக்கெல்லாம் மதம், கடவுள், அதிசயச் செயல், அற்புதங்கள் என்று விளக்கம் கூறி வந்த மனித இனத்துக்கு அறிவியல் ஒரு அதிர்ச்சி தந்தது. புதிய இயற்பியலும் வேதியியலும் அதிசயச் செயல்களுக்கெல்லாம் தேவை இன்றி பிரபஞ்சத்தையும் மனிதப் பிறப்பையும் விளக்கினதில் மனிதனின் முக்கியத்துவம் குறைந்து அவனுக்கு இந்த பிரபஞ்சத்தில் தனிப்பட்ட ஸ்தானம் ஏதும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அதனால் தான் இயற்பியல் வேதியியல், உயிரியல் விதிகளுக்கு அப்பாற்பட்ட ஏதாவது ஒன்று கிடைக்குமா என்கிற முயற்சியில் 'பாரா நார்மல்' சமாச்சாரங்களை நாடுகிறோம். அறிவியலின் ஆணவம் நிறைந்த கடவுளில்லாத நிச்சயத் தன்மையை பலர் விரும்புவதில்லை. இன்றும்

என்னை சந்திக்கும் கேட்டு எழுதுபவர்கள் பலர். 'இந்த மாதிரி ஒரு அதிசயம் நடந்ததே இதற்கு உங்கள் அறிவியல் என்ன சொல்கிறது?' என்றுதான் கேட்கிறார்கள்.

யுரி கெல்லர் போன்றவர்களின் விந்தைச் செயல்கள் அனைத்தும் மோசடி நிபுணர்கள் செய்து காட்டி எல்லாமே ஏமாற்று என்று நிரூபித்துவிட்டாலும், இன்றும் நம்மிடையே யுரி கெல்லர்களும் சாயிபாபாக்களும் மாந்திரீகர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். நிறையப் பணமும் சம்பாதிக்கிறார்கள். கெல்லர் தூரத்திலிருந்து ஒரு இடத்தில் தங்கம் கிடைக்குமா என்று சில வேளை 'மேப்'பைப் பார்த்தே சொல்கிறாராம்! அதை நம்பி அவருக்கு லட்சக்கணக்காக டாலர் கொடுக்கிறவர்களும் இருக்கிறார்களாம்.

எல்லோருக்கும் எதாவது ஒரு அதிகாரி அல்லது அதிகாரத்தின் தேவை இருக்கிறது! இந்தக் கருத்து நமக்கு விநோதமாகப் படலாம். ஆனால் உண்மை இதுதான். யாரையாவது அது ஒரு மடாதிபதியோ, முதலமைச்சரோ, சூப்பர் ஸ்டாரோ இல்லை கிரிக்கெட் வீரரோ யாரையாவது பூஜிக்க விரும்புகிறோம்... இதற்கு அடிப்படைக் காரணம் சில நிர்மாணங்களை, முடிவுகளை நாமே எடுக்க விரும்பாமல் பிறர் சொல்லிக் கேட்கத்தான் விரும்புகிறோம். நிர்மாணத்தின் சுமை குறைகிறது. ஸ்ரீதேவி லக்ஸ் உபயோகிக்கிறார் என்பதால் நாமும் லக்ஸ் பயன்படுத்துவதன் ஆதார காரணம், இருக்கிற அம்பது சோப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் நிர்மாணத்தின் சங்கடத்தை தவிர்ப்பதற்கே! அதுபோல்தான் நமக்கு வாழ்வின் பல கட்டங்களிலும் 'அதிகாரிகள்' தேவைப்படுகிறார்கள்.

சில விஷயங்களில் கணவன் மனைவி சொல் கேட்டு உடனே உடன்படுவதும் இந்த நிர்மாணச் சுமையிலிருந்து விடுபடத்தான் என்றும் சொல்லலாம். 'அதிகாரி'கள் தேவையே!

இந்த அதிகாரிகளுக்கெல்லாம் அதிகாரி கடவுள். கடவுளின் அதிகாரத்தில் நம்பிக்கை நமக்கு பல சந்தர்ப்பங்களில் தேவையாக இருக்கிறது. அதுமட்டும் இன்றி மற்ற பேர்களையும் நம்ப வைக்க வேண்டிய விருப்பமும் ஏற்படுகிறது. 'நான் நம்புவதை நீயும் நம்பு' என்கிற வற்புறுத்தல்தான் நம் மத சம்பந்தமான சச்சரவுகளுக்கெல்லாம் ஆதாரம்.

ஆரம்ப நாட்களில் நம் வேத புராணங்கள்தாம். அதில் சொல்லப் பட்ட விஷயங்கள்தாம் உண்மை என்று அனைவரும் நம்பினார்கள். பாற்கடல் கடைந்து அதில் தேவாசுரர்கள் அமுதமெடுத்தார்கள். பிரம்மா பற்பல ஜந்துக்களை உண்டாக்கினார் போன்ற நம்பிக்கை யெல்லாம் முதலில் உண்மையென்றே நம்பப்பட்டது. பின் அறிவியல் சிருஷ்டி முதலியவற்றை வேறு விதமாக ஆணித்தரமாக விளக்க அறிவியலுக்கும் மத நம்பிக்கைகளுக்கும் முரண்பாடு ஏற்பட்டது. இந்த முரண்பாட்டை இன்றைய தினங்களில் பலர் வேறு விதமாக சமாளிக்கிறார்கள். வேத உபநிஷத்துக்களிலும் புராணங்களிலும்

சொல்லப்படுவதும் அறிவியலே. அவை ஒரு விதமான உருவகங்கள் ALLEGORY– பிரம்மாவின் ஒரு நாள் நூறு வருஷம் என்றால் அது 'ரிலேட்டிவிட்டி', ஊழி என்பதுதான் BIG BANG (மகா வெடி.) என்று இரண்டையும் சமரசம் பண்ணி வைக்க முற்படுகிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் அறிவியல் உண்மைகளை பொய் என்று நிரூபிக்கவும் முயற்சிக்கிறார்கள். இது தேவையில்லை. அறிவியல் முறையில் ஒரு விஷயம் பொய் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் அதற்கு மற்றொரு அறிவியல் விளக்கம் தேடுவார்கள்... கடவுளை அல்லது நிரூபிக்க முடியாத எதையும் நாட மாட்டார்கள்

கடவுள் நம்பிக்கை உள்ள அனைவருக்கும் உள்ளுக்குள் அந்தரங்கத் தின் அந்தரங்கத்தில் ஒரே ஒரு சந்தேகம் இருப்பது மறுக்க முடியாத உண்மை. இத்தனை நாள் இத்தனை பேர் பேசியும், பாடியும், புகழ்ந்தும் அவரை இன்னும் நாம் பார்க்கவில்லையே! இரண்டு பேராவது சேர்ந்தாற்போல் பார்க்கும்படி அவர் இன்னும் தோன்ற வில்லையே! இதெல்லாம் நிஜம்தானா?

காரணம் கடவுளைப் பற்றியும் சொர்க்கத்தைப் பற்றியும் நம்முடைய எண்ணங்கள் அனைத்தும் மனித உணர்ச்சிகள், வடிவங்கள் சம்பந்தப் பட்டவை... ஹிந்துக்களின் சொர்க்கம் என்பது சதா பாட்டும் பூஜையுமாக இருப்பது. நரகம் என்பது எண்ணைக் கொப்பரை என்று மனித உணர்ச்சிகளின் பயங்களின் எதிர்நீட்டல். இவைகளுக்கு அப்பாற்பட்டு இருக்கும் கடவுளை ஐன்ஸ்டைன் போன்ற மேதைகளால் தான் சிந்தித்துப் பார்க்க முடியும்.

'உளன் எனில் உளன் அவன் உருவம். இவ் உருவுகள் உளன் எலன் எனில் அலன்' என்று சொன்ன நம்மாழ்வார் இன்னும் மீண்டும் பிறக்கவில்லை.

காலை எழுந்தவுடன் திருட்டு...

சங்க காலத்திலிருந்தே வழிப்பறி இருந்திருக்கிறது. நம் புராண இதிகாசங்களிலும் நாட்டுப்புறப் பாடல்களிலும் கதைகளிலும் திருட்டு என்பது பிரதானமாக இருந்து வந்திருக்கிறது.

கள்ளர் பயம், கன்னம் வைத்தல் போன்ற திருட்டு சம்பந்தமான விஷயங்கள் மலிந்திருக்கின்றன. சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளும் ஒருத்தரிடம் மற்றவரைவிட அதிகம் செல்வம் இருக்கும் வரை திருட்டும் இருந்து வருகிறது. சில சமயம் திருடர்கள் அங்கீகரிக்கப்பட்டுகிறார்கள். அவர்கள் ஹீரோக்களாகிறார்கள் (ராபின் ஹூட், சதாரம்). சில சமயம் கடவுளே திருடுகிறார். வெண்ணெய் முதலான வஸ்துக்கள்.

ஆரம்ப காலத்தில் நகைகளைத் திருடி வந்தார்கள். திருமங்கை ஆழ்வார் கலியன் என்ற பெயரில் மஹாவிஷ்ணுவையே வழிமறித்து அவர் மனைவியின் மெட்டியைக் கழற்ற முயற்சித்து ஞானம் பெற்றார். கள்வனின் காதலி, மலைக்கள்ளன் போன்ற நாவல்கள் நேசித்து வாசிக்கப்படுகின்றன. பாங்க் திருட்டு, நகைத் திருட்டு இவைகளை நவீன மோஸ்தரில் விஸ்தரிக்கும் துப்பறியும் நாவல்கள் நிறைய விலை போகின்றன. திருட்டு பலதரப்பட்டது. வேலைக்காரி அலமாரியில் வைத்திருக்கும் இரண்டு ரூபாய் நோட்டைத் திருடுவதிலிருந்து ஹர்ஷத் மேத்தா இரண்டாயிரம் கோடி திருடுவது என்கிறோம்.

காதலைக்கூட இதயத் திருட்டு என்கிறோம்.

மனித நாகரிகம் முதிர முதிர திருட்டின் முறைகளும் திருடும் பொருள்களும் மாறிக்கொண்டு வருகின்றன திருடர்கள் ஹை–டெக் சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். வாக்கி–டாக்கி, அதிவேகப் படகுகள் என்று திருடும் பொருள்கள், ஸ்டெயின்லஸ் ஸ்டீல், காப்பர் போன்ற உலோகங்களிலிருந்து யுரேனியம், தோரியம் என்று பலவகையில் பரவியுள்ளன.

ட்ரான்சிஸ்டர்களிலிருந்து பிகாஸோவின் ஓவியங்கள் வரை திருடப்படுகின்றன. பொது இடங்களில் சங்கிலி போட்டு வைக்காதது எதுவும் திருடப்படுகின்றன. ஈயக் குழாய்கள், பீங்கான் வஸ்துக்கள், குடைகள், முனிசிபல் பல்புகள், டயர்கள், உதிரிபாகங்கள், முழு

மோட்டார்கள் அதனுள் இருக்கும் ஸ்டீரியோ, ரேடியாக்கள், விடியோக்கள், விடியோ டேப்புக்கள், பூந்தொட்டிகள், சென்சல்கள், ஏன் சரளைக் கற்கள்கூடத் திருடு போகின்றன.

எங்கள் காலனியில் மழையடித்து ஒரு மரம் விழுந்தால் அடுத்த பதினைந்து நிமிஷங்களில் ஒரு கள்ளி இல்லாமல் காணாமற் போய்விடும். சைக்கிள்களைப் பூட்டி வைத்தால் போதாது. பெண்களின் காதணிகள் காதுடன் திருட்டுப் போகலாம்.

திருட்டுப் போகாதது யோசித்துப்பார்த்தால் எது என்று தெரிய வில்லை.

திருட்டின் நவீனமும் நாளுக்கும் அதிகமாகி வருகிறது. ரூபாய் நோட்டு, பைசா திருடு போகிறது என்று கிரெடிட் கார்டு, செக் கொண்டுவந்தார்கள். திருட்டு கிரெடிட் கார்டு தயாரிப்பதிலும் செக் அச்சடித்து போலிக் கையெழுத்து போடுவதற்கும் மாறியது. அதனால் கிரெடிட் கார்டுகளில் ஹோலோகிராம் (HOLOGRAM) முறையில் அச்சடிக்கத் துவங்கி போலியை ஒழித்தார்கள். இப்போது திருட்டு அந்த கிரெடிட் கார்டை அனுமதிக்கும் கணிப்பொறி இயந்திரத்துக்கு மாறிவிட்டது. இன்று கணிப்பொறியின் ஆணைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தும் சாகசம் தெரிந்தால் உலகையே வெல்லலாம். இஷ்டப்பட்ட இடத்துக்குப் பயணம் செய்யலாம். (ஏர்லைன்ஸ் கம்ப்யூட்டர்) இஷ்டப்பட்ட ஹோட்டல்களில் இருந்து இஷ்டப்பட்ட பொருள்களை வாங்கலாம். (கிரெடிட் கார்டு, வங்கி கணிப்பொறிகளை அணுகி) இதற்காக வங்கிகள் பணம் மாற்றிக்கொள்ளும் முறைகளில் சில ரகசிய சங்கேதங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இவைகளையும் உடைப்பதற்கு ஒரு கோஷ்டி இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு வங்கியின் கிளை மிக மிக சுறுசுறுப்பாக ஒரு மார்கெட் பகுதியில் இருந்தது. அதில் சரக்கு எடுக்க தினம் தினம் லட்சக்கணக்கில் பணம் புரளும். அது ஒல்சேல் மார்க்கெட்; சரக்கு எடுத்த சில மணி நேரங்களில் போட்ட பணத்தை எடுத்துவிடலாம். இந்தச் சூழ்நிலையில் அந்த வங்கியில் ஒரு வினோதமான திருட்டு நடந்தது.

வங்கி காலை சில மணி நேரங்களும் மாலை சில மணி நேரங்களும் இயங்கும். இடையே உள்ள பிற்பகல் நேரத்தில் லட்சக்கணக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்துக் கொடுக்கப்பட்டு சாயங்காலத்துக்குள் அது மீட்கப்பட்டுவிடும். இதனால் வங்கியின் அதிகாரிகளுக்கு கமிஷன் உண்டு. வங்கியின் புத்தகங்களில் வரவு வைப்பதிலும் தினம் முடிவில் ரொக்கம் எதிலும் எந்தத் தவறும் இருக்காது. சில மணிநேரங்கள் பணம் காணாமற்போகும்.

இந்தத் திருட்டு வருஷக்கணக்காக நடந்துகொண்டிருந்தது. எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது எனில் கமிஷனைப் பிரித்துக் கொடுப்பதில் சில்லறைத் தகராறு ஏற்பட்டு ஒரு சிப்பந்தி காட்டிக் கொடுத்துவிட்டார். தற்போது அந்த மானேஜர் பதவி இழந்து சிட்டுக் கம்பெனி ஒன்று துவங்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்.

எல்லாத் திருட்டுக்களும், ஆம் எல்லாத் திருட்டுக்களும் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. சில உடனே. சில காலந்தாழ்த்தி கண்டு பிடிக்கப்படுவது என்னவோ சாத்தியம். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது நிச்சயம். ஆனால் கண்டுபிடிக்கப்படும் சமயம், சில சமயம் தண்டனை என்பதற்கு அர்த்தமில்லாமல் போய்விடுகிறது. இது திருட்டு மட்டும் இல்லை. எல்லா குற்றங் களுக்குமே செல்லும். கென்னடி., ராஜீவ் காந்தி போன்றவர்களின் கொலை வழக்கில் தண்டனை என்பது யாருக்குத் தர முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

மனித சரித்திரமே ஒருவனுக்கு உரியதை மற்றவன் பறிப்பதால் தான் நிகழ்வது. பறிக்கும் வஸ்துக்கள்தான் வேறுபடுகின்றன.

நிலம், பணம், மனைவி, புகழ், சொத்து, இவை அனைத்தும் ஒருவரிடமிருந்து மற்றவரால் நினம் நினம் பறிக்கப்படுகின்றன.

குற்றத்தின் ஆதாரமே இதுதான். திருட்டு இல்லையேல் சரித்திரமே இல்லை என்று தோன்றுகிறது. எங்கும் திருட்டு எதிலும் திருட்டு.

காலை எழுந்த உடன் திருட்டு பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல திருட்டு
மாலை முழுதும் திருட்டு என்று
வழக்கப்படுத்திக்கொண்டுவிட்டோம்.

திருட்டைத் தவிர்க்க கோடிக்கணக்கில் செலவிடுகிறோம்.

போலீஸ் அதிகாரிகள் வீட்டுத் திருட்டைத் தவிர்க்க,

ராணுவ அதிகாரிகள் நாட்டுத் திருட்டை தவிர்க்க,

பூட்டுகள், சாவிகள், கூர்க்காக்கள், நவீன எச்சரிக்கைச் சாதனங்கள், சங்கிலிகள், நாய்கள், கேட்டுகள், சுவர்கள், முள்வேலிகள் இவை அனைத்தும் எதற்காக?

ஏன் கடவுளையே பூட்டித்தான் வைக்க வேண்டியிருக்கிறது.

அரசோடு ஒத்துப்போகாதவர்

சில பெயர்களுடன் சில விஷயங்கள் எப்போதும் சேர்த்துச் சொல்லப் படுவது வழக்கமே. சீனிவாச ராமானுஜம் என்றால் கணிதம் என்பது மட்டும்தான் ஞாபகம் வருகிறது. அவர் சென்னை போர்ட் டிரஸ்டில் க்ளார்க்காக இருந்தார் என்பது பலருக்கு தெரிந்திருக்காது. அதேபோல ஆர்க்கிமிடிஸ் என்றதும் உலகில் பெரும்பாலோர் அவர் குளித்துக் கொண்டிருந்தபோது திடீர் என்று யுரேக்கா யுரேக்கா என்று ஏதோ தோன்றியவுடன் அம்மணமாகத் தெருக்களில் ஓடியதைத்தான் சொல்கிறார்கள். ஆனால் பலருக்கு மேல் விவரம் தெரியாது. அவர் ஓடியது எதற்காக என்று சிலர்தான் சொல்வார்கள். அரசனின் கிரீடத்தில் பொன்னின் சுத்தத்தை கிரீடத்தைக் கெடுக்காமல் கண்டுபிடிக்க முடியுமா என்கிற பிரச்சினைக்கு அவர், 'பாயன்ஸி' என்னும் மிதப்பு விதியைக் கண்டுபிடித்ததுதான் காரணம். அவர் அவ்வாறு ஓடிய ஊர் சைராக்யுஸ் என்னும் ஸிஸிலிய நகரம். காலம் ஏறக்குறைய 250 கி.மு. இந்த விவரங்கள் பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆர்க்கிமிடிஸ் என்றால் யுரேக்கா, அம்மணம்! ஆர்க்கிமிடிஸ் பிறந்தது கி.மு 287ல். அவர் தந்தை வானியல் நிபுணர். படித்தது அலெக்சாண்ட்ரியாவில்தான் என்றாலும் சொந்த ஊரான சைராக்யுஸில்தான் ஆர்க்கிமிடிஸ் வாழ்ந்தார். அந்த ஊர் மன்னனுக்கு உறவு என்றும் சொல்கிறார்கள். அதனால் தன்னிச்சையாக இஷ்டப் பட்டதை அவரால் செய்ய முடிந்தது. நியூட்டன் பிறக்கும் வரை ஆர்க்கிமிடிஸைப் புராதன உலகின் மிகப் பெரிய கணித விஞ்ஞானி என்று சொல்வர். ஆர்க்கிமிடிஸ் நெம்புகோல் தத்துவத்தை முதலில் கண்டுபிடித்தார். ராஜாவின் கிரீடத்துக்காக மிதப்பு விதிகளைக் கண்டுபிடித்தபோதுதான் அந்த பிரசித்தி பெற்ற ஓட்டம். 'யுரேக்கா' என்பதன் அர்த்தம் நான் கண்டுகொண்டேன் அல்லது எனக்குக் கிடைத்துவிட்டது.

ஆர்க்கிமிடிஸைப் பற்றி சுவாரஸ்யமான கதைகள் அவர் வாழ்வின் பிற்காலத்தில் சொல்லப்படுகின்றன. அவர் வாழ்ந்த சைராக்யுஸ் நகரம் ரோமானியர்களின் ஆதிக்கத்திலிருந்து தனிப்பட்டு சுதந்திரம் அறிவித்துவிட ரோமானியர்கள் அந்த நகரை முற்றுகையிட்டனர். ஆர்க்கிமிடிஸ் மட்டுமே ஒரு மனித ராணுவமாக, அவர்களை உள்ளே விடாமல் தடுக்க பற்பல ஆயுதங்களைக் கண்டுபிடித்தார்.

பெரிய கற்களை எறியும் ஆயுதங்களும், எதிரிகளை தகிக்க மிகப்பெரிய லென்ஸ், அவர்கள் கப்பல்களைக் கவிழ்க்க பெரிய க்ரேன் போன்ற சாதனங்கள் எல்லாம் ரோமானியர்களை அண்ட விடாமல் நடுங்க வைத்தன. நகரின் கோட்டைச் சுவரில் ஏதாவது ஒரு கயிறு தெரிந்தாலே போதும். ஆர்க்கிமிடிஸின் தந்திர சாதனங்களில் ஏதோ ஒன்று வெளியே வரப்போகிறது என்று அவர்கள் பின்வாங்கினார்கள். இருந்தும் ரோமானியர்களின் மூர்க்கமான படை பலத்தால் மூன்று வருஷம் போராடிய பின் சைராக்ஹயுஸ் நகரத்தை அவர்கள் வென்றனர். நகரில் நுழைந்ததும் படைத்தலைவன் முதல் காரியமாக ஆர்க்கிமிடிஸை உயிருடன் பிடித்து வாருங்கள் என்று ஆணையிட்டான்.

ஆர்க்கிமிடிஸைக் கைது செய்யப் போனபோது அவர் ஏதோ கணக்கில் தீவிரமாக இருந்தார். "இப்போது நான் வரமாட்டேன். என் கணக்கு இன்னும் முடியவில்லை. மண்ணில் எழுதியதை எல்லாம் அழிக்க முடியாது" என்றார். கைது செய்ய வந்த காவலன் அவரைக் கொன்றுவிட்டான். யுத்தங்கள் நிபுணர்களைக் கண்டு கொள்வதில்லை என்பதற்கு முதல் உதாரணம் இது.

இரண்டாவது உலகப் போரில் ஆங்கில இலக்கியத்தின் தலை சிறந்த நகைச்சுவை எழுத்தாளரான பி.ஜி. வுட்ஹவுஸ் ப்ரான்சில் இருந்தபோது ஜெர்மனியிலிருந்து ரேடியோவில் ஆங்கிலத்தில் நான் நன்றாக இருக்கிறேன். எனக்கு இவர்கள் வேளாவேளை சாப்பாடு கொடுத்து சுகமாக வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் ஒலிபரப்பச் சொன்னார்கள். மறுத்தால் என்ன ஆகும் என்று வுட்ஹவுஸுக்குத் தெரியும். அவர் தயங்காமல் ஒலிபரப்பினார். அந்த பேச்சுக்களில் நகைச்சுவையும் இழையோடியது. சண்டை முடிந்து வுட்ஹவுஸ் காப்பாற்றப்பட்டபோது பிரிட்டிஷார் அவரை மன்னிக்கவில்லை. துரோகி என்றே கருதினர். எல்லோரும் தாய்நாட்டுக்காக அவர் உயிர் கொடுத்திருக்க வேண்டும் என்பது போல் குற்றம்சாட்டினர். அந்தத் தீவிரமான வேளையில் நகைச்சுவை தப்பு என்றனர். வுட்ஹவுஸ் நொந்துபோய் அமெரிக்காவில் செட்டில் ஆகிவிட்டார். பல வருஷங்கள் கழித்து ஏறக்குறைய அவருக்கு தொண்ணூறு வயசானப்புறம்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை மன்னித்து கவுரவித்தது. விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் எல்லோருமே தனிப்பிறவிகள், அரசாங்கத்துடன் ஒத்துப்போக வேண்டும் என்று கட்டாயமில்லை. ஆர்க்கிமிடிஸைச் செலுத்தியது விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் ஆர்வமே! வுட்ஹவுஸைச் செலுத்தியது மேலும் உயிர் வாழ்ந்து எழுத வேண்டிய அவசியமே.

கலிலியோ, சூரியன், பூமியைச் சுற்றவில்லை என்று சொன்னதற்கு கிறித்தவ மதத் தலைவர்கள் அவரைக் கொடுமைப்படுத்தத் துவங்கிய போது கலிலியோ 'நான் சொன்னது தப்பு என்று விஞ்ஞானபூர்வமாகக் கண்டுபிடித்த உண்மையை, அதற்கு வேளை வரவில்லை என்று வாபஸ் வாங்கினார். இந்தக் கொடுமைக்கு போப்பாண்டவர் 350 வருஷம் கழித்து முந்தாநாள்தான் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

சமகாலத்துக்கு முந்தியவர்கள்

ஒவ்வொரு நூற்றாண்டிலும் சமகால சிந்தனைக்கும் சம்பிரதாயத்துக்கும் அப்பால் சிந்திப்பவர்கள்தான் அந்த காலகட்டத்து நவீனர்கள். இது ஒவ்வொரு துறையிலும் நிகழ்கிறது. அவர்களை சரியாகப் புரிந்துகொள்ளாமல் இறந்தபின்தான் புகழ்கிறார்கள். சென்ற கட்டுரையில் கலிலியோ பற்றிச் சொன்னோம். அதுபோல் கணிப் பொறித் துறையில் சார்லஸ் பாபேஜ் 1850–லேயே இன்றைய காலத்து கணிப்பொறி இயலின் முக்கிய சிந்தாந்தமாகிய 'ஸ்டோர்டு ப்ரொக்ராம்' சிந்தனையைக் கொண்டுவந்தார். அவர் காலத்து அறிவியல் அதற்குத் தயாராக இல்லாமல் பாபேஜின் அத்தனை முயற்சிகளும் தோற்றுப் போய் மனமொடிந்து இறந்துபோனார். இன்றைக்கு பாபேஜைக் கொண்டாடுகிறார்கள் கொஞ்சம் தாமதமாக.

பாபேஜ் போல நவீன சித்திரக்கலையில் விஸ்லர் என்பவரும் தன் சமகாலத்தை மீறியவர். அவருடைய முழுப் பெயர் ஜேம்ஸ் மக்நெய்ல் விஸ்லர். அமெரிக்காவில் பிறந்திருந்தாலும், பெரும்பாலும் இங்கிலாந்திலேயே வாழ்ந்தவர். மற்றவர் போல் சம்பிரதாய முறைப்படி சித்திரம் வரையாமல் தனக்கான பாணியில் வரைந்ததால் அவர் சித்திரங்கள் கேலிக்குள்ளாயின. அவருக்கு முற்பட்ட டர்னர் என்னும் சித்திரக்காரர் போல விஸ்லரின் சித்திரங்கள் மிகவும் மழுப்பலாகவும், இருட்டாகவும் இருந்ததாகச் சொன்னார்கள். தேம்ஸ் நதியை அவர் வரைந்தபோது அது வெறும் சலப்பரப்பு மட்டுமல்ல. "தேம்ஸ் நதியை நான் மக்களுக்குக் காட்ட விரும்புகிறேன்" என்று எது நதி எது இருட்டு என்று குழப்பமாக வரைந்தார். அந்த சித்திரங்களை நாக்டர்ன்ஸ் – இரவுகள் என்றார். அவர் முகங்கள் வரைந்ததும் அப்படியேதான் இருந்தது. முகங்களாக இல்லாமல் நினைவுகள் போலத் தோன்றின. அந்த காலத்துப் பெரும் விமர்சகரான ரஸ்கின் 'டர்ன் இன் ப்ளாக் அண்ட் கோல்டு' கருப்புத் 'தங்கத்தில் இரவு என்னும் சித்திரத்தை ரஸ்கின் இதைப்போல் மோசடியை நான் பார்த்ததில்லை. மக்கள் முகத்தில் ஒரு குடம் சாயத்தை வீசிவிட்டு இருநூறு 'கினி' பணம் கேட்பதா? அநியாயம்' என்றார். ஆத்திரம் அந்தக் காலத்தில் மன்னிக்கக்கூடியதே. விஸ்லரின் சித்திரங்கள்

புரிந்துகொள்வதற்கு அத்தனை எளிதல்ல. விஸ்லர் போட்டது எல்லாமே மோசம் என்று பிடிவாதம் பிடித்து ரஸ்கின் பெயரைக் கெடுத்துக்கொண்டார். விஸ்லர், ரஸ்கின் மேல் வழக்குத் தொடர்ந்தார். அந்த வினோத வழக்கில் விஸ்லர் இன்னும் கேலிக்குள்ளாகி அவருக்கு ஒரு ஃபார்த்திங் (ஒரு பைசா) நஷ்ட ஈடாக அளிக்கப்பட்டது. விஸ்லர் கோர்ட் கேஸுக்காக ஏகப்பட்டது செலவழித்து மிகுந்த ஏழ்மையில் தன் பிற்காலத்தில் நலிந்தார்.

விஸ்லர் இரவைச் சித்தரிக்க முயன்றார். இருட்டில் இருட்டை அப்பி அதனுள் லேசாக ஏதாவது தெரிகிறதா என்று பார்க்க தன் சித்திரங்கள் மூலம் முயன்றார். அவருடைய 'பாட்டர்ஸீ பாலம்' என்னும் சித்திரம் இன்று நவீன சித்திரக் கலையின் முன்னோடியாகக் கருதப்படுகிறது.

1892–ல் ப்ரெஞ்சு அரசாங்கம் எண்ணூறு டாலருக்கு அவர் சித்திரம் ஒன்றை வாங்கியது. நாற்பது வருஷம் கழித்து அந்த சித்திரம் பத்து லட்சம் டாலருக்கு இன்ஷூர் செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு ஒரு கண்காட்சிக்கு அனுப்பப்பட்டது. 'விஸ்லரின் தாய்' என்னும் அந்த சித்திரம் இன்றைக்கு உலகத்தின் மிகப் பிரபலமான சித்திரங் களில் ஒன்று. லட்சக்கணக்கான அதன் போட்டோ பிரதிகள் விற்கப்பட்டுவிட்டன.

நவீன சித்திரக்கலை போட்டோத்தனமான உருவ ஒற்றுமையிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ள முயன்றது. அதில் விஸ்லரின் பங்கு கணிசமானது. நவீன சித்திரம் 'மாடர்ன் ஆர்ட்' என்பது புதுக்கவிதை போல. நவீன சித்திரக்காரன் உலகை அப்போதுதான், அவனுக்காகத் தான் சிருஷ்டிக்கப்பட்டு முதல் தடவையாகப் பார்ப்பது போலப் பார்க்கிறான். ஒரு முகமோ, ஒரு குதிரையோ வரையும்போது அவன்தான் முதன் முதலில் அதை வரைவது போலப் பார்க்கிறான். இதற்கு முன் பார்த்தவர்களோ போட்டோக்களோ அவனுக்குப் பொருட்டல்ல, கவலையல்ல.

அவன் பார்க்கும் காட்சியை, அவன் தேர்ந்தெடுக்கும் காட்சியை அவன் சித்தரிக்கிறான். அவனுடைய பார்வை அவனுக்கு நேரடியாகப் பார்க்கும் பொருளிலிருந்து கிடைக்க வேண்டும். மற்றவர் வரைந்த திலிருந்தோ போட்டோக்களிலிருந்தோ அல்ல.

சென்ற நூற்றாண்டின் புரட்சிகரமான சித்திரக்காரரான Courbet என்பவர் "இருபது வருஷத்துக்கு உலகின் அத்தனை சித்திரக்காட்சி சாலைகளையும் அருங்காட்சியகங்களையும் மூடிவிட வேண்டும். அப்போதுதான் சித்திரக்காரர்கள் உலகைத் தம் சொந்தக் கண்களால் பார்க்கமுடியும்" என்றார். அதுபோலத்தான் நவீன கவிதையும், கம்பன் எப்படி எழுதினான், பாரதி எப்படி, பாரதிதாசன் எப்படி என்றெல்லாம் கவலைப்படாமல், அவர்கள் பார்க்கும் உலகத்தை வடிவங்கள் விஸ்லர் போல சமகாலத்துக்குப் புரியாமல்கூட இருக்க லாம். பாரதி சூரியனைப் பார்த்தும் 'பாரடியோ வானத்திற் புதுமை

யெல்லாம்' என்று பாடியதை இன்றைய புதுக் கவிஞர் சுகுமாரன், "ஒரு பிரம்மாண்ட சிலந்தி போல கான்க்ரீட் காடுகளுக்கு மேல் அசைகிறது சூரியன். வெயில் எலும்புகளுக்குள்ளும் நுழைந்து கருணையைக் கொல்கிறது" என்பார் (பயணியின் சங்கீதங்கள்– சுகுமாரன்)

பாரதி அவர் காலத்துக்குச் சற்று முந்தியவர். இன்றைய சுகுமாரன் தேவதேவன், பிரம்மராஜன், ஆத்மாநாம் போன்றவர்கள் இந்தக் காலத்துக்கு சற்று முந்தியவர்கள்.

ஒரு விஞ்ஞானப் பார்வையிலிருந்து...

(1984)

முன் குறிப்பு

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாக்ஸ் ப்ளாங்க் என்பவரின் க்வாண்டம் தத்துவமும், 1905ல் மேதை ஐன்ஸ்டைனின் ரிலேட்டிவிட்டி தத்துவமும் பௌதிகத்தின் புதிய சிந்தனைகளைத் துவக்கி வைத்தன. இவை மூலம் விஞ்ஞானிகளால் பிரபஞ்சத்தின் புற நிலையில் நிகழும் பற்பல விஷயங்களைத் தெளிவாக விளக்க முடிந்தது. இந்த விளக்கங்களுக்காக அவர்கள் ஆதாரமாக அமைத்துக்கொண்ட கோட்பாடுகளில்தான் சில முரண்பாடுகள் தெரிந்தன. முரண்பாடுகள் நம் தின வாழ்க்கையின், பகுத்தறிவின் நம்பிக்கைகளுடன் அவைகள் ஒத்துப்போகாததால் ஏற்பட்டன. இப்போது நீங்கள் இந்த புத்தகத்தைப் படிக்கிறீர்கள். இப்படிப் படிப்பதால் உங்களுக்கும் எனக்கும் ஒருவித மான தொடர்பு ஏற்படுகிறது. படிக்கும் செயல் மற்றவர்களையோ நம்முடைய சுற்றுபுறத்தையோ எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. இதுதான் பகுத்தறிவு. பதிலாக நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படிப்பது இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் ஏதோ ஒரு வகையில் மாற்றிவிடுகிறது என்று சொன்னால் அது நம் பகுத்தறிவுக்கு ஒத்துவராது. நவீன விஞ்ஞானத்தில் எந்த ஒரு தனிப்பட்ட செயலும் பிரபஞ்சத்தையே பாதிப்பதை நிரூபிக்க முடியும்.

இப்படிப்பட்ட முடிவுகள் எல்லாம் விஞ்ஞானிகளுக்கு ஒருவிதத்தில் அதிர்ச்சியளித்தன. நினைப்பதில் தப்பா, ஆதார நம்பிக்கைகளே தப்பா என்று புரியாமல் விழித்தார்கள். அணுக்கருவின் உள்ளுக்குள் இருக்கும் துகள்களின் (ப்ரோட்டான், எலக்ட்ரான் போன்றவை) இயற்கையை மேலும் மேலும் அவர்கள் கண்டறிய முயற்சித்த போது இந்த ஆச்சரியங்கள் அவர்களுக்கு அதிகரித்தன மேலும். பிரபஞ்சத்தின் உண்மை என்ன என்று அவர்கள் அறிய ஆசைப்பட்ட போது ஒருவிதமான விளிம்புக்கு வந்து தவித்தார்கள். ஒரு எல்லைக்கு மேல் பிரபஞ்சத்தின் உண்மையைக் கண்டறிய முடியாது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளக் கஷ்டப்பட்டார்கள். அப்படி அறிந்து கொள்ள நம் அறிவுக்கும் ஞானத்திற்கும் ஒரு புதிய சுதந்திரம் தேவை என்பது வெளிப்படையாயிற்று. அந்த சுதந்திரம் நம் கிழக்கத்திய வேதாந்த நூல்களில் காணக் கிடைப்பது அவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. ஒரு எல்லையைக் கடந்தபின் விஞ்ஞானமும் வேதாந்தமும் (metaphysics) ஒரே இலக்கை நோக்கிச் செல்கின்றன.

ஞானம் என்பது புலன் அறிவிற்கு அப்பாற்பட்டது என்பதைப் பல மேற்கத்திய விஞ்ஞானிகள் இப்போது தயக்கத்துடன் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இதைப் பற்றி பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக காப்ராவின் 'தாவ் ஆஃப் ஃபிஸிக்ஸ்,' ஜூக்காவின் 'டான்ஸிங் வூ–லி மாஸ்டர்ஸ்' மற்றும் ஃபேய்மனின் பௌதிக விரிவுரைகளின் தொகுப்பு இவைகளையெல்லாம் படித்தபோது எனக்கு தமிழில் இவைகளைப் பற்றி எழுதத் தோன்றியது. விளைவுதான் இந்தக் கட்டுரைத் தொடர்.

க்வாண்ட்டம் தத்துவத்தைத் தருவது அவ்வளவு எளிதல்ல. இந்த தத்துவத்தின் அடிப்படைச் சிந்தனைகளை மட்டுமே குறிப் பிட்டிருக்கிறேன். பல விஷயங்கள் விட்டுப்போயிருக்கின்றன. ஷ்ரோடிங்கர், டிப்ராக்லி, வான்நாய்மன், டிராக் போன்றவர்களின் கருத்துக்களை நான் குறிப்பிடாமல் விட்டிருக்கிறேன். மேலும் சில விஷயங்களை எளிமையாகச் சொல்லும்போது தப்பர்த்தம் பண்ணிக் கொள்ள சாத்தியமும் இருக்கிறது. இருந்தும் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படையான விஷயங்கள் பெரும்பான் மையானவை பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டவை. அவைகளை விவரிக்கும்போது சில சமயம் என்னுடைய உற்சாகத்தால் தேவைக்கு அதிகமான எளிமையும் சில மழுப்பல்களும் ஏற்பட்டிருக்கலாம். அதற்கு நானும் என் வார்த்தைச் சிறைகளும்தான் காரணம். உண்மை என்பதே வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது என்பதுதான் இந்தப் புத்தகத்தின் ஆதார சுருதி. இந்தத் தளைகளையெல்லாம் நீக்கிவிட்டு உண்மையை நம்முடைய வேத உபநிஷத்துக்களில் தேடியிருக்கிறார்கள். இந்த வசீகரமான தேடலைப் பற்றித்தான் இந்தப் புத்தகம்.

சுஜாதா

பங்களூர், மார்ச் முதல் தேதி 1984.

புதிய தேவை

என் எழுத்துக்கள் அத்தனையிலும் என் சொந்த சித்தாந்தங்களும் நம்பிக்கைகளும் இருக்கின்றன என்று சொல்ல முடியாது. இங்கே நீங்கள் சந்திக்கப் போவது வேறு சுஜாதா. நிஜ வாழ்க்கையில் நான் ஒரு இன்ஜினீயர்; ஒரு கணவன்; ஒரு தகப்பன். பல புத்தகங்களைப் படிப்பவன்–அதனால் பாதிக்கப்படுபவன். பல சம்பவங்களைச் சந்திப்பவன்– அவற்றால் பாதிக்கப்படுபவன். இந்த பாதனைகளைப் பற்றி சொல்ல விருப்பம்.

என் உத்தியோகத்தில் நான் பற்பல இயந்திரங்களைப் பார்க்கிறேன். குறிப்பாக நான் பழகும் எலெக்ட்ரானிக்ஸ், பௌதிக இயலின் ஒரு பிரிவு. இந்த பௌதிகத்தின் ஆரம்ப சிந்தனைகள், அவைகளின் எழுச்சி எல்லாமே மேற்கத்திய சிந்தனைகளின் அடிப்படையில் பிறந்தவை. கி. மு. ஐந்தாம் நுற்றாண்டிலிருந்து துவங்கி படிப்படியாக யோசித்து உன்னதப்பட்டவை. டெமாக்ரிட்டஸ், லியுஸிப்பஸ் போன்ற கிரேக்க சிந்தனையாளர்கள் அப்போதே அணு விஞ்ஞானத்தின் ஆரம்ப தத்துவங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அரிஸ்டாட்டில் புராதன கிரேக்க சிந்தனைகளை ஒழுங்குபடுத்தினார். இரண்டாயிரம் வருஷங்களுக்கு அரிஸ்டாட்டிலின் தத்துவங்கள் பிரபஞ்சத்தைப் பற்றிய மேற்கத்திய சித்தாந்தங்களுக்கு அடிப்படையாக இருந்தன.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் முதன்முதலாக நாம் இப்போது சொல்லும் 'விஞ்ஞான முறை' என்பது துவங்கியது. இயற்கை நிகழ்ச்சிகளையும் அவைகளைப்பற்றிய சித்தாந்தங்களையும் பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கும் முயற்சிகளைத் துவங்கினார். இதனுடன் கணித சாஸ்திரத்தைப் பற்றிய அவர்கள் ஆர்வம் துவங்கியது. விஞ்ஞான பரிசோதனைகளுக்குக் கணித ரூபம் கொடுக்க முன்வந்தவர்களில் மிக முக்கியமானவர் கலீலியோ.

பதினேழாம் நூற்றாண்டில் டெஸ்கார்ட்டஸ், பிரபஞ்சத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்தார். ஒன்று மனம் அல்லது சிந்தனை; மற்றது ஜடப்பொருள். இப்படித் துல்லியமாகப் பிரித்ததில் விஞ்ஞானிகள் வெளி உலகைத் தம்மிலிருந்து தனிப்பட்டுப் பார்க்கத் துவங்கினார்கள். வெளி உலகத்து விதிமுறைகளை அவர்களால் தெளிவாகக்

கண்டுபிடிக்க முடிந்தது. 'கிளாஸிக்கல் பிஸிக்ஸ்' என்று சொல்லப்படும் இந்த இயலின் சித்தாந்தங்கள் அத்தனைக்கும் ஆதாரமாக இந்த 'கார்ட்டீஸியன்' பிரிவு இருந்தது என்று சொல்லலாம்.

டெஸ்கார்ட்டெஸ்ஸின் கோட்பாடுகள் மேற்கத்திய சிந்தனைகளைத் தீவிரமாகப் பாதித்தன. Cogito ergo sum 'நான் சிந்திக்கிறேன், அதனால் நான் இருக்கிறேன்' என்கிற அவருடைய பிரசித்தமான வாக்கியம், மேற்கத்திய மனிதன் தன்னைப் புறப்பொருள்களிலிருந்து முழுவதும் பிரித்துக்கொண்டு சிந்திக்க உதவியது.

'தான்' என்பது தன் உடலிலிருந்து வேறுபட்ட சிந்திக்கும் பகுதி. இந்த சிந்திக்கும் பகுதிக்கு வெளிப்பட்டவை அத்தனையும் இயங்கும் விதம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. நியூட்டனின் விதிகள் மூலம், மிகச் சரியான கணிதக் கோட்பாடுகள் மூலம் நம்மைச் சுற்றியுள்ள இயக்கங்கள் அத்தனையையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

பிரெஞ்சு நாட்டின் மிகப்பெரிய கணித அறிஞரான லாப்லஸ், பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை நட்சத்திரங்கள், கிரகங்கள், ஏன், சின்னச் சின்ன எறிகற்களை உன்னதப்படுத்தி விளக்கம் கொடுத்து, 'மெக்கானிக் ஸெலஸ்ட்' என்ற பிரம்மாண்டமான புத்தகத்தை எழுதி வெளியிட்டார். சக்கரவர்த்தி நெப்போலியனிடம் அந்தப் புத்தகத்தின் முதற்பதிப்பைக் காட்டியபோது நெப்போலியன், "மான்ஷியர் லாப்லஸ்! பிரபஞ்சம் முழுவதும் இயங்கும் நியதிகளைப் பற்றி நீங்கள் எழுதியுள்ள இந்தப் புத்தகத்தில் ஒரு இடத்திலாவது பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தாவைப் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லையாமே?" என்று கேட்டபோது லாப்லஸ், "எனக்கு அந்த சித்தாந்தத்திற்கு தேவை இருக்கவில்லை" என்று அப்பட்டமாகப் பதில் அளித்தாராம்!

ஆம்; நான் படிக்கும் இந்த எலெக்ட்ரானிக்ஸ் விஞ்ஞானத்திற்குக் கூட, நான் தினம் சந்திக்கும் இயந்திரங்களின் நுட்பமான இயக்கங்களைப் புரிந்து கொள்வதற்குக்கூட, வேதாந்தமோ கடவுள் தத்துவமோ தேவையில்லைதான். இந்த விஞ்ஞானத்தின் காரண காரியங்கள் அத்தனையும் தெரிந்த, அல்லது தெரிந்து கொள்ளக்கூடிய விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டவை. இங்கே கடவுள் வேண்டாம்.

அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். விஞ்ஞானிகளும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தார்கள். நவீன பௌதிகத்தின் அணு விஞ்ஞானமும் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் புதிய சித்தாந்தங்களும் தோன்றும்வரை விஞ்ஞானிகளுக்கு வேதாந்தத்தின் அவசியம் இல்லாமலேயே இருந்தது. இப்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

"These changes. brought about by modern physics, have been widely discussed by physicists and philosphers over the past decades, but very seldom has it been realized that they all seem to lead in the same direction, towards a view of the world which is very similar to the viwes held in Eastern mysticism."

சொன்னது நவீன பௌதிக்கத்தில் ஆராய்ச்சி செய்யும் டாக்டர் ஃப்ரிட்ஜாப் காப்ரா. நம் வேதாந்தத்திற்கும் நவீன விஞ்ஞானத்திற்கும் உள்ள தொடர்பைத்தான் இந்த நூலில் சொல்ல விரும்புகிறேன்.

ஆரம்பங்கள்

விஞ்ஞானிகளின் ஆதார ஆவணங்களைக் கலைத்துவிட்ட கண்டுபிடிப்புகள், நவீன பௌதிகத்தில் இந்நூற்றாண்டின் முதல் முப்பது வருடங்களில் நிகழ்ந்திருக்கின்றன.

இரண்டு தனிப்பட்ட கண்டுபிடிப்புகள் அவர்கள் கோட்டையைக் கலைத்தன – ஐன்ஸ்டைனின் 'ரிலேட்டிவிட்டி' தத்துவமும், அணு விஞ்ஞானத்தில் 'க்வாண்டம் தியரி'யும். இவைகளைப் பற்றிக் கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லிப்பார்க்கிறேன்.

நவீன பௌதிகத்தின் ஆரம்ப வாசலில் ஒரு மகா மேதையின் சொந்த சாதனை ஜொலிக்கிறது. ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் 1905–ல் அவர் வெளியிட்ட இரண்டு கட்டுரைகளில் ரிலேட்டிவிட்டி சித்தாந்தத்தின் ஆரம்பங்களைக் காட்டினார். மற்ற எந்த விஞ்ஞானியின் துணையும் இன்றி இந்த அபார சித்தாந்தத்தை முழுதும் அமைத்தார். அவர் சொன்னது மிகவும் எளிமையானது. 'காலம் என்று தனிப்பட்டு ஒன்றும் கிடையாது' என்றார். சம்பவங்கள் இல்லையேல் காலமே கிடையாது. அதேபோல், 'தூரத்தையும் அல்லது இடைவெளிகளையும் காலத்திலிருந்து தனியாகப் பிரிக்க முடியாது. இரண்டு பொருட்கள் இல்லாது தனிப்பட்ட இடைவெளியே கிடையாது' என்றார்.

கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். நீங்கள் சென்னையில் இருக்கிறீர்கள். நான் பெங்களூரில் இருக்கிறேன். உமக்கும் எமக்கும் இருப்பது தூரம் மட்டுமா? காலமும்தான். பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் வந்தால் ஐந்து மணிநேரம். போயிங்கில் வந்தால் அரை மணி. ராக்கெட்டில் வரமுடிந்தால் சில செகண்டுகள். ஏன், இருப்பதிலே துரிதமான ஒளியின் வேகத்தில் வந்தால்கூட சில மைக்ரோ செகண்டுகள் ஆகும். எனவே உமக்கும் எமக்கும் தூரம் மட்டும் இல்லை. காலமும் நம்மைப் பிரிக்கிறது. இரண்டும் எப்போதும் இணைந்தவை. அவைகளைத் தனிப்படுத்த முடியாது என்றார் ஐன்ஸ்டைன்.

அதே போல் கால இடைவெளியும் உமக்கும் எமக்கும் வேறுபடுகிறது என்றார் ஐன்ஸ்டைன். இதைத் தெளிவாக்க விளையாட்டாக, காதலன் காதலிக்காகக் காத்திருக்கும் பொழுதையும், காதலி வந்தவுடன்

செல்லும் பொழுதையும் ஒப்பிட்டார். காதலன் ஒருவனே! முதலில் ஒரு செகண்டு மைக்ரோ செகண்டாக ஆகிறது! காதலர்களுக்கு மட்டும் அல்ல, நம் எல்லோருக்குமே கால இடைவெளி என்பது நாம் செல்லும் வேகத்தைப் பொறுத்து மாறுபடும் என்றார். சும்மா நிற்கிறவனுக்கும் ரெயிலில் போகிறவனுக்கும் ஒரு செகண்டு என்பது வெவ்வேறு கால இடைவெளிகள் என்றார்.

வேகத்தில் செல்பவனுக்குக் கால இடைவெளி குறுகிக்கொண்டே வரும். இதை நாம் தினவாழ்க்கையில் சிந்திக்கும் வேகங்களில் உணர முடியாது. தின வாழ்க்கையில் நம்மால் சாத்தியமாகும் வேகங்கள் எல்லாம் மிகக் குறைவே. மிக வேக ராக்கெட்டைக் கூட, ஒளியின் வேகத்துடன் ஒப்பிட்டால் வேகம் குறைவே. ஒளியின் வேகம் என்ன தெரியுமா? ஒரு செகண்டுக்கு 1,86,000 மைல்! இந்த வேகத்தை அணுகும்போது கால இடைவெளி குறைந்து கொண்டே வந்து, ஒளியின் வேகத்தில் நம்மால் செல்ல முடியும் எனில், கால இடைவெளி மறைந்துவிடுகிறது என்று புரட்சிகரமான ஒரு கருத்தைச் சொன்னார் ஐன்ஸ்டைன். அதை நிரூபித்தும் காட்டினார்.

ஐன்ஸ்டைனுக்கு முந்தின நியூட்டோனியன் பௌதிகம் எல்லாம் காலத்தையும் தூரத்தையும் 'அவை தனிப்பட்ட நிரந்தரங்கள்' என்று கொண்டு அமைந்தவை. அந்த அஸ்திவாரத்தையே கலைத்துவிட்டார் ஐன்ஸ்டைன்.

நாரத மாயை

யோக வாசிஷ்டத்திலிருந்து ஒரு கதையை ராமகிருஷ்ணர் எளிய பாஷையில் சொல்கிறார்.

"மாயையை அறிய முடியாது.

நாரதர் ஒரு சமயம் சர்வேசுவரனைப் பார்த்து, "சுவாமி, முடியாத காரியத்தை முடிக்கவல்ல தங்களுடைய மாயையை எனக்குச் சிறிது காட்டியருள வேண்டும்" என்று கேட்டார். சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் சர்வேசுவரன் நாரதரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஒரு பாலைவனத்தின் வழியாகப் பிரயாணம் செய்தார். இருவரும் சேர்ந்து சிறிது தூரம் சென்றார்கள். அப்போது வழியில் சர்வேசுவரனுக்குத் தாகம் எடுத்தது. பிரயாணக் களைப்பு மிகுந்த நிலையில் அவர் கீழே உட்கார்ந்துகொண்டு, "நாரதரே, எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. தயவுசெய்து எங்கிருந்தாவது எனக்கு குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாருங்கள்" என்று கேட்டார். நாரதர் அந்த நிமிடமே தண்ணீரைத் தேடிக்கொண்டு ஓடினார். ஆனால் அருகில் எந்த இடத்திலும் நாரதருக்குத் தண்ணீர் கிடைக்க வில்லை. ஆகவே நீண்ட தூரம் அவர் சென்றார். அப்போது தூரத்தில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருப்பது தென்பட்டது.

நாரதர் ஆற்றை நெருங்கியபோது, அங்கே கண்ணையும் கருத்தையும் கவரும் கட்டழகு பொருந்திய இளம் பெண் ஒருத்தி உட்கார்ந்திருப் பதைக் கண்டார். அவளைப் பார்த்த அந்தக் கணமே நாரதருக்கு அவள் மீது காதல் உண்டாயிற்று. தனது அருகில் நாரதர் வந்ததும் அந்தப் பெண் இனிய குரலில் அவருடன் பேச ஆரம்பித்தாள். இருவரும் நேரம் போவதே தெரியாமல் நீண்ட நேரம் பேசிக்கொண் டிருந்தார்கள். முடிவில் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர்.

பிறகு நாரதர் அவளைத் திருமணம் செய்துகொண்டு, இல்லற வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார். நாளடைவில் அந்தப் பெண் மூலமாக நாரதருக்குப் பல குழந்தைகள் பிறந்தார்கள். இவ்விதம் நாரதர் தமது மனைவி மக்களுடன் மிக மிக இன்பமாக வாழ்ந்து வந்தார். அப்படி அவர் வாழ்ந்து வந்தபோது நாட்டில் கொள்ளை

நோய் பரவியது. அதன் விளைவாக நாட்டில் பல ஆயிரம் பேர் மரண தேவதைக்குப் பலியானார்கள். தேசத்தின் எல்லாப் பாகங் களிலும் மூலைமுடுக்குகள் எல்லாம் கொள்ளை நோய் பரவி, தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது.

இந்த நிலையில் நாரதர் தாம் வாழ்ந்துவந்த ஊரை விட்டு மனைவி மக்களுடன் வேறு எங்காவது தூர தேசத்துக்குச் சென்றுவிட முடிவு செய்தார். அவருடைய மனைவியும் அந்த யோசனைக்குச் சம்மதித்தாள். அதன்படி கணவனும் மனைவியும் குழந்தைகளைக் கையில் பிடித்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினார்கள். வழியில் ஓர் ஆற்றுப்பாலம் குறுக்கிட்டது. பாலத்தின் மீது அவர்கள் அனைவரும் நடந்துகொண்டிருந்தார்கள். அப்போது ஆற்றில் கடுமை யான காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு வந்து கொண்டிருந்தது. விரைவில் ஆற்று வெள்ளம் பாலத்தை உடைத்தது. அந்த வெள்ளத்தில் நாரதருடைய குழந்தைகள் ஒருவர் பின் ஒருவராக அனைவருமே அடித்துக்கொண்டு போகப்பட்டனர். கடைசியில் அவருடைய மனைவியையும் ஆறு அடித்துக்கொண்டு போய்விட்டது.

நாரதருக்கோ துன்பம் தாங்க முடியவில்லை. ஆற்று வெள்ளம் அவரைக் கரையில் ஒதுக்கியது. அவருடைய உள்ளமே இடிந்து போய்விட்டது. ஆற்றங்கரையில் உட்கார்ந்துகொண்டு வெகுவாகக் கதறியழுது பிரலாபிக்க ஆரம்பித்தார்.

அப்போது சர்வேசுவரன் அவரது முன்னால் தோன்றி, "நாரதரே! தண்ணீர் எங்கே? நீர் ஏன் அழுதுகொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார்.

பகவானைக் கண்டதும் நாரதர் தயங்கினார். அதோடு நடந்தவை எல்லாவற்றையும் அவர் புரிந்துகொண்டார். பகவானைப் பார்த்து அவர், "சர்வேசுவரா, உங்களுக்கும் ஒரு நமஸ்காரம்; உங்களுடைய மாயைக்கும் ஒரு நமஸ்காரம்" என்று சொல்லி வணங்கினார்.

"சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களின் வடிவாகிய என் மாயை தெய்வீகச் சக்தி வாய்ந்தது. யார் என்னையே சரணடை கிறார்களோ அவர்களே அந்த மாயையைத் தாண்டுகிறார்கள்" *(கீதை: 7–14.)*

மேற்சொன்ன கதையில் இரண்டு விஷயம் இருக்கிறது. இப்போதெல் லாம் 'Science Fiction' என்று பல திறமையான சிறுகதைகளை மேற்கே எழுதிக்கொண்டிருக்கிறார்கள். 'ஸயன்ஸ் ஃபிக்ஷன்' என்பது ஓர் இலக்கிய வடிவமாக ஆகிவிட்டது.

மேற்சொன்ன நாரதர் கதையை 'ஸயன்ஸ் ஃபிக்ஷன்' வகையில் துல்லியமாகச் சேர்க்கலாம். இத்துடன் ஒப்பிடுவதற்கு 'Daphne du Maurierன் 'Split second' என்னும் கதையைத் தேடிப் படியுங்கள். அதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. கதையை மறுபடி ஆற்றின் அருகிலேயே கொண்டுவந்து விட்டதில் ஒரு மேதைத்தனம்

இருக்கிறது. இதையெல்லாம்விட, கதையில் ஐன்ஸ்டைனின் ரிலேட்டிவிட்டி தத்துவம் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். கால இடைவெளி என்பது பேருக்குப் பேர் மாறும். அது தனிப்பட்ட ஒன்றல்ல. அது பார்வையாளரின் வேகத்தைப் பொறுத்தது. குறிப்பாக, பார்வையாளரின் வேகத்தைப் பொறுத்தது. பிரம்மலோகத்தில் ஒரு வருஷம் நமக்கு நானூறு வருஷம் என்று சொல்வதெல்லாம் 'ரிலேட்டிவிட்டி'படி சாத்தியமே. பிரம்மலோகம் நம் பூமியைக் காட்டிலும் பன்மடங்கு வேகத்தில் சென்றுகொண்டிக்கிறது என்று கொண்டால், ரிலேட்டிவிட்டிபடி பிரம்மலோகத்தின் வேகத்தை சரியாகக் கணக்கெடுக்கக்கூட முடியும்.

இதனால் நான் ஸ்தாபிக்க விரும்புவது வேத காலத்துக்காரர்களுக்கு ரிலேட்டிவிட்டி சித்தாந்தம் தெரிந்திருந்தது என்றில்லை. ரிலேட்டிவிட்டி சித்தாந்தம் ஐன்ஸ்டைன் என்கிற இந்த நூற்றாண்டின் மேதை சொந்தமாக சிந்தித்து நிலைநாட்டியது. அதே போன்ற சிந்தனையாளர்கள் வேத காலத்திலும் இருந்திருக்கிறார்கள். இருவருக்கும் பொதுவான அம்சம் உண்மை அர்த்தங்களைத் தேடுவதே...

ஐன்ஸ்டைன் சொன்னதைப் பார்ப்போம்:

"Now even though the realms of religion and science in themselves are clearly marked off from each other, there exist between the two, strong reciprocal relationships and dependencies. Though religion may be that which determines the goal, it has, nevertheless, learned from science, in the broadest sense, what means will contribute to the attainment of the goals it has set up. But science can only be created by those who are thoroughly imbued with the aspiration towards truth and understanding. This source of feeling however, springs from the sphere of religion."

அங்கே பார்வை போவதில்லை

ஐன்ஸ்டைனின் 'பொதுப்பட்ட ரிலேட்டிவிட்டி சித்தாந்தம்' இன்னும் பிரம்மாண்டமான சிந்தனை வடிவம் பெற்றது. 'கிராவிட்டேஷன்' என்று சொல்லப்படும், எல்லா ஜடப்பொருள்களுக்கும் இருக்கும் ஈர்ப்பு சக்தியின் ஆதார குணத்தை, இயற்கையை அவர் ஆராய்ந்தார். அவர் என்ன சொன்னார் என்று விளக்குவதற்கு முன் ஈர்ப்பு சக்தியைப் பற்றி பேசலாம். பூமி நம்மை எல்லாம் இழுக்கிறது. சூரியன் தன்னைச் சுற்றும் கிரகங்களைக் கவர்கிறது. இந்தக் கவரும் சக்திக்கு ஈடுகொடுக்க கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. அந்தச் சுற்றலினால் ஏற்படும் வெளிநோக்கிய சக்தி, ஈர்ப்பு சக்திக்கு ஈடு கொடுப்பதால் கிரங்களால் ஏறக்குறைய வட்டப் பாதைகளில் சுற்றிச் சமாளிக்க முடிகிறது.

இந்த ஈர்ப்பு சக்தி இருப்பதை நிஜமென்று கொண்டு நியூட்டன் போன்றவர், கிரகங்கள் சுற்றும் பாதைகளைத் துல்லியமாகக் கணக்கிட்டார்கள். நியூட்டன் விதிப்படி இந்த ஈர்ப்பு சக்தி என்பது ஒரு பொருளின் ஆதார இயற்கை. ஒரு பொருளின் எதிரே மற்றொரு பொருளை வைத்தால், இரண்டும் ஒன்றுக்கொன்று கவர்ந்துகொள்வது அவற்றின் இயற்கை என்று நம்பினார். ஐன்ஸ்டைன் அப்படி நம்பவில்லை. அவருடைய சித்தாந்தப்படி இந்த ஈர்ப்பு சக்தி ஜடப் பொருளின் இயற்கை அல்ல. அந்தப் பொருளைச் சுற்றியுள்ள வெளி, ஸ்பேஸ், அந்தப் பொருள் இருப்பதால் வளைந்துவிடுகிறது. இந்த வளைவினால் ஏற்படும் சரிவே, வழுக்கலே, ஈர்ப்பு சக்தி என்று மிகத் தைரியமான ஒரு கருத்தைச் சொல்லி, அந்தக் கருத்து நிரூபிக்கவும் பட்டுவிட்டது. சூரிய கிரகணத்தின் போது சூரியனுக்குப் பின் மறைந்திருக்கும் நட்சத்திரங்கள் சூரியனைச் சூழ்ந்துள்ள 'வெளி' வளைந்திருப்பதால் நமக்குத் தெரியும். அந்த நட்சத்திர ஒளி வளைந்து நம்மை வந்து சேரும் என்று சொன்னது நிரூபிக்கப்பட்டுவிட்டது!

'இப்படி வளைந்து வளைந்து வெளி முழுவதும் திரும்ப ஒன்றுடன் ஒன்று சேர்ந்துகொண்டுவிடும்' என்றார் ஐன்ஸ்டைன். அப்படியெனில் இங்கிருந்து புறப்பட்ட ஒளிக்கற்றை விண்வெளியில் சென்று கோடிக் கணக்கான வருஷங்களுக்குப் பிறகு திரும்ப புறப்பட்ட இடத்துக்கே

வந்துவிடும்! இதில் காலம் என்பது என்ன? தூரம் என்பது என்ன? சரித்திரம் என்பது என்ன? எதிர்காலம், இறந்த காலம் எல்லாம் ஒன்றிப்போகின்றன!

வளைந்த வெளியை சிந்தனையில் தேக்குவதற்கே முடியாமல் விஞ்ஞானிகள் திணறினார்கள். வளைந்த வெளியாவது? சரி! வளைந்த வெளிக்கு அப்பால் என்ன? அதுவும் வெளிதானே? இல்லை! வெளி வளைவோடு அவ்வளவுதான்! எப்படி? நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே!

இதிலிருந்து விஞ்ஞானிகள் 'நம் புலன்களுக்கும் சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு ஞானம் இருக்கலாமோ என்று சிந்திக்கத் துவங்கினார்கள்.

இந்த வகை ஞானத்தைப் பற்றி நம் உபநிஷத்துக்களில் ஏற்கெனவே சொல்லி வைத்திருப்பது அவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

'அங்கே பார்வை போவதில்லை, பேச்சு நுழைவதில்லை; மனம் செல்வதில்லை. அதை எப்படித் தொடுவதென்று நமக்குத் தெரியாது, நமக்குப் புரியாது' என்று 'கேனோபநிஷத்தில்' சொல்லியிருப்பது அவர்களை—நவீன பௌதிக விஞ்ஞானிகளைக் கிழக்கந்தியச் சிந்தனைக்கு அழைத்தது!

'க்வாண்டம் தியரி' எழுப்பிய சந்தேகங்களைப் பற்றி அடுத்த கட்டுரையில் எழுதுகிறேன்.

எதிர்மறைகள்

'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்பது, தென்னாட்டில் வைணவர்கள் பெரிதும் மதிக்கும் பக்திப் பாடல்கள் நிறைந்த நூல். இந்நூலில் உள்ள ஏறக்குறைய நாலாயிரம் பாடல்களை எழுதியவர்கள், பன்னிரண்டு ஆழ்வார்கள். இந்த அருமையான பாடல்களை அரும்பாடுபட்டுத் திரட்டியவர், நாதமுனிகள்.

நான் நாலாயிரம் முழுவதையும் படித்திருக்கிறேன். பல பாடல்கள் எனக்கு இயல்பாக மனப்பாடம். நான் ஒரு வைணவன் என்பதால் இந்தப் பாடல்களை நான் சிபாரிசு செய்ய விரும்பவில்லை. சைவ–வைணவக் கோட்பாடுகளை எல்லாம் கடந்து, நாலாயிரத்தில் சொல்லப்படும் கடவுள் தத்துவம், நவீன பௌதீகத்துடன் ஒத்துப் போகும் ஆச்சரியத்தைப் பற்றித்தான் சொல்ல விரும்புகிறேன்.

நாலாயிரத்தில் குறிப்பாக ஒரு ஆயிரத்தை நீங்கள் படிக்க வேண்டும். அது நம்மாழ்வாரின் திருவாய்மொழி.

நம்மாழ்வார், பாண்டி நாட்டில் நெல்லை மாவட்டத்து ஆழ்வார் திருநகரிக்காரர். ஒன்பதாம் நூற்றாண்டவர். இயற்பெயர் மாறன். முப்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்கள் செய்தவர். இருவருக்கு மற்றொரு பெயர் சடகோபன். ஏறத்தாழ இவைதாம் அவரைப் பற்றி நமக்குத் தெரிந்த சரித்திரக் குறிப்புகள். மற்றவை கர்ணபரம்பரைக் கதைகள். அவற்றைப் பற்றிக் கவலைப் படாமல் அவர் சொல்லும் கடவுள் தத்துவத்தை கவனிப்போம்...

'ஆணல்லன் பெண் அல்லன்; அல்லா(து) அலியுமல்லன்
காணலும் ஆகான். உளன் அல்லன்; இல்லையல்லன்
பேணுங்கால் பேணும் உருவும் ஆகும். அல்லனுமாம்.
கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதலே!'

'என் கடவுளைக் கூறுவது ரொம்பக் கடினமானது' என்று சொல்லி விட்டு, முயற்சிக்கிறார்.

தஞ்சை ஜில்லாவில் திருநாகேச்வரத்துக்குப் பக்கத்தில் உள்ள ஒப்பிலியப்பன் கோயிலுக்கு 'விண்ணகரம்' என்று ஓர் அழகான

பெயர் உண்டு. அந்தக் கோயில் பெருமானைப் பற்றி நம்மாழ்வார் பத்துப் பாடல்கள் பாடியிருக்கிறார்.

'நிழல் வெயில், சிறுமைபெருமை, குறுமை நெடுமையுமாய்
சுழல்வன நிற்பன, மற்றுமாய் அவை அல்லனுமாய்
மழலைவாய் வண்டுவாழ் திருவிண்ணகர் மன்னுபிரான்
கழல்கள் இன்றி மற்றோர் களைகண் இலம் காண் மின்களே!'

இது ஒரு பாட்டு– பத்துப் பாடல்களிலும் நம்மாழ்வார் கடவுளை எதிர்மறைத் தொடர்களாலேயே வர்ணிக்கிறார். நரகம்–சுவர்க்கம், பகை–நட்பு, விடம்–அமுதம், இன்பம்–துன்பம், கலக்கம்–தேற்றம், தழல்–நிழல், நகரம்–நாடு, ஞானம்–மூடம், சுடர்–இருள், நிலம்–விசும்பு, புண்ணியம்–பாவம், புணர்ச்சி–பிரிவு, எண்ணம்–மறப்பு, உண்மை–இன்மை, கருமை–வெளுமை, மெய்–பொய், இளமை–முதுமை, புதுமை–பழமை என்று சரம்சரமாக (opposites) எதிர்மறைகளால் விவரிக்கிறார்.

கடவுளைச் சொற்களால் வருணிக்க முயற்சிப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் மற்ற அழ்வார்களும் உணர்த்துகிறார்கள்...

'சொல்லினால் தொடர்ச்சி நீ
சொலப்படும் பொருளும் நீ
சொல்லினால் சொலப்படாது
தோன்று கின்ற பொருளும் நீ!'

என்று திருச்சந்த விருத்தத்தில் வருகிறது.

எதிர்மறைகளின் மூலமும், சொற்களுக்கு அப்பாற்பட்ட பொருட்களினாலும் அவனைச் சுட்டிக்காட்டும் இந்த முயற்சியைப் பதினைந்தாம் நூற்றாண்டின் எளிய நெசவாளிக் கவிஞர், மக்கள் கவிஞர் கபீரும் செய்திருக்கிறார்.

'ஓ! எப்படி என்னால், அந்த ரகசிய வார்த்தையை உணர்த்த முடியும்? அவன் இப்படி இருக்கிறான், இப்படி இல்லை என்று எப்படி என்னால் சொல்ல முடியும்? அவன் என்னுள் இருக்கிறான் என்றால் பிரபஞ்சமே வெட்கப்படும். அவன் எனக்கு வெளியே இருக்கிறான் என்றால், அது பொய். அவன் உள் உலகத்தையும் வெளியுலகத்தையும் பிரிக்க முடியாமல் ஒன்றாக்குகிறான். உணர்வதும், உணரப்படாததும் அவன் இரு பாதங்கள். அவன் எங்கும் விரவியுமில்லை; மறைந்தும் இல்லை. அவன் வெளிப்பட்டதும் இல்லை; வெளிப்படாமலும் இல்லை. அவனை எது என்று சொல்ல வார்த்தைகள் இல்லை!'

வார்த்தைகளைப் பயன்படுத்தி அவனை விவரிப்பது இயலாது... அவனைப் பற்பல எதிர்மறை ரூபங்களாக அறிந்துகொள்ள முயற்சிக்கலாம் என்பது இந்த மேற்கோள்களின் அடிநாதங்களாக இருப்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளலாம்.

சனத்துத் தத்துவஞானிகளும் இந்த எதிர்மறைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உலகின் ஆதார உண்மை யின்– யாங் என்கிற எதிர்மறைகளில் இருக்கிறது என்றார்கள். ஒரு வட்டத்தைக் கருப்பு – வெளுப்பாக இரண்டு பகுதிகளாகப் பிரித்து அதற்கு வடிவம் கொடுத்தார்கள். (கொரியா தேசத்து தேசியக் கொடியில் இந்த வட்டம் இருக்கிறது) யின்–யாங் என்பது உண்மையின் இரட்டை நிலையின் குறியீடு. நன்மை–தீமை, அழகு– குரூரம், நிஜம்–பொய், ஆண்–பெண், இரவு–பகல், சூரியன்– சந்திரன், வான்–பூமி, இரவு–பகல், சந்தோஷம்–துக்கம், இடது–வலது. பட்டியல் யோசித்தால் நீண்டுகொண்டே போகும். (கம்யூட்டர் ஆதாரமாக இந்த இரட்டை–பைனரி வடிவத்தில்தான் கணக்குப் போடுகிறது) பத்தாம் நூற்றாண்டிலிருந்து சனத்து சிந்தனைகளை இந்த வடிவம் ஆக்கிரமிக்கிறது. இந்த வடிவத்தின் இரு பகுதிகளும் முழுவதும் கருப்போ வெளுப்போ இல்லை. வெண் பகுதியில் ஒரு கருப்புப் புள்ளியும் கருப்புப் பகுதியில் ஒரு வெண் புள்ளியும் உள்ளது. ஒவ்வொரு நல்ல



காரியத்திலும் கொஞ்சம் கெடுதல் இருக்கத்தான் இருக்கிறது. ஒவ்வொரு அழகிலும் சிறிது அழுக்கு, ஒவ்வொரு குரூரத்திலும் சிறிது அழகு! விஞ்ஞானிகளுக்கு யின்–யாங் தத்துவம், எந்த உண்மை சித்தாந்தத்திலும் ஒரு அளவு பொய் இருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறது.

இரட்டை வாழ்க்கை

எதிர் மறைகள் என்பவை நம் சிந்தனையில் இருப்பவைதாம். ஒன்றின் மேல் நாம் கவனம் செலுத்தும்போது அதன் எதிர்மறையை நாம் திருஷ்டிக்கிறோம். கம்பன் சொன்னது போல், 'உண்மை இல்லையோர் பொய் உரையிலாமையால்.' அழகு என்று நாம் பிரித்துப் பார்க்கும்போதுதான் அவலட்சணத்தை சிருஷ்டிக்கிறோம். இரண்டும் மன இயக்கத்தின் இரண்டு அங்கங்களே. நாம் குறிப்பிட்ட ஆழ்வார் பாடலின் உட்கருத்து எதிர்மறைகளை எல்லாம் கடந்து சிந்திக்கும்போது, நல்லது–கெட்டது, சந்தோஷம்–துக்கம், ஜனனம்–மரணம், இவையெல்லாம் தனிப்பட்ட அனுபவங்கள் அல்ல, எல்லாமே ஒரே நித்தியத்தின் இரண்டு பக்கங்கள், ஒரே முழுமையின் இரண்டு வர்ணனைகள் என்பதே, "உலகத்து எதிர்மறைகளைக் கடந்து சாஸ்வதமான உண்மையில் இரு" என்று கீதையில் கிருஷ்ணர் சொல்கிறார். எண்ணங்கள் அற்ற நிச்சிந்தையில் இந்த எதிர்மறையின் ஒற்றுமைகளைக் காண முடியும் என்கிறார்கள். ஒரு ஜென் கவிதை 'மாலை கோழி கூவி காலையை அறிவிக்கிறது. நள்ளிரவில் சூரியன் ஜொலிக்கிறது' என்று சொல்வதின் உள்ளர்த்தமும் இதுதான்.

நவீன பௌதிகத்தின் க்வாண்டம் சித்தாந்தமும் இதே முடிவுக்கு வந்திருக்கிறது. அணுக்களின் உள் அமைப்பை இந்த நூற்றாண்டில் தீவிரமாக ஆராயத் தொடங்கியபோது விஞ்ஞானிகளுக்குப் பல ஆச்சரியங்கள் காத்திருந்தன. 'எக்ஸ்' கதிர்களைக் கண்டுபிடித்ததும் ஆரம்பித்தது வினை. எக்ஸ் கதிர்கள் என்பவை ஒருவிதமான நுட்பமான சக்தி வெளிப்பாடு; 'ரேடியேஷன்'. அணுக்களிலிருந்து எக்ஸ் கதிர்கள் மட்டும் அல்லாமல் பலவிதமான சக்தி வெளிப்பாடுகள் இருப்பதைக் கண்டார்கள். சில கடினமான அணுக்களிலிருந்து சதா இந்த சக்தி வெளிப்படுவதை 'ரேடியோ ஆக்ட்டிவ்' அணுக்கள் சக்தியை வெளிப்படுத்துவது மட்டும் இன்றி தத்தம் ரூபங்களை மாற்றிக் கொள்வதையும் கண்டறிந்தார்கள். அணுவுக்குள் என்ன இருக்கிறது என்கிற ஆவல் அவர்களுக்கு எழ, ரூத்தர்ஃபோர்டு போன்ற விஞ்ஞானிகள் அந்த அமைப்பை சற்று உன்னிப்பாக ஆராய புத்திசாலித்தனமான பரிசோதனைகள் செய்தார்கள். ரூத்தர்ஃபோர்டு அணுக்களை அதைவிட

நுட்பமான 'ஆல்ஃபா' துகள்களால் துளைத்துப் பார்த்தபோது அணுக்களில் உள்ளே பெரும்பாலும் வெட்டவெளியாக இருப்பதையும் மையத்தில் கரு போல் சில ப்ரோட்டான் துகள்களும் அவைகளைச் சுற்றி சில எலக்ட்ரான்களும் இருப்பதைப் பார்த்து திகைத்துப்போனார். இதுவரை அணு என்பது பிரிக்க முடியாத திடப்பொருள் என்று நம்பி வந்தவர்களுக்கு, அது பெரும்பாலும் காலியாகவே இருப்பது ஆச்சரியத்தை அளித்தது. அணு எவ்வளவு சிறியது என்று நீங்கள் கற்பனை செய்து பார்க்க, ஓர் ஆரஞ்சுப் பழத்தை உலகளவு பெரிது படுத்தினால் ஆரஞ்சின் ஓர் அணு சுமார் ஓர் இலந்தைப் பழம் அளவுக்குப் பெரிதாகலாம்! எனவே அணு என்பது மிக மிகச் சிறியது. இந்த அணுவுக்குள் இருக்கும் உள் கருவோ அதைவிடச் சிறியது. இந்த அணுவையே மறுபடி சுமார் ஒரு சர்க்கஸ் கூடார அளவுக்குப் பெரிதுபடுத்தினால் அதன் உட்கரு சின்னக் கடுகின் அளவுக்குத் தெரியலாம்! நம் பிரபஞ்சம் பூராவும் அணுக்கள்தான். அந்த அணுக்கள் பூராவும் ஏறக்குறைய வெட்டவெளிதான்!

எல்லா அணுக்களுக்குமே ஆதாரமாக இந்த 'நியூக்ளியஸ்' அமைப்பு இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். ஓர் அணுவுக்கும் மற்றொரு அணுவுக்கும் வித்தியாசம் அதன் கருவில் இருக்கும் துகள்களில் எண்ணிக்கையில்தான். அணுவும் அணுவும் சேரும்போது பல வித ரசாயன மாறுதல்கள் ஏற்படுகின்றன. இந்த விநோத உலகின் விதி முறைகளைப் பல தேசத்து விஞ்ஞானிகள் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டறிந்தார்கள். ஆனால் இந்த விஞ்ஞானிகள் அணுவின் உள்ளமைப்பின் இயற்கையை ஆராயும் நோக்கத்தில் பரிசோதனைகள் செய்தபோது, அவர்களுக்குக் கிடைத்த பதில்கள் அவர்களைக் குழப்பத்தில் மேலும் மேலும் ஆழ்த்தின. எதிர்மறைகளின் ஜோடிகளாகவே பதில்கள் வந்தன. அவர்களுக்கு க்வாண்டம் தியரி தேவையாக இருந்தது.

க்வாண்டம் தத்துவத்தின் கோட்பாடுகளைச் சிந்தித்துப் பார்ப்பது மிகவும் சிரமமாகவே இருந்தது. இருந்தும் அணு விஞ்ஞானத்தின் உள்ளமைப்புகளை விவரிக்க இந்த சித்தாந்தத்தால்தான் முடிந்தது.

ரூத்தர்ஃபோர்டின் பரிசோதனைகள்–'அணுக்களின் உள்ளே இருப்பது பெரும்பாலும் வெட்டவெளி. நடுவே ஒரு கருப்பொருளும், அதைச் சுற்றிலும் சில துகள்களைத் தவிர மற்ற எல்லாம் வெறும் பாழ்' என்று தீர்மானமாக நிரூபித்துவிட, க்வாண்டம் சித்தாந்தம் இந்தத் துகள்கள்கூட அப்படி ஒன்றும் சிந்தனையில் சிக்கக் கூடிய சமாசாரங்கள் இல்லை என்று சொல்கிறது. துகள் என்றால் என்ன? எத்தனையோ துகள்களைப் பார்க்கிறோம். வெயிலில் தூசு பறக்கும் போது பார்க்கும் துகள்களைக் கற்பனை செய்துகொண்டால் இந்த அணுத் துகள்கள் அந்த ரீதியில் மிகச் சிறிய துகள்களா? இல்லை என்கிறது க்வாண்டம் தத்தவம். உள்ளுக்குள் இருக்கும் இந்த அணுத் துகள்களுக்கு இரண்டு எதிர்நிலைகள் உண்டு. இந்தத் துகள்களை

நாம் எந்த விதத்தில் பார்க்கிறோமோ அதற்கேற்ப இவைகளின் இயற்கை வேறுபடும். சில சமயம் அவை துகள்கள். சில சமயம் அலைகள்! இந்த இரட்டை நிலை ஒளிக்கும் உண்டு என்று நிரூபித்திருக்கிறார்கள். ஒளியும் அலைகளாகப் பரவுகிறது, சில சமயம் துகள்களாக...

இந்த இரட்டை வாழ்க்கை மிக விநோதமானது. புரியாதது. எப்படி ஒரே பொருள் ஒரே சமயத்தில் இரண்டு நிலையில் இருக்க முடியும்? அதுவும் இரு எதிர்நிலைகளாக? துகள் என்றால் எவ்வளவு சிறிதானாலும் ஓர் இடத்தில் இருக்க வேண்டும். அலை என்பது எங்கும் பரவியிருப்பது! இரண்டும் ஒரே சமயம் எப்படி இருக்க முடியும்? இந்த முரண்பாடுதான் க்வாண்டம் சித்தாந்தத்தின் ஆரம்பத் தத்துவம். இதை ஆரம்பித்தவர் மாக்ஸ் ப்ளான்க் என்கிற விஞ்ஞானி. உஷ்ணம் பரவும் விதத்தை அவர் ஆராயும்போது அது அலைகளாகப் பரவவில்லை. பதிலாக தனித்தனி சக்திக் குப்பல்களாக வெளிப்படுகிறது என்று கண்டறிந்தார். ஐன்ஸ்டைன் இந்த சக்திக் குப்பல்களை 'க்வாண்டா' என்றார். இவை இயற்கையில் எல்லாவித சக்தி வெளிப்பாடுகளிலும் உண்டு என்று சொன்னார். ஐன்ஸ்டைன், தைரியமாக சக்தி வெளிப்பாடுகளை அலை ரூபமாக மட்டும் இல்லாமல் இந்த மாதிரி சக்திக் குப்பல்களாகவும் சிந்திக்கலாம் என்று சொன்னார். ஒளி அலைகளை இந்த மாதிரி குப்பல்களாகப் பார்க்கும்போது அவைகளை 'ஃபோட்டான்'கள் என்று சொன்னார். இருந்தும் ஒரே சமயம் துகள், அலை என்பதில் உள்ள முரண்பாடு உறுத்திக்கொண்டே இருந்தது.

இதைத் தீர்த்துவைத்து க்வாண்டம் சித்தாந்தம் புரட்சிகரமான ஒரு புதுக் கருத்தை நாடியது. பழைய அஸ்திவாரங்களையே கலைக்கும் படியான புதிய சிந்தனையை அவர்கள் புகுத்தினர். அணு உலகத்தில் உண்மை வடிவம் என்பது வேறு விதமானது, அதற்கு அர்த்தமே வேறு என்று துவங்கி, அந்த வெட்டவெளியில் ஓர் இடத்தில்தான் ஒரு துகள் நிலைத்து நிற்கிறது என்று சொல்வதே தவறு. அங்கே நடப்பதெல்லாம் நிச்சயமாக நடப்பதில்லை! எல்லாமே 'நடக்கக்கூடும்' என்கிற சாத்தியக்கூறுகளே.

இந்த சாத்தியக்கூறுகளைக் கணித முறையில் 'ப்ராபபிலிட்டி' சித்தாந்தப்படி கணித்துப் பார்க்கலாம் என்றனர். இந்த முறையில் அணுவின் உள்ளமைப்பிலிருந்து எழும் அலைவரிசைகளும் ஒருவித மான சாத்தியக்கூறுகளே. இன்ன இடத்தில் நிச்சயமாக ஒரு துகள் இருக்கும் என்று சொல்ல முடியாது. அது இருக்கும், இல்லாமலும் இருக்கும், ஒரு சமயத்தில் இந்த இடத்தில் அதைப் பார்க்க சாத்தியக் கூறுகள் அதிகம். அதைத் துகள் என்று சொல்லலாம். மற்றொரு கோணத்தில் அலைகளாகவும் பார்க்கலாம். அலை, துகள் என்பதெல் லாம் ஒரே உண்மையின் இரண்டு வடிவங்கள். அணுவின் ஆதாரமான அமைப்பை ஆராய அதனுள் நுழையும்போது இயற்கை தனியாகப் பிரித்துப் பார்க்கக்கூடிய எதையும் காட்டுவதில்லை. நம்மால் பார்க்க,

உணர முடிவதெல்லாம் அந்தத் துகள்களை அல்ல. அந்தத் துகள்களால் நமக்கு ஏற்படும் விளைவுகளையே! எனவே உண்மை என்பது நம் உலகத்து, நம் மொழியின் சித்தாந்தங்களுக்குப் புறம்பானது, அப்பாற்பட்டது. அதை நம் உலகத்து செயல்பாடுகளாக மொழிபெயர்க்கும்போதுதான் இந்த முரண்பாடுகள் எல்லாம் ஏற்படுகின்றன என்கிற முடிவுக்கு வந்தார்கள்!.

இந்த முடிவு நம் உபநிஷத்துகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அது நகர்கிறது, அது நகர்வதில்லை.
அது தூரத்தில் இருக்கிறது, மற்றும் அருகே இருக்கிறது.
அது எல்லாவற்றின் உள்ளேயும் இருக்கிறது.
அது எல்லாவற்றின் வெளியேயும் இருக்கிறது."

– ஈசோபனிஷத்.

நிச்சயமில்லாத உறவு

நம்முடைய ஹிந்து சிந்தனைகளின் சாரம் என்று நாம் சொல்லக் கூடியது ஒரு விதமான ஒருமைப்பாட்டுத் தத்துவமே. பிரபஞ்சத்தின் இயற்கையைப் பற்றி நம் முன்னோர்களின் நூல்கள் பேசும்போது இந்த ஒருமைப்பாட்டைத் திரும்பத் திரும்ப அச்சுறுத்துவதைப் பார்க்கலாம். எல்லாப் பொருட்களும் எல்லாச் சம்பவங்களும் ஒரே ஒரு முழுமையைச் சேர்ந்தவை. அவை எல்லாம் ஒரு பிரபஞ்ச, சர்வ விஸ்தார முழுமையின் அங்கங்களே. இந்த முழுமை சாஸ்வதமானது. அழிக்க முடியாதது. இதை நாம் பிரம்மம் என்கிறோம். பௌத்தர்கள் 'தர்மகாய்' என்கிறார்கள். அல்லது தததா, 'அது தன்மை' என்கிறார்கள். தாவிசத்தைச் சார்ந்தவர் அதை (பாதை) தாவ் என்கிறார்கள்.

நாம் தின வாழ்க்கையில் சந்திக்கும் சம்பவங்களும் பொருட்களும் தனிப்பட்டவை. நம் வாழ்வு, நிகழ்ச்சிகளாகவும் பொருட்களாகவும் பிரிந்திருக்கிறது. இவைகளைத்தான் உண்மை என்று நம்புவதை மாயை என்கிறார்கள்.

மாயையினால் நமக்கு ஏற்படும் அவித்யையினால், நாம் நம்மைச் சுற்றி நிகழும் சம்பவங்களையும் இயங்கும் பொருட்களையும் உண்மையின் வடிவம் என்று நம்புகிறோம். இந்த மாயையை அகற்ற நம் மனத்தை ஒருநிலைப்படுத்தி சிந்தனைகளை அகற்றிப் பெறும் சமாதி நிலைகளைப் பற்றி நம் புத்தகங்கள் பேசுகின்றன. இந்த ஒருமை பற்றி நவீன பௌதிகமும் சொல்கிறது. அணுவின் அமைப்புக்குள் கவனம் செல்லும்போது இந்த ஒருமை அவர்களுக்கும் புலனாகியிருக்கிறது. திடப்பொருள்களின் உண்மையான வடிவத்தை ஆராயும்போது இந்த ஒருமை திரும்பத் திரும்ப அவர்களுக்குத் தென்படுகிறது. க்வாண்டம் தியரியைப் பொறுத்தவரையில் விஞ்ஞானிகள் அதன் வெவ்வேறு சித்தாந்தங்களைக் கணித ரூபமாக, துல்லியமாகச் சொல்லி விட்டார்கள். பூச்சி பூச்சியாக அவர்கள் போட்ட கணக்குகளின்படி அணுவுக்குள் இருக்கும் துகள்கள் காட்டும் விளைவுகளை அவர்களால் சுலபமாக எதிர்பார்க்க முடிகிறது. ஆனால் இந்த சித்தாந்தங்களுக்கு வார்த்தை ரூபம், மொழி ரூபம் கொடுக்க முயற்சிக்கும்போது

அவர்கள் திணறுகிறார்கள். சென்ற நாற்பது வருஷங்களாக அவர்களுக்கு இன்னும் அந்த ரூபம் அகப்படவில்லை.

சென்ற கட்டுரையில் நாம் சொன்னபடி க்வாண்டம் தியரியின் மையக் கருத்து அணுவுக்குள் இருக்கும் துகள்களின் இயற்கையைப் பற்றியது. அந்தத் துகள்களை துகள்கள் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இந்த இடத்தில்தான் இருக்கும் என்று சொல்ல முடியாது. அவைகளின் சக்தி, அவைகளின் ஸ்தலம் எல்லாமே சாத்தியக் கூறுகள்தாம் என்பதே. ஒரு துகளின் உண்மையைப் பற்றி ஒரு அளவுக்கு மேல் அறிந்துகொள்ள முடியாது. அப்படி அறிந்துகொள்ளும் செயலே அதன் நிச்சயமற்ற தன்மையை அதிகரிக்கிறது. ஒரு துகள் ஒரு இடத்தில்தான் இருக்கிறது என்று திட்டவட்டமாக சொன்னால் உடனே அதன் வேகத்தைப் பற்றிய (மொமெண்ட்டம்) உண்மை குழப்பமாகிவிடுகிறது. அதன் வேகத்தை துல்லியமாகக் கணக்கிட்டால் அது இந்த இடத்தில்தான் உள்ளது என்கிற சங்கதி குழப்பமாகிவிடுகிறது இதை 'ஹைசன்பர்கின் நிச்சயமில்லாத உறவு' என்று சொல்லி இதற்கு கணித ரூபம் இருக்கிறது. இப்போது பௌதிகத்தில் அவர்கள் எப்படி இந்த மிகச் சிறிய துகள்களையெல்லாம் பார்க்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.

எலக்ட்ரான் என்பது ரொம்ப ரொம்ப சின்னது என்று சொன் னோம். இதை எப்படிப் பார்க்க முடியும்? முடியாது. இதன் விளைவுகளைத்தான் பார்க்க முடியும். அதை எப்படிச் செய்கிறார்கள்? பரிசோதனைகள் மூலம். பரிசோதனை என்பது என்ன? முதன்முதல் இந்தத் துகள்களைத் தனியாகப் பிரித்தெடுக்கிறார்கள். பிரித்து அவைகளை 'பார்ட்டிக்கிள் ஆக்ஸலரேட்டர்'கள் என்கிற சாதனங்கள் மூலம் மிக வேகமாகப் பிரயாணம் செய்ய வைக்கிறார்கள். தகுந்த வேகம் பெற்றவுடன் அவைகளை மற்ற துகள்களுடன் மோத வைக் கிறார்கள். இந்த மாதிரி மோதல்கள் சாதாரணமாக 'பபிள் சேம்பர்' என்று சொல்லக்கூடிய சாதனங்களில் நிகழ்கின்றன. இந்த சேம்பர்களில் நிகழும் மோதல்களால் சில ஒளிக்கீற்றுகள் தோன்றுகின்றன. அந்த ஒளிக்கீற்றுகளை போட்டோ படம் பிடித்து அவைகளின் போக்கைக் கணித ரீதியில் அலசிப் பார்த்து—இந்த அலசல் சற்று கஷ்டமானது—இதற்காக கம்ப்யூட்டர்களை உபயோகிக்கிறார்கள். இந்த அலசலிலிருந்து அந்தத் துகள்களின் இயற்கை இவ்வாறாக இருக்கும் என்று முடிவு கட்டுகிறார்கள். இந்த முறையில் ஒரு முக்கியமான விஷயம் அந்தத் துகளின் பங்கு. அதை யாரும் பார்ப்பது இல்லை. ஒரு இடத்தில் ஜனிக்கிறது. மற்றொரு இடத்தில் தீற்றுகிறது. இந்த ஜனிப்பையும் அதன் விளைவையும் சேர்த்து வைக்கும் பாலமாகத்தான் இந்தத் துகள் நடிக்கிறது. இந்தக் கதை வசனத்தில் இதையெல்லாம் பார்க்கின்ற விஞ்ஞானியும் ஒரு அம்சமாக இருக்கிறான். இதோ இதுதான் எலக்ட்ரான் என்று அவனால் சொல்லவே முடிவதில்லை. இது எலக்ட்ரானின் விளைவு, அதன் கையெழுத்து, இதனால் எலக்ட்ரான் என்பது இப்படி இருக்கலாம் என்று நான் நம்புகிறேன் என்கிற

அவனுடைய வியாக்கியானம் இந்த உண்மைக்குள்ளே புகுந்து கொள்கிறது.

நீங்கள் ஒரு அறைக்குள் நுழைகிறீர்கள். சோபா கசங்கியிருக்கிறது அதனால் இந்த கசங்கலிலிருந்து சோபாவில் யாரோ உட்கார்ந்திருக் கிறார்கள் என்று முடிவுக்கு வருவது போல இது!! பார்ப்பவனையும் பார்த்ததையும் இந்த முறையில் தனிப்படுத்த முடியாது. பார்க்கிறவன் யாருமே இல்லையெனில் ஆகாயம் நீலமாக இருக்குமா என்று சங்கரர் கேட்டார். பார்க்கிறவன் இல்லையெனில் விளைவு இல்லை. விளைவு இல்லையெனில் விளைவுகளின் மூலம் அந்தத் துகளின் இயற்கையைப் பற்றி இவன் ஆராய்ந்து கண்டுபிடிக்கும் முடிவு இல்லை. இதனால் நம் பிரபஞ்சத்தின் இயற்கையை நம்மால் தனிப் பட்டு ஆராயவே முடியாது. இந்த க்வாண்டம் தத்துவம் என்பதே தனிப்பட்ட ஒரு சித்தாந்தமில்லை. பார்க்கிறவன் பார்க்கிற இரண்டும் ஒருமித்து இணைந்த விஷயம். தனிப்பட்ட துகள்கள் என்று சொல்வது ஒருவித சௌகரியத்துக்காகத்தான். உண்மையிலேயே அவை துகள்களா என்று யாருக்கும் தெரியாது. தெரிந்துகொள்ள முடியாது. நம்மிலிருந்து விலகின உண்மையை நம்மால் அறிந்து கொள்ளவே முடியாது.

நியல்ஸ்போர் சொன்னபடி "இந்த மாதிரி தனிப்பட்ட துகள்கள் என்பதெல்லாம் ஒருவிதக் கற்பனைதான். அவைகளை நாம் அறிந்து கொள்வதெல்லாம் மறைமுகமாகத்தான்."

டேவிட் போம் என்னும் மற்றொரு விஞ்ஞானி 'பிரபஞ்சம் முழுதும் விரவியிருக்கும் ஒரு விதமான ஒருமைப்பட்ட உறவு நிலைதான் உண்மை' என்கிறார்.

வேதாந்தி அரவிந்தர் சொன்னதையும் விஞ்ஞானி ஓப்பன்ஹைமர் சொன்னதையும் கீழே கொடுத்திருக்கிறேன்.

"நம் எதிரே காணும் பொருள் தனிப்பட்ட ஒன்றல்ல. பிரபஞ்சத்தின், ஒரு பெரிய உண்மையின், நாம் உணரும், காணும் அத்தனையும் சேர்ந்த ஒரு மஹா உண்மையின், ஒரு சிறிய வெளிப்பாடு."

"உலகம் என்பது பற்பல சம்பவங்களின் ஒன்றுசேர்ந்த ஒரு முழுமையின் வடிவம்தான்."

இந்த உண்மையைத்தான் பிரம்மம் என்கிறோம்.

"வானும் மண்ணும் காற்று வெளியும் எல்லா உயிர் மூச்சுக்களும் கலந்த ஒருவன்" என்று முண்டகோபனிஷத் சொல்வதும் இதைத்தான்.

இயக்கம்

நவீன பௌதிகத்தில் விஞ்ஞானிகள் இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து ஆழமாகப் பார்க்க ஆரம்பித்தபோது, அவர்களுக்கு எழுந்த சந்தேகங்களின் ஆச்சரியகரமான மறுபிரதிகள் நம் வேதாந்தத்திலும் கேள்விகளாக எழுப்பப்பட்டு, விடை தரப்பட்டு, அந்த விடைகளும் சில நவீன பௌதிகத் தத்துவங்களுடன் ஒத்துப் போகின்றன என்று காட்டுவதே என் குறிக்கோள். எல்லாவற்றையும் முன்பே நாம் கண்டுபிடித்துவிட்டோம் என்று நான் ஒரு காலும் ஒப்புக்கொள்ள மாட்டேன். சிருஷ்டியைப் பற்றிய சில ஆதார சந்தேகங்கள் திரும்ப எழுப்பப்படுகின்றன; அவ்வளவே!

நவீன பௌதிகத்தின் அணுவுக்குள் புகுந்து புறப்பட்ட ஞானம் நமக்குச் சொல்வது என்ன? உள்ளே இருக்கும் துகள்கள் எல்லாம் சக்தியின் வடிவங்கள். அவை சதா சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று உறவாடுகின்றன. தத்தம் சக்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன. எப்போதும் அவை நகர்கின்றன. அவைகளை இன்ன இடத்தில் ஸ்திரமாக இருக்கின்றன என்று தனிப்படுத்திச் சொல்ல முடியாது. அவைகள் சக்திகளை இழக்கின்றன. புதிதுபுதிதாக மாறுகின்றன. சதா சுறுசுறுப்பான இந்த இயக்கத்தின் மூலம் ஏற்படும் ஒட்டுமொத்தமான வடிவமைப்புத்தான் வெளி உலகத்தில் நாம் காணும் வஸ்துக்களின் தோற்றங்கள். உன்னிப்பாகப் பார்த்தால் பிரபஞ்சம் முழுவதுமே ஓர் இயக்கம்தான். துடிப்புத்தான்; சக்தியின் துடிப்பு. இதை பௌதிகம் சொல்கிறது.

வேதாந்தத்தில் 'பிரம்மம்' என்கிற வார்த்தையைப் பார்த்தால் அது டாக்டர் ராதாகிருஷ்ணன் சொல்கிறபடி, "பிரம்மம் என்கிற வார்த்தைக்கு வளர்ச்சி என்று பொருள். எனவே அது உயிரையும் இயக்கத்தையும் மாறுதலையும் குறிக்கிறது."

"பிரம்மம் என்பது வடிவில்லாதது. அழிவில்லாதது. சதா இயங்குவது" என்கிறது பிரகதாரண்யக உபனிஷத். கண்ணன் கீதையில், "நான் செயல்படவில்லை என்றால் இந்த உலகங்கள் அழிந்துவிடும்" என்கிறார்.

பிரபஞ்சம் முழுவதும் இயக்கம்தான்: செயல்பாடுகள்தாம்.

பிரபஞ்சத்தின் துகள்கள் கணக்கில்லாத முறைகளில் ஒன்றுக் கொன்று உறவாடிக்கொள்ளலாம். ஆனால் அந்த உறவுகள் ஒரு சில வகைகளுக்குள்தான் பெரும்பாலும் இருக்கின்றன. எனவே அணுக்கருவுக்குள் இருக்கும் துகள்களை நாம் ஆராயும்போது, ஒரு வித ஒழுங்கை கவனிக்கிறோம். நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்துப் பொருட்களும் மூன்று முக்கியமான துகள்களால் ஆனவை. ப்ரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் இவைகளுக்கு எடை உண்டு. மற்றொரு துகள் நாம் முன்பு சொன்ன ஃபோட்டான். இதற்கு எடை இல்லை. இது மின்காந்த சக்தியின் ஒரு சிறிய துணுக்கு. ப்ரோட்டான், எலக்ட்ரான், ஃபோட்டான் இவை மூன்றும் ஸ்திரமான துகள்கள். அவை சதா இருக்கக்கூடியவை. ஏதாவது பலத்த மோதலில் அவை அழிக்கப்படலாம். பெரும்பாலும் அவை ஸ்திரமானவையே. ஆனால் நியூட்ரான் என்பது சுயமாக அழியக் கூடியது–அழிவது என்றால் கலைந்துபோய்விடுவது. இந்த அழிவை அல்லது கலைவை 'பீட்டா டீக்கே (Beta decay)' என்கிறார்கள். இந்த விதத்தில் ஒரு நியூட்ரான் கலைந்துபோகும்போது ப்ரோட்டானாக மாறுகிறது. உடன் ஓர் எலக்ட்ரானும் உண்டாகிறது. மேலும் நியூட்ரீனோ என்று ஓர் எடையில்லாத ஸ்திரமான துகளும் ஏற்படுகிறது.

கதிர் இயக்கப் பொருள்களிலிருந்து இந்த வகை நியூட்ரான் கலைவு ஏற்படும்போது–அந்தப் பொருட்களின் இயற்கை மாறுகிறது. எலக்ட்ரான் வெளிப்படும்போது, சக்திவாய்ந்த ரேடியேஷன் உண்டாகிறது. இதை உயிரியல் மருத்துவ சாஸ்திரங்களில் பயன் படுத்துகிறார்கள். நியூட்ரீனோவைப் பிடிப்பது ரொம்பக் கஷ்டம். அதற்கு எடையில்லை. மின்சக்தியும் இல்லை. இந்த ஒவ்வொரு துகளுக்கும் ஓர் எதிர்த்துகள் (anti particle) இருக்கிறது என்று கண்டுள் ளார்கள். ஃபோட்டானுக்கு எதிர்த்துகள் ஃபோட்டானே தான். எலக்ட்ரானுக்குப் பாஸிட்ரான், ப்ரோட்டானுக்கு ஆண்ட்டி ப்ரோட்டான். அதேபோல் நியூட்ரானுக்கும் நியூட்ரீனோவுக்கும் ஆண்ட்டி நியூட்ரான், ஆண்ட்டி நியூட்ரீனோ.

நியூட்ரானின் கலைவில் வெளிப்படுவது இந்த வகை ஆண்ட்டி நியூட்ரீனோதான் என்று சொல்கிறார்கள். இந்தத் துகள்களைப் போல் நூற்றுக்கணக்கான துகள்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஆனால் அவை யாவும் மிகவும் தற்காலிகமான துகள்களே. சிறிது காலம், மிகச் சிறிது காலம் வாழும் விட்டில் பூச்சிகள் இந்தத் துகள்கள். பெரும்பாலானவை ஒரு செகண்டில் பத்து லட்சத்திற்கு ஒரு பங்கே வாழக்கூடியவை. இருந்தும் இந்தத் துகள்களின் மிகச் சிறிய அளவுடன் ஒப்பிட்டால் இந்தச் சிறிது காலம்கூட நம்முடைய முழு வாழ்நாளுக்கு ஒப்பாகும். இவைகளை மறைமுகமாக 'பபிள் சேம்பர்'களில் படம் பிடித்து இவைகள் இருப்பதை அறிந்துகொள் கிறார்கள். ஹேட்ரான்ஸ் லெப்டான்ஸ் என்கிற பிரிவில் பேரியான்.

மெஸான் என்கிற உபபிரிவில் மியூவான், மையான், கவான் என்று பற்பல சின்னத் துகள்களை அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். இந்தத் துகள்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று உறவாடும்போது மிகச் சிறிது காலம் இயங்குகின்றன. அழிகின்றன. வேறு துகள்களாக மாறுகின்றன. இவைகளுக்குள் ஏற்படும் உறவாடல்கள் மிகச் சிக்கலானவை. இந்தச் சிறிய உலகத்தில் சக்தி துகள்களாகவும், துகள்கள் சக்தியாகவும் அடிக்கடி விந்தையாக மாறிக்கொண்டே இருப்பதைப் படம் பிடித்திருக்கிறார்கள். சற்று நேரம் ஒரு துகள் நகர்கிறது. மற்றொரு துகளுடன் மோதுகிறது. அப்போது சக்தி வெளிப்படுகிறது. அந்த சக்தியின் பாதிப்பால் புதிய துகள்கள் பிறக்கின்றன. இந்த மாதிரி உறவாடல்களை எல்லாம் அந்த விஞ்ஞானிகள் தத்தம் சோதனைக்கூடங்களில் செயற்கை முறையில் பார்ட்டிக்கிள் ஆக்ஸலேரேட்டர்கள் துணை கொண்டு செய்து 'பபிள் சேம்பரில்' இந்த விந்தையான பாதைகளைப் படம் பிடிக்கிறார்கள். இயற்கையிலும் இந்த வகை மாறுதல்கள் எப்போதும் நிகழ்ந்துகொண்டியிருக்கின்றன. விண்வெளியிலிருந்து வரும் காஸ்மிக் கதிர்கள்–அவை எங்கிருந்து வருகின்றன என்பது சரியாகத் தெரியவில்லை. சதா பற்பல துகள்கள், சக்தி வெளிப்பாடுகள் மூலம் நம் பூமியைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. இவை நம் உலகத்தின் காற்று வெளியைத் தாக்கும்போது, காற்றின் அணுக்கள் சிறு துகள்களாகச் சிதறி, அந்தத் துகள்கள் மற்றும் சிதறல்களை ஏற்படுத்தி சில சமயம் இந்த விதத்தில் 'துகள் மழை' ஏற்படுவதுண்டு. விஞ்ஞானிகளின் செயற்கையான பரிசோதனைகளில் நிகழும் அதே நடனம் இயற்கையாக இந்த காஸ்மிக் கதிர்கள் மூலமும் நிகழ்கின்றன. இந்த விண்வெளித் தூதர்களின் வரவால் நம் காற்று வெளியில் சாஸ்வதமான ஒரு சக்தி நடனம் ஏற்படுகிறது. புதிய துகள்கள் தோன்றுகின்றன. பழைய துகள்கள் அழிக்கின்றன. வேஷம் மாறுகின்றது.

இந்த இயக்கங்கள் முழுவதுமே க்வாண்டம் தத்துவத்தின் அடிப்படையில் நிகழ்பவையே. இந்தத் துகள்கள் ஒன்றோடொன்று பல முறைகளில் உறவாடும்போது நிகழ்வது சிருஷ்டியும்–அழிவும் தான். மாறுபட்டு மாறுபட்டு வசீகரமான, எண்ணற்ற வகைகளில் இந்த 'காஸ்மிக்' நடனம் நிகழ்கிறது. இந்த மாறுதல்களில் ஒருவித இயக்கமும் லயமும் இருப்பதை விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கென்னத் ஃபோர்ட் என்பவர் தன் புத்தகத்தில், "ஒவ்வொரு ப்ரோட்டானும் இந்த படைக்கும்–அழிக்கும் நடனம் செய்கிறது" என்கிறார்.

சிவதாண்டவத்தின் தத்துவமும் பின்னணியும் இதுதான்.

'பிரம்ம ராத்திரியில் இயற்கை செயலற்று இருக்கையில், சிவதாண்டம் உயிர் அளிக்கிறது. சிவன் எழுகிறான். அவன் நடனம் அசைவில்லாப் பொருட்களின் ஊடே உயிர் இயக்கத் துடிப்பலைகளை அனுப்புகிறது. எல்லா ஜடப்பொருள்களும் நடனமாடுகின்றன. அவன்

நடனமாடும்போது அவைகளுக்கெல்லாம் உயிரளிக்கிறான். நடன மாடிக்கொண்டே அவைகளை எல்லாம் அழிக்கிறான். அவை அவைகளை அழித்தும் சிருஷ்டித்தும் இடைவிடாது நடனமாடிக் கொண்டிருக்கிறான்.'

நவீன பௌதிகத்தில் சிவதாண்டவம் அணுக்களின் உட்கருவுக்குள் சதா நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

உள்ளத்தின் உள்

நம் வேதாந்தம் ஆத்மாவைப் பற்றி நிறையச்சொல்கிறது. நித்தியமான, அழிவில்லாத ஒரு தெய்வாம்சமாக ஆத்மாவைப் பேசுகிறது. 'வேதங்களும் உபநிஷத்துக்களும் தந்துள்ள சுருத்துக்களை தர்க்க இயல்புடனும், ஒழுங்குமுறையுடனும் அவற்றின் சாரத்தை வடித்து, சுருக்கமாக நம் மனசில் பதியும் வகையில், இலக்கிய நயத்துடன அவைகளை விளக்கும் நோக்கத்துடன் ஸூத்ரங்கள் எழுதப்பட்டன. இவற்றில் பிரம்மஸூத்ரம் முக்கியமானது. உபநிஷத்துக்களின் போதனைகளைச் சுருக்கமாக செய்யுள் வடிவில் தருகிறது. பிரம்மஸூத்ரம். எனினும், பிரம்மஸூத்ரத்துக்கும் விளக்க உரைகள் தேவைப்பட்டன. ராமானுஜரின் 'ஸ்ரீபாஷ்யம்' என்னும் உரையும், 'சங்கரபாஷ்ய'மும் இவைகளில் பிரசித்தம். சங்கரரின் உரை காலத்தில் முற்பட்டது. அத்வைதக் கருத்துக்களின் அடிப்படைகளை விவரிப்பது. அதில் நிலையான, முழுமையான உண்மை ஒன்று இருப்பதை சங்கரர் சொல்கிறார். 'நிற்குண பிரம்மம்' என்றார் அதை. அது ஒன்றேதான். பல்வேறு தோற்றங்களை அது காட்டினாலும், அவை யாவும் ஒன்றேதான் என்கிறார். தாழ்ந்த அறிவு என்பது அவித்தை–வித்தை அல்லாதது. மாயையும் அவித்தையும் உள்ள உலகத்திற்கு உரியதுதான். இஷ்டதெய்வத்திற்குப் பக்தி பண்ணிக்கொண்டிருப்பது. ஆனால் மேன்மையான அத்வைதப்படி தேவ வழிபாடோ, தேவதேவன் ஒருவனது வழிபாடோ முக்கியம் அல்ல. இரண்டற்ற ஒரே பொருளான பிரம்மமும் (பரமாத்மாவும்) ஜீவாத்மாவும் ஒன்றே. முடிவில் ஜீவன் பிரம்மத்துடன் தானாகக் கலந்துகொண்டு ஒன்றாகிவிடுகிறது. இது சுருங்கச் சொன்னால், அத்வைதத்தின் முக்கியமான சித்தாந்தம்.

ராமானுஜரின் விசிஷ்டாத்வைதம் இதற்குச் சற்று மாறுபடுகிறது. உண்மையான அத்வைதத்திற்கு ஞானச் சிகரத்தை எய்த வேண்டும். விசிஷ்டாத்வைதம் ஆத்மாவை 'சித்' என்றும், இயற்கையை 'அசித்' என்றும், கடவுளை ஈசுவரன் என்றும் குறிப்பிட்டு, இந்த முப்பொருளும் நித்தியம் என்கிறது. சித் அசித் என்ற வகுப்பில் அடங்கியுள்ள உலகத்து எல்லாப் பொருட்களும் ஈசுவரனுக்கு சரீரம் என்று ராமானுஜர் கூறினார். இதனால் நம் உலகைச் சார்ந்த பக்தி

முதலிய மார்க்கங்களுக்கு அவர் வழிவகுத்தார். ஞானியின் கல்வி கேள்விகள் நிறைந்த உள்ளத்தைக் காட்டிலும் பக்தரின் கள்ளமற்ற குழந்தை உள்ளமே கடவுளுக்கு உவப்பானது என்றார்.

இரண்டு சித்தாந்தங்களுக்கும் ஆதாரமான விஷயம் நம்முடைய வேத உபநிஷத்துக்கள்தான். அவற்றை வியாக்கியானம் செய்யும் போது இந்த வேறுபாடு தோன்றுகிறது. இருப்பினும் 'ஆத்மா என்கிற ஒரு சித்தாந்தத்தில் இரண்டிற்கும் ஒற்றுமையான சில விஷயங்கள் உள்ளன. அதை மட்டும் எடுத்துக்கொள்வோம். சங்கரரின் 'ஜீவாத்மா' வாயினும் சரி. ராமானுஜரின் 'சித் அசித்'தாயினும் சரி. இரண்டுமே பரம்பொருளின், ஒரு சாஸ்வதமான, அழியாத உண்மையின் அம்சம் தான் என்று இருவரும் சொல்கிறார்கள். எளிமையாகச் சொன்னால் நம் எல்லோரிடமும் கொஞ்சம் கடவுள் அம்சம் இருக்கிறது என்கிறார்கள். அதை ஆத்மா என்கிறார்கள், உயிர் என்கிறார்கள்.

'உடல் மிசை உயிர் என' என்று நம்மாழ்வார் சொல்வது அதைத்தான்.

"உள்ளத்தில் உள்ளான் என்று ஓர்"– (அறிந்துகொள்) என்னும்போது கடவுள் நம் உள்ளத்தில் இருக்கிறான் என்கிறார். உள்ளம் என்பது என்ன? மனசா? மனசுதான் ஆத்மாவா? நம் இறப்பையும் மீறின ஒரு நித்தியம் நமக்குள் இருக்கிறதா? அது எங்கே இருக்கிறது? மனதிலா? மனதிற்கும் அப்பாற்பட்ட ஒன்றிலா? தொடர்ச்சியாக ஒரு காலகட்டத்தில் நாம் சில வருஷங்கள் உயிர் வாழ்கிறோம். பிறப்பிலிருந்து இறப்புவரை நம் உடலும் உள்ளமும் விருத்தியாகிறது. இறந்து அழியும்போது நாமும் அழிந்துவிடுகிறோமா? முழுவதுமே அழிந்துவிடுகிறோமா? அல்லது நம்மிலிருந்து ஏதாவது பிரிந்த பரம்பொருளை அல்லது ஒரு சாஸ்வத உண்மையைப் போய்ச் சேருகிறதா?

'நாம்' என்பது என்ன? நம் எண்ணங்களா? நம் விழிக்கும் நாட்களின் ஒட்டுமொத்தமான அனுபவங்களா? நம் ஞாபகமா? யோசித்துப் பாருங்கள். இந்தக் கேள்விக்கு யாரும் சரியாகப் பதில் சொல்லவில்லை. விஞ்ஞானத்தில் நம்மைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் எவை? நம்மைப் பற்றி என்றால் நம் உடலைப் பற்றி அல்ல. உணர்வைப் பற்றி...

ஹிப்பாக்ரிடஸ், "உணர்வுக்கு மூளை என்பது ஒரு தூதன்" என்றார். கி.மு. 5–ம் நூற்றாண்டில் மூளைக்கும் அப்பாற்பட்ட ஓர் உணர்வு இருப்பதை ஹிப்பாக்ரிடஸ் அப்போதே சொன்னாலும், நம் உடலின் மையக் கேந்திரம் நம் இதயம்தான் என்று பல காலம் நம்பி வந்திருக்கிறார்கள். பைபிளில் "Mary kept all these things and pondered them in her heart" என்று வருவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மனம் என்பதை வெப்ஸ்டர் ஆங்கில அகராதி, ஒரு தனிமனிதனுக் குள் சிந்திக்கும், உணரும், செயல்படுத்தும், பகுத்தறியும் பகுதி' என்கிறது. எங்கே இருக்கிறது இது? மூளைக்குள்ளா? பார்க்கலாம்!

மூளையைப் பற்றி, அது செயல்படும் விதத்தைப் பற்றி நிறையவே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

மூளையின் செயல்பாட்டுக்கு ஆதாரமான விஷயம் 'நியூரான்கள்' எனப்படும் நரம்பு ஸெல்கள். இவைகள் சின்னச் சின்ன மின்சாரத் துடிப்புக்களை ஆணைரூபமாக 'ஆக்ஸோன்கள்' மூலம் அனுப்பி, நம் உடலின் செயல்பாட்டைக் கவனிக்கின்றன. இந்தச் செயல்பாட்டு இயக்கத்தை ஆணையிடுவதும் மூளைதான். 'க்ரே மாட்டர்' என்று கூறப்படும், 'நியூரான்' சேர்க்கைகள் தீவுத்தீவாக அமைந்து அவை களுக்கிடையில் மிகச் சிக்கலான இணைப்புக்கள் மூலம் மூளையின் கோஷ்டிகானம் நிகழ்கிறது. மூளையின் அடிப்பாகமும், ஸ்பைனல் கார்டு என்று சொல்லப்படுவதும் நம்முடைய தன்னிச்சையான செயல்களைக் கவனிக்கின்றன. தசைகளின் இறுக்கம், உட்காரும் விதம், நடக்கும் நளினம், உடலின் உஷ்ணக் கட்டுப் பாடு, தூக்கம், மூச்சுவிடுதல், இருமுதல் என்று எத்தனையோ, தீவிர சிந்தனை தேவையில்லாத, அன்றாட வேலைகள் உள்ளன அல்லவா? அவை களை எல்லாம் கட்டுப்படுத்துகின்றன.

மூளையை இரண்டு பாகங்களாகச் சொல்கிறார்கள். 'டெலென் ஸஃபாலா' என்னும் புதிய மூளை, டைஎன்ஸஃபாலா என்னும் மேல் அல்லது பழைய மூளை. இந்த இரண்டு பகுதிகளுக்கும் வந்து சேரும் நரம்பு மின் துடிப்புக்கள் பாகுபடுத்தப்பட்டு, வெவ்வேறு இடங்களுக்குப் பிரிந்து, அங்கே அவை அடையாளம் கண்டுபிடிக்கப் படுகின்றன. உதாரணமாக, 'டைஎன்ஸஃபாலா' என்கிற பகுதியில் நாம் வேதனைகளை உணர்ந்துகொள்ளும் பகுதி இருக்கிறது. மற்ற முக்கியமான உணர்ச்சிகளுக்கு ஏற்பட்ட ஃபைபர் இணைப்புக்கள் 'ஸெரிப்ரல் கார்ட்டெக்ஸ்' என்னும் பகுதியின் வெவ்வேறு இடங் களுக்குச் செல்கின்றன. தொடுவதும், படுவதும், பார்ப்பதும், கேட்பதும் பகுத்தறியப்படுகின்றன. அறிதல் என்பது என்ன? ஒரு வாசனையை, ஒரு காட்சியை அல்லது ஒரு பாட்டை நம் முன் அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் விந்தை இது. இதை 'இண்டர்ப்ரெட்டிவ் கார்ட்டெக்ஸ்' என்கிறார்கள்.

ஒரு குழந்தை பிறக்கும்போது, அதன் மூளையில் 'டெம்போரல் லோப்' என்னும் பகுதியில் எல்லாமே புதுசாக இருக்குமாம். அதில் அனுபவ முத்திரைகள் ஏதும் பதியாமல் இருக்கிறதாம். பாட்டுப் பதியாத காஸட் டேப்பைப் போல! குழந்தை வளர வளர, தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் உணர உணர, இந்த 'டெம்போரல் லோப்' பகுதி கொஞ்சம்கொஞ்சமாக 'ப்ரொக்ராம்' பண்ணப் படுகிற தாம். ஒவ்வொரு பகுதியும் அவ்வப்போது நிகழும் அனுபவங்களை, புலன் உணர்வுகளை, முன்பு பார்த்த–கேட்ட அல்லது உணர்ந்த அனுபவங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து, அடையாளம் கண்டுகொள்ளும் திறமையைக் கற்றுக் கொள்கின்றனவாம்.

மூளையில் அறுவை சிகிச்சை செய்யும்போது இந்த விஷயங்களை

எல்லாம் சற்றுத் தீர்மானமாகவே கண்டுபிடித்திருக்கிறார்கள். நம் முன்னாள் அனுபவங்கள் அத்தனையும் நம் மூளைக்குள்தான் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பரிசோதனை மூலம் கண்டறிந்திருக்கிறார்கள். மூளையின் சில பகுதிகளை ஒரு சிறிய மின்சார அதிர்ச்சி தரும் ஊசியால் நிரடும்போது, நம் முன்னாள் சம்பவங்கள் எல்லாம் மறுபடி உயிர்பெறுமாம். கனவுபோல் இல்லாமல் முன்னாள் சம்பவம் துல்லியமாக மறுபடி வருகிறதாம். ஒரு பெண்மணிக்கு இந்த விதத்தில் ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில் நிரடிய போது, திரும்பத் திரும்ப சமையல் அறையில் இருப்பதும், அறைக்கு வெளியே அவர் மகன் குரல் கேட்பதுமாக உணர்ந்தாளாம். எனவே நம் சிந்தனை முழுவதும் மூளையின் நியூரான், ஆக்ஸோன் ஸெல் மின்சாரத் துடிப்புக்கள் என்று இந்த இயக்கங்களை எல்லாம் விவரிக்க முடிகிறது. பலாப்பழ வாசனை என்றால் அதற்கு மூளையில் ஓர் இடத்தில் ஒரு நியூரான் தயார் செய்யப்பட்டிருக்கிறது. பிறக்கும் போது மூளையின் பெரும்பாலான சாத்தியங்கள் காலியாகத்தான் வருகின்றன. அனுபவம் ஏற்பட, ஏற்பட அதது அதனதன் இடத்தில் 'ப்ரொக்ராம்' பண்ணப்படுகிறது. எல்லாம் சரிதான்–

ஆனால் இந்த இயக்கங்களை இயக்குவது எது? அதே மூளையா? இருக்கமுடியாது. அல்லது அந்த ஸெல்களின் ரசாயன அமைப்பில் பொதிந்திருக்கும் ரகசியமா? கற்றுக்கொள்வது எப்படி என்பது புரிகிறது. ஆனால் எது கற்றுக்கொள் என்று சொல்கிறது? அது யாருக்கும் சரிவரத் தெரியவில்லை.

பிஷப் பெர்க்லி, "Matter has no existence except for its in mind" என்றதையும்,

சார்லஸ் ஷர்ரிங்டன் என்கிற நோபல் பரிசு விஞ்ஞானி, "That our being should consist of two fundamental elements offered, I suppose, no greater inherent improbability than that it should vest on one only" என்றதையும் யோசித்துப் பாருங்கள்.

நம் மனத்துக்கு அப்பாற்பட்ட மற்றொன்று இருப்பதாகவே சொல்கிறார்கள். இதைத்தான் நம் இந்துமதம் ஆத்மா என்கிறது என நான் நினைக்கிறேன்.

இதைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லுகிறேன்.

நீரும் இல்லை நிலவும் இல்லை

ஆத்மா என்று ஒன்று இருக்கிறதாகத்தான் தோன்றுகிறது. அதை நம்மால் உணர முடியும் என்றுகூடத் தோன்றுகிறது. நம் நிஜ நாட்களின் சில அபூர்வமான கணங்களில் நாம் அந்த ஆத்மாவைத் தொடமுடியும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். எல்லோருமே உலக சிந்தனைகளிலிருந்து நம்மை விடுதலை வாங்கிக்கொள்ளச் சொல்கிறார்கள். எண்ணங்களே இல்லாத ஒரு வெட்டவெளியைத் தேடச் சொல்கிறார்கள். அப்படித் தேடித் தொடும்போது கடவுளை அல்லது சாஸ்வத உண்மையைத் தொடுகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த அனுபவத்தை உணராதவர்களுக்கு இதை எள்ளி நகையாடுதல் எளிது. ஆனால் பற்பல மதங்கள், பற்பல விதங்களில் இந்த ஒருமித்த– எண்ணமில்லாத சாஸ்வத வெட்டவெளியைத் தொடும்படிப் போதிக்கின்றன. சித்தர் பாடல்களிலிருந்து 'ஜென் (Zen) பௌத்தம்' வரையில் இந்த அனுபவத் தேடல் விரவிக் கிடக்கிறது. குறிப்பாக பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பலில் சில அபாரமான வரிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கீழ்க்காணும் வரிகளுக்கு அர்த்தம் கொடுக்க விரும்பவில்லை. எளிய ஆனால் கொஞ்சம் மயக்கும் வரிகள்தாம். இவற்றை சிந்தித்துப் பாருங்கள். இந்த சித்தர் தேடுவது எந்த விதமான அனுபவத்தை என்று யோசித்துப் பாருங்கள். இதைப் பற்றி நீங்களே உங்களுடைய சொந்த முடிவுக்கு வருவது முக்கியம்.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து
தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?

○

சேயாய் சமைந்து செவிடுமை போல் திரிந்து
பேய் போல் இருந்து உன் பிரமை கொள்வதெக்கலாம்?

○

பற்றற்று நீரில் படர் தாமரை இலைபோல
சுற்றத்தை நீக்கி மனம் தூர நிற்ப தெக்காலம்?

○

மனதை ஒரு வில்லாக்கி வாலறிவை நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?

○

நின்றநிலை பேராமல் நினைவில் ஒன்றும் சாராமல்
சென்றநிலை முத்தியென்று சேர்ந்தறிவது எக்காலம்?

○

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில் வருவார்போல்
கூடுவிட்டுப் பாயும் குறிப்பறிவது எக்காலம்?

○

ஆட்டம் ஒன்றும் இல்லாமல் அசைவு சற்றும் காணாமல்
தேட்டம் அற்ற வான்பொருளைத் தேடுவதும் எக்காலம்?

○

தான் என்ற ஆணவமும் தத்துவமும் கெட்டொழிந்தே
ஏன் என்ற பேச்சும் இலாது இலங்குவதும் எக்காலம்?

○

எண்ணத்திற்கும்–சிந்தனைக்கும் அப்பாற்பட்ட ஒன்றை, வார்த்தைகளால் பேசமுடியாத ஒன்றை, அனுபவத்தால் உணர விரும்புகிறார் சித்தர்.

ஜென் (Zen) பௌத்தம் இந்த 'உணர்ந்துகொள்வதை' வேறுவிதத்தில் தேடுகிறது. அதுவும் நம் உள்ளுக்குள் இருக்கும் இயற்கையைப் பற்பல கதவுகளைத் திறந்து காட்ட முற்படுகிறது. மனதை விடுதலை செய்ய முற்படுகிறது. மனதை விடுதலை செய்ய முற்படுகிறது. நம்மைக் கட்டுப்படுத்தும் தின வாழ்க்கையின் சிந்தனைகளிலிருந்தும்–தர்க்கவாதங்களிலிருந்தும் விடுதலை. அப்படி முற்படும்போது பளிச் சென்று ஒரு மின்னல் அடித்தாற்போல் ஞானம் பிறப்பதை சொல்கிறது. 'ஸாடோரி' என்று சொல்லும் இந்த மின்வெட்டு எப்படி. அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதை ஒரு 'ஜென்' குட்டிக் கதையிலிருந்து உதாரணம் பார்ப்போம்.

ஒரு பெண் ரொம்ப நாள் 'ஜென்' பற்றி ஒரு குருவிடம் பயின்று கொண்டிருந்தாள். அவளுக்கு ஞானம் கிடைக்கவே இல்லை.

ஒரு நாள் ராத்திரி நல்ல நிலா. அவள் மூங்கில் போட்டுக் கட்டிய பழைய பக்கெட்டில் தண்ணீர் எடுத்துச் சென்றுகொண்டிருந்தாள். அப்போது மூங்கில் உடைந்து, பக்கெட்டின் அடிப்பாகம் சட்டென்று விழுந்துவிட்டது. அவள் அந்தக் கணத்தில் ஞானம் பெற்றுவிட்டாள்! சுதந்திரம் பெற்றுவிட்டாள்!

இதை அவள் ஒரு கவிதையாக எழுதியிருக்கிறாள்:

"இப்படியும் அப்படியும் நான் பழைய பாத்திரத்தைக் காப்பாற்ற முயற்சித்தேன். திடீர் என்று அடிப்பாகம் விழுந்தது.

பாத்திரத்தில் இனி தண்ணீரும் இல்லை. தண்ணீரில் இனி நிலவும் இல்லை!"

இந்தக் கவிதையைக் கொஞ்சம் யோசித்துப்பார்த்தால், இதன் வெவ்வேறு அர்த்தங்கள் புலனாகும். (அப்படி யோசிப்பதுகூடத் தவறு என்று சொல்லுவார்கள்!) 'ஜென் பௌத்தம்' என்பது இந்தியாவிலிருந்து புறப்பட்டு ஜப்பானுக்குச் சென்ற ஞானம். 'ஜென்' என்ற சொல் தியானம் என்பதிலிருந்து வந்தது. சமீபத்தில் மேற்கத்திய சிந்தனைகளை இது அதிகம் பாதித்திருக்கிறது. Zen and the art of Motorcycle Maintenance' என்றெல்லாம் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள்!

இந்தியர்களுக்கு ஜென் என்பது புதிதல்ல. இது புறப்படுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் தேடல் நம் புராதன சமஸ்கிருத நூல்களில் காணப்படுகின்றன. விஞ்ஞான பைரவரின் போதனைகள் சுமார் நாலாயிரம் வருஷத்துக்கு முந்தியது என்கிறார்கள். அதேபோல் 'மாலினி விஜயதந்திரம்' என்கிற அரிய நூல் அதனைக் காட்டிலும் பழைமையானது என்கிறார்கள். சிவன் முதல் முதல் தேவிக்குச் சொன்ன வாசகங்கள் வாய்மொழிப் பரவலாக நூற்றாண்டுகளாகப் பற்பல முறை ஸ்மரிக்கப்பட்டு, எழுதப்பட்டு இன்றுவரை வந்திருக்கின்றன என்கிறார்கள். இந்த நூல்களில் ஒருவிதமான நடுநிலைப்படுத்துதலைப் பற்றி பல வாசகங்கள் உள்ளன. சிந்தனையை ஒருமைப்படுத்துவது பற்றி –

இதன் சில பகுதிளைப் பார்க்கலாம்.

தேவி சொல்கிறாள்:

"பெருமானே, உன் உண்மை என்ன?

இந்த விந்தை நிறைந்த பிரபஞ்சம் என்பது என்ன?

இதன் விதை என்ன? இதன் மையம் என்ன?

உருவத்துக்கு அப்பாற்பட்ட உயிர் என்பது என்ன? உருவத்துள் ஊடுருவும் உயிர் என்பது என்ன? அதனுள் எப்படி நாம் நுழைவது? காலம், தூரம், பெயர், வர்ணனை இவைகளை எப்படிக் கடந்து செல்வது?"

சிவன் பதில் தருகிறார்:

"பிரகாசமானவளே! இந்த அனுபவம் உன் மேல்மூச்சுக்கும் கீழ்மூச்சுக்கும் இடையே தோன்றலாம். இரண்டு மூச்சுக்களின் இடையில், ஒரு கணத்தில் சக்தியற்ற, சக்தி நிரம்பிய மையத்தைத் தொட முயற்சி செய்!

"தேவி! எழுத்துக்களாகப் பார். அப்புறம் அவைகளை சப்த ரூபங்களாகப் பார். பின் அவைகளை எல்லாம் புறக்கணித்து விட்டு அவைகளின் உள்ளே இருக்கும் சுதந்திரத்தைப் பார்.

"கண்களை மூடிக்கொண்டு உன்னுள்ளேயே விவரமாகப் பார். உன் இயற்கையைப் பார்.

"தலையில் இருக்கும் ஏழு வாசல்களையும் கைகளால் மூடிக் கொண்டு கண்களுக்கு இடையே இருக்கும் வெளியில் எல்லா பிரபஞ்சமும் அடங்கிவிடுவதைப் பார்."

இந்த வகையில் நூற்றிப் பன்னிரண்டு முறைகள் சொல்லும் இந்த நூலும் நம்மிலிருந்து, நம் நினைப்பிலிருந்து, விடுபட்ட ஒன்றைத்தான் உணரச் செய்கிறது. இந்த அனுபவத்தை உணர்வதற்கு யோகம் இருக்கிறது என்கிறார்கள். தியானத்தில் பல வகைகள் சொல்கிறார்கள். மேற்கத்தியர் போதைப் பொருள்களின் உதவியைக் கூட நாடுகிறார்கள்.

விளிம்பு

விஞ்ஞானத்திற்கும் ஞானத்திற்கும் என்ன தொடர்பு? விஞ்ஞானம் வெளியுலகத்தில் நடப்பதை ஆராய்ந்து சொல்கிறது. ஞானம் என்பது மனத்தில் உணர்வது, புலன்களால் உண்மையை அறிவது. இவை யிரண்டும் வேறுவேறா? இல்லை. விஞ்ஞானத்தில் அத்தனை உண்மை களுக்கும் கடைசியில் நம் புலன் உணர்வுகள்தாம் இருக்கின்றன என்பது யோசித்துப்பார்த்தால் புரியும். என்னதான் விநோதமாகக் கணக்குப் போட்டு அடிப்படை சித்தாந்தங்களை அமைத்தாலும் இறுதியில் நம் உணர்வின் ஏதாவது ஒரு பகுதியில்தான் அதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. நம் அறிவு அத்தனையுமே ஏதாவது ஒரு புலன் உணர்வைச் சார்ந்திருக்கிறது. அத்தனையும் நம் மனத்தில் ஏற்படும் பிம்பங்களே அல்லது மாறுதல்களே அல்லது பாதிப்பே.

உண்மை என்பது என்ன? நம் புலன்களுக்குத் தோன்றுவதுதான் உண்மையா? நாம் எல்லோருக்கும் உண்மையின் வடிவங்கள் அல்லது அங்கங்கள். நான், நீங்கள், இந்தப் புத்தகம், அந்த மேசை, அதோ தூரத்து நட்சத்திரம் எல்லாமே உண்மையின் அங்கங்கள். ஆனால் உண்மையான உண்மை என்பது என்ன? அது இருக்கிறதா, அதை நாம் அறிய முடியுமா? இந்தக் கேள்வி எதற்காக எழுகிறது? நாம் உண்மை என்று சொல்பவை எல்லாம் நம் நினைவின் வார்த்தைகளே, எண்ணங்கள், உணர்வுகள் எல்லாமே நம்மைச் சார்ந்தவை. இவை யெல்லாமே குறியீடுகள் (Symbols) இந்தக் குறியீடுகள்தாம் உண்மை என்று நாம் நினைக்கக் கூடாது. விஞ்ஞானமே ஒரு குறியீடுதான். ஒரு பாஷைதான். இவைகளுக்கெல்லாம் அப்பால் இருக்கிறது ஒரு உண்மை. குறியீடுகளில் சிறைப்படாத உண்மையைத் தேடச் சொல்கிறது நம் இந்து புத்தகங்கள்.

பிரபஞ்சத்தை நாம் பற்பல பகுதிகளாகப் பார்ப்பதுதான் வழக்கம். நான், நீங்கள், நட்சத்திரம், சூரியன், சந்திரன் இவையெல்லாம் பிரபஞ்சத்தின் பகுதிகள். நம் புராதன ஞானிகள் பிரபஞ்சத்தின் பல்வேறு பகுதிகள் ஒரே ஒரு தனிப்பட்ட முழுமையின் வடிவம்தான் என்று உணரச் சொல்கிறார்கள். உள்நோக்கு, சமாதி, ஜென் கூறும்

'ஸாட்டோரி', நிர்வாணம் என்பதெல்லாம் இந்த முழுமையை அடையச் செய்யும் முயற்சிகள்தாம்.

க்வாண்டம் தத்துவங்களை முழுமையாக அறிவதற்கு நம் தினசரி வாழ்க்கையின் பகுத்தறிவு நோக்கிலிருந்தே விடுபட வேண்டியது அவசியமாகிவிட்டது. (ஒரே சமயம் அலை, துகள் என்பதே பகுத்தறிவுக்கு சரிப்பட்டு வராத கோட்பாடு) க்வாண்டம் சிந்தனைகளால் ஏற்பட்ட பற்பல விளைவுகள் இவ்வகை பகுத்தறிவுச் சிறையிலிருந்து மீட்பைக் கேட்கிறது.

விஞ்ஞானமும் ஞானமும் ஒன்றாகச் சேர்ந்துவிடுகிறது.

ஒரு ஐக்கியமான பெரிய உண்மையை உணர முயல்வதில் உணர்வு என்பது என்ன? சந்தோஷம் என்பதை நம்மால் உணர முடிகிறது. 'சந்தோஷம்' என்கிற வார்த்தை நமக்கு சந்தோஷம் தருவதில்லை. உணரத்தான் வேண்டும். சந்தோஷம் என்கிற வார்த்தை நாம் முன்பு சொன்னதுபோல் ஒரு குறியீடு. இதுபோல பௌதிகம், விஞ்ஞானம் எல்லாமே குறியீடுகள்தாம்.

வர்ணிக்கும் சௌகரியத்துக்காக ஏற்பட்டவை. எழுத்து, பாஷை, சங்கீதம், நடனம் எல்லாமே இப்படித்தான். நம் கவனம் விஞ்ஞானம் என்னும் குறியீடு பற்றித்த.இம்மாதிரி குறியீடுகள் அமைத்துக் கொண்டதும் அந்தக் குறியீடுகளுக்கான கோட்பாடுகள் அமைக்கிறோம். 2 என்பது ஒரு குறியீடு. + என்பதும், 2+2=4 என்பது எல்லாம் கோட்பாடுகள். விஞ்ஞானம் முழுவதும் இந்த வகைக் குறியீடுகள்தாம். இந்த குறியீடுகளுக்குள் சில விதிகள் கண்டுபிடித்து பரிசோதனையுடன் ஒத்துப்பார்த்து பல்வேறு சாத்திரங்களை அமைக்கிறோம். இம்மாதிரி அமைத்த வெவ்வேறு விதிகளையும் கண்டுபிடிப்புகளையும் ஒட்டு மொத்தமாக விஞ்ஞான அறிவு என்கிறோம். யோசித்துப் பார்த்தால் இந்த அறிவு மொத்தமும், உண்மையின் ஒருவிதமான வடிவமைப்புக்கள் தாம். இந்த வடிவமைப்பே உண்மையில்லை. காந்தியின் படம் காந்தியில்லை. விஞ்ஞானத்தின் விதிகளுக்கும் பிரபஞ்சத்தின் அங்கங்களுக்கும் நெருக்கமாக ஒரு தொடர்பு இருக்கிறது. அந்தத் தொடர்பை இந்த விதிகளின் மூலமும் விதிகளால் கிடைக்கப்பட்ட அறிவின் மூலமும் சொல்ல முடியாது. குறியீடுகள் அனுபவமில்லை. உணர்தல் இல்லை. டேவிட் ஃபிங்கிள்ஸ்டைன் என்கிற பௌதிகப் பேராசிரியர் "இவ்வகைக் குறியீடுகளை வைத்துக் கொண்டு பெரும் பாலான உண்மைகளை விவரிக்க மட்டும்தான் முடியும்" என்கிறார்.

குறியீடு என்பது அனுபவத்தின் பாசாங்கு. குறியீடுகளின் விதிகளும் அனுபவத்தின் விதிகளும் ஒன்றல்ல. உண்மையை ஒருவித வடிவத்தில் காட்ட முடியாது.

"நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்று சொல்கிறீர்கள். விஞ்ஞானம் அதை நிரூபித்துக் காட்டு என்கிறது. நிரூபித்துக் காட்ட முடியும் என்றாலும் நிரூபணம் என்பது எந்த வகையிலும் சந்தோஷத்தின் நிஜம் அல்ல.

ஜே. எஸ். பெல் என்பவர் 1964ல் ஒரு புரட்சிகரமான விஷயத்தைச் சொன்னார். பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை விஷயங்களும் ஒன்றுக் கொன்று தொடர்பு உள்ளது என்று நிரூபித்துச் சொன்னார். பெல்லின் சித்தாந்தம் மிகவும் சிக்கலானது. அதைக் கொஞ்சம் எளிமைப்படுத்திச் சொன்னால் 'க்வாண்டம் தத்துவத்தின் கணக்குகள் சரியென்றால் உண்மையைப் பற்றி நம் பகுத்தறிவு கூறுவதெல்லாம் தப்பு' என்று நிரூபித்தார். க்வாண்டம் தத்துவத்தின் கணக்குகள் எல்லாமே சரி தான். எனவே பகுத்தறிவு தவறு! எப்படி பார்க்கலாம்?

பகுத்தறிவுக்குப் புறம்பானது என்பது எது? நீங்கள் என்னை வந்து சந்திக்கிறீர்கள். நாம் இருவரும் பேசிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய உரையாடல் நம் இருவரையும் மட்டுமே பாதிக்கிறது. பிரபஞ்சத்தின் மற்ற அங்கங்களை பாதிப்பதே இல்லை. இது பகுத்தறிவு.

நாம் பேசிக்கொள்வது பிரபஞ்சம் முழுவதையுமே ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கிறது என்று சொன்னால் அது நம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. ஆனால் க்வாண்டம் மெக்கானிக்ஸின்படி இப்படி நடந்தாக வேண்டும் என்று பெல் சொல்கிறார்.

பிரபஞ்சத்தின் நிகழ்ச்சிகளுக்கு ஒருவித உள்ளூர்த்தன்மை காரணம் (Local Causality) இருக்கிறது என்பது பகுத்தறிவு. நிகழ்ச்சிகளுக்கு ஒருவித பிரபஞ்சத்தன்மை இருக்கிறது என்பது பெல்லின் வாதம். இதை அவர் சும்மா சொல்லவில்லை. எலக்ட்ரான்களின் சில நடவடிக்கை களை வைத்துக்கொண்டு அதன் ஆதாரத்தில்தான் சொல்கிறார். சில சமயம் எலக்ட்ரான்கள் இரட்டை இரட்டையாக வெளிப்படு கின்றன. இந்த இரட்டையரைப் பிரித்து ஒன்றைக் கிழக்கேயும் மற்றதை மேற்கேயும் போகச் சொல்லுமாறு பரிசோதனைகள் அமைக்க முடியும். இவ்வாறு பிரிந்த எலக்ட்ரான்களில் ஒன்றை, கிழக்கே போனதை என்று வைத்துக்கொள்ளலாம், காந்த சக்திக்கு உட்படுத்தி வலதுபக்கம் திருப்ப வைத்தால், மேற்கே போன எலக்ட்ரான் அது பிரபஞ்சத்தில் எங்கு சென்றாலும் அதை எப்போது அதே வகை காந்த திருப்பத்துக்கு உட்படுத்தினாலும் முன் எலக்ட்ரான் எந்தப் பக்கம் திரும்பியதோ அதற்கு எதிர்ப்பக்கம் திரும்புகிறது! அது வலது என்றால் இது இடது, அது இடது என்றால் இது வலது!

எலக்ட்ரான் என்பது ஒரு துகள். உயிர் தன்னிச்சை என்று ஏதும் இல்லாதது. கிழக்கே சென்ற எலக்ட்ரானைப் பற்றி மேற்கே சென்றதற்கு, எப்படியோ ஒரு செய்தி போய்ச் சேருகிறது. அதுவும் கால இடைவெளியில்லாமல்! கிழக்கு எலக்ட்ரானின் திருப்பம் மேற்கு எலக்ட்ரானின் திருப்பத்தை, விதியை, உடனே நிர்ணயித்து விடுகிறது.

ஐன்ஸ்டைனின் தத்துவப்படி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செய்தி போக ஒரு வேக எல்லை உண்டு. அது ஒளியின் வேகம். அதற்கு மேல் செய்தி போவதற்கு ஐன்ஸ்டைனின் தத்துவத்தில் சாத்தியமே இல்லை.

ஆனால் இங்கு நடப்பது கால இடைவெளியில்லாத ஒரு தொடர்பு. எங்கோ நிகழ்வது வேறு எங்கோ நிகழ்வதை உடனே பாதிக்கிறது.

எனவே பிரபஞ்சம் முழுவதும் ஒரு விதமான காரணத்தால் தொடர்புகொண்டு இருக்கிறது பிரபஞ்சம் முழுவதுமே! பெங்களூர், ந்யூயார்க், சந்திர மண்டலம், கோடிக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ள நட்சத்திரம் எல்லாமே ஒரு மஹா மஹா ஒற்றுமையா? இயக்கமா?

பெல்லின் சித்தாந்தம் ஒரு விதத்தில் விஞ்ஞானத்தின் விளிம்பு. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் துவங்கிய கோட்பாடுகளின் விளைவாக இன்று இந்த விளிம்புக்கு வந்து இதற்குமேல் உண்மையைத் தேட முடியுமா என்கிற பிரமிப்பில் நிற்கிறது இன்றைய விஞ்ஞானம்.

"நான் என்ற ஆணவமும் தத்துவமும் கெட்டொழிந்து ஏன் என்ற பேச்சு இல்லாமல்" இருக்க வேண்டும் என்றார் சித்தர்.

"பழைய பாத்திரத்தின் அடிப்பாகம் சட்டென்று கழன்ற நிலையில், நிலவும் இல்லை நீரும் இல்லை என்று உணர வேண்டும்" என்கிறது ஜென் பௌத்தம்.

"எழுத்து, சப்தம் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு அதனுள் இருக்கும் சுதந்திரம் வேண்டும்" என்கிறார் சிவன்.

உணர்வுகளுக்கும் புலன்களுக்கும் வார்த்தைகளுக்கும் நியாயங்களுக்கும் இலக்கணங்களுக்கும் விழிப்புக்கும் சிந்தனைக்கும் தோற்றங்களுக்கும் அப்பால் பரிபூர்ண ஞானம் ஒன்று கண்ணாமூச்சு காட்டுகிறது.

அதை அடைய முயற்சிக்கும் பாதையில் விஞ்ஞானமும் வேதாந்தமும் ஒன்றுசேர்ந்துகொண்டுவிட்டன.